ங்கொள், சிவப்புக் கொள், red horse gram — red variety of Dolichos biflorus.

செங்கொன்றை, சிவப்புக் கொன்றை, இது அஞ்சனம் செய்ய உபயோகப்படும் red cassia — cassia marginata.

செங்கொன்னை, செங்கொன்றை, red cassia — Cassia marginata. It is used for preparing collyrium for the eyes.

செங்கோடகம், சுரை, bottle gourd — Lagenaria vulgaries.

செங்கோடு, செருந்தி மரம், golden blossmed pear tree — ochna squarrhosa.

செங்கோட்டம், சிவப்புக் கோஷ்டம், red variety of costus root Aplotaxis auriculata.

செங்கோலம், செம்பு மணல், copper ore.

செங்கோலறுகு, ஓர் சிவப்பு அறுகம்புல், red variety of hurially grass.

செங்கோல், பழுக்கக் காய்ந்த சலாகை, red hot probe.

செங்கோல் தீட்டல், பழுக்கக் காய்ந்த சலாகையால் சூடிடல், branding with red hot probe — Cauterising.

செங்கோல்வித்து, வாலுளுவையரிசி, Spindle tree — Celastrus paniculata.

செங்கோவை, சிவப்புக் கோவை, இதனால் நீரிழிவு குணமாகும், Red bitter melon — Bryonia grandis, It is a cure for diabetes.

செங்கோளிகம், சிவ துளசி, Siva's basil.

செங்கோணாயமைந்தன், சீர்பந்தபாஷாணம், a kind of arsenic.

செச்சை, செந்துளசி, a red variety of holy basil; 2. வெட்சிமரம் அல்லது செடி, Scarlet ixora — Ixora coccinea; 3. கருந்துளசி, black variety of holy basil – Ocimum nigrum, 4. சிவப்புப் பிச்சி, red spanish jasmine jasminum grand; 5. வெள்ளாட்டுக் கடா, the goat; 6. சந்தனக் குழம்பு, sandal ungent, 7. சாம்பல், ashes, 8. ஆடு, sheep, 9. காடு, forest, 10. இரட்டை pair.

செஞ்சைப்பாலை, முல்லை, a kind of jasmine jasminum trichotomum.

செஞ்சடைச்சி, சிவப்புச்சடைச் சிப்பூடு, அல்லது தவிடச்சு இது வாசனையாயிருக்கும். இது வாயுவைப் போக்கி, வயிற்றுக் கிருமிகளைக் கொல்லுந்தன்மையது, Indian linden with yellow blosoms — Gruvia pilosa. It is an arometic plant, carminative and anthelmintic.

NOTE: It corresponds to Micrmeria pubesens or M.donglasti. It is labiate plant of California.

செஞ்சடைப்பூடு, see செங்கத்தாரி

செஞ்சடையோன், காஸ்மீர் படிகக்கல், red Cashmere crystal; 2 துரிசு, copper sulphate.

செஞ்சட்சு, நீர்முள்ளி, Hygorphilaspinosa.

செஞ்சதுரக்கள்ளி, சிவப்புச் சதுரக் கள்ளி, Scarlet or red variety of square spurge — Euphorpia antiquorum.

செஞ்சதைவிழியுந்தல், கருவிழியில் சிவப்பான சதை படரச் செய்து கண் உறுத்தலை யுண்டாக்கும் ஓர் கண்ணோய், growth of red flesh or film on the cornea causing irritation.

செஞ்சந்தகி, சிவப்பு ஆவிரை, red variety of cassia auriculata.

செஞ்சந்தம், see செஞ்சந்தனம்

செஞ்சந்தனக்கட்டை, சிவப்புச்சந்தனம் அல்லது இரத்த சந்தனக் கட்டை, red sandal wood — Pterocarpus santaliness. The powdered wood

being an astringent is used for bleeding piles, hemorrhages etc, being a cooling agent it is applied for inflammations. Paste is applied to eyes in ophthalmia and to sore eyes. Rubbed with honey it is applied to boils and abscesses. The sandal oil is greatly used in Medicine. 2. See அகரு, 3. see செங்குறிஞ்சி.

செஞ்சரக்கொன்றை, சிவந்தபூவுள்ள சரக்கொன்றை, red Indian laburnum — Cassia marginata.

செஞ்சரம், see அரத்தை.

செஞ்சாந்து, குங்குமம், red saffron powder, 2. சிவப்புச் சாந்து, a red paint;3. சந்தனக் கூட்டு, sandal paste.

செஞ்சாமை, மத்தங்காய்ப்புல், red little milet — Panicum aegyptiacum.

செஞ்சாரணை, சிவப்புச் சாரணை, a red species of Trianothem decandra see சாரணை

செஞ்சாரை, சிவப்புச் சாரைப்பாம்பு, a red coloured rat snake. It is opposed to வெண்சாரை, white rat snake.

செஞ்சாரைக்கொழுப்பு, வழலை நாதமுப்பு, a secretterm referring to a universal salt prepared from fuller's earth.

செஞ்சாலி, சிவப்பு நெல், a superior variety of red paddy.

செஞ்சிலை, கற்காவி, a red ochre, 2. செங்கல், red brick 3. சகத்திரபேதி, mineral solvent; 4. சிவப்புக் கல், red stone.

செஞ்சிவதை, see குங்குமசிவதை.

செஞ்சித்திரமூலம், சிவப்புச் சித்திரமூலம், இது ஓர் சிறிய செங்குத்தான செடி, சிவப்புப் பூ, இதன் வேர் இயற்கையாகவே நருக் குண்டதைப் போலிருக்கும். விரு விருப்பையும் உற்சாகத் தையும் தரக் கூடியதுமாகும். சந்தமான எண்ணெயிற் கலந்து வாதப் பிடிப்பு, பாரிசவாயு முதலிய நோய்களுக்குப் பூசு மருந்தாக உபயோகிக்கலாம். சிறியவளவில் மேற்கண்ட நோய்களுக்குக் கொடுக்கலாம். இதன் வேர்ப்பட்டை தண்ணீரில் அரிசிமாவுடன் கலந்து கூழ்கிண்டிப் பூச சதையில் கொப்புளத்தை எழுப்பும். இது வாத வித்தைக்குதவும். see செங்கொடிவேலி, rosy flowered lead wart called also fire plant — Plumbago rosea. It is a small erect shrub with pinkish scarlet flowers, bruised root in natural state is acrid and stimulating temered with bland oil it is used as an external application in rheumatic and paralytic affections. It is prescribed in small doses for the said complaints. The root bark, if rubbed into a paste with water and rice flour and applied to skin, blisters arise. It is generally applied for venerial bubos. See செங்கொடிவேலி.

செஞ்சீரகம், சிவப்புச் சீரகம், red specis of cumin seed.

செஞ்சுடர், நெருப்பு, fire 2. சூரியன் the sun.

செஞ்சுருட்டை, இரத்தச் சுருட்டை, இது கடித்தால் இரத்தவாந்தி வரும், blood carpet snake — Echis carinata; 2. சிவப்புச் சுருட்டை red carpet snake.

செஞ்சுறா, பருவாய்ச்சுறா, red shark — Carcharius acutas.

செஞ்சூரன், செந்நாய், a particular variety of dog used in the chase while hunting Hound.

செஞ்சூரை, சிவப்புச் சூரைச்செடி, red thorny jujuba — Zizyphus napeca.

செஞ்சூலி, சிவப்புச் சதுரக்கள்ளி, see செஞ்சதுரக்கள்ளி.

செஞ்செழிப்பு, ஏராளமாய் வளர்தல், abundant growth.

செஞ்சேரா, ஓர் வகை விஷப்பூச்சி, இது கடித்தால் சிவந்த புள்ளியை உண்டாக்கும். a poisonous insect causing red spots on the body; 2. சிவப்பு இறால் மீன், spiny lobster.

செஞ்சோழன், see செஞ்சோளம், இதனால் அற்பக்கிரத்தி, விரணம், கரப்பான் உண்டாம், மேனியழகும் பசியும் குறையும். This causes skin diseases. Lustre of the skin and appetite will decrease.

செஞ்சோளம், சிவப்புச் சோளம், red variety of great millet - Andropogon genus.

செஞ்சோறு, இரத்தங்கலந்த சோறு, Cooked rice mixed with blood; 2. பலிச்சோறு, blood mixed with food supposed to be consumed by devils; 3. சிவப்பு அன்னம், cooked red rice.

செடச்சி, செவ்வரளி, red oleander — Nerium odorum (roseum).

செடத்தாரிசை, முட்டைச் சிலந்தி, a kind of insects.

செடமடுத்தகாவுப்பு, தலைமுடியுப்பு, இது வாதத்திற்குதவும், a universal salt prepared from the skull of the first born child. This is used in Alchemy.

செடமாகம், கோஷ்டம், Arabian Costus — Costus speciosus.

செடம், see கெந்தியுரிபாஷாணம்.

செடலக்கூறு, உடம்பின் பகுதிகள், anatomy, see சடலக்கூறு.

செடலமதை நிறுத்தல், காயசித்தி செய்தல், to rejuvenate so as to live for a long time.

செடலமோதிக் கிடங்கொள்ளன், சேரான்கொட்டை, Dhoby's nut or marking nut — Semi carpus, anacardium.

செடலம், பிண்டம், foetus; 2. உடம்பு, body, see சடலம்.

செடி, பூடு, plant ,2. ஒளி, light, 3. பதனழிவு, that which is decaysed; 4. புதர், bush, 5. கெட்ட நாற்றம், bad smell; 6. பிள்ளை கரைந்து விழுந்த பெண்கள் தீட்டினாற் குழந்தைகளுக்கேற்படும் நோய், a morbid diathesis in children supposed to be acused by an abored woman coming in contact with or seeing the child. This will occur within one year from birth.

செடிக்கள்ளி, see சதுரக்கள்ளி.

செடிக்காசணி, இதுவே காய்ச்சிறங்கு, which see குப்பைமேனிக் கீரை, 2. இதுவே கறிக்குதவும் புளிச்சக்கிரை, இதன் வித்து கருவைக் கரைக்கும் அல்லது கருவை இல்லாமற் செய்து விடும். Hibiscus canna binus. Its seeds cause abortion or prevents conceivement.

செடிக்காசுரைக்கீரை, காய்ச்சுரைக்கீரை, a kind of green.

செடிக்காடு, புதர், bush. .

செடிக்குடிபுக்கி, நாகரவண்டு, a kind of beetle; 2. பாம்பு வளைக்குத் தண்ணீர் கொண்டு போகும் பூச்சி, an insect supposed to carry water to snake hole.

செடிக்குத்துப்பிடாரி, குத்துப்பிடாரியில் செடியினம், a genus of குத்துப்பிடாரி, which see.

செடிக்குமிழ், சிறுங்குமிழ், which see.

செடிக்குருக்கு, பிரமராட்சசப்பூடு, இதுவே பிரமதண்டு, see குருக்கு.

செடிக்கொன்னை, மஞ்சட்கொன்னை, yellow ca.sia shrub as distinguished from tree cassia.

செடிச்சம்பங்கி, சம்பங்கிச் செடி, champak plant as opposed to tree champack, மரசம்பங்கி.

செடிச்சி, பேய்த்தும்பை, devil tumba.

செடித்தணலால் சீரவள்ளி யானவள், see கொடிவேலி.

செடித்தம்பட்டை, தம்பட்டை அவரை, sword bean canavalia ensiformis.

செடிப்பச்சை, பூண்டுகளுக்குப் பச்சை நிறத்தைக் கொடுக்கும் ஓர் வஸ்து, green colouring matter of plants — chlorophyll.

செடிப்புலிக்கொடி, ஓர் வகைப் புலிக்கொடி, shrubby navelwort — cannarus monocarpus; புலிக்கொடி, C. wightii.

செடிப்பூவரசு, see ஆற்றுப்பூவரசு.

செடிமரம், சிறிய மரத்தைப் போன்ற செடி, a shrub having the appearance of diminutive tree — Arbuscula.

செடிமீன், பச்சைப் பாம்பு, a variety of green snake found often in plants.

செடிமுளையந்தகம், புல்லுருவி, a parasite plant.

செடிமுன்னை, கொமுக்கட்டை, smooth teak premna latifolia.

செடிமேல்படரி, முசுமுசுக்கை, rough bryonybristly bryony Bryonia scabrella. It is so called because of its creeping on other plants.

செடியவரை, கொத்தவரை, cluster bean — Dolichos fabaeformis.

செடியுள்சிலைமானகல், ஓர் விதக்கல், Mocha stone.

செடிலாட்டம், அலகு விளையாட்டு, hook swinging

செடிலோலம், வசம்பு, sweet flag — Acorus calamus.

செடில் குத்தியாடல், அலகு குத்தியாடல் , a religious vow performed by a temple priest (pujari) or devotee or any person in which he is fastened to a beam of wood by a hook passing through the skin of his back and whirled round at the hook — swinging festival.

NOTE: This corresponds to churruck of Bengal in which the man is suspended in the air by passing a hook through the sinews of his back. It is said to be a painless operation.

செடைப்பூடு, தேள் கொடுக்கியிலை, scorpion stingplant — Helotropium indicum.

செட்டி, மூக்கிரட்டை, spreading hogweed — Boerhavvia diffusa. The root is a good diuretic; 2. வெட்சி, Scarlet ixora — Ixora coccinea.

செட்டிநாகம், ஓர் வகை நாகப்பாம்பு, நான்கு பக்கமும் சுற்றிப் பார்த்துக் கொண்டு தலையையெடுப்பதாலிதற்கிப் பெயர். merchant cobra — Naia tripudians. It is so called from its habit of looking about on all sides when lifting up its head.

செட்டிப்புடுங்கன், கொசு, mosquito

செட்டிப்புல், மலையாளத்தில் விளையும் ஓர் வகைப் புல், chetty grass so called probably from its being introduced into Malabar by Tamil chetties; 2. கேழ்வரகம்புல், raggy grass.

செட்டை, இறகு, quill feather 2. தோட்பட்டை, shoulder blade - scapula; 3. மீன்சிறை, fin.

செட்டைக் குழி, கமுக்கட்டு, arm pit.

செணப்பால், சிவதை, turpeth root — Ipomaea turpethum.

செவாரிட்சவம், தென்னை மரம், cocoanut tree — Cocos nucifera.

செண்டரளி, அயமரம், an unknown tree; 2. குடம் போன்ற ஓர் வகை அடுக்கு அலரி, a kind of double flowered olender — Nerium odorum.

செண்டலரி, see செண்டரளி.

செண்டு, வாசனைப் பூவில் மருந்து நீர் தெளித்து முகரும் பூச்செண்டு, a bunch of fragrant flowers mixed in medicinal liquids used for smelling.

செண்டுசெவ்வந்தி நடுவில் சொட்டையில்லாது செண்டுபோலிருக்கும் சாமந்திப்பூ a double yellow or white chrysanthemum indicum.

செண்டுமல்லிகை, குடமல்லிகை, அடுக்கு மல்லிகை, sambac jasmine jasminum sambac.

செண்டுமூலம், பந்தைப் போல் வெளித்தொங்கும் மூலம், internal hemorrhoids consisting of pendulous tumours composed of fibroareolar tissue.

செண்டை, இரட்டை, pair.

செண்பகப்பட்டை, சண்பகமரத்தின் பட்டை, bark of champak tree — Michelia champaka.

செண்பகப்பாலை, சிறுபஞ்சட்டை, Ceylon laurel — Litsaea zeyla.

செண்பகமேனி, பத்மினியில் உத்தமசாதி, the best class of women 'பத்மினி' is the highest class of the four classes of women.

செண்பகம், see சண்பகம், 2. ஓர் நாற்றப்பூடு, a fetid holly — Mappia foetida (tomentosa).

செண்பகம், செம்போத்து, crow pheasant.

செண்பகவருக்கை, ஓர் வகை வாசனைப்பலா, a kind of fragrant jack tree.

செண்பகவல்லி, பல்லி, lizard.

செண்பூகம், ஓர் நாற்ற பூடு, Mappia foetida.

செதிட்கரப்பன், செடிகளிலிருக்கும் செதிள், (in Botany) a scale of scaly part of plants — Squama; 2. மரத்தின் பட்டை, the exterior bark of a tree; 3. தோலுரியும் அல்லது மேற்றோல் உதிரும் ஓர் வகைக் கரப்பன், (in pathology) a disease of the skin in which scales and crusts are dropping off a disease in which any thin plate like structures shed from the skin — Eczema squamosum.

செதில், தோல், skin 2. மேற்றோல், a plate like structure shed from the skin — Scale; 3. சீவல், peel; 4. மீன் பிரால், fish scale; 5. மரப்பொருக்கு, a tree bark which is dry and dead but attached to the trunk of the tree.

செதில்கவலை, ஓர் வகைக் கவலை மீன், a kind of sardine fish.

செதிள், மீன் பொருக்கு, fish scale (சிலாம்பு), 2. தோல், skin.

செதிளெடுத்தல், மீன் பிராலை நீக்குதல், removing fish scales; 2. தோலையுரித்தல், peelting off of the skin.

செதுகு, உலர்ந்த இலை, dried leaf.

செதுக்கு, உடற்றழும்பு, scare on the body; 2. மந்திரம், magic, 3. மரச்சீவல், shavings planed off the wood; 4. மரப்பொருக்கு, the dried bark on the trunk of a tree, 5. மந்தி, monkey, 6. சேறு, mire.

செதுக்கை, உடற்றழும்பு, scar cicatrice; see செதுக்கு.

செதுத்தல், சோர்தல், being weakened.

செதுமகவு, சாப்பிள்ளை, still born child.

செத்தகெண்டை, ஓர் சிறிய கடல் மீன், இது சமைத்துண்ணவுதவும், a small sea fish — Etroplus — it is cooked and eaten.

செத்தகைகால், சுவர்ணையற்ற கைகால், the numbness in a limb - dead limb.

செத்தசரக்கு, ஒடுஞ்சரக்கு, அதாவது கந்தகம், இரசம், பாஷாணம் முதலியவை,

substances such as sulphur, mercury, arsenic. etc. which pass into vapour when exposed to fire.

செத்தசீவன், சாம்பிராணி, benzoin; 2. உயிரிழந்த பிராணி, Dead creature.

செத்தசெம்பு, நெருப்பிலிட ஓடும் செம்பு, copper disappearing when heated in fire.

செத்த நரம்பு, உணர்ச்சியற்ற நரம்பு, dead nerve.

செத்தபிணம், உயிரிழந்த உடம்பு, dead body as in "செத்த பிணத்தருகே இனிச்சாம் பிணங்கள்" (பட்டினத்தார்) persons to die gathering round the dead body — an allusion from Pattinathar.

செத்தபிணம்போற்கிடத்தல், உயிரிழந்த பிணத்தைப்போல் உணர்ச்சியற்றுக் கிடத்தல், இத்தகைய நிலைமை களைப்பு, மூர்ச்சை, மதிமயக்கம், சன்னி, நீரிழிவு, முதலிய நோய்களிற் காணலாம். to die prostrate owing to a temporary suspension of consciousness. Such condition may be seen in syncope swoon, coma, apoplexy, diabetes, neurasthenia etc.

செத்தபிண்டம், இறந்து பிறந்த குழந்தை, dead foetus child dead at birth.

செத்தபிள்ளைவிழல், செத்துப்பிண்டம் பிறத்தல், birth of dead foetus.

செத்தமுகம், செழிப்பில்லாதமுகம், face without gracefulness; 2. பசுமையில்லாமல் வெளுத்தமுகம், pale face without liveliness.

செத்தலி, எலும்புந்தோலுமாய் இளைத்த பெண், emaciated woman with skin and bone.

செத்தல், இறத்தல், dying 2. உணர்ச்சியறல், loss of sensation as of limbs. 3. மெலிவு, leanness; 4. முதிர்ந்து உலர்ந்த காய், dry fruit.

செத்தல், தேங்காய் நெற்று, அதாவது கொப்பரைத் தேங்காய், dry cocoanut.

செத்தவுடல், உயிரிழந்தவுடம்பு, dead body.

செத்தவேர், சத்தில்லாத வேர், dead root — root destitute of its vital power.

செத்தாட்டுக்கண், கிடங்கில் விழுந்த கண், Sunken eyes.

செத்தாட்டுக்கண்ணன், குழிவிழுந்த கண்களையுடையவன், one with sunken eyes.

செத்தாண்டி, கச கசா, poppy seed.

செத்தாற்போலிருத்தல், செயலற்றிருத்தல், "செத்தாரைப்போல திரி" remaining with out being engaged in anything; 2. அசைவற்றிருத்தல், remaining motionless or perfectly skill like a dead body, said of persons swooned or intrance or meditation.

செத்தி, ஓடு, a broken piece of a new earthern pot.

செத்துபனை, கள்ளிறக்கும் பனைமரம், palmyra from which toddy is tapped.

செத்துப்பிழைத்தல், உயிருக்கு அபாயமான அல்லது உயிர்ச்சேதத்தை விளைவிக்கு நோயினின்று மீளல், to recover from a dangerous disease.

2. உயிரொடுங்கிப்பின் தெளிதல், revival or recovery from apparent death restoration from a state of depression.

3. மூர்ச்சை தீர்ந்தெழுதல், recovery from a state of unconsciousness, returning to

activity from a state of langour.

4. சமாதியினின்று வெளிவரல், the rising of the dead at the general judgement and springing into new life said of yogees and Siddhars in their resurrection.

5. நிஷ்டையினின்றெழல், recovery from a state of suspended animation or trance.

செத்துப்பிறந்த, சாப்பேறு, still born; 2. கருப்பத்தில் இறந்து வெளிப்பட்ட, expelled from the womb after death.

செத்தோருயிர்ப்பித்தல், see செத்தோர்ப்புணர்த்தல்.

செத்தோர்ப்புணர்த்தல், இறந்தவரை உயிர்கொடுத் தெழச்செய்தல், reviving the dead resuscitating.

செத்துரி, பூணாரவெலும்பின் கீழுள்ள முதல் விலாவெலும்பும் அதன் முருந்தும், the first rib and its cartilage on the lower surface of the clavicle.

செத்துரு, பூணாரவெலும்பு, collar bone — clavicle.

செத்தை, உலர்சருகு, dried leaves grass etc; 2. அழுகியசதை, putrified flesh; 3. ஓர் வெண் கடல் மீன், silvery grey sea fish — Pimelepterus enierascens.

செந்தகரை, சிவப்புத்தகரை, a red variety of cassia — Cassia sophera.

செந்தடசு, சிவப்புச் சடைச்சி, Gruvia pilosa, see தடசு.

செந்தட்டி, see செந்தொட்டி.

செந்தணக்கு, சிவப்புத்தணக்கு, a red variety of catamaram wood tree — Gyrocarpus jacquini; 2.சிவப்புப்பூத்தக்காளி, country tragacanth Sterculia urens; 3. சம்பீரத்தணக்கு, white catamaran tree — G vuotia

rottleri formis.

செந்தணல், செந்தீ, கனிந்து கொண்டிருக்கும் அனல் வீசும் நெருப்பு, bright red glowing fire; 2. கட்டை நெருப்பு, glowing piece of wood — Embers.

செந்தணல் மேனி, சிவனார் வேம்பு, Shiva's neem — Indigofera asphala — thoides.

செந்தணற்கொடி, கொடிப்பவளம், நெருப்பு நிறத்தைப் போன்ற தாலிப்பெயர், coral creeper so called of its red colour like a glowing fire. see செந்தழற்கொடி.

செந்தணி, see செந்தணற்கொடி.

செந்தண்டு, சிவப்புத்தண்டு அல்லது தாள், red stemor stalk of plant; 2. See செந்தண்டுக்கீரை, 3. see செங்குருந்து, 4. பவளம், coral.

செந்தண்டுக்கீரை, சிவப்புத் தண்டுக்கிரை, red spinach — Amaranthus atropurpureans; 2. ரோஜா நிறத் தண்டுக்கிரை, rose spinach Amaranthus caudatus.

செந்தண்டுக்கொடி, சிவப்புத் தண்டையுடைய கொடி, any creeper with red stem or bed branches; 2. சிவந்த பவளக்கொடி, red coral; 3. செங்குருந்து, red shoots as in palmyra trees.

செந்தம், see எழுத்தாணிப்பூடு.

செந்தயிர், சிவப்புத் தயிர், red dish curd.

செந்தரா, ஓர் கசப்புக் கொடி, a bitter plant see செந்திராய்.

செந்தருகம், இலுப்பை, long leaved bassia — Bassia longifolia.

செந்தருப்பை, ஓர் வகை நச்சுப்புல், a kind of poisonous grass.

செந்தரை, கரை விளங்கு, a species of white cedar — Heynea trijuga.

செந்தரைப்பூநாகம், செம்மண் பூமி பூநாகம், earth worm of red soil.

செந்தர்ப்பை, நச்சுப்புல், a kind of posionous grass.

செந்தலைப்பூடு, see எழுத்தாணிப்பூடு.

செந்தலைமுத்தி, ஓர் எலி, a rat.

செந்தலைராகி, செம்பு, copper.

செந்தலைவிரியன், சிகப்புத் தலையுடைய விரியன் பாம்பு, a variety of russell's viper snake with bright red head.

செந்தர்ப்பை, நச்சுப்புல், a kind of poisnous grass.

செந்தவம், see செந்தணக்கு.

செந்தழல், see செந்தணல்.

செந்தழல்மேனி, சிவனார்வேம்பு, see செந்தணல்மேனி.

செந்தழற்கொடி, see செந்தணற்கொடி.

செந்தழை, கம்பு, bubush millet Gramen panicum.

செந்தளிர், இளந்தளிர், the first young red sprout.

செந்தனம், ஓர் மரம், a kind of cinnamum —Apollonius arnotti.

செந்தனை, see செந்தரை.

செந்தடுபாவை, மகாமூலிகை, 23ல் ஒன்று, one of the 23 all healing durg. It is perhaps a misnomer of சேர்ந்தாடுபாவை.

செந்தாது, சிவப்புத்தாது, any red mineral 2. செம்பொன், அல்லது செம்பு, copper; 3. பொன், gold.

செந்தாமரை, சிவப்புத் தாமரை, red lotus — Nelumbium speciosum rubra.

செந்தாமரைக்கிழங்கு, செந்தாமரையின் வேர் கிழங்கு, இதைச் சூரணித்துப் பசு நெய்யில் சாப்பிட பயங்கர சுரம் போம். Rhizome (root) of Red lotus. The powder of the root with ghee cures fever.

செந்தாமியம், செந்நெல்லி, red variety of gooseberry — Phyllanthus emblica.

செந்தாழஞ்செடி, அன்னாசிச் செடி, Pineapple plant — Ananas sativus.

செந்தாழம்பழம், அன்னாசிப்பழம், pineapple fruite, கபத்தை விருத்தி செய்யும், கரு அழிக்கும், It increases the phlegm humour but is an abortive.

செந்தாழம்பூ, சிவப்புத் தாழைச்செடியின் பூ, இப்பூவினால் நீரேற்றம், இருமல், நெஞ்சு கபம் இவைகள் போம், உடம்பில் மினுமினுப்புண்டாகும். flower of fragrant screw pine — Pandanus odoratissimus Red variety. It alleviates cold, cough and phelgm in the throat; gives lustre to the skin.

செந்தாழை, see செந்தாழம்பூ, 2. ஓர் கண்ணோய், இது பார்வையை மறைக்கும், a disease of the eye attended with redness of the eyes and causing dimness of sight; 3. உதடு வெடித்துப் புண்ணாகி வாய்நாறும் ஓர் நோய், inflammation of the mouth with cracking of lips marked by foctid smell; 4. ஓர் வகைத் தணக்கு, false Tragacanth.

செந்தாழ், see செந்தண்டு.

செந்தாளம்பூ, see செந்தாழம்பூ.

செந்தாளி, சிவப்புத்தாளி, a red variety of convolvulus; 2. தாளிக்கொடி, hedgebind weed — Ipomoesasepiaria.

செந்தாளை, சிவப்புத்தணக்கு, false tragacanth — Sterculiaurens.

செந்தாள், சிவப்புத் தண்டு, red stalk.

செந்தானமுறை, தேத்தான் கொட்டை, water clearing nut — strychurs potatorum.

செந்தி, பச்சோந்தி, green lizard.

செந்திரஞ்சம், இலை ககள்ளி, leaf spurge — Euphorbia nivulia.

செந்திராய், இதுவே செந்தரார, சிவப்புத்திராய் மகாமூலிகை 23ல் ஒன்று, காயசித்திக்காகச் சித்தருண்ணு மூலிகை, அன்றியும் முளை மூலம், அருசி, நீர்த்தாரைச் சூடு, ஆயாசம் நீங்கும், a red variety of Indian chick weed — Mollugo parviflora. It is a rare plant and is classified as one of the 23 drugs of heigh potency and as such it is used for rejuvenation by the Siddhars, for promoting longevity. Moreover it is a remedy in cases of piles, loss of appetite, uretheral irritation fatigue.

NOTE: This one of the many drugs used for rejuvenation but they cannot be used unless one is aware of their uses by practical knowledge, lest they will prove dangerous.

செந்திரி, see இரத்தமண்டலி.

செந்திரிக்கம், see செந்திருக்கம்.

செந்திரு, தாளகம், yellow orpiment.

செந்திருக்கம், see செந்துருக்கம்.

செந்திருக்கம், see செந்துருக்கம், 2. பத்தராசு, false jalap — evening jasmine c.f. அந்திமல்லி, —Mirabilis jalapa.

செந்திருக்கை, ஓர் வகை மஞ்சள், a variety of turmeric; 2. சிவப்புத்திருக்கை மீன், a species of red Trygongenus.

செந்திருவு, துளசி, holy basil.

செந்திருவுக்கரியதேவி, தாளகம், yellow orpiment.

செந்திறம், சிவப்பு, redness.

செந்திணை, கம்பு, a kind of grain Holcus spicatus; 2. சிவப்புத்திணை, red millet — Italian millet.

செந்தீ, நாதவுப்பு, an unknown salt; 2. சிலந்தி, carbuncle; 3. தணல் நெருப்பு, அதாவது கொழுந்து விட்டெரியுந்தீ, glowing fire; 4. எருக்கு, madar plant.

செந்தீக்கரப்பன், சிவப்பு விரணத்துடன் எரிச்சலையுந் தரும் ஓர் சரும நோய், a cutaneous red eruptions with burning sensation — a kind of erysipelas.

செந்தீநோய், அக்கி, herpes; 2. அக்கினி கரப்பான் erysipelas.

செந்தீவண்ணன், சிவதுளசி, Shiva's basil — Ocimum genus.

செந்து, கிழநரி, Old Jackl; 2. உயிர்ப்பிராணி, living creature; 3. சடாமாஞ்சில், Indian spikenard — Cyprus stoloniferus; 4. பெருங்காயம், asafoetida; 5. அசோகு, Ashoka; 6. அணு Atom, 7. ஊர்வன, reptiles.

செந்துக்கினம், பெருங்காயம், asafoetida.

செந்துத்தி, சிவப்பு சிறுதுத்தி, red evening mallow — Abirtilon indicum.

செந்துத்தீ, பெருங்காயம், asafoetida; 2.சடாமாஞ்சி, Indian spikenard — Cyperus stoloniferus.

செந்துநாசனம், பெருங்காயம், asafoetida, so called perhaps by its virtue of killing germs.

செந்துமாஞ்சில், சடாமாஞ்சில், see செந்து.

செந்துமி, செம்மரம், Indian red wood tree or bastard cedar.

செந்தும்பி, ஓர் சிவப்புக் கடல் மீன், a reddish sea fish. Pterosis russellic.

செந்தும்பை, சிவப்புத்தும்பை, a variety of toombay plant with red labiate flowers of the Leuca genus — Osbeckia ceylonica.

செந்துயர்மான்சிலை, செம்மண், a species of red earth used for marking sheep — Ruddle.

செந்தூரம், ஓர் வகைப்பிசின், a kind of resin or hard juice of certain trees which when; diluted forms a transparent varnish — Copal; 2. பெருங்காயம்,

asafoetida.

செந்துரா, see செந்திராய்.

செந்துருக்கம், சிவப்புக் குங்குமமரம், red saffron tree — Crocus sativus; 2. சந்திரகாவி அல்லது குசும்பாச் செடி, bastard false saffron saf-flower — Carthamustinctorius; 3. சிவப்புமான், red deer; 4. ஓர் வகை மூசை, a kind of crucible; 5. முத்திருக்கஞ்செடி, spiny saffron.

செந்துருக்கம், முத்திருக்கஞ்செடி, இதைத் தான் குசும்பாவெனத் தெலுங்கில் வழங்குவர்.

குறிப்பு: இது மைசூர், பல்லாரி, திருநெல்வேலி, ஆந்திர தேசம் ஆகியவிடங்களில் விசேஷம். இது வருஷத்திற்கொருமுறை காய்க்கும் 1 — 2 அடி உயரம், அடித்தண்டு நேராகவும், குழாயைப்போலவும் இருக்கும். காய்ந்த பூக்கள் மஞ்சள் நிறம். சாயத்திற்கு மிக்க உபயோக மானவை. தின்பண்டங்களில் சாயமேற்ற உதவும். கோழி முதலிய பறவைகள் இதனைத் (பூ, இலை, விதை) தின்பதனாற் கொழுக்கும். விதையிலிருந்து எடுக்கும் மஞ்சள் நிறமான எண்ணெய் விளக்கெரிக்கவும், பலகாரங்கள் சுடவும், கைகால் பிடிப்புக்கும் பாரிச வாயுவிற்கும் மேற்பூச்சுத் தைலமாகப் பூசவும் உபயோகப்படும். விதை மலத்தை இளக்கும். காய்ந்த பூக்களை பாண்டு, காமாலை, இந்நோய்களுக்கு பயோகப்படுத்தலாம். bastard of false saffron — Carthamus tinctorins. It is an annual plant about 1 — 2 feet. high and is commonly cultivated in Mysore, Bellary, Tinnevelly and Telugu districts. It seem is erect and cylindrical, leaves oval; heads of flowers roundish; flowers large and deep orange; dried flowers are like safforn in colour and they are useful in dyeing and for colouring cakes. Fixed oil extracted from the seeds is used for lamps, for preparing cakes and as an external application

in rheumatism and paralysis; seeds are laxative; dried flowers serve as a remedy in dropsy and jaundice.

NOTE: It is known as officinal carthamus. The flowers contain two coloured principles viz., red and yellow. Carthamin is a powder of deep red colour prepared from safflower. It is soluble in water and alcohol chinese safflower *(சீனச் செந்துருக்கம்)* is superior to the present one.

The fruits are about the size of barley corns some what four sides white and shining like small shells. The dired flowers are used like saffron. Poultry are fattened by eating the seeds.

செந்துருக்கம்பூ, see குசும்பாப்பூ safflower.

செந்துருக்கன், see செந்துருக்கம்.

செந்துருக்கு, see செந்துருக்கம்.

செந்துருக்கெண்ணெய், குசும்பாவெண்ணெய், இது வாதப்பிடிப்பு, பாரிசவாயு இவைகளுக்குபயோகப்படும். curdy oil can be applid for paralysis and rheumatic pain.

செந்துலாமணக்கு, , red caster seed.

செந்துவரை, துவரை, red gram.

செந்துளசி, சிவப்புத் துளசி, இதனால் கீடவிஷம், கடிவிஷம், முத்தோஷத்தினால் நேரும் பற்பல நோய்கள் போம், red basil Ocimum violacecum. It is said to be useful in insect and other poisonous bites and for several diseases caused by the humours in the system.

செந்துளிர், செந்தளிர், red tender sprouting leaf.

செந்துளிர்மேனி, கம்மாறு வெற்றிலை, a atrong pungent betel leaf of deep green colour.

செந்துராசனம், பெருங்காயம்,

asafoetida.

செந்துதுவளை, சிவப்புத் துதுவளை, a red variety of three lobed night shade — Solanum trilobatum.

செந்தூபிகம், செப்பு நெருஞ்சில், white see.

செந்தூரக்கல், சிவப்புக்கல், red stone.

செந்தூரக்காலம், செந்தூரம் தயாரிக்கும் காலம், அதாவது பங்குனி, சித்திரை, season for preparing red oxides i.e March and April; *2.* செந்தூரமுண்ணுங்காலம், time prescribed for taking redoxides of minerals.

செந்தூரத்தாசி, see செந்தூரத்தாதி.

செந்தூரத்தாதி, செந்தூரமாகச் செய்யும் சரக்குகள், drugs employed as as basis for preparing red oxides viz; *1.* கருந்துளசி, black basil; *2.* பெற்றலை கையாந்தகரை, eclypse plant with yellow flower — Eclypta prostata; *3.* கந்தகம், sulphur.

செந்தூரம், இலிங்கபாஷாணம், red arsenic; *2.* சிவப்பு மருந்து, any red chemical preparation *3.* புடமிட்ட சிந்தூர மருந்து, calcined red oxides *4.*வங்கச் சிந்தூரம், red oxide of lead — Plumbi oxidum (rubrum); *5* இரசசெந்தூரம், red oxide o: mercury.

1. **செந்தூரவகை:-** -

*1.*தங்கச் செந்தூரம், red calcinec powder of gold.

*2.*வெள்ளிச் செந்தூரம், red calcined powder of silver.

*3.*தாம்பூரச் செந்தூரம், red calcined powder of copper.

*4.*அயச்செந்தூரம், red calcined powder of iron

*5..*நாகச்செந்தூரம், red calcined powder of zinc.

*6.*காரீயச்செந்தூரம், red calcined powder of lead.

*7.*வெள்ளீயச் செந்தூரம், red calcined powder of tin.

*8.*காந்தச்செந்தூரம், red calcined powder of load stone.

*9.*துருசுச் செந்தூரம், red calcined powder of copper sulphate.

*10.*அப்பிரக செந்தூரம், red calcined powder of mica.

*11.*இலிங்க செந்தூரம், red calcined powder of cinnabar.

*12.*இரசசெந்தூரம், red calcined powder of mercury.

*13.*தாளக செந்தூரம், red calcined powder of yellow orpiment.

*14.*பூரச்செந்தூரம், red calcined powder of subchloride of mercury.

*15.*கந்தக செந்தூரம், red calcined powder of sulphur.

*16.*இலிங்கக்கட்டுச் செந்தூரம், red calcined powder of consolidated cinnabar.

*17.*உப்புக்கட்டுச் செந்தூரம், red calcined powder of consolidated salt.

*18.*தாளகசயச் செந்தூரம், red calcined powder of consolidated yellow orpiment.

*19.*வீரச் செந்தூரம், red calcined powder of perchloride of mercury.

*20.*வெடியுப்புச் செந்தூரம், red calcined powder of salt petre.

*21.*நாகக்களங்கு செந்தூரம், red calcined powder of zinc amalgam.

*22.*இலிங்கதார செந்தூரம்,

*23.*குளிகை வேதைச் செந்தூரம்.

*24.*திரிகுளிகைச் செந்தூரம்.

*25.*பஞ்சபூதச் செந்தூரம்.

26. சிலாசத்து செந்தூரம், red calcined powder of silajath.

27. அயக்காந்தச் செந்தூரம், red calcined powder of iron and lead stone.

28. திரிவங்கச் செந்தூரம், red calcined powder of three leads.

29. மகாகாய கற்ப செந்தூரம்.

30. கல்லுப்புச் செந்தூரம், red calcined powder of rock salt.

31. ஏமரச செந்தூரம், red calcined powder of gold and mercury.

32. அயச்சவளை செந்தூரம்

33. அன்னபேதிச் செந்தூரம், red calcined powder of steel.

34. எஃகு செந்தூரம், red calcined powder of sulphate of iron.

35. கல்நார் செந்தூரம், red calcined powder of asfestos.

36. கபரிச்செந்தூரம், red calcined powder of gowri.

37. நிமிளைச் செந்தூரம், red calcined powder of antimony.

38. மனோசிலைச் செந்தூரம், red calcined powder of red orpiment.

39. அய்வீயச் வீயச் செந்தூரம், red calcined powder of lead extracted from iron.

40. அப்பிரகவீயச் செந்தூரம், red calcined powder of lead extracted from mica.

2. செந்தூர வகை

1. கருப்பு செந்தூரம், Oxidum nigrum.

2. மஞ்சள் செந்தூரம், oxidum flarrum.

3. சிவப்பு செந்தூரம், oxidum rubrum.

4. சீனவீரவைப்புச் செந்தூரம்,

5. திரிலோகச் செந்தூரம், red oxide of three metals.

6 நாகக்கட்டு செந்தூரம், red oxide of consolidated zinc.

7. காயகற்ப அயச்செந்தூரம்

8. சிடிகை அயச்செந்தூரம்

9. அயக்கட்டுச் செந்தூரம்

சாதாரணமாக உலோகங்களிலிருந்து செந்தூரம் பற்பம் செய்வது மிகக் கஷ்டமான வித்தை. அப்படிச் செய்தாலும் பூரணமாகவும், சரியாகவும் அமைவது அரிது. அப்படி அமைந்தாலும் நோய்களைக் கண்டிக்கும் வகையில் அமைவது அதனினும் கஷ்டம். மருந்து எல்லா வகைகளும் கஷ்டம், ஆகவே அயமும் வெள்ளியும் செந்தூரமாவது மிகக் கஷ்டம், இதற்கு முதலாக சரக்கு சுத்தியாக வேண்டும். மூலிகைகளும் சுத்தியாக வேண்டும். ஓடும் சரக்குகளைக் கட்டியுமாக வேண்டும். இப்படிச் செய்யாவிடில் செந்தூரம் சிறந்ததாகாது. பொற்றலைக் கையாந்த கரை, கருந்துளசி முதலிய செந்தூரத்திற்கு ஆதியான சரக்குகளில் மூலிகைகளை முதலில் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். வாதமுறைச் செந்தூரங்கள் வைத்திய செந்தூரத்தை விட மிகவும் கஷ்டம். இது வைத்தியற்குதவும், வியாதிகளை அறவே ஒழிக்கும். நூற்றுக்கு ஒன்றாவது தவிராது இச்செந்தூரத்திற்கு மிக்க அருமையாவது சரக்குகள் குணம் எப்படி சிறந்ததோ அது போல மேதையும் சிறக்கும்'' என்பது பழமொழி.

It is difficult to calcify minerals into red or white powder. Even if prepared they don't act properly on diseases. To prepare Gurumarunthu which is capable of curing all diseases and transmuting base metal into gold is very impossible. To prepare such medicines drugs must be purified, and minerals must be consolidated.

Preparations made according to alchemical process can be used as

medicine but it is very difficult to prepare them.

செந்தூரி, see கப்புச்சடைச்சி.

செந்தூரித்தல், புடமிட்டுச் சிந்தூரமாகச் செய்தல், reducing to a red powder by calcination; 2. சிவப்புப் பொடி செய்த, to reduce into a red powder.

செந்தெங்கு, சிவப்புத் தேங்காய் மரம், a red cocoanut tree.

செந்தேன், உயர்தரமான சிவப்புத்தேன், a superior red honey; 2. நாதவுப்பு, salt prepared from fuller's earth, soda; 3. வழலையுப்பு, an alchemical salt.

செந்தொட்டி, செப்புத் தொட்டி பாஷாணம், a native (prepared) arsenic; 2. சிறுகாஞ்சொறி, a small variety of climbing nettle — Tragia involucrata; 3. செங்காஞ்சொறி, red variety of climbing nettle.

செந்தொட்டி வகைகள், கருப்புச் செந்தொட்டி, black climbing nettle Tragia cannabina.

2.சிவப்புச் செந்தொட்டி, same as செந்தொட்டி.

3.பெருஞ் செந்தொட்டி, large climbing nettle.

4.சிறு செந்தொட்டி, small climbing nettle. Tragia involucra'

5.மலைச் செந்தொட்டி, mountain climbing nettle.

செந்தொட்டிவேர், சிறுகாஞ்சொறிவேர், இது மாதவிடாயை மிதப்படுத்தும். அன்றியும், இடுப்புவாதம், இரைப்பு, கோழை, சூட்டை இவைகள் போம். It is used for regulating menses in women. Moreover it is prescribed in cases of lumbago, hard breathing phlegm, diarrhoea, etc.

செந்தொயிலி, ஓர் வகைக் கீரை, a kind of green.

செந்தோட்டி, பெருகாஞ்சொறி, large climbing nettle. See செந்தொட்டி.

செந்தோன்றி, செங்கழுநீர், red Indian water lily — Nymphae odorata; 2. செங்காந்தள், கார்த்திகைப் பூ, a red variety of November flower — Gloriosa superba see செங்காந்தள்.

செந்நகரம், ஓர் வகைச் சிவப்புப் பழம், இதினின்று மருந்து நெய் தயாரிப்பதுண்டு, a kind of red fruit from which a medicinal oil is prepared.

செந்நகரை, see செந்நகரம், 2. ஓர் சிவப்புக் கடல் மீன், a red sea fish; 3. ஒலிவைமரம். species of olive linden — Eleocarpus genus.

செந்தல், ஓர் மீன், a kind of fish.

செந்நாகதாளி, ஊசிப்பூநாகதாளி, pin flowered pricklypear. Opuntia nigricane; 2. சிவப்பு நாகதாளி, Crimson flowered prickly pear Opuntia monocantha.

செந்நாகபந்தனி, பிடங்குநாறி அல்லது கிருணாபாலை அல்லது புறங்கைநாறி, Botanical name not known.

செந்நாகம், சிவப்பு நாகப்பாம்பு, red variety of cobra — Naia tripudians.

செந்நாகி, see செங்கத்தாரி.

செந்நாக்குக்கா, மூக்கிரட்டை, see செந்நாடிக்கா.

செந்நாக்குறட்டை, மூக்கிரட்டை, see செந்நாடிக்கா.

செந்நாசி, செவ்வாம்பல், red water lily. See அரக்காம்பல்

செந்நாடிக்கா, மூக்கிரட்டை, spreading log weed — Boerhaavia procumbeno — B.diffusa.

செந்நாபி, சிவப்பு நாபி, red aconite see செந்நாபி.

செந்நாயுருவி, சிவப்பு நாயுருவி, இது ஓர் கற்ப மூலிகை, இதனால் ஏறு வீக்கம், பாண்டு, மாதருது சிக்கல் போம். இது நாயுருவிச் செடி போலவும் சமூலமும் சிவப்பாயுமிருக்கும். இதன் சமூலத்தையுங் கொண்டு வந்து சூரணம் செய்து காரீயம் உருக்கு முகத்தில் தூவி செந்தூரம் ஆகும் வரையில் கடைந்து அச் செந்தூரத்தைச் சுத்தி செய்த தாம்பூரத்தில் *10-1* பழுக்கும், பழுத்த அதைச் சுண்ணமாகச் செய்து 3 வேளை பசு நெய்யில் கொள்ள, தேகம் சித்தியாகும். a red dog prick — red variety of Indian burr — achranthes aspera. It is a rejuvenating plant. It is useful in case of dropsy menstrual disorder etc. When cut pieces of this plant are added to the hot melting lead and churned lead turns red. This oxide is added to purified copper in 10-1 preportion and calcified. It this is taken with cow's ghee the body is rejuvenated.

செந்நாய், ஓர் வகை சிகப்பு வேட்டை நாய், பல நாய்கள் சேர்ந்து புலியையும் சில சமயம் கொன்று விடும். red wild dog, ferocious hound — Canis dukhenensis — C Primarus. These dogs join together and kill a tiger sometimes.

செந்நாரகி, செம்மரம், redwood.

செந்நாரை, சிவப்பு நாரை, a red variety of stork — Tantalus gangeticus; 2. ஓர்மரம், a kind of tree.

செந்நாலினி, செவ்வாழை, red plantain.

செந்நாவல், சிவப்பு நாவற்பழம், a red variety of jamboo fruit — Eugenia jambos.

செந்நாவற்பட்டை, சிவப்பு நாவல் மரத்தின் பட்டை, bark of the red variety of Eugenia jambos.

செந்நாவி, சிவப்பு நாவிக் கிழங்கு, red aconite root. The

other two well known varieties are வெண்ணாவி — white aconite and கருநாவி — black aconite.

செந்நியம், உடம்பு, body.

செந்நிலத் தாமரை, ஓர் வகை ரோசா, a variety of rose — Damask rose.

செந்நிறக்கல், மாமிசச் சிலை, flash coloured stone; 2. சிவப்புக் கல், any red stone.

செந்நிறச்சனிகை, சிவந்த நிறப் பெண், a fair coloured woman.

செந்நீர், இரத்தம், blood; 2. தெளிந்த இரத்த நீர், serum of blood; 3. தலைப்பிண்ட செயநீர், a pungent liquid prepared from the essence of the first born child mixed with other drugs by keeping it exposed in the night's dew; 4.சிவந்த மண் நீர், water from the soil of red earth; 5. சிவந்தநிறத் தண்ணீர், இதைக் குடிப்பதால் இருமலால் பிறந்த பித்த உஷ்ணம் போம், விந்து நஷ்டமுண்டாம் red soil water by dringing this water cough and heat will be relieved. There will be loss of semen. 6. சுத்த நீர், clear water; 7.மகளிர் சூதகம், menstrual blood.

செந்நீர்ப்பவளம், மிகச் சிவந்த பவளம், bright red coral.

செந்நீர்ப்பற்று, see செந்நீர்ப் பாய்ச்சல், 2. மாணிக்கத்தின் ஓர் குற்றம், a flaw in ruby — Carbuncle (gem).

செந்நீர்ப்பாய்ச்சல், ஓர் கண்ணோய், an eye disease.

செந்நீர்முத்து, சிவப்பு நீரோட்டமுள்ளமுத்து, 2. a pearl having pink lustre.

செந்நீர்முள்ளி, சிவப்பு நீர்முள்ளி, a red variety of water thistle red variety of Hygrophila spinosa.

செந்நெரிஞ்சில், see செந்நெருஞ்சில்.

செந்நெருஞ்சில், சிவப்பு நெருஞ்சில், இதுவே செப்பு நெருஞ்சில், a red variety of caltrope, trailing indigoplant — Indigofera enneaphylla.

செந்நெல், ஒரு வகை மட்ட சிவப்பு நெல், செம்பாளை, an inferior red paddy; 2. நன்னெல், red paddy; 3. செஞ்சாலி நெல், a superior variety of red paddy.

செந்நெல் முத்து, நெல்லிற் பிறந்த முத்து, a pearl like substance darived from the paddy.

செந்நெல்லி, சிவப்பு நெல்லி, a red variety of Indian gooseberry.

செந்நொச்சி, சிவப்பு நொச்சி, red leaved chaste tree — vitextrifolia.

செபக்கினம், தகரை, ringworm plant — Cassia tora.

செபதபம், பிரார்த்தனையோடு கூடிய தவம் — prayerful penance.

செபத்திரா, see உருத்திராட்சமரம், Elaeocarpus lanceolatus.

செபப்புல், தர்ப்பைப்புல், sacrificial grass; 2. நாணற்புல், reed.

செபலாமம், சடாமாஞ்சில், Indian spikenard — Cyperus stoloniferous.

செபித்தல், மந்திரம் உச்சரித்தல், chanting mantrams, magic spell.

செப்பக்கால், முடவாட்டுக்கால், lame leg of goat.

செப்பஞ்செய்தல், புதைத்தல், burying; 2. திருத்தல், to set right.

செப்படக்குவித்தை, see செப்படிவித்தை.

செப்படிவித்தை, செப்பும் பந்தும் வைத்துக் காட்டும் வித்தை, கைச்சிமிட்டு, slight of hand trick jugglery, 2. தந்திர வித்தை, deceptive tricks.

செப்படிவித்தைக்காரன், செப்படி வித்தைக்காட்டுபவன், juggler.

செப்பட்டை, பறவை சிறகு, wing; 2.தோள்பட்டை, shoulder blade; 3. கன்னம், check.

செப்பப்புல், நாணற்புல், reed.

செப்பமாமடம், காகோளி, an unknown plant.

செப்பம், மார்பு, bosom, breast; நெஞ்சு, heart, சிவப்பு, redness.

செப்பலி, ஓர் சிவப்புக் கடல் மீன், a red sea fish Lutjanus argentimaculatus; 2. சிவப்பு பாறை மீன், red rock cod — Lutjanus roseus.

செப்பல், red colour.

செப்பல்பிரிதல், பொழுதுவிடிதல், dawning of the day.

செப்பாலை, ஆவிரை, tanner's cassia — Cassia auriculata.

செப்பிகா, சடமாஞ்சில், see சேபலாமம்.

செப்பிச்சி, தொட்டிபாஷாணம், a kind of arsenic.

செப்பிடா, see செம்பரத்தை.

செப்பிடில், சடமாஞ்சில், see செபலாமம்.

செப்பிடுவித்தை, see செப்படிவித்தை.

செப்பிரக்கம், கஞ்சாங்கோரை, white basil — Ocimum album.

செப்பிலடைத்தல், see செப்பில் வைத்தல்.

செப்பிலி, see செப்பலி.

செப்பிலிடல், see செப்பில் வைத்தல்.

செப்பிலை, தும்பை, leucas flower — Leucas genus; 2. தாமரை, lotus.

செப்பில் அடக்கும் வித்தை, see செப்படிவித்தை

செப்பில்வைத்தல், தயாரித்த மருந்தைக் குப்பியில் அடைத்தல், securing the prepared medicine in a bottle; 2. புடம் போடுவதற்காக வேண்டிய மருந்தை மண் செப்பிற்குள் வைத்துச் சீலை மண் செய்தல், luting the medicine to be calcined after securing it in an earthern vessel.

செப்பு, சிமிழ், a small box made of wood, ivory metal such as copper, silver or lead; 2. சிறிய மண் குடுவை, a small earthern pot; 3. தாம்பூரம், copper; 4. செப்புக்குடம், copper water vessel; 5. இடுப்பு, hip.

செப்புக்குழலி, செம்பினாற் செய்த குழலி, இது கண்ணோய்கட்குத் தயாரிக்கும் கலிக்கம் அல்லது மருந்தை அரைக்க உபயோகப்படும். c.f. வெங்கலக்கல்வம், pistol made of copper. This is useful to prepare medicines for the eye (collyrium).

செப்புக்குழை, செம்புக்குழாய், copper tube or pipe.

செப்புக்குழைச்சலாகை, தமிழ் வைத்தியப்படிச் சத்திரக் கருவி 26ல் ஒன்று one of the 26 instruments used in surgery according to Tamil medicines.

செப்புக்குளிசம், செப்புத் தகட்டில் மந்திரவெழுத்தைப் பதித்துத் திரட்டிய தகடு, இதைப் பாதுகாப்புக்காக அணிந்து கொள்வது, an amulet made of rolled copper plate on which is inscribed magic lines and letters and worn as a remedy against evil or mischief — Talisman.

செப்புச்சலாகை, செம்பினாற்செய்த கனமான கம்பி, இது கண்ணிற்கு மை தீட்ட உபயோகிப்பது, a probe made of copper and used for painting the eye with collyrium.

செப்புச்சல்லி, தம்பிடி, a pie.

செப்புச்சதுரக்கள்ளி, சிவப்புச் சதுரக் கள்ளி, red spurge.

மாந்தளிக்கல், stone of the hue of mango tender leaves.

செப்புச்சிமிழ், செம்பினாற் செய்த டப்பி, small box made of copper, see செப்பு.

செப்புடில், see செப்பிடில்.

செப்புத்தகடு, செம்புத் தகடு, copper plate.

செப்புத்துறை, இடுகாடு, burial ground; 2. சுடுகாடு, Cremation ground; 3. மயானம், graveyard.

செப்புத்தொட்டி, பறங்கி வைப்புப் பாஷாணம் 32-ல் ஒன்று, மச்சமுனி 800-ல் சொல்லியபடி நாகம், இரசம், வங்கம், இலிங்கம், தாளகம், இவைகளைச் சம எடையாகக் கொண்டு பொடித்து, நெருப்பில் காய்ச்சிட எல்லாம் ஒன்று சேர்ந்து இறுகிடும், இதுவே செப்புத் தொட்டி, one of the 32 kinds of prepared arsenic. According to pharma centical preparation contemplated in Matchamuni 800, zinc, mercury, lead vermilin and orpiment are taken in equal quanitites and powdered. The powder is then secured in a crucible and heated. The product thus obtained is the one required.

செப்புநிறம், கருஞ்சிவப்பு, dark red.

செப்புநெருஞ்சில், சிவப்பு நெருஞ்சில், இதனால் சுரம், சுக்கில மேகம், உட்சூடு போம். trailing indigo — Indigofera enneaphylla. This is a cure for fever, gonorrhoea of internal heat. The juice is given as an antiscorbutic and alternative in certain affections. An infusion of the whole plant is diuretic and so given in fever and cough. 2. சிறு நெருஞ்சி, red cow thorn.

செப்புப்புல், நாணற்புல், copper ore.

செப்புமலை, செம்பெடுக்கு மலை, mountain containing copper ore; 2. சிவகிரிமலை, Sivagiri hills where copper ore is dug out; 3. கஷாயம், decoction.

செப்புமல்லிகை, பொன் நிறமுள்ள மல்லிகை, golden jasmine — Jasminum humile.

செப்பூகி, நாணற்புல், reed.

செப்பேடு, செப்புத்தகடு, copper plate or leaf.

செமித்தல், சீரணித்தல், digesting; 2. பிறத்தல், to be born.

செமியாக்குணம், சீரணமாகாமை, indigestion.

செம், சிவப்பு, red, 2. அழகு, beauty, 3. பூண்டின் முதற் பெயர், plants first term as செம்பஞ்சு, red cotton; 4. சுத்தமான, pure as செந்தமிழ், pure Tamil, 5. நல்ல, good as செம்பியன் good king.

செம், அழிஞ்சில், alangium, 2. செம்புளிச்சான், Indian seethia — Erythroxylon monogynum; 3. வங்கூழ், spleen tree — Amoora rohi tuka; 4.சுரக்கள்ளி, coromandal red wood — Soymida febrifuga; 5. மஞ்சாடி, red wood — Adenathera pavonia; 6. சிறுவேங்கை, short spiked spinous kino tree — Bridelia retusa.

செம்பகம், see செண்பகம்.

செம்பசலை, சிவப்புக் கொடி பசளை, red Indian spinach — Basella rubrum.

செம்பசளை, see செம்பசலை.

செம்பசும்பால், சிகப்பு பசுவின் பால் milk of red cow, இதனால் வாதநோய்கள் சாந்தப்படும். It will alleviate vatha diseases.

செம்பச்சி, வேம்பாடம், rolled bark creeper — Ventilago madras patana.

செம்பஞ்சி, சிவப்புச்சாயப் பஞ்சு, red cotton wool round red cake of cotton. This is an inferior kind of cotton impregnated with red colouring matter such as prickly pear, bastard saffron coral jasmine etc.

செம்பஞ்சு, சிவப்பு இலவம் பஞ்சு, red silk cotton. Salmalia malabarica; 2. சிவப்புப்பருத்தி, Brazil cotton — Gossypium arboreum — red cotton tree.

செம்பஞ்சுக்குழம்பு, பெண்கள், பாதங்களுக்கு சாயமிடுவதற்காக உபயோகிக்கும் ஓர் சிவப்பு சாயப்பஞ்சு, a paste obtained from red cotton used to dye woman's feet.

செம்படக்கா, ஓர் வகைக்கடல் மீன், a kind of sea fish.

செம்படிகம், சிகப்பு பளிங்கு, red crystal; 2. காஸ்மீரப்படிகக்கல், red crystal known as Cashmere stone.

செம்படை, செம்பரத்தம் பூ, changable rose அல்லது சப்பாத்திப்பூ, shoeflower — Hibiscus rosa sinensis; 2.see செம்பட்டை.

செம்பட்டை, ஓர்விதமான சிவந்த மயிர், hair brownish red in colour — Roufous hair.

செம்பட்டைபாய்தல், கபில நிறமடைதல், becoming brown as hair.

செம்பண்ணை, சேவற்பண்ணை, cocks comb — Celosiacrestata.

செம்பத்தி, ஓர் வகைத் தொட்டி பாஷாணம், a kind of arsenic.

செம்பம், முடக்கொற்றான், smooth leaved heart pea — Cardiospermum halicacabum — good for rheumatic pains.

செம்பயிரவப்பூடு, ஓர் மருதோன்றி, orange nail dye crossandra undulacfolia.

செம்பரக்கு, சிவப்பரக்கு, இது கொம்பரக்கின் மேல் வெந்நீர்

ஊற்றுவதனால் கிடைக்கும். It is obtained by pouring hot water on stick lac and then made into square sticks or cylinderical sticks.

செம்பரத்தம்பூ, செம்பத்தைப் பூ, shoe flower — Hibiscus rosa sinensis.

செம்பரத்தம்பூஉறுதி, see செம்பரத்தம்பூச்சத்து.

செம்பரத்தம்பூச்சத்து, நாயுருவிச் சாம்பலை நாழித் தண்ணீரில் கலந்து தெளிவிறுத்து, செம்பரத்தம்பூவை அதில் தோய்த்து வெயிலிற் சாய்த்து வைக்க அதினின்று இறங்கும் சத்து அல்லது இரசம், essence of china rose. (Hibiscus rose sinensis) It is obtained by the following process. The dired plant of Indian burr (Achyranthes aspera) is burnt to ashes which is made into a solution by adding some water to it. The clear water on the top is filtered in a separate vessel into which are soaked china rose flowers and then exposed to the Sun. The water percolating here from received in another vessel.

செம்பரத்தை, சப்பாத்துச்செடி, இது ஒரு பெரிய அடர்த்தியான செடி, 8 அடி உயரம், இலைகள் இருதயத்தைப் போன்றது, பூவிற்கு இரட்டை அல்லது அடுக்கிதழுண்டு இது முதல் வெண்ணிறமாக எழும்பி பிறகு சிறிது மங்கலாகி மறுநாட்காலை அதிக சிவப்பாகவிருக்கும். இப்பூவினால் பெரும்பாடு, மேகவெள்ளை முதலிய நோய்கள் போம், இதை யுனானி வைத்தியர்கள் ஷர்பத் செய்து பிரயோகிக்க தாகம், உஷ்ணம், நீரெரிச்சல், உட்சூடு போம். இது சீதளமுண்டாக்கி மூத்திரத்தை அதிகப்படுத்தும். கஷாயமிட்டுச் சாப்பிட நீரடைப்பு, சுரம், இருமல் இவைகளைத் தணிக்கும். இதன் தைலத்தைத்தலைக்குத் தடவ கபாலம் வறட்சி, கண்ணெரிச்சல், இவைகளைப் போக்கி மயிர் கருத்து வளரும். இதன் இலையினால் தலை

சுழற்றல் போம். இதன் பூச்சாற்றினால் பித்தளை பற்பமாகும். அடுக்குச் செம்பரத்தை, அலங்காரச் செம்பரத்தை பலநிற பூக்களைவுடைய பல வகைகள் காணப்படுகின்றன. சிகப்பு அடுக்கு புஷ்பங்கள் தான் மருந்துக்கு பயன்படும்.

Changeable rose — Hibiscus rosa sinensis it is a large bushy shrub 8ft. high heart shaped downy leaves, double flowers. On first opening in the morning it is white, then becoming cream coloured in the night and deep rose in the next morning and hence the name changeable rose. This is not used in medicine, only red double flowers which do not change colour are used in Medicine. Flowers are emollient and demulcent and as such in useful in menorrhagea and gonorrhea etc. As infusion, it is prescribed for ardour urinae and stranguary. Unani doctors prepare syrup out of them and prescribe it for irritable conditions of the genits urinary tract, dysurea and internal heat. They are prepared as electuary and used.

செம்பரம், மரமஞ்சள், tree turmeric — Coscinium fenestratum.

செம்பராடிகம், யாளி, a fabulous animal of the species of lion

செம்பருத்தி, சிவப்புப் பருத்தி, red cotton tree Bengal cotton — Gossypium indicum; 2. குங்குமப்பருத்தி, red cotton or spence cotton; செம்பஞ்சு, Brazil cotton.

செம்பருத்திப்பூ, இம்மரத்தின் பூவினால் உடம்புச் சூடு, வயிற்றுக் கடுப்பு, மேகவெட்டை, வெள்ளை இவைகள் போம். flowers of red cotton tree. it is a palliative in cases of heat of the body, irritation of the stomach, gonorrhoea etc.

NOTE: The difference between செம்பை, செம்பருத்தை and செம்பருத்தி, must be noted.

செம்பருந்து see கருடக்கொடி, 2. சிவப்புப் பருந்து, red species of kite. Nufus kite; 3. கருடன், Brahminy kite — Haliastur indus.

செம்பலகை, செங்கல் red brick.

செம்பலக்கிளுவை, நீலக்கிளுவை, bluish flowered prickly night shade — Solanum giganteum.

செம்பலா, சிவப்புப்பலா, red jack tree — Artocarpus integrifolia; 2.see செம்பிலா, 3. ஓர் வகை இலவங்கம்.

செம்பலி, see செம்பல்லி, 2.see செம்பிலி.

செம்பல், இரத்தம், blood.

செம்பல்லி, சிவப்புப் பல்லி, red lizard — Hemidactylus; 2. ஓர் காயசித்திப் பூடு, a rejuvenating drug used by the Siddhars (unidentified).

செம்பவம்

செம்பவளப்புத்து

செம்பவளம், மிகச் சிவந்த பவளம், deep red coloured coral.

செம்பழம், பழுக்குந்தருணத்திலுள்ள காய், பழம், fruit almost riped; 2. எலுமிச்சம் பழம், lime fruit.

செம்பழரசம், எலுமிச்சம் பழரசம், juice of lime fruit.

செம்பளித்தால், அச்சத்தால் கண் மூடிக் கொள்ளல், closing of the eyes from fear.

செம்பறாம்பண்ணி, ஓர் சிவப்பு கடல் மீன், a red sea fish — Serranon polleni.

செம்பறிந்தோன், செம்பின் இரகசிய குணத்தைக் கண்டறிந்தவன் அதாவது வாதி, one who had studied the secret properties of copper i.e. an Alchemist.

செம்பனசை, சிவப்புப் பனசைப் பாம்பு, a venomous snake.

செம்பன், சிவலைமனிதன், a red coloured man brown man.

செம்பா, see செம்பரத்தை.

செம்பாகம், சரிபாகம், equal parts or equal proportion.

செம்பாடு, செம்மண் பூமி, red soil.

செம்பாதி, சரிபாதி, exact half, half and half, ஒத்தபாதி, equal half.

செம்பாரங்கல், சிவப்புப் பாராங்கல், red stone laterite.

செம்பாரை, சிவப்புப் பாரை மீன், a red variety of horse muckerel of the Caranx genus; 2. வரிபாரை, silvery horse muckerel — Caranx affinis; 3. ஓர் நண்டு, a crab.

செம்பாலை, சிகப்புப்பாலை, rosy milk wort — Asclepias rosea.

செம்பால், இரத்தங்கலந்த பால், milk mixed with blood; 2.சீம்ப்பால், bloody milk or the first drawn milk of a cow; 3. இரத்தம், blood, 4. சுரோணிதம், blood in the womb; 5. செம்பாதி, equal half.

செம்பால்பாய்தல், உடம்பில் நல்ல இரத்தவோட்டம் தெரியும்படியாகக் காணல், a state or condition of health in which blood vessels appear through the skin.

செம்பால்முடங்கி, சிவப்பு வேலிப்பருத்தி, red hedge cotton — Daemia extensa red variety; 2. ஓர் வகைக் கீரை, a kind of garden greens.

செம்பாவட்டை, சிவப்புப் பாவட்டை, a red variety of Indian pavetta — Pavetta indica.

செம்பாவு, ஒரு வகைச் செடி — Meliosma simplicifolia.

செம்பாளை, ஓர் மரம், unknown tree; 2. ஓர் சிவப்பு நெல், a red kind of paddy.

செம்பாறைக்கல், சிவப்புப் பாறைக் கல், laterite stone. see சொறிகல்.

செம்பாறைநண்டு, பெரிய சிவப்பு நண்டு, a large red crab.

செம்பாற்சிட்டி, ஓர் வகைச் சிவப்புப்பட்ர் கீரை, a spreading green. see பாற்சிட்டி.

செம்பானசாதகத்தி, see செம்புசாதகத்தி

செம்பி, மருதோன்றி,2 naildye — Lawsonia alba; 2.கருவண்டு, black beetle; 3. ஆகாசகருடன், sky root — Bryonia epigoea; 4. கோழித்தலைக் கெந்தி, red sulphur, 5. தித்திப்புக்கோவை, இது சூதத்தைக் கட்டும் (lit) sweet caper — unidentified — It is said to consolidate mercury; 6. கோவை அல்லது நல்ல கோவை, common caper, red bitter melon — Cephalandra indica; 7. செவ்வரளி, red oleander — Nerium odorum (rubra).

செம்பிச்சி, ஊமத்தை, dhatura — Datura alba; 2. பொற்றிலைக் கையான்தகரை —wedelia calendulacea or Verbesina calendulacea; 3. செந்தொட்டிப் பாஷாணம், a kind of prepared arsenic.

செம்பிச்சு, see செம்பிச்சி.

செம்பித்தம், ஓர் பித்த நோய், a bilious disease, see செம்பித்தரோகம்.

செம்பித்தரோகம், உடம்பு சிவந்து, செம்பின் களிம்பு நிறம் போல் வாந்தி நிறமாகி, தாகம், வியர்வை, மலமிறுகல், வியர்வை கசிதல், தலை திருப்பல், பயந்தெழுதல், மயக்கம், திடுக்கிடல், முதலிய துர்க்குணங்களைக் காட்டுமோர் பித்தநோய், a bilious disease with following symptoms, body becomes reddish, vomitting, its colour being same as that which occurs in copper poisoning, thirst, perspiration, constipation, giddiness, sudden getting up as if in fear etc.

செம்பிரண்டு நாகமொன்று, பித்தளை, brass which is 2 of copper and of zinc.

செம்பிரண்டு வெள்ளீயமொன்று, வெங்கலம், bronze which is 2 of copper and 1 of tin.

செம்பிரண்டை, சிவப்புப் பிரண்டை, small downy lobed vine — Vitis linaei.

செம்பிரமி, சிகப்பு பிரமி, red variety of thyme leved gratiola — Gratiola monieri.

செம்பிராங்கம், வேம்பாடம்பட்டைச் செடி, red creeper, vembandam bark creeper — Ventilgo madras patana.

செம்பிராய், சிவப்புப் பிராய்மரம், a red variety of Pirai (unidentified) probably Decany olive wood — Eleodendron genus or Trophis aspera.

செம்பிரால், ஓர் வகைச் சிவப்பு இறால் மீன், red prawn.

செம்பிராள், see செம்பிரால்.

செம்பிருள், செம்பின் களிம்பு, verdigris.

செம்பிருளேகல், செம்பின் களிம்பு போதல், being freed from verdigris.

செம்பிரை, கானகக்கல், which see 2. கல்கிட்டம் see செம்பிறை.

செம்பிரோத்தம், எலுமிச்சை,lime.

செம்பிலா, காட்டுக்கருவா, red jack, country cinnamum — Cinnamomuminers.

செம்பிலி, செம்மறியாடு, ram or ewe a brawn sheep — Ovisaries; 2. செம்மறியாட்டுப் பால், ewe's milk; 3. செம்மறியாட்டுக் கொம்பு, brown sheep's horn.

செம்பிலிச்சான், ஓர் பூடு, a plant probably a misnomer of செம்புளிச்சான்.

செம்பிலி நெய், செம்மறியாட்டு நெய், இது எளிதில் செரிக்கக் கூடியது. ஆனால் கபத்தை விருத்தி செய்யும், பெண் குறியிற் காணும் புண்களுக்கு உதவும். ghee of ewe. It is light for digestion and proves benificial in the affections of female organs of generation. It increases phlegm humour.

செம்பிலியா, see செம்மறியாடு.

செம்பிலியாட்டு மூத்திரம், இது ஓர் காரச்சரக்கு உருசிக்கச் சிறிது கசப்பும் விருவிருப்பு முள்ளது. இது உடம்பிற்கு சூடுண்டாக்கும். இதை உட்கொள்ள இருமல், சரக்கட்டி, பாண்டு, மகோதரம், சயம், எளிதில் வசப்படாமலச்சிக்கல், முதலிய நோய்கள் போம். ram or ewe's urine. It contains alkali and so considered in Tamil medicine as alkaline drug. It has a bitter pungent taste. It is heating making in its potency and prooves beneficial in case of cough, enlarged spleen, abdominal dropsy, consumption, obstinate constipation of bowels.

செம்பிலியம், செம்புடன் மற்றச் சரக்குகளைச் சேர்த்து எடுக்கும் ஈயம். இது ஓர்வாத முறை. a chemical lead prepared from a mixture of copper and other durgs. This is an unknown alchemical process contemplated in Siddhar's science.

செம்பிலை, (செம்பு+இலை) செம்பிருக்கும் இலை (lit) any leaf containing copper; 2.see காறைச் செம்பிலை.

செம்பில், ஓர் வெள்ளைமரம், cup calyxed white cedar.

செம்பில்மிகுவேர்வை, சோர பாஷாணம், a kind of prepared arsenic.

செம்பில்வேதை, see செம்பில்மிகுவேர்வை.

செம்பிளித்தல், see செம்பளித்தல்.

செம்பிறால், சிவப்பு இறால், red prawon.

செம்பிறை, கற்கிட்டம், over burnt brick. see கானகக்கல்.

செம்பிறைக்கல், தேக்கல், gravel see கானகக்கல்.

செம்பிற்களிம்பு, see செம்புக்களிம்பு.

செம்பிற்பொருப்பு, செம்புமலை, mountain containing copper ore; 2. பொதிகைமலை Pothigay hills.

செம்பினிடவூறல்போக்கி, புலிநறளைக்கிழங்கு, root of hairy wild vine — Vitis setosa; 2. காட்டுக்கருணை, synantherias sylvatica.

செம்பினிறம், மாந்துளிர்க்கல், a kind of red precious stone.

செம்பினூறல், செம்பின் களிம்பு, the rust of copper — Verdigris; 2. துரிசு, aetate of copper. It is a substance obtained by exposing copper to the air in contact with acetic acid.

செம்பினூறல்போக்கி, காட்டுக்கருணை, purple stalked dragon of the Dracontium genus. It may be the corn of Synantherias sylvatica.

செம்பினூறல்போக்குதல், செம்பிலுள்ள களிம்பை அறவே ஒழித்தல், இதற்கும் சுத்திமுறைக்கும் வித்தியாசமுண்டு, There is vast difference between purifying process of copper and the process of getting rid of its verdigris or rusting properties.

செம்பின்பச்சை, நாகப்பச்சை, an inferior variety of dark greenish stone unlike emerald.

செம்பீரக்கம், *கருந்துளசி*, black holy basil — Ocimum sanctum (black variety).

செம்பீரஞ்சாறு, எலுமிச்சம் *பழச்சாறு*, lime juice, see *சம்பீரச்சாறு*.

செம்பு, *பஞ்சலோகத்* தொன்று *அதாவது தாமிரம்*, One of the five metals, copper — cuprum, 2. எண்ணெய் முதலியவைகள் அளப்பதற்காக உபயோகிக்கும் 3 1/4 சேர் கொண்ட அளவுப் பாத்திரம், a measure of 3 1/4 seers (or 216 cubic inches) for measuring oil and other liquids. 3. *நாவல்*, jamboo tree — Eugenia jambolana.

செம்பு, *தாமிரம்*, இது சிவப்பு நிறமான ஓர் உலோகம், இதைத் தகடாகவும் அடிக்கலாம், கம்பியாகவும் இழுக்கலாம், இதைத் தேய்த்து முகர நாற்றம் வீசும். இதில் காற்றுப்படுவதால் களிம்பேறும். இது திருவாங்கூர், ஜெயப்பூர், நெல்லூர் முதலியவிடங்களில் கிடைக்கும். சாதாரணமாய்க் கடைகளில் விற்பது வெளியூரிலிருந்து வரும், செம்பு சாதாரணமாய் கலப்பில்லாமல் அகப்படுவது கஷ்டம், அனேகமாய்க் கந்தகம், இரும்பு, பாஷாணம் இவைகளுடன் கலந்து தான் ஏராளமாய்க் கிடைக்கும். ஈயம் கலந்த செம்பு தான் வெங்கலம், நாகம் அல்லது மயில் துத்தம் கலந்தது பித்தளை, நம்மவர்கள் பித்தளை எளிதில் செய்வார்கள். செம்பைக் கொண்டு தம்பாக்கும் செய்வதுண்டு. மேனாட்டவரைப் போல் நம்மவர்கள் நெடுங்காலமாக செம்பைத் தங்கத்தோடு சேர்த்து நகை செய்து வந்திருக்கிறார்கள். தமிழ் வைத்தியர்கள் செம்பைக் கொண்டு செம்பு வெள்ளையென்ற தாம்பூர பற்பமும், வாத நூற்படி தாம்பூரச் சுண்ணமும் செய்வார்கள். பற்பம், குஷ்டம் முதலிய சரும நோய்களுக்கும்,

சுண்ணம் பொன் செய்வதற்கும் உதவும், செம்பினின்று களிம்பு எடுப்பது கஷ்டம் அப்படி எடுத்தால் அச்செம்பு பொன்னிற்கு மேலான பொன் ஒன்றையும் சொல்ல முடியாது. இம் முறைகள் சித்தர் நூல்களிற் கூறியிருப்பினும் அதன் இரகசியங்களைக் கண்டறிவது தற்காலத்தில் சாத்தியமாகக் காணப்படவில்லை. வாதமுறைப்படி செம்பைக் கொண்டு 100 மாற்று 1000 மாற்றுப் பொன் செய்யலா மென்று சித்த நூற்கள் கூறுகின்றன. ஆராய்ச்சியால் இது எக்காலத்திற்கு கைகூடுமோ தெரியவராது. செம்பில் பாத்திரங்கள் செய்து தண்ணீர் முதலியவை வைக்க உபயோகப்பட்டாலும் சமையலில் ஈயம் பூசாமல் உபயோகித்தால் களிம்பேறி அபாயத்தை விளைவிக்கும். செம்போடு புளிப்பு சேர்ந்த களிம்பு தான் துரிசு, கந்தகம் சேர்ந்த செம்பு தான் மயில்துத்தம், இப்பாத்திரத்தின் நீர் இரத்தத்தின் நுண்ணுயிர்களை அழிக்கும். இதன் பற்பம், பாண்டு, மகோதரம், பித்தமயக்கம், குட்டம், கிரந்திப்புண் முதலிய சரும நோய்களைக் குணப்படுத்தும். copper — cuprum of chemists. It is the only red coloured metal. It is malleable and ductile and has a disagreeable taste and smell when rubbed. When exposed to air, it becomes covered with a film of suboxide of copper or with green curst. It is foun in Travancore, jeypore and Nellore etc. but great quantity exposed for sale in the bazaars comes from other countries, it is rarely procured metalic State. But found commonly mixed with or in combination of sulphur, with iron and arsenic. the sulphurets are the abundant ores. Copper fused with tin forms bronze and bell metal with Zinc or oxide or Zinc called calamine, it forms brass. Which we the Indians know how to prepare

in simple way. Another alloy pinchbeck is also prepared along with copper. Our ancients were using an alloy of copper mixed with gold from a very remote time like the ancient Aescorinthium and were using it for making jewels. Tamil vaidyans used to prepare medicinal powder of calcined copper in different ways and Alchemists calcined copper carbonates by a secret process; the former used to be given in leprosy and other skin affections and the latter for making gold.

It is very difficult to remove the verdigris from copper and if removed, the copper so obtained will be almost equal to gold in quality. Although Siddhar's science exhaustively deals with these processes the code and the interpretations is an impossible task. According to Alcherrical process laid down, the copper can be consentrated so as to get 100 and 1000 mathu instead of 8 — 10 mathu (22 — 24 carats) gold available in the market and this consolidated copper is known as gold copper. Careful research alone candisclose this and it is not known when this will be discovered.

Clean copper vessels are with safety used for conveying and storing drinking water, but copper cooking vessels with out tin coating are dangerous as the metal gets oxidised and becomes poisonous. The vessels used must be well cleaned every day. The water stored in those vessels kills the germs in the body. It becomes vermifuge and bacterifuge, calcined oxide of copper is a cure against dropsy, ascites giddiness from bilious causes syphiliti soves, leprosy and other cutaneous diseases, and ulcers in the stomuch and intestines.

NOTE: 1. Sulphate of copper is blue stone know as *(துருசு,)* thurisu and copper sulphate or subacetate of copper is known as *(துரிசு)* Thurisu copper appears to have been known from prehistoric times. It is used for making house hold untensils, boilers instrument etc. It is one of the best conductors of heat and electricity and is therefore

used in the electrical industries. It is one of the chief ingredients in the coins. Copper melts at 1082.6 degree in an atmosphere of carbon monoxide and it can be distilled in the electric furnace. Some vegetable drugs and feathers of some birds (peacock) contain copper in organic form (See செம்பு சத்துமூலி)

NOTE: 2. The uses of copper in Ayurveda Thin foils or leaves of copper are used in medicine and they are purified in cow's urine. It is reduced to powder by coating it with a paste of sulphur and lemon juice and subjecting it to a sand bath. The powders so obtaied is then roasted in a crucible for purposes of rendering the copper in nocuous and prevent it from its impurity which causes purging vomitting, when taken internally. On chemical analysis the prepared medicine is found to contain sulphide of copper. It is an alternative and emetic prescribed for purging, dyspepsia, fever, enlarged liver, spleen, anemia, diarrhoea, skin diseases etc. Several preparations of copper are also used in asthma and diseases of the heart.

செம்பு, இச்செம்பு சாதாரணமாக சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுக்கப்படும், தோஷமுள்ள இரசம், கந்தகம் சமமாகச் சேர்ந்து பூமியின் உஸ்ணத்தினால் தங்கவர்ணம் போய்த், தாம்பிரமுண்டாகும் மென்று இரசவாத வாதிகளின் துணிபு. நம் முன்னோர்கள் இதை சுத்திசெய்து பற்ப செந்தூர சுண்ண பாகங்களாகச் சித்தர் முறைப்படி செய்து கடுமையான நோய்களுக்குக் கொடுத்து வெற்றியடைந்து வந்தார்கள். தற்காலத்தில் இது மிக்க அபூர்வமாய் விட்டது. இங்கிலீஷ் வைத்தியர்கள் நேரே இச்சிகிச்சை அறிந்தவர்களாதலால் இதில் ஆராய்ச்சி செய்வது முக்கிய மெனக் கருதுகிறார்கள். தற்கால வைத்தியர்களுக்கு இதைக் கையாளுவது

அசாத்தியமாகவேயிருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். இவ்வுலோகம் சிவப்பு, கடினமானது, இதைத் தகடாயும் கம்பியாகவும் ரேக்குகளாகவும் செய்யலாம். காற்றுப்பட்டால் களிம்பேறும். இயற்கையாகவே செம்பிற் களிம்புண்டு. இக்களிம்பை அகற்றுவது தான் அசாத்தியக் காரியம். இச் செம்பு தாதுவில் உப்புகளும் கலந்திருக்கும். இதைச் சுத்திச் செய்வதும் கஷ்டம் சுத்தி செய்து களிம்பகற்றினால் பற்பம், செந்துாரம், சுண்ணம் இவைகள் செய்யவுதவும். இதனால், தீராத வியாதிகளும் தீரும். குஷ்டத்தை உடனே தீர்க்கும். இச் செம்பு தாதுவைத் தவிர அநேக வஸ்துக்களிலும் கலந்திருக்கும். அவைகளினின் றெடுக்கும் செம்பு வகைகள் அடியிற் கூறியுள்ளன. இது வாதத்திற்கு மிக்க உபயோகமானது. இவ்வகைச் செம்பில் மயிலிறகுச் செம்பும் வெண்காரச் செம்பும் மிக்க சிரேஷ்டமாமெனக் கருதப்படும். செம்பு எந்தெந்த பொருள்களிலிருந்து எடுக்கப்படுகிறதோ அதன் பெயரால் வழங்கும். உ-ம் மயூரச் செம்பு — பூநாகச் செம்பு see செம்புச் சரக்கு.

Alchemists are of opinion that gold is transmulted into copper by combining with sulphur and mercury. Ancients calcified copper into white or red powder or calcium and used it as medicine with great success. Now a days, it is rarely prepared and if prepared it is less potent and sometime injurious too.

Copper is found in nature mixed with other minerals. By various processes copper metal is extracted from its ore.

This copper must first be purified and freed from its verdigris and must not rust again. Such copper must be calcified and used as medicine. This will

be effective, and cure all diseases including leprosy.

Various other minerals are transmuted into copper. Organic copper is extracted from many vegetable drugs and animal matter. The copper transmuted and extrated goes by the name of the drug from which it is obtained. See செம்பு மூலிகை, 2. செம்பு சரக்கு

1. வெள்ளிச் செம்பு.
2. மயூரச் செம்பு.
3. குடவன் செம்பு.
4. தங்கச் செம்பு.
5. பூநாகச் செம்பு.
6. கெந்தகச் செம்பு.
7. சங்கு செம்பு.
8. மிருதாரசிங்கி செம்பு.
9. இலிங்கச் செம்பு.
10. காந்தச் செம்பு.
11. அயக்களங்கு செம்பு.
12. அபிசுச் செம்பு.
13. துாரிசம் செம்பு.
14. இந்திர கோபச் செம்பு.
15. படிகச் செம்பு.
16. நிமிளைச் செம்பு.
17. அயச் செம்பு.
18. நாகச் செம்பு.

செம்புகப்பூ, see சண்பகப் பூ

செம்புகம், கள்ளிக்காக்கை, Concal —Centropus rufipennis; 2. சம்புகம் அல்லது நரி fox see செம்போத்து.

செம்புகருசி, நாவல், Jambu tree.

செம்புகருதீ, கல்லரளி, which see.

செம்புக்கலம், செம்பு பாத்திரம், Copper eating dish.

செம்புக்கலுவம், கண்நோய் மருந்தரைக்கும் செம்பினாற் செய்த கல்லம்மி, grinding stone made of copper to grind medicines for the eye.

செம்புக்களிம்பு, செம்பூறல், a mixture of basic copper acetates — Verdigris.

செம்புக்களிம்பு மண், செம்பு மலை, mountain containing copper ore.

செம்புக்கிழங்கு, செம்பெடுக்கும் கிழங்கு, a root from which copper can be extracted — Caladium esculentum.

செம்புக்குடத்தி, செவ்வரளி, red oleander — Nerium odorum (roseum).

செம்புக்குரு, செம்பை வாதமுறைப்படி தயாரித்த குருமருந்து, இதை வெள்ளியில் 10-1 கொடுக்க 8 மாற்றுப் பொன்னாகும். உள்ளுக்கு சாப்பிட உடம்பினுள்ள நோயை போக்கி தேகத்தை கற்றுாணாக்கும். Copper quintessence. When added to silver in the proportion of 10-1 yields gold of 8 mature. Cures all ailments of the body and invigarates the human system when taken internally.

செம்புக்குழவி, செம்பினாற் செய்த குழவி, இதற்கு வெங்கலக்கல்வம், copper roller used in preparing medicines for the eyes. The mortar for this should be made of bronze.

செம்புக்குள் காரீயம்கூட்டி, திராய், a plant of the Mollugo genus.

செம்புக்குள்வேதை, see கற்பரிபாஷாணம்

செம்புசத்துமூலி, செம்பசளை, வெள்ளைக் கோழிக் கீரை, நீலி, பொற்றிலைக் கையாந்தகரை, முக முகக்கை, அந்தரதாமரை, கோவை, நந்தியாவட்டை பொடுதலை, பாவையிலை, ஆடுதின்னாப் பாளை, ஆகாசகருடன், முள்ளங்கி, பொன்னாங்காணி, சோதிமூலி, ஆல் புல்லுருவி, ஆவாரை, புலிநரளை, plants that possess copper, besides the plants some creatures and birds possess copper. siddhars extracted that organic compound of copper from them and used it for medicinal and alchemical purposes name of that copper goes after the name of the substance from which is extracted for example. Mayura (peacock) copper, Boonaga (பூநாக) copper, Indira gopa (இந்திர கோப) copper and so on. Name of some of the plants that contain copper are given below. Vitis setosa, Hibiscus cannabinus, Bryonia epigoea. cephalandra indica. Basella rubrum, Aristolochia bracteata, Pistia stratiotes Wedelia calendulacea. Eclipta prostata, Alternanthera sessiles, Lippianodiflora Bryonia scabra. see செம்பு மூலிகை, செம்புச் சரக்கு

செம்புசாதகத்தி, கோழித்தலைக்கந்தகம், red sulphur.

செம்புசிலசத்து, see தாம்பிரசிலாசத்து

செம்புசுத்தி, கருங்குன்றி, கொள்ளிலை, கல்லுருவி, நொச்சி ஆக இந்நான்கையும் பழச்சாறுவிட்டு இடித்துச் சாறு பிழிந்து அதில் குன்றிமணியை அரைத்து போட்டு கலக்கி அதில் செம்பை உருக்கிச் சாய்க்க செம்பின் ஊறல் கழன்றுபோம். black Abrus precatorius, creeper, Horse gram creeper, parasite plant, Vitex negundo leaves are pounded by adding the juice of lime fruit. Then the juice is extracted. To this add the paste of the seeds of Abrus precatorius and mix well. Melt copper and pour it into this liquid. Repeat the

process twice more. The copper is purified. 2 கழுதை நீர், சிமைகாடி, கோமயம், வெள்ளாட்டு மூத்திரம், எலுமிச்சபழ சரம், The thin plates of copper are heated red hot and immersed three times in the following liquids. 1. Urine of ass 2. Vinegar, 3. Cow's urine, 4.Goat's urine, 5. Juice of lime fruit.

The plates can be soaked in the remains of toddy for a day. The copper is purified.

செம்புச்சரக்கு, சித்தநூலின்படி செம்பாக மாற்றும் அல்லது செம்பெடுக்கும் சரக்கு வகைகள், அயம், காந்தம், துருசு, கெந்தி, அரிதாரம், வங்கம், நாகம், குடவன், மயிலிறகு, பூநாகம், முதலியன substances which may be transmuted into copper or from which copper is extracted according to Siddhar's science viz., iron, magnet, copper sulphate, lead sulphur, orpiment, zinc, brass etc.

செம்புச்சிமிழ், கண் மருந்துகளைப் பதனப்படுத்தும் செம்பினாற் செய்த பரணை or குடுக்கை, small box like containars made of copper to preserve eye medicines such as Collyrium.

செம்புச்சுத்தியாக்கி, பேய்குமட்டி, colocyth fruit — citrullus colocynthis.

செம்புச்சோதனை, செம்பின் பரீட்சை, Copper test.

செம்புடையன், சிவப்புப்படையன் பாம்பு, red wart snake, a red variety of the family of Oppida.

செம்புணீர், இரத்தம், blood.

செம்புண், ஆறிவரும் புண், healing sore or ulcer; 2. சிவந்த புண், red sore.

செம்புண்ணீர், புண் இரத்த நீர், red serous exuduation from sores or injuries.

செம்புத்திக்கல், தாம்பூரக்கல், stone containing sulphide of copper — copper pyrites.

செம்பத்தொட்டி, சோரபாஷாணம், a kind of prepared arsenic.

செம்புநெரிஞ்சில், see செப்புநெரிஞ்சில்

செம்புப்பத்திரம், இலை போற் தட்டிய செம்பு, copper leaf or foil

செம்புப்பற்று, பொன்கலந்த செம்பு, an alloy of copper and gold.

செம்புப்பு, செம்பு சேர்ந்த வுப்பு, copper salt, cupreous salt.

செம்புப்பொடி, செம்பு ராவிய தூள், copper filings.

செம்புமணல், செம்பு சேர்ந்த தாது, copper ore, mineral copper.

செம்புமரமுத்தப்பட்டை, செம்பரத் தஞ்செடிப் பட்டை, இதன் சாற்றினால் அயகாந்தத்தை அரைத்து குன்மத்திற்கு கொடுப்பதுண்டு. bark of Hibiscus rosainensis. Iron and magnet are together calcined by triturating with the juice of this bark, and is given for dyspepsia.

செம்புமரமுத்தம், see செம்பிரத்தை.

செம்புமலை, செம்புத் தாதுக்களையுடைய மலை. mountain containing copper ore.

செம்புமித்திரம், செம்புக்குச் சினேகச் சரக்கு, friendly drugs to copper viz.

1.சாரம், sal ammoniac.

2.இந்துப்பு, rock salt.

3.மெழுகு, wax

4.வெண்ணெய், butter.

5.பசுநெய், cow's ghee.

6.வெண்காரம், borax.

7.வெல்லம், jaggery.

8.தேன், honey.

9.குன்றி, crab's eye seeds of Abrus precatorius.

செம்புமூலிகை, செம்பு கூடி நிற்கும் மருந்துப் பூடுகள், அவையாவன, copper plants or plants from which copper can be extracted viz;

1.சிறுகீரை, garden or pig green — amaranthus campestris.

2.அவுரி, indigo plant — Indigofera tinctoria.

3.புளிநரளை, hairy wild vine — Vitis setosa.

4.கோவை, scarlet fruited gourd — coccinia indica or cephandria indica.

5.செங்கொடிவேலி, rosy flowered lead wort — Plumbago rosea.

6.செந்திராய், a red variety tirye — Mollugo genus.

7.ஓரிதழ்த் தாமரை, one petalled lotus — Ionidium suffruticosum.

8.செவ்வல்லி, red Indian water illy — Nymphaea rubra.

9.கருஞ்செம்பை, sesbania aegyptical (nigrum).

10.செங்கீரை, red spinach — Amarantus artopur purcans.

11.கவிழ்தும்பை, stooping leucus — Leucas procumbens.

12.பொற்றலைக் கையான், marigold verbesina — Vertisena calundulacea.

13.புளியாரை, Indian sour sorrel — Oxalis corniculata.

14.பிடாரமுக்கி, unknown plant.

15.அங்கபாதி முடக்கற்றான், palsy curer Cardio spermum halicabum.

16.செந்தாமரை, Lotus — elumbium speciosum.

17.செம்பல்லி, red lizard plant unidentified plant a rejuvenating drug.

18.உமரி, glass wort — Salicornia brachiata.

19.செருப்படை, Glinus lotoides.

20.செங்கொடிப்பசலை, Indian spinach (red) — Basella rubra.

செம்புரவி, பஞ்சலோகத்தைக் கொண்டு சீன தேசத்தார் செய்த ஓர் ஆகாய விமானம், a machinary or contrivance made of an alloy of five metals used by Chinese in olden days for flying in the aerial regions.

செம்புரா, see செம்பிராய்

செம்புலம், சுடுகாடு, cremation ground 2. செம்புமலை, mountain containing copper ore.

செம்புலவு, வெண்ணாங்கு, creamy leaved lance wood — Pterospermum suberifolium.

செம்புலி, சிவப்புப் புலி, red tiger.

செம்புலியாடு, see செம்மறியாடு

செம்புவட்டகை, செம்பினாற் செய்த சிறு கிண்ணம், இது கண்ணோய் மருந்துகள் வைப்பதற் குதவும். small copper basin or cup holding collyrium.

செம்புவரை, see செம்பிற் பொருப்பு.

செம்புவன், செம்புக் களிம்பு, the rust of copper — verdigris.

செம்புவெட்டை, செம்புத்துாள், கோடக சாலைப்பூடு எலும்பிச்சம் பழச்சாற்றி லரைத்து, செம்புத்தகட்டுக்குப் பூசி, குகையிலிட்டு சீலைமண் செய்து, புடம்போடத் தூளாம், copper powder grind the plant Rungia repens with the juice of lime fruit; and smear over the thin plate or leaf of copper seal it in a suitable crucible and subject it to fire. It will become brittle & crumble into powder.

செம்புளி, சிவப்புப் புளி, red tamarind.

செம்புளிச்சங்கட்டை, சீதாரிக்கட்டை, the wood of red cedar tree.

செம்புளிச்சான், see செம்புளிச்சை

செம்புளிச்சை, செம்மணத்தி, red cedar tree — Erythroxylon monogynum, 2. சிவப்புக் காய்ச்சுரை நாருக்காக இச்செடி பயிரிடப்படுகிறது. இது சினிக்தகார் (வறட்சியகற்றி) பித்தத்தைச் சமனப் படுத்துகிறது. மூத்திர கிரிச்சரம், கல்லடைப்பு நோய்களுக்கு இதன் விதைகள் குடிநீர் பயன்படும். வயிற்று வலி, பலஹீனத்தையும் போக்கக் கூடும். இதன் காய் சத்து குறைவால் தோன்றும் ஈறு நோய்களைப் போக்கும். புற இதழ் குடிநீர் பித்தமயக்கத்தையும், பலஹீனத்தையும் சொற்ப சுரத்தையும் போக்கும். red sorrel Hibiscus subdariffa. It is chiefly cultivated for taking fibre. It is an emollient and demulcent. It neutralises the action of bile. The decoction of the seeds in prescribed in cases of dysurea, stranguary, in mild form of debility and dyspepsia. The fruit is much valued for its anti scorbutic properties. From calyx which is boiled in water a drink is prepared for biliousness, convalescense and mild fever.

செம்புளியம், சிவப்பு சிறு குறிஞ்சா, a variety of small Indian ipecacuanha — Gymnema genus.

செம்புளியம்பிரண்டை, சிவப்புப் புளியம்பிரண்டை, a red variety hairy wild vine — Vitis setosa or Cissus acida.

செம்புள், சிவப்புப் பறவை, red bird, 2. பருந்து, huwk; கருடன், brahmini kite.

செம்புள்ள, செம்படங்கிய, coppery, செம்பு போன்ற, copperish.

செம்புள்ளி, சிவப்புப் புள்ளி, red spot on the body as in diseases.

செம்புறா, கொண்டையினத்தைச் சேர்ந்த ஓர் வகை ஆற்று மீன், a fresh water fish of the carp family — Roach.

செம்புறைக்கல், துருக்கல், see செம்பாரங்கல்

செம்புனல், இரத்தம், blood; 2. சிவப்பு நீர், red coloured water or fluid.

செம்பூ, சிவப்புப்புட்பம், red flower in general 2. கண்ணிற்படரும் சிவப்புப் பூ, a red film or cataract in the eye; 3. மகளிர் சூதகம், menstrual blood; 4. பெண் குறிப்பூ, a part of the female genital; 5. see செந்தாளம்பூ, 6. சண்பகப்பூ, Micheliachampaca; 7. நாவல்மரம், jambul — Eugenia jambolana.

செம்பூகப்பூ, see சம்புகப்பூ.

செம்பூகா, சண்பகப்பூ see செம்பூ.

செம்பூசனி, பறங்கிக்காய், red pumpkin as opposed to வெண்பூசனி, gray pumpkin.

செம்பூநாகம், சிவப்பு மண்ணில் வசிக்கும் நாகப்பூச்சி, earth worm found in the red soil.

செம்மபூருதோன்றி, see செம்மருதோன்றி.

செம்பூமி, செம்மண், red earth soil

செம்பூரா, ஓர் வகைச் சிவப்புப் பூரான், a kind of red centipedes 2. செம்பாறைக்கல், which see.

செம்பூவம், மளைப்பூவந்தி, burdock soap nut — Nephelium longana.

செம்பூவன், சிவப்புப்பூவந்திக் கொட்டை, burdock soap nut — Nephelium longana.

செம்பூவாத்தி, See செம்மந்தாரை.

செம்பூறல், செம்பின் களிம்பு, rust of copper — Verdigris; 2.

களிம்புண்டாதல், pormation of verdigris.

செம்பேரிகம், சீரிப்பூண்டு, mungooseplant — Indian snake root — Ophiorrhisa mungos.

செம்பை, ஓர் சிறிய மரம். இது எங்கும் சாதாரணமாய் கிடைக்கக் கூடியது. இது முள்ளில்லாதது. இலைகள் நீளம் 3—12. பூக்கள் காய்கள் நீளம், விதைகளின் நடுவே சுருங்கியிருக்கும். பூக்கள் மஞ்சள் நிறம், இதன் விதைகளை எண்ணெயிற் காய்ச்சித் தடவ குருக்கள் குணமாகும். மேலும் மாதவிடாயை அதிகப்படுத்தும். இலை கட்டிகளுக்கு வைத்துக்கட்டப் பழுக்கும். வதக்கிக் கட்ட வீக்கம் போம். இதன் பூ தைலம் காய்ச்ச உபயோக மாகும். இத் தைலத்தால் மண்டைக்குத்தல், தலைவலி நீங்கும் வாய்வுக்கட்டி, சோகை, உடம்பின் நீரேற்றம், வாத சிலேட்டுமத் தொந்தம் முதலிய நோய்களுக்கு இலையை வறுத்து ஒத்தடம் கொடுக்கலாம். இது அடியிற் கண்டபடி பலவகைப் படும். இதற்கு சுற்றத்தியென்றும் பெயர். கருப்பு அல்லது ஊதா பூ பூர்ப்பது கரும் செம்பை எனப்படும். இது தான் மருந்துகளுக்கு உபயோகப் படும். bastard sensitive plant — Sesbania aegyptiaca alias Coronilla sesban. It is a small tree common every where. It is unarmed, leaves longer, pendulous three to twelve flowered, legumes linear and contracted between the seeds and flowers are yellow. There is another variety that bears dark blue flowers, and it is this that is prefered for medicine. Seeds are described as stimulant, emmenagogue and astringent. Seeds and bark are useful in checking diarrhoea and menorrhagia seeds in the form of ointment is used for skin eruptions and itch, leaves as a cataplasam to promote suppuration; roasted leaves form a remedy for swelling. The flowers are used for preparing medicated oil which is used with great advantage in hemicania, and head ache leaves are useful in anemica, collection of morbid fluid in the system and also diseases due to the derangement of Vatha and phlegm.

It consists of different varieties viz;

1. கருஞ்செம்பை, sesbania aegyptiaca with dark blue flowers.

2. முட்செம்பை, prickly sesban — Aeschynomene sesban.

3. சீமைச் செம்பை அல்லது பரங்கிவேல், foreign sesban Parkinsonia aculeata.

4. நீர்செம்பை, water sesban — Sesbania aculeata.

5. செஞ்செம்பை, red solah — Coronilla aculeata.

6. வயல் செம்பை, another variety

7. வெண்செம்பை, another variety.

செம்பைக்குருவாய்ப்பண்ணி, கல்லறளி, which see.

செம்பைப்பறப்மாக்கி, see உச்சிலந்தி.

செம்பயிரவுப்பூண்டு, ஓர் மஞ்சள் மந்தாரை unarmed orange nail dye — Cressandra undulacfolia.

செம்பொடி, செம்புமணல், copper ore, 2. செம்மணல், red sand, 3. செம்புப்பொடி, copper filinga; 4. மகரந்தப்பொடி, pollen; 5. தேக்கல், gravel rock.

செம்பொடி நீக்கல், செம்பாறைக்கல், graval stone, red laterite stone.

செம்பொடுதலை, சிவப்புப் பொடுதலை, a red variety of creeping varvain —, Lippia genus.

செம்பொற்றூள், ஏமமணல், gold ore.

செம்பொன், சுத்தப்பொன், அதாவது புடமிட்ட பொன், refined gold; 2. பழுப்புப் பொன், alloy of gold and copper; 3. சிவப்புப் பொன், a kind of gold red in colour as opposed to வெண்பொன் silver; 4. களிம்பற்ற செம்பு, copper free from verdigris; 5. தங்கரளிமரம், common yellow trumpet flower tree — Trecoma stans. 6. செம்புமலை, mountain containing copper ore.

செம்பொன் அவரை, சிகப்பு அவரை, redbean or lablab.

செம்பொன்னெரிஞ்சல், see செப்பு நெறிஞ்சில்.

செம்போத்து, கள்ளிக் காக்கை, see செம்புகம், 2. சகோரம், which see

செம்போத்துநாடி, நோயாளிக்கு 3 நாடிகளும் கள்ளிக்காக்கை சிறகை அடித்துக் கொள்வது போல் மேலெழும்பித் துடிக்கும் நாடி, இப்படியாகில் 10 மாதத்தில் மரணமாவான், It all the three pulses - vatha pitha and kapa — beat like the wings of concal *(செம்புகம்)* the patient will die within 10 months.

செம்மஞ்சள், சிவப்புக் கலந்த மஞ்சள் நிறம், கிச்சிலி நிறம், Orange colour.

செம்மஞ்சாடி, சிகப்பு ஆனைக்குன்றிமணி, Adenanthera Pavonia.

செம்மட்டி, மரமஞ்சள், tree turmeric — Coscinum feuestratum; 2. ஓர் வகைச் சிப்பி, a kind of mussel of oyster.

செம்மட்டிமரம், see செம்மட்டி.

செம்மட்டைமயிர், கபில நிறமானமயிர், hair brown in colour.

செம்மணக்காதி, see செவ்வா மணக்கு.

செம்மணத்தக்காளி, சிவப்பு மணத்தக்காளி, red berried night shade — Solanum rubrum.

செம்மணத்தாவிகம், see செந்தொட்டி.

செம்மணத்தி, தேவதாரு, decany deodar — Erythroxylon monogyrum see செம்புளிச்சை.

செம்மணல், சிவப்பு மணல், red sand.

செம்மணம், see செம்புளிச்சை.

செம்மணி, கண்ணின் நடுவேயிருக்கும் கருமணியைச் சுற்றிலுமுள்ள சிவந்த பாகம், the red portion encircling the pupil of the eye; 2. கெம்புக்கல், ruby; 3. இரத்தினம், red garnet; 4. குன்றிமணி, jeweller's bead; 5. குருவிந்தக்கல், emery; 6. மாமிசகந்தி, red or flesh coloured sulphur; 7. பவளம், coral.

செம்மணித்தக்காளி, சிவப்பு மணித்தக்காளி, இதன் காய் சிவப்பு சிறிது தித்திப்பு, இலைகள் கருப்பு மணித் தக்காளி இலைகளை விடப் பெரிது. கனதி வெளிர் நிறம், சிறிது அருவருப்புள்ள வாசனை, இதன் கஷாயம் நீரை பிரிக்கும். உடம்பைத் தேற்றும், மலத்தையிளக்கும், சிறிது மயக்கத்தை உண்டாக்கும். இதை பாண்டுவிற்கும் கொடுக்கலாம். இலைச்சாற்றை ஈரல் வீக்கம், உட்சுரவேம், வாத கப தொந்தம் முதலிய நோய்களுக்குக் கொடுக்கக் குணமாகும். இதன் காய் மேனாட்டில் விஷத்தன்மை எனக் கருதினாலும், தமிழ் தேசத்தவர்கள் கறி வகையிற் சேர்த்து விசேஷகுணமெனக் கொண்டுள்ளார்கள். red Indian hound berry — Solanum rubrum. In this plant the berries are red and slighlty sweet. Leves are distinctly larger and thicker than there of the nigrum (black variety); paler in colour and posses a slight disagreeable

smell. Decotion of the leaves is diuretic, alternative, laxtive and slightly narcotic and so is used in dropsical affection, the juice of the leaves is useful in chronic enlargement of liver, internal fever, and vatha and phlematic tendencies. Berry although reckoned poisonous in Europe is eaten in Tamil country with impunity as a curry considering it to have medical virtues.

NOTE: The juice of the leaves evaporated on a sand or water bath to the consistency of a soft mass forms an extract. It is substituted for British sweetnitre, cream of tartar and digitails.

செம்மன்,2 காவிமண், இது தமிழ் வைத்தியத்தில் உபரசச் சரக்குகளுள் ஒன்று. இது ஓர் பிசுபிசுப்பான சிவந்த மண் அல்லது களிமண். இதைப் பூர்வத்தில் மருந்தில் உபயோகித்து வந்தார்கள். இப்போது பல் தூளிலும் மிருக வைத்தியத்திலும் உபயோகித்து வருகிறார்கள். armenianbole. It forms one of the 120 kinds of natural substances. It is a reddish unctuous earth or clay formerly much used in medicine and now in tooth powders and in veterinary practice. It is an absorbant and astringent. See காவிமண்.

செம்மண் கவசம், செம்மண்சீலை.

செம்மண் கவசம் செய்தல், செம்மண் சீலை செய்தல்.

செம்மண்சிலை, கற்காவி, a species of red earth used in Indian houses for making the bottom and ends of the walls, ridges etc. rudde 2. காவிக்கல், red chalk —reddle— 3.see சிகப்பு காவிக்கல்.

செம்மண்சீலை, புடமிடுவதற்குமுன் மருந்து சட்டிக்கு சுற்றும் செம்மண் சீலை துண்டு, a long narrow pieces of cloth used to lute the container of medicine before calcination.

செம்மண்சீலை செய்தல், புடம் போடும் முன்பு அல்லது எரிக்கும் முன்பு மருந்து வைத்திருக்கும் பாத்திரத்தை மூடி, காற்று புகாதபடி நன்றாக செம்மண்சீலை சுற்றுதல், to lute airtightly the lid and crucible or container of medicine with long, narrow pieces of cloth smeared with red ochre before submitting it to fire.

செம்மண் பூநாகம், செம் மண்ணில் உற்பத்தியாகும் நாகப்பூச்சி, earth — Worm growing in red earth or soil.

செம்மந்தாரை, சிவப்பு மந்தாரை, செம்பூவாத்தி, எங்கும் வளரும் மரத்திலொன்று, மரம் 20-30 அடி, முள்ளில்லாதது. இலை மேற்பக்கம் உருண்டை, அடியில் குறுகியது பூக்கள் பெரிது, பார்வைக்கு அழகாக விருக்கும், ஆகவே, தோட்டங்களில் விசேஷமாய்க் காணலாம். பட்டையோ சாம்பல் நிறம் வழவழப் பாயுள்ளது. உருசிக்கச் சிறிது துவர்ப்புள்ளது. இதை சுரத்திற்குப் பலவத்தினியாகக் கொடுப்பதுண்டு. காய்ந்தப் பூவின் மொக்குகளை அசீரண பேதியிலும், பூச்சிகளைக் கொல்வதற்கும் உபயோகிப் பதுடன் சமையலிலும் சேர்த்துக் கறிகளில் உண்பார்கள். இம்மரத்தினின்று எண்ணெய் பிசினும் எடுப்பதுண்டு. variegated pink mountain ebony — Bauhinia variegata (alias) B-purpurea. It is one of commonest species of trees. 20-30 ft. unarmed, leaves roundish on the upper side and cardate at the base flowers larger, handsome to look at and so extensively planted in gardens. Bark is grey, smooth, reddish, brown feebly astringent in taste, it is medicinally a tonic in fevers. Dried buds being astringent, and an the Imintic are used in diarrhoea, and worms, eaten as vegetables when prepared with animal food. The tree gives a brown gum and oil is extracted from the seeds. The bark rubbed with rice water into an emulsion and mixed with

ginger is given in scrofulous enlargement of the glands of the neck. The decoction is a useful remedy in diarrhoea, and is used as a wash in ulcers and skin diseases. The root is a carminative and flowers are laxative. The decoction of the root is an antifat remedy and so valuable for carpulent persons.

NOTE: The leaflets are oval, petals oblong nearly sessile, legumes five to twelve seeded. The bark is grey with elliptic warts of a dark colour and the internal surface is white, Gum brown. Bark is used in tanning and dyeing. The principal botanical varieties are red and white.

செம்மயிர்க்கொன்றை, சிவப்பு மயிர்க் கொன்றை red false peacock tree — Caesalpinia pulchersima; 2. பொன் மயிர்க்கொன்றை, this is yellow variety.

செம்மரத்தி, அழிஞ்சில் — sage leaved alangium — A langium decapetalum.

செம்மரத்தூள், செம்மரத்தின் பட்டைத் தூள், சுரக்கஷாயத்திற் சேருமோர் கடைச்சரக்கு, bark of Indian red wood — Soymida febrifuga. Powder of the bark of the tree is used in fevers. Decoction may also be used.

செம்மரம், சிவப்பு மரம், any red or red wood tree; 2. சுரக்கட்டிக்காக உபயோகப் படும் ஓர் சிவப்பு மரம், red wood tree, spleen tree — Amoora rohituka; 3. சுரக்கள்ளி, Indian mahogany — Soymida febrifuga; 4. வத்தங்கி அல்லது சப்பங்கம், red wood tree — Caesalpinia sappan; 5. திருக்கோணமலை செம்மரம், Trincomalce red wood tree — Berrya, ammonilla; 6.see அழிஞ்சில், 7. மஞ்சாடி, barbadoes pride; 8. தேவதாரு, red cedar; 9. செஞ்சந்தனம், false red sanders; 10. சாயமரம்,2 malay red wood tree — Sandoricum indicum.

செம்மரம், சிவப்பு மரம். இதன் பட்டை துவர்ப்பாதலின் மருந்திற்குபயோகப்படும். இதைக் கஷாயமாக வைத்து, சுரக்கட்டிக்குக் கொடுக்கலாம். விதையிலிருந்து எடுக்கும் எண்ணெய் வாதப்பிடிப்புக்கு பயோகிக்கலாம், red wood — Amoora rohituka. The bark is used as a medicinal astringent and decoction from it is prescribed by Vaidyans for enlargement of spleen. Oil from seeds is stimulent in rheumatism.

2.சுரக்கள்ளி அல்லது வண்டு மரம் 60 அடி, பட்டை சிவப்பு, கசப்பு சிறிது உறைப்பு, இதைக் கஷாயமிட்டு சுரத்திற்குக் கொடுப்பதுண்டு. இது குணத்தில் சுரப்பட்டையை யொத்திருக்கும். கடையில் இதற்குப் பதிலாக எட்டி மரப்பட்டை விற்பார்கள். Indian red wood tree. Coromandel red wood — Soymida febrifuga. It is a large forest tree of South India. The bark is of a rich red brown colour and it is astrigent tonic. It contains tannic acid and is used in dysentery and diarrhoca and also as febrifuge for fevers. The decoction of the bark is adopted as gorgles, enemata, vaginal douche and also as an application for rheumatic swellings. The power is applied as poultice.

செம்மரம், சாயமரம். இதற்குச் சாயமரச்சக்கை வத்தங்கி, சப்பங்கம் என்றும் பெயர். திருவாங்கூர், மலையாளம், வங்காளம் இவ்விடங்களில் விசேஷம். மரம் 40 அடி உயரம். முட்களுடையது. காய் தட்டை பூக்கள் மஞ்சள் நிறம். வெயிற் காலத்தில் பூக்கும். இம்மரத்தில் (tannic acid gallic

acid) துவர்ப்புச் சத்தும், புளிப்புச் சத்தும் கலந்துள்ளன. ஆகவே இதைச் சீமை வத்தங்கிக்குப் பதிலாக உபயோகிக்கலாம். இதன் கஷாயம் துவர்ப்பாதலின் ஆசிரணி பேதிக்குக் கொடுப்பதுண்டு. சாய மேற்றவும் உதவும். அன்றியும், சுரம், சயம், சயத்திற் காணும் சீதபேதி, இரத்தப் பெருக்கு முதலிய நோய்களில் உள்ளுக்கும், பெண்களுக்குக் காணும் கர்ப நோயிலும் யோனிப் புற்றுக்கும் வஸ்தி செய்யலாம். red wood tree, brazil wood Caesalpinia sappan. It is especially in Travancore, Malabar, Bengal and West coast. Tree is 40 ft. armed flowers yellow, blossoms in summer, legumes compressed. wood contains much tannic acid and gallic acid and is a good substitute medicinally for log wood. Decoction is useful for diarrhoca and is also used for dyeing. It is beneficial in fever, cosumption, dysentery in tuberculosis and hemorrhage. It is used a vaginal douche for leucorrhoea — see சீமைச் செம்மரம், The tree is 60 ft. high bark is of a dull red colour, its decoction is used in fever, its resembles cinchona bark, in quality. In bazaars nuxvomica bark is sold as a substitute; see செவ்விறகு.

செம்மராகிதம், சிவப்பு நெல்லி, a red variety of goosberry tree Phyllanthus embelica genus; 2. சிவப்புக் கீழநெல்லி, red niruri — Phyllanthus urinaria — It is diuretic.

செம்மருதம், see செம்மருது.

செம்மருது, பூமருது, Indian blood wood — Lagerstroemia flosreginae.

செம்மருதோன்றி, பொன்னீர் பூவளமறு தோன்றி, a red variety of fragrant nail dye — Lawsonia genus.

செம்மருந்தாண்டம், நான்கு மாதத்திய கருப்பிண்டம், இது சிவப்பு நிறமாய் இருத்தல் பற்றி இப்பெயர் கொண்டது போலும், a foetus four months old. It is so called from its red colour.

செம்மரோகதம், நீர்முள்ளி, water thistle — Hygrophila spinosa.

செம்மலர், சிவப்புப்பூ, red flower.

செம்மலா, ஆவிரை, tanner's cassia — Cassia auriculata.

செம்மலை, see செம்மலா.

செம்மலைப்பழம், ஓர் வகை வாழைப்பழம், இப்பழத்தினின்று தைலம் வடித்து வாத நோய்க்குப் பூசலாம். a red variety of plaintain fruit as opposed to கருமலைப்பழம் which see, oil prepared out of it is used as an external application for rheumatism.

செம்மலைப்பாலை, see செம் பாலை.

செம்மலையகத்தி, ஓர் மலையகத்தி, hill sesbane as opposed to வென்மலையகத்தி.

செம்மல், வதங்கிய பூ பழைய பூ, faded flower; 2. சாதிப்பூ, superior Jasmin flower; 3. வாடாப்பூ, ever green flower.

செம்மல்லிகை, செம்முல்லை, golden jasmine Jasminum — humile.

செம்மறி, see செம்மறியாடு, 2. ஆட்டின் பொது, sheep in general.

செம்மறிக்கடா, செம்மறியாட்டின் ஆண், இதன் கொம்பு கீழாக வளைந்து வட்டமாயுள்ளது. இதை நெல்லூரில் விசேஷமாய் வளர்ப்பதுண்டு. ram. Its horn is angular and turned down wards, almost into a circle. Nellore is famed for its large bread.

செம்மறிக்குட்டி, செம்மறி யாட்டுக்குட்டி, lamb.

செம்மறிப்புருவை, செம்மறி யாட்டுக்குட்டி, lamb; 2. பெண் ஆடு, ewe.

செம்மறிச்சாணி, செம்மறியாட்டுப் புழுக்கை, இது நிலங்களுக்கு வுபயோகபபடும். excrete (dung) of the red sheep is very useful as manure.

செம்மறியாடு, சிவப்பு ஆடு, இது ஆட்டின் ஓர் இனம், நெல்லூரில் இருப்பது விசேஷம். தென்னாட்டி லிருப்பவை வயிறு ஒட்டி ஓனாயைப் போலிருக்கும். ஆனால், மலையாளம், கோயம்புத்தூர், மைசூர் இவ்விடங்களில் உள்ளவை களுக்கு மயிர் அடர்த்தி யாயிருக்கும். இது சிறியதாய் இருந்தாலும் நன்றாய்க் கொழுக்கும். தமிழ்ப்பதார்த்த குணசிந்தா மணியில் அகஸ்தியர் 500லும். இதன் கறிகபத்தை அதிகப் படுத்துவதால் உதவாதன்றும், பால், தயிர், நெய் முதலியவைகளுக்கு வாயு கபவிருத்தியுண்டாம். ஆகவே இது பத்திய கறிக்குதவாது எனவும் கூறப்பட்டிருக்கிறது. a variety of red sheep — Ovis aries. Nellore district is famed for its large breed, the tallest in India. The Madras sheep resembles a hound withtucked up belly and rumbled horns, but Malabar, Coimbatore and Mysore are famed for a bread of wool producing sheep. Although small it fathens well. In Tamil Materia Medica and Agastiya Vaidya 500 speak unfavourably of its mutton as promoting skin and many other disease where as its milk, curd and ghee are like wise wholosome and unconsequently prohibited in diet as they are said to cause skin disease asthma, and diseases due to increase of Vatha humour and also due to the combination of bilious and phelgam humours.

NOTE: It is so called because it is browner than goat. Horn in bath are large angular and heavity wrinkled turned down wards almost into a circle. The lips are protected by hair. It takes bite much closer to the ground than cattle and so it can thrive even in scanty pastures. The tail is short. Its mutton is sweet and is the lightest and safest of all kinds of animal food Vaidyans employ mutton suet in the preparations of oinments. With other drugs it is administered internally in cases of hemoptesis and in certain stages of phthisis pulmonis.

செம்மறியாட்டிறைச்சி, செங் கரப்பான் புதிதாகப் பல நோயும், மந்தமும் உண்டாம், கொடுத்தாலும் வாயுரோகங்கள் உண்டாகும். a sort of eczema, loss of appetite and some diseases are caused by eating sheep's mutton. It increases adipose tissue and causes better complexion.

செம்மறியாட்டுக்குட்டி, செம்மறி யாட்டின் குட்டி, the kid of the red sheep — Lamb.

செம்மறியாட்டுப்பால், செம்மறி ஆட்டின் பால், இது மூளைக்கும் குடலுக்கும் பலத்தைக் கொடுத்தாலும் வாயு ரோகங்களுண்டாகும். the milk of the red sheep though increases the strength of brain and intestiones, causes vatha diseases (due to wind).

செம்மன்திருக்கை, நீண்ட வாலுள்ள சிவப்புத் திருக்கை மீன், long tailed brown stingray — Trigon bleekeri.

செம்மாகிதம், see செங்கரந்தை.

செம்மாதர்பால், சிவப்பு நிறமான பெண்களின் பால். இது வாதாதி முத்தோஷம் போம். breast milk of fair coloured woman. It alleviates the diseases caused by each of three humours.

செம்மாந்தன், கானல்மா, jungle mango — Spondius mangifera.

செம்மாரா, ஓர் கடல் மீன், a sea fish — Lutjanus unimaculatus.

செம்மானத்தண்ணீர், சிவந்த நீர், water of red soil

செம்மானரளி, see சிவப்பலரி

செம்மிகி - See செங்கீரைத் தண்டு.

செம்மீன், மீனம்பர், a morbid intestinal secretion of the spermaceti whale — Ambergiris; 2. சிவப்பு மீன், red coloured fish in common; 3. பெருந்தலைத் திமிங்கலம், sperm whale — Euphysites macro cephalus.

செம்மீன்வயிரம், மீனம்பர், see செம்மீன்.

செம்முகமேகம், முகத்தைச் சிவப்பு நிறமாக மாற்றும் ஓர் வகைக் கிரந்திமேகம், a form syphilis marked by red face.

செம்முகம், குரங்கு, monkey so called from its red face.

செம்முதல், சீலைமண் செய்தல், luting the lid and the vessel containing medicine before calcining.

2.கட்டியைக் கீறல், incising an abscess

3.கண் கலங்கி வீங்கல், swelling of the blear eyes.

4.வயிறு பொருமல், rumbling noise of the stomach.

5.புண்ணின் வாயைத் தைத்தல், suturing a wound.

செம்முருங்கை, சிவப்பு முருங்கை மரம், a rad variety of drumstick tree — Pterygosper mamoringa; 2. சிவப்புப் பூ பூக்கும் கலியாண முருங்கை. coral bead tree — Erythrina indica; 3. செங்கொன்றை, red Indian laburam — Cassia marginata.

செம்முல்லை, சிவப்பு முல்லை, red or golden jasmine — Jaminum humile.

செம்முள்ளங்கி, சிவப்பு முள்ளங்கி, red raddish; 2. சீமை முள்ளங்கி, which see

செம்முள்ளங்கிக் கிழங்கு, சிவப்பு முள்ளங்கிக் கிழங்கு, இதனால் கண்ணொளி அதிகரிக்கும். நீர்த்தாரையின் கற்களைப் பொடியாக்கி நீரின் வழிசேர்க்கும். இருமல் வயிற்றுப்புசம் போம். red radish. It is cures stone in the kidney and urinary tract, bloating of abdomen and cough, improves eyesight.

செம்முள்ளாகி, காட்டுமுள்ளி, wild thistle.

செம்முள்ளி, சிவப்புமுள்ளி, இச்செடி 2 அடி உயரம், அடித்தண்டு மூலிகைக் குணம், பூக்கள் கிச்சலி நிறம், வருஷ முழுவதும் பூக்கும், வேர் மரத்தைப் போலவும் பக்கத்தில் அநேக சிறிய வேர்கள் கிளைத்துமிருக்கும். இலைச்சாறு கசக்கும். ஆகவே அதில் சர்க்கரையும் தண்ணீரும் கலந்து சுரம், சளிப்பு இவைகளுக்குக் கொடுப்ப துண்டு. வியர்வை யுண்டாக்கும். கோழையை யறுக்கும். உள்ளங்காலுக்கு வெடிக்காம லிருக்கும்படி தடவலாம். இப்பூண்டைக் கொளுத்திய சாம்பலுடன் தண்ணீரும் அரிசிக் கஞ்சியும் கலந்து பாண்டு, இருமல் இவைகளுக்குக் கொடுக்க லாம். இதன் வேரை அரைத்துக் கொப்புளங் களுக்கும் கிரந்தி வீக்கங்களுக்கும் பூசுவதுண்டு. இதன் இலைகள், தண்டு இவைகளை தூள் எண்ணெயிற் கொதிக்க வைத்து விரணங்களுக்குப் பூசுவ துண்டு. ''செம்முள்ளி யென்றால் சிலேட்டுமம் நடுங்கும்'' ஆகவே, இதற்குக்

கபத்தையறுக்கும் குணமுள்ள தால் இதைக் கஷாயமிட்டு குழந்தைகளுக்கு காணும் களைமாந்தம், மேல்மூச்சு இவைகளுக்குக் கொடுக்க லாம். common nail dye — thorny nail dye — Barleria prionitis, B.ciliata shrubly weed, 2 ft. stem herbaceous, leaves deep green, flowers orange coloured, flowering nearly all the years, root woody with numerous latteral rigid rootlets juice of leaves, which is rather bitter mixed with sugar or honey and water is given to children in fevers and calarrh. It is diaphoretic and expectorant applied to the foot to prevent cracking or laceration especially during winter or cold season. The ashes of burnt plant mixed with water and rie conjee, employed in dropsy, anasarca and coughs, a paste is made of the root and applied to disperse boils, alsceoses and glandular swellings. A medicated oil, made by boiling the leaves and stems with sweet oil as cleansing application. Being an expectorant, it is prescribed for children in cases of tabes mesenterica hard breathing etc.

செம்முள்ளி, சிகப்பு முள்ளுக்கிரை, red nail dye, red prickly spinach — Amarauthus spinous; 2. சிகப்புக் குப்பை முள்ளிக்கிரை, a red variety of prickly greens growing in the rubbish, 3. see செவ்வகத்தி, 4. ஓர் வகை சமுத்திராபழம், Andaman Indian oak barringtonia speciosa; 5. வெள்ளை நீலாம்பரம். crusted purple nail dye; 6. செம்முள்ளி இனத்தைச் சேர்ந்த ஓர் பூடு, Berleria cristata

செம்மூக்கன், ஓர் முதலை, a species of crocodile, alligator, 2. ஓர் எலி, a species of red nosed rat.

செமெலிச்சன், see செம்புளிச்சை

செம்மெழுகு, சிவப்பு மெழுகு, red wax

செம்மேகத்தடிப்பு, உடம்பில் பலவிடங்களில் இரண்டனா கனம் தடித்துச் சிவந்து, கிள்ளினால் சுவர்ணை யற்றிருக்கும் ஓர் வகை மேகநோய், a favour of syphitis marked by raised patches of one cente metre diamater on the different parts of the body attended with loss of sensation on the affected part.

செம்மேகம், மேகத்தினால் முகம், உடம்பு, இவ்விடங்களில் சதை தடித்து சிவப்பு நிறம் அடைந்து காணும் ஓர் நோய், a skin disease in which the face and the body are marked by raised red patches due to syphilitic causes; 2. இரத்தம் கலந்த மூத்திர நோய், aurinar disease in which urine is discharged with streaks of blood; 3. இரத்த மூத்திரம், discharge of bloody urine c.f. கருமேகம்.

செம்மை, திப்பிலி, long paper; 2. சாராயம், liquor, 3. சிவப்பு, reddness; 4. செம்மறியாடு which see 5.கந்தகம், sulphur; 6. ஆவிரை, cassia auriculata; 7. மாணிக்கம், ruby.

செம்மைக்கல், சிவப்புக் கானகக்கல், a red mineral stone.

செம்மொச்சை, சிவப்பு மொச்சை, a red bean — Dolichos genus. It is opposed to வெண் மொச்சை, a big variety of white bean of the same genus.

செயகந்தி, பொன்னிமிளை, gold pyrites.

செயகாந்தம், இரும்பைக் கொண்டு செய்த காந்தம். இது மின்சார சக்தியால் செய்யப்பட்டது. artificial magnet prepared from iron through induced electricity.

செயகானப்பூடு, மருளூமத்தை, confusion creeper, head ache plant — Xanthium strumarium.

செயசுண்ணம், தாளித்த சுண்ணாம்பு, slaked lime; 2. புடமிட்டெடுத்த சுண்ணம், a calcium compound derived from calcination.

செயசூத செந்தூரம், இந்திரசித்து, சிசுபாலன் இவர்கள் வாத வித்தைக்காக இரசத்தைக் கட்டிச் செய்த சிந்தூரம், calcined red oxide prepared from consolidated mercury. It was prepared by Indirajithu and Sisupalan and others.

செயசூத தாம்பிரம், see தாம்பிரவேதை, செம்பைப் பொன்னாக்கு மருந்து, that which converts copper into gold.

செயசூதம், செயரசம், இது அப்பிரகத்தினின்று எடுப்பது, artificially prepared mercury which is extracted from mica.

செயசெம்பு, யூகிமுனி வாத காவியத்திற் சொன்னபடி வாதமுறையால் செம்பினின்று எடுக்கப்பட்ட களிம்பற்ற செம்பு, alchemical copper (pure) obtained by removing the verdigris from ordinary copper, according to the process laid down in Yugimuni works on Alchomy. 2. மூலிகை அல்லது தாதுப் பொருள்களினின்று எடுக்கும் செம்பு. copper extracted from herbs and animal matter or transmuted or extracted from other mineral drugs as contemplated in Siddhars' works. see செம்புச் சரக்கு, 2. செம்பு மூலிகை. 3. செம்பு.

செயசோதி, தயாரித்த ஓர் வகையுப்பு, a kind of prepared salt.

செயதீபகாரி, பெருந்தும்பை, large leucas.

செயதே, உப்பு, salt.

செயதேகி, கல்லுப்பு, sea salt.

செயநாதம், துத்தம், white vitriol — Zinc sulphate.

செயநீராட்டல், மருந்துடன் செயநீர் கூட்டி அரைத்தல், grinding the medicine with the liquid prepared by keeping some chemicals in the open air at night.

செயநீர், சுண்ணாம்பும், நவாச்சாரமும் சேர்த்துப் பொடித்துப் பனியில் வைத்திறக்கிய கார நீர், a pungent liquid prepared by exposing to nights dew a mixture of powdered lime and salammoniac; 2. பூநீறு வீரம், சாரம் இவைகளைச் சமபாகமாக வெடுத்துப் பீங்கானிலிட்டு இராப்பனியில் வைத்து இறக்கிய காரமருந்து நீர், a medicinal preparation of pungent liquid obtained by exposing to nights' dew a porcelain dish containing a mixture of saline efflorescence, (purified fuller's earth) corrosive sublimate and salammoniac; 3. செயநீர், பனிக்குடத்து நீர், amniotic fluid found in fetal membraneous sac; 4. கருக்குழியில் அப்பு ஊருவதினாலும், உதிரமும் சுக்கிலமும் நாதவிந்தாக மாறுவதாலும் ஆண் விந்து சிவமேயாகில் செயநீர் உண்டாம், a liquid that is formed in the womb on account of changes that take place in the womb; 5. ஓர் வகைத் திராவகம், a kind of acid.

NOTE: This செயநீர், is peculiar to Tamil Siddha science and it is pungent liquid always prepared by exposing medicinal salts poisonous compounds etc. to night's dew. It is supposed to be a solvent medium for many insoluble substances and as such is used for preparing medicines of very high potency and in Alchemy it is chiefly consolidating or fixing up volatile substances. In medicine it forms a useful medium in the preparation of

metallic oxides by process of calcination. Names of such liquids are given below:—

1. வெடியுப்பு செயநீர்

2. சார செயநீர்

3. காடி செயநீர்

4. தாம்பூர செயநீர்

5. துரிசு செயநீர்

6. பூர செயநீர்

7. உப்பு செயநீர்

8. சாரக்கட்டு செயநீர்

9. அறுவகை செயநீர்

10. நாக செயநீர்

11. அண்ட செயநீர்

12. வீர செயநீர்

13. கார செயநீர்

14. சிப்பி செயநீர்

15. கௌரி செயநீர்

16. செங்குமரி செயநீர்

17. அமுரி செயநீர் (அமுரி மூத்திரம்)

செயநீர், ஒரு வகைப்பானம், any liquid prepared for drink; 2. சாராயம், arrack; 3. அமுரி, urine; 4. முலைப்பால், woman's breast milk; 5. குடிநீர், any cool drink; 6. ஓர் வகை அக்னித் திராவகம், இது தாதுப் பொருளைக் கரைக்கும், a pungent liquid used in Alchemy — Philosopher's acid.

செயநீர்இறக்கல், வாத முறையில் தயாரித்த மருந்தை, செயநீர் எடுக்க வேண்டின் அதை ஒரு பீங்கானில் இட்டுபூரணை தொடங்கி, தை, மாசி மாதங்களில் இராப்பனியில் தினப்படி வைத்திருந்து இத்தனை நாள் என்னும் முறைப்படி விடிவதற்குள் அதாவது சூரியோதயத்திற்கு முன் வெயில் படாமல் எடுத்துவிட வேண்டிய முறை. This is the general method of preparing a pungent liquid. Invariably every preparation contains salammoniac.

செயநீர்காலம், செயநீர் இறங்குங்காலம், season for preparing the pungent liquid or the philosopher's acid — January and February dew seasons.

செயநீர்குத்தல், செயநீர் ஊற்றி அரைத்தல், grinding medicine with the prescribed pungent liquid.

செயநீர்க்கருத்தன், நவச்சாரம், salammoniac. It is so called because it forms an important ingredient in the formation of most of the pungent liquids.

செயநீர் காரணசித்தன், செயநீர் உண்டாவதற்கு ஆதியான நவச்சாரம், salammoniac is so called from its being an important ingredient in the formation of செயநீர்.

செயநீர் சித்திரம், நவச்சாரம், Salammoniac.

செயநீர் போக்கு, இன்ன மருந்து தயாரிப்பதற்கு இன்ன விதமாக செயநீர் தயாரிக்க வேண்டுமென்கிற முறை, the process of preparing a particular pungent fluid (செயநீர்) for a particular medicine.

செயந்தியாசம், see செம்பை.

செயபச்சை, மரமஞ்சள், tree turmeric. — Coscinium fenestratum.

செயபரம், see செயபச்சை.

செயபாக சாஸ்திரம், மருந்துகளை இன்னவிதமாகத் தயாரிக்க வேண்டுமென்கிற விஷயங் களை வடமொழியில் குறித்த ஓர் சிகிச்சாதந்திரம், an authoritative treatise in Sanskirit on drugs and their preparations — Pharmacopia.

செயபீதம், கௌரிபாஷாணம், a prepared yellow arsenic.

செய பூநிம்பம், நிலவேம்பு, ground neem — justicia paniculata.

செயமதம், தயிர், curd.

செயமாகம், தினை, millet.

செயமாக்கி, சேங் கொட்டை, marking or dhobys' nut — Semecarpus anacardium.

செயரச கற்பூரக்குளிகை, கல்லுளி சித்தன் முறைப்படி செரியாமைக்கும் கிராணிக் கழிச்சலுக்கும் உபயோகிக்கும் குளிகை, a pill prepared according to the method of Kalluli Siddhar and prescribed for indigestion and chronic diarrhoea.

செயரசத்தின் சேவகன், வெள்ளீயம், tin — white lead.

செயரசப்பிரளயம், அகத்தியர் வைத்திய காவியத்திற் சொல்லியுள்ள ஓர் வகை இரசச் செந்தூரம், a kind of calcined oxide of mercury described in Agastiar's treatise on Medicine.

செயரசம், இரசம் அடங்கிய இலிங்கம், வீரம், பூரம் முதலிய சரக்குகளினின்று வாலையில் இறக்கிய சுத்த ரசம், refind mercury extracted from its compound such as vermilin. corossive sublimate etc. 2. வாலை ரசம், sublimate of mercury. 3. நெருப்பிற்கு ஓடாதபடி கட்டிய ரசம், consolidated mercury which will not disappear on heating. 4. கொங்கணவாத காவியத்திற் சொல்லியுள்ள சித்தரசம், சிராவணரசம் முதலிய இரசமருந்துகள், mercurial preparation such as these mentioned above, (வீரம், பூரம், இலிங்கம்) contemplated in Konganava's work on Alchomy, 5. ஓர் வகை ரசச் செந்தூரம், an oxide of mercury.

செயலவணம், கடல் நீரைக் காய்ச்சியவுப்பு, salt prepared from sea water; 2.see ஆறாங்காய்ச்சலுப்பு, 3.பிண்ட வுப்பு, salt prepared from foetus. 4.சுத்திசெய்தவுப்பு, refind salt. 5. கட்டுப்பு, (Alchemy) consolidated salt. The stanza below is from Konganava's work on Alchemy describing the virtues of consolidated salt.

"இறுக்கிவைக்கும் செயலவணம் தின்றா யானால்
எழும்பலாம் கேசரத்தில் மதியின் மட்டும்
தறுக்கிவைக்கும் விதியெழுத்தைத் தள்ளிப் போகும்
சாகாமல் பண்ணுவிக்கும் சட்டை போக்கும்
முறுக்கிவைக்கும் சடத்தைநன்றாய் வைரம் போல
மூச்சடா வோடாது மூலத் தேற்றும்
மறுக்கிவைக்கும் நித்திரையை வரவொட் டாது
மகத்துவந்தான் கட்டினதோர் லவணத் தாட்டே"

(கொங்க - வாத - காவி)

6. அப்பிரக முதலியவைகளினின்று இறக்கிய ரசம், mercury extracted from mica etc.

செயலற்றுக்கிடத்தல், அசையாது கிடத்தல், lying prostrate.

செயலிங்கம், கட்டியலிங்கம், consolidated vermilin.

செயலுப்பு, see ஆறாங்காய்ச்சலுப்பு.

செயலை, அசோகமரம், Asoka tree — Uvaria longifolia.

செயலோகம், உலோகத்தினின்று தயாரித்த செந்தூரம், red oxide of a metal prepared by calcination. 2. இரும்பு செந்தூரம், calcined red oxide of iron.

செயல், மருது, murdah tree —Terminaliatomentosa. 2. சேங்கொட்டை, marking or dhoby's nut — Semecarpus anacardium 3. வலிமை, strength, 4. ஒழுக்கம், behaviour.

செயல்நீர், உண்டாக்கு மருந்து நீர் — (lit) manufactured water See செயநீர்.

செயல்மாதிரி, சிற்றாமுட்டி, root of Ceylon pavonia — Pavonia Zeylanica.

செயல்முகம், see கல்லாரை.

செயவல்லி, சிவகரந்தை, which see.

செயவிரணம், காரமருந்து வைத்தோ, கத்தியால் கீறியோ உண்டான புண், a wound created by applying caustics or by incising.

செயவிருட்சம், இதளை, which see.

செயற்கால், வியானன் வாயு, One of the ten vital airs of the body responsible for stimulating the functions in the body.

செயற்கை, தொழிலாலியற்றிய, artificial, synthetic.

செயற்கைக் கஸ்தூரி, கஸ்தூரி வைப்பு, fictitiously prepared musk see கஸ்தூா வைப்பு.

செயற்கைத்தங்கம், இதில் மாற்றுக்குத் தக்கப்படி பலவிதமுண்டு, artificially prepared gold. It differs according to the degree of its purity.

செயற்கைப்பசி, சீரணவேதி மருந்து, சாராயம், சீரண காரியுப்பு முதலியவை களால் ஏற்படும் பசி. hunger raised by medicines such as stomachis, liquor, digestive salts etc. to promote the functional activity of the stomach, hunger due to a medicine exciting the action of the stomach.

செயற்கைப்பல், செய்தபல், artificial tooth; 2. பொய்ப்பல், false tooth.

செயற்கையறிவு, ஏற்பட்ட அறிவு, acquired knowledge or experience.

செயற்கையுப்பு, தயாரித்தவுப்பு, any artificial salt as distinguished from that found naturally like rock salt; 2. கறியுப்பு, common salt; 3. இரசாயனவுப்பு, chemical salt, salt derived from synthetic reaction.

செயற்கையுணர்ச்சி, சிகிச்சையினால் மூர்ச்சையை நீக்கியுணரும்படி செய்தல், senses or consciousness brought about after treatment as in a case of swooning.

செயற்கையுணவு, சொந்தமாகச் செய்த சாப்பாடு, prepared food; 2.வீட்டில் சமைத்த சாப்பாடு, food prepared domestically home meals.

செயற்கையுயிர்ப்பு, உண்டாக்கிய மூச்சு, artificial respiration as opposed to இயற்கையுயிர்ப்பு — natural respiration.

செயற்கைவாசனை, சேர்க்கைக் குணம், habits acquired from association.

செயின், இவர் டில்லிக்கருகில் அளகாபுரியில் (Aligarh) தமது சீடர் 1000 பேரோடு இருந்தார். இவரைப்போகர் போய் கண்டபோது போகருக்கு ஞனோபதேசம் செய்து தம் சீஷராக்கினார். அவருக்குச் சொல்லிய வித்தையும் கற்றுக் கொடுத்தார். பிறகு தென் பொதிகையின் சாரலிற் 20 வருஷம் சமாதி புகுந்து பிறகு மறைந்தார். a Siddhar named Seyan lived in Aligarh near Delhi with 1000 disciples whom Bogar saw and paid his respects. He took Bogar as his disciple and gave him spiritual instructions. Having tauget surgery to Bogar, he came to south and was in Somadhi for 20 years near Pothikai hills and then disappeared.

செயாந்தன், ஆற்று மருந்து, healing drug.

செயால், பூனை cat.

செயிதூன் எண்ணெய், see சைதூன் எண்ணெய்

செயிர், நோய், disease.

செய்கரி, அடுப்புக்கரி, charcoal.

செய்காந்தி, காந்த சக்தியூட்டிய இரும்பு, artificial magnet, iron to which magnetism is induced.

செய்கீரை, ஒரு வகை கீரை, Indian endive wild endive — Chicorium intybus.

செய், உழுதல், to cultivate as in நன்செய், 2. செய்தல், doing manufacturing as in செய்பாகம், 3. தயாரித்தல், prepared as செய்யுப்பு (prepared salt); 4. சிவப்பு red; 5. மூன்று காலத்தையும் குறிக்கும் வினை as செய்காரியம், refering to actions of the post, present and future; 6. செய்யப்பட்ட, done, as in செய்வினை, (acts done).

செய்கை, கையாற் செய்தல், artificial production as opposed to இயற்கை natural production; 2. see செயற்கை, 3. கருமம், karma; 4. பில்லி சூனியம், witch craft.

செய்கையான், மாந்திரீகன், sorcerer; 2. ஏவலிடுவோன், one practising black art.

செய்கைச்சரக்கு, வைப்புச் சரக்கு, artificial or prepared drug or medicine.

செய்கையுப்பு, காய்ச்சி எடுக்கும் உப்பு, manufactured salt.

செய்தகர், மிளகு,pepper.

செய்தாடல், ஒரு மருந்தைச் செய்து கையாளுதல், preparing the medicine and then handling it or putting it to use.

செய்நாதம், துத்தம், White vitriol — zinc sulphate.

செய்நீர், see செயநீர், 2. சுண்ணாம்பும் நவச்சாரமும் சேர்த்து இராப்பனியில் வைத்து இறக்கிய ஓர் காரமருந்து நீர், a strong pungent liquid obtained or derived from exposing to night's dew a mixture of lime and salammoniac contained in an earthened or porcelain dish or plate; 3. வாலையிலறக்கிய நீர், distilled water; 4. கஷாயம், சர்பத், தித்திப்பு, சோடா முதலிய குடிநீர், a prepared liquid extract or manufactured water such as decoction, syrup,

sweet essence, soda etc. used as a drink.

செய்நீர்ச்சித்திரம், நவாச்சாரம், salammoniac.

செய்பாகம், வாகடத்தில் சொல்லிய விதிப்படி மருந்து சரக்குகள் அளவு, கால நிர்ணயம், புடதிட்டம், அரைப்பு, எரிப்புத் திட்டம் முதலிய கிரமங்களை அனுசரித்துச் செய்யும் மருந்து முறை, process or method of preparation as per rules contemplated in Indian medical science as opposed to (கைபாகம் which see) practical experience and skill; 2. பொதுப்படச் செய்யும் முறை, process of manufacture in general.

செய்பாகம் கைபாகம் தவறுதல், செய்முறையும் கைமுறையும் தப்பி போதல், mistake committed in not observing the text or his experience while preparing.

செய்மருந்து, வாகடப்படி செய்யு மருந்து, medicine prepared according to the rules of medical science; 2. கைமுறையாய்ச் செய்யு மருந்து, medicine prpared by practical experience and skill.

செய்முறை, மருந்து செய்வதற்கும் கலப்பதற்கும் ஏற்பட்ட பழக்கம், the art or practice of preparing and compounding medicines — Pharmacy.

செய்முறைக்குரிய, வாகட விதிப்படி செய்வதற்குரிய pharmacentical as opposed to கைமுறை அல்லது அனுபவ முறைக்குரிய empirical.

செய்முறைவகுப்பு, வாதமுறை வைத்திய முறை இவைகளின் படி மருந்துகளை தயாரிக்கும் முறைகள் இதில் இராசயன முறைகளும் சேர்ந்ததே அவையாவன—

The names of various processes employed in preparing medicines

for use in Alchemy and medicine are given below. For explantion refer the word concerned.

1. இலேகியங் கிளறல்
2. உருக்குப் பாய்ச்சல்
3. ஊஞ்சலேற்றல்
4. ஊதுதல்
5. கலிக்கமாட்டல், see கலிக்கம்
6. களங்காக்கல்
7. களிம்பு செய்தல்
8. கற்பம் தயாரித்தல்
9. காரசாரமேற்றல்
10. கிராசங் கொடுத்தல்
11. கிராவணம்
12. குடோரிவைப்பு
13. குருவாக்கல்
14. குழம்பாக்கல்
15. கூட்டுதல்
16. சத்தெடுத்தல்— சாறு பிழிதல்
17. சாரனை தீர்த்தல்
18. சிந்தூரித்தல்
19. சிராவணம்
20. சுடரெண்ணெய் வடித்தல்
21. சுண்ணமாக்கல்
22. சுத்திசெய்தல்
23. சுரசம்பண்ணல்
24. சுருக்குக்கொடுத்தல்
25. சூடுபோடல்
26. சூரணித்தல்
27. செயநீராக்கல்
28. திராவகமிறக்கல்

29. தைலம் வடித்தல்
30. நீராக்கல்
31. நீர்வாங்கல்
32. நீற்றல்
33. பதங்கித்தல்
34. பற்பமாக்கல் அல்லது வெள்ளையாக்கல்
35. பிரித்தல்
36. புடமிடல், எரிப்பு அல்லது எரிப்புத் திட்டம்
37. மணியாக்கல்
38. மயனமாக்கல்
39. மருந்து வைப்பு
40. மாத்திரை அல்லது குளிகையாக்கல் அல்லது உண்டை செய்தல்.
41. மாற்றுயர்த்தல்
42. முப்பு முடித்தல்
43. மைசெய்தல்
44. வாலையிலிடல்
45. வெட்டையாக்கல்
46. வெண்ணையாக்கல்
47. வேதையாக்கல்

ஒவ்வொன்றுக்கும் விளக்கம் see ஔடதவர்க்கம்.

செய்ய, சிவந்த red.

செய்யச்சம், செப்பு நெருஞ்சில், red neringy — Indigofera enneaphylla.

செய்யதாமரை, செந்தாமரை,red lotus — Nelumbium speciosum.

செய்யபவளம், சிவப்புப் பவளம், red coral.

செய்யமருந்து, see செய்மருந்து.

செய்யல், சேறு, mire mud.

செய்யான், கடித்தால் தேளைப் போற் கடித்து தடிப்புண்டாகும்

ஓர் வகை சிவப்புப் பூரான் இது பலவிதம் அவையாவன, 1.வெள்ளரை, 2.பட்டை, 3.பெரும்படை, 4.குருதி, 5.மருட்சி, 6.வன்மீகம், a class of red venomous centipede. Its bite causes swelling in the affected part, and pain just as in scorpion sting. It is of six kinds or varities. see Tamil version above.

செய்யுட்பொருத்தம், பால், milk.

செய்புப்பு, see செயற்கையுப்பு

செய்வித்தமண்ணோடு, குயவன் பானையோடு, broken piece of pot.

செய்வினை, சூனியம், sorcery; 2. ஏவல், witch craft; 3. நோயாளிக்குச் செய்யக்கூடிய உபசாரணை, that which a person is bound by obligation to perform as regards a patient; 4. முற்பிறப்பிற் செய்த கருமம், karma of the past birth, 5. பில்லி, சூனியம், sorcery.

செய்வொளி, வைடூரியம், cat's eye; 2. உண்டாக்கிய வெளிச்சம், (lit) a light contrived by art or skill as electric light gas light etc.

செரங்கை, see சிறங்கை, handful

செரிகுடர், see செரிகுடல்.

செரிகுடல், உண்டவற்றை அன்னரசமாகச் சமிக்கும் சிறுகுடல், that part of small intestine in which the greater part of the food is digested and turned into chyme.

செரிக்குங்காலம், வைத்திய நூலின்படி மருந்துகள் பூசிய அல்லது உட்கொண்ட பிறகு செரிக்கும்படியான கால வளவு, இது மருந்திற்குத் தக்கவாறு அடியிற்கண்டபடி வரையறுக்கப்பட்டிருக்கிறது.

நசியம் — 1/2 நாழிகை

அஞ்சனம் — 2 நாழிகை

பச்சிலைச்சாறு — 6 கடிகை

கஷாயம் — 7 கடிகை

கனத்தகஷாயம் — 9 கடிகை

சூரணம் — 10 கடிகை

(In medicine) the time or period of digestion calculated as shown under in respect of various kinds of medicines according to their strength. See சீரணகாலம்.

Medicated snuff — 12 minutes

Collyrium — 48 minutes

Juice of green herbs — 2 hours

Decoction — 2 hours 48 minutes

Thick decoction — 3 hours 36 minutes

Powder — 4 hours

2. உண்டவுணவு செரிக்குங் காலம், இது உணவிற்குத் தக்கபடி காலம் வித்தியாசப்படும், see சீரணகாலம்.

செரிட்டம், சந்தனம், sandal wood.

செரித்தல், சீரணித்தல், being digested.

செரிப்பமிலம், பாசக நீரின் புளிப்பு, இது பன்றி, ஆடு, கன்றுக்குட்டி இவைகளின் வயிற்றினின்று எடுக்கப்படும் இது உணவிலுள்ள புரதங்களை (Protein) வெள்ளைக்கரு இனத்தைச் சார்ந்த பொருள்களாக (peptone) மாற்றவல்லது. ஆகையால் செரிமான முண்டாவதற்கும், வயிற்றினமற்சிக்கு முபயோகப்படும். a chemical ferment of gastric juice formed by living cells of stomach —Pepsin. It is extracted from the healthy stomach of pig, sheep or calf. It changes the proteins into peptones and as such helps digestion and cures cancer of the stomach. Pepsin is used in medicine as a digestant and as a remedy for dyspepsia.

செரிப்பழம், காசுமீரப்பழம், a cherry of Cashmera, Kashmere

pistachio — Parinarium armeniaca.

செரிப்பி, மருந்து வகைகளைக் கொண்டும் புளிப்பு நீர் வகையாலும் உண்டவுணவைச் செரிக்கும்படி செய்தல், artificial digestion effected in the system with the aid of stomachics or acidulated water — promoting digestion by administering medicines.

NOTE: It is opposed to natural digestion taking place by the action of saliva, gastric, juice, pancreatic juice bile and success entericus.

செரிப்பித்தல், சீரணிக்கச் செய்தல், promoting digestion.

செரிப்பு, சீரணிப்பு, அதாவது உண்டவுணவை மாற்றி, உடம்பிற்குள் ஏற்றுக் கொள்ளுமளவாகச் செய்யுந்தன்மை, the act of converting food into materials fit to be absorbed and assimilated in the system — Digestion.

செரிப்போன், பாசன நீரிலுள்ள செரிப்பமிலத்தால் உணவில் உள்ள புரதங்கள் மாற்ற மடைந்து உண்டாகும் வெள்ளைக்கருச் சத்து சம்பந்தமான வஸ்து, protein produced by hydrolysis of native proteins of the food — Peptone.

செரிமானமின்மை, செரியாமை, absence of the digestive function — Apepsia.

செரிமானம், சமிக்கும் விதம், the act or the process of dissolving aliment in the stomach and preparing it for absorption into the system — Digestive process.

செரியாக்குடல், உண்டது தங்காது கழியும் குடல், bowels incapable of digesting the food taken and causes purging —weak bowels causing loose motions.

செரியாக்குணம், சீரணமாகாத தன்மை, இது கனத்த உணவினால் அல்லது பொருந்தாத கறி வகைகளைச் சேர்ப்பதனால் ஏற்பட்ட

அசௌகரியமான நிலைமை, இதனால் சாதாரணமாய் வயிறுப்பி வலிகாணும், சில சமயங்களில் ஒக்காளம், வாந்தி, பேதி, இக்குணங் களையும் காட்டும், lack or failure of digestion —Indigestion. It is a condition of discomfort after heavy meals or unequal combination of food, difficult for digestion. Distention of stomach attended with pain is the usual symptom, sometimes nausea, vomitting and purging.

செரியாக் கோளாறு, செரியாக் குற்றம், digestive disorders, dyspeptic disorders.

செரியாப்படுவன், செரியாமை யினால் உண்டாகும் ஓர் வகை விரணம். இது சாதாரணமாய் வாய், நாக்கு, தொண்டை, வயிறு இவ்விடங்களில் உண்டாகும், ulcers of the mouth, the tongue, the throat and the stomach through indigestion or dyspeptic disorders.

NOTE: The other pathological causes ascribed to such a kind are viz — 1.disease of gall —bladder, 2.appendicitis, 3.eating when tired, 4.severe nervous shock, 5.serious accident, 6.gas in the stomach, 7.intestinal or stomach ulcers, 8.gall stones and other liver troubles, 9.faulty chemical action, 10.colitis, 11.cancer of the stomach.

செரியாமாந்தம், வயிறு பொருமி மாவைக் கரைத்தது போல் புளித்த நாற்றத்துடன் கண்டல், கரைசலுமாக குழந்தை களுக்குக் காணுமோர் அசீரண பேதி, இதனால் விக்கல், சுரம், தலைவலி, பலயீனம், சோர்வு முதலிய குணங்களைக் காட்டும். diarrhoea of children due to indigestion attended with rumbling noise in the stomach. white stools which are semifluid often containing hard lumps with fetid smell and sometimes accompanied by head ache, fever hiccups, and weakness — a kind of dyspepsia.

செரியாமை, சமியாமை, indigestion. இதுவே ஆமிலபித்தரோகம் என்பது, dyspepsia.

செரு, ஊடல், love quarrel.

செருகுதல், see சொருகுதல்.

செருகொடி, பப்பிளி, red creeper.

செருக்கம், மாதுளை, pomagranate — Punicagranatum; 2. மயக்கம், giddiness; 3. குடிமயக்கம், intoxication.

செருக்கம்பம், பேரரத்தை, greater galangal, —Alpinia galanga (major).

செருக்கல்வரகு, பேதி, வாந்தி, மயக்கம் முதலிய குணங்களையுண்டாக்கும் ஓர் வகை வரகு. a kind of coarse small, black millet — Papsalum frumentaceum — Cooked and taken as food, it brings on vomitting, purging often attanded with giddiness c.f. சிறு வரகு

செருக்கற்பாக்கு, மயக்கத்தையும் நெஞ்சடைப்பையும் உண்டாக்கும் ஒரு வகைப்பாக்கு, a stupefying arecanut causing obstruction in the chest and giddiness.

செருக்கன், see கொடிவேலி.

செருக்கு, ஆண்மை, manliness; 2. இறுமாப்பு, pride; 3. சாதிச்செருக்கு, பொருள் செருக்கு, கல்விச்செருக்கு, arrogance through caste, wealth and culture; 4. அகங்காரம், egoism.

செருத்தல், பசுவின் பால் மடி, the udder of a cow.

செருந்தி, செங்கோடு, red jovy — Ochna squarrosa; 2. மணத்தக்காளி, black berried solanum — Solanum nigrum; 3. வாட்கோரை a kind of koraiy grass — Ceyperus genus; 4. see கெட்டிக்கோரை, 5. சிலந்தி மரம், pear tree — Ochna gamblei.

செருந்திகா, see செருந்தி.

செருந்து, பூவிதழ், petal of a flower; 2.see செருந்தி.

செருப்படி, see செருப்படை.

செருப்படிநாயன், see செருப்படை

செருப்படை, இது பனிகாலங் களில் வேலி ஓரங்களிலும் வயல்களிலும் தரையோடு படர்ந்து வளரும் ஒரு பூடு. இதில் பெரு செருப்படை, சிறு செருப்படை என இரண்டு வகைகள் உண்டு. பொதுவாக இது செருப்படையே குறிக்கும். இது உஷ்ணத்தைத் தரக்கூடியது. இதை சூரணித்துச் சாப்பிட வெள்ளை, சூலை, குன்மம் இவைகள் போம். கசாயமிட்டுக் குடிக்க வாதகோபம், மந்தாக்கினி, தம்பவாதம் முதலியவைகள் நீங்கும். a low spreading creeper — Glinus lotoides. It grows in the dew seasens along the hedges and fields. It consists of two classes big and small (leaves). It is heat — making in its potency. Dried powdered leaves are prescribed for gonorrhoea, gout, dyspepsia, etc., decoction of the leaves is considered advantageous in cases of rheumatic inflammation, dulness of appetite, numbness in rheumatic complaints etc. The dried plant mixed with fenugreek seeds and rubbed into a fine paste is used to promote the suppuration of boils and abscesses.

செருப்பு, see செருப்படை.

செருப்புக்கால், சிறு செருப்படி, see செருப்படை.

செருப்பு, நெருஞ்சி, see செப்பு நெருஞ்சி.

செருமல், see செருமுதல்.

செருமுதல், அழும்போது அடிக்கடி திணருதல், repeated choking or stopping of the breath while crying under grief or affliction or in exclamations of

sorrow; 2. இருமுதல், coughing as beasts; 3. கனைக்குதல், hemming see செருமுதல்.

செருவிளை, வெண்காக்கணம், white mussell shell creeper — Clitoria ternatea (albiflora).

செலகம், மல்லிகை, Arabian jasmine — Jasminum sumbac.

செலகூடம், நண்டு, crab; 2. நத்தை, snail.

செலக்குரு, நவச்சாரம், salammoniac.

செலக்குலவங்கம், கெந்தகமாஞ்சில் அல்லது புறங்கைநாரி, botanical name not known.

செலக்கூபம், நண்டு,crab.

செலக்கூர்மை, see செலக்குரு.

செலக்கூறு, நத்தை, snail.

செலசரம், நீர்வாழும் பிராணி, aquatic animals.

செலசரி, see சலசரி.

செலகுகன்னி, தாமரைக் கிழங்கு, lotus root, see சலகுகன்னி.

செலதம், கோரைக்கிழங்கு, cyperus root.

செலதிம், எலும்பு முருந்து, தோல் முதலிய பகுதிகளிலுள்ள பசையான வஸ்து, a viscous substance found in the tissues of bones cartilages skin etc. of animals — Gelatin.

செலந்தி, புண், ulcer, சிலந்தி.

செலப்பிரீதி, கற்பூரச்சிலை, crystallished foliated gypsum; 2.மூத்திரமும் மலமும், urine and faeces.

செலமலம், கடற்பாசி, sea weed.

செலமாகிதம், கெட்டி வஞ்சி, a species of South Indian willow — Salix tetasperma.

செலம், வெட்டிவேர், khuskhus root. Andropogon muricatus; 2. சலம், water 3. கோரைக்கிழங்கு, cyprus root.

செலவழிதல், பெருவாரியில் இறத்தல், dying in an epidemic.

செலவியம், மிளகுக்கொடி, pepper creeper — Pipernigrum see செவ்வியம்.

செலவு, இறப்பு, death.

செலாகை, see சலாகை.

செலிதம், பாகு போன்ற இந்திரிய வஸ்து, gelatinous substance.

செலியம், விலாமிச்சை வேர், a fragrant grass root, cuscus root.

செலியாமம், கொட்டைப்பாசி, seed moss.

செலு,நறுவிலிமரம் common sebesten Cordia obliqua; 2.மீன் செதிள், fins of fish.

செலுகம், see செலு, 2. குடமல்லிகை, sambacjasmin — Jasminum sambac.

செலுகுதல், ஓர் வகை மீன், a kind of fish.

செலுத்துதல், உட்புகுத்தல், thrusting in side stuffing as lint; 2. உண்பித்தல், causing to eat; 3. உள்ளுக்குக் கொடுத்தல், administer as of medicine.

செலுப்பட்டி, ஓர் வகை மீன், a kind of fish.

செலுப்பை, கருவாலி, Ceylon tea

செலுப்பைமரம், கருக்குவாவரம், இதன் பூ சிறியதாயும் மஞ்சளாகவும் இருக்கும். வேர்ப்பட்டை வெளிப்புறம் கபிலநிறம், உட்புறம் செங்கல் நிறம், பட்டையின் சில துண்டுகளில் மேற்புறம் சொரசொரப்புள்ளது. இலைகளும் பட்டையும் துவர்ப்பும், ருசிக்கச் சிறிது கசப்பாயுமிருக்கும். பிசின் ருசியற்றதாயும், தேன்நிறம் போலவும் இருக்கும். இதன் வேர் பாம்புகடிக்குதவும் வேர்ப்பட்டையைத் தண்ணீரில் அரைத்து வீக்கங்களுக்குப் பூச

வாடும். இது மிக்க துவர்ப்பாதலின் சாயமேற்ற உதவும். Olive wood — Elaeodendron glaucum. It is a tree with small flowers, bark of the root is brownish outside and bright brick red inside, some pieces of the bark show smell warty prominences. Both leaves and bark are astringent and slightly bitter to the taste, gum is tasteless and honey coloured, root is specific in snake bites, fresh bark of roots ground with water and applied externally for swelling, being a very strong astringent the bark is used for dying.

செலுமுரல், ஓர் மீன், a kind of fish.

செலுவன், மெலிந்தவன், emaciated man.

செல், கறையான், white ant; 2. மேகம், cloud, 3. ஆகாயம், sky; 4. இடி thunder bolt.

செல்காலம், சென்ற காலம், past time.

செல்லச்சோறு, குழந்தைகட்கு அடிக்கடி கொடுக்குமுணவு, food given frequently and indiscriminately to children.

செல்லங்கொட்டை, நேர்வாளம், croton seed — Croton tigilium.

செல்லங்கொடுத்தல், இடங்கொடுத்தல், giving indulgence as to children.

செல்லத்தீனி, மூசண்டை, dainties.

செல்லத்தொந்தி, பூரிப்பினால் ஏற்படும் தொப்பை, paunch belly.

செல்லநரை, இளநரை, premature grey hair.

செல்லப்பசி, குழைந்தைகட்கு அடிக்கடி ஏற்படும் பசி, frequent hunger as of children.

செல்லப்பயிறு, உளுந்து, black gram.

செல்லமடிப்பு, செழுப்பினால் வயிற்றில் ஏற்படும் மடிப்பு, folds in the abdomen owing to luxurious living.

செல்லல், ஒரு வகை மஞ்சள் மீன், a kind of yellow fish — Etroplus muculatus.

செல்லாதல், இறத்தல், dying out.

செல்லாக்காசு, ஓர் மூலிகை, a medicinal herb.

செல்லாக்காலம், நடந்து செல்ல முடியாத முதுமைப்பருவம், oldage rendering one incapable to move about.

செல்லாவிடம், பெண்கள் உறைவிடம், (lit) prohibited place i.e, place where in the female inmates are kept in seclusion — Harem.

செல்லி, நேர்வாளம், see செல்லங்கொட்டை.

செல்லியம், கோழி, fowl.

செல்லு, see செல்.

செல்லுதல், இறத்தல், to die.

செல்லொளி, வைடூரியம், cat's eye.

செல்வங்காசி, குளிமாத்தி, chittagong wood chuk rasia tabular's. See மதகரிவேம்பு.

செல்வச்சாப்பாடு, கனவுணவு, rich meals, nutritious diet.

செல்வநரை, இடையிடையேற்பட்ட நரை, incipient grey hair, scattered grey hair.

செல்வப்பிள்ளைக் காய்ச்சல், அற்பசுரம், a mild form of fever.

செல்வப்பேச்சு, குதலைப்பேச்சு, drattling speech as of child

செல்வமட்டி, ஓர் வகைக் கொடி, a kind of creeper.

செல்வி, see கல்லாரை.

செவகி, நிலக்குமிழ், small Cashmere tree — Gmelina asiatica.

செவத்தம், ஓர் முருங்கை மரம், a kind of moringa tree.

செவத்தவெருக்கு, see செவ்வெருக்கு.

செவந்தன், பூவன் வாழை, a kind of plantain tree.

செவந்தி, see செவந்தி.

செவப்பு, see சிவப்பு.

செவனி, குய்யத்திற்கும் குதத்திற்கும் நடுவேயுள்ள மூட்டல் அல்லது சந்திப்பு, a suture or line of junction from the anus to the external organ of generation — Raphe medium raphe of the perineum.

செவாப்பு, பிறந்த குழந்தைகளைத் தாக்கி, உடம்பு முழுவதிலும், சிவப்பு நிறத்தையுண்டாக்கும் ஓர் நோய், இது பார்ப்பார செவாப்பு எனப்படும், a disease generally attacking new born infants (with in three months) marked by red (rosy) discolouration of the skin, See செங்கிரந்தி.

NOTE: If the colouration is black it is கருவாப்பு or கருங்கிரந்தி. It is more dangerous than, செவாப்பு.

செவாலி, see செம்பரத்தை

செவி, காது, ear, 2. கேள்வி, hearing; 3. இரண்டு, two.

செவிக்கட்டி, காதிலுண்டாகும் எழுற்சி, abscess or furuncle of the ear.

விக்கரப்பன், காதிலுண்டாகும் ஒரு வகை கரப்பான், eczema of the ear.

செவிக்கழலை, காதில் தோன்றும் கழலை, a tumour of the middle ear - Cholesteatoma.

செவிக்கள்ளி, மான் செவிக்கள்ளி, (lit) spurgele of resembling the ear of a deer — Euphorlia genus, see இலைக்கள்ளி.

செவிக்குத்தல், காதினுள்ளேற்படும் குத்தல் நோய், boring or piercing pain of the ear — Otalgia; 2. தைலத்தைக் காதினுள் துளிக்கணக்காக விடுதல், letting in drops of medicine into the ear.

செவிக்குத்தல், காது குத்தல், boring of the ear.

செவிக்குக்குத்தல், see செவிக் குத்தல்.

செவிக்குருத்து, காதினுட்பறை, drum of the ear — Tympeanum.

செவிக்குத்து, காதுகுத்தல், earache.

செவிக்குருந்து, நடுக்காதின் கழலை நோய், a disease of the middle ear, i.e. atumour of the middle ear. See செவிக்கழலை.

செவிக்குரோதம்,

செவிக்குழல், செவிக்குள்வழி, ear cavity.

செவிக்குழி, காதனுட்பக்கமுள்ள பள்ளம், auditory pit, labyrinth of the ear.

செவிக்குறடு, காதிற்குள் பிரயோகிக்கும் குறடு, ear forceps for extracting foreign bodies.

செவிக்குறும்பி, காதமுக்கு, earwax

செவிக்கொடியாள், முடக்கற்றான், palsy curer — Cardiospermum halica cabum.

செவிசிராவம், காதுச்சீழ், discharge of pus from the ear.

செவிசூலை, காதுகுத்தல், inflammation of the ear — Otitis.

செவிச்சளி, காதினின்று சளிநீர் வடிதல், mucous discharge from the ear — Otoblemorrhea.

செவிச்சுருள், காதுசுருட்டை, the margin of the pinna of the ear.

செவிடன், காதுகேளதவன், deaf man.

செவிடி, காதுகேளாதவள், deaf woman.

செவிடு, வாயுகோளாறடைந்து கபத்தோடு சேருவதால் ஏற்படும் காதடைட்ப்பு, deafness caused by deranged vayu (humour) either singly or subcharged with kapam, blocking the sound carrying channels of the ear.

2.காதில் அதிக குறும்பி சேருவதாலும் செவிப்புலன் கெடல், அதாவது காது கேளாதிருத்தல், deafness due to plug of ear by wax or through other causes. Here the Vayu and Kapam obstruct the drum or sound bearing ducts of the ear.

செவிடு, காது கேளாமை, காதொலி மந்தம் முதல் முழுச்செவிடு வரை பலவிதமாக ஏற்படும், deafness occurs in every case from mere dullness of perception of sound to absolute insensibility. The following are the several cases or conditions in which it is caused.

1.காதில் அதிக குறும்பி சேருதல், accumulation of ear wax — Ceruminous deafness.

2.சன்னியினால் காதில் ஏற்படும் அழற்சி inflammation and congestion of the semicircular canals manifested by aural disturbances — Apoplecti form deafness.

3.சதா அதிக சத்தம் கேட்டுக் கொண்டிருத்தல், by constant listening or working at places where the sound is very deafening — Sound deafness.

4.மூளைக்கேற்படும் கோளாறு, brain lesion — Cerebral or cortical deafness.

5.பெண்களுக்கேற்படும் சூதக சன்னி. in a hysteric patient without discoverable cause — Hysteric deafness.

6.மலைச்சுரம் அல்லது விஷசுரத்தினால் as a result of malarial poison.

7.காதின் நரம்புக் கோளாறு, a leison of the anditory nerve — Nervous deafness.

8.தொண்டையடைப்பு, from enlarged tonsils throat deafness.

NOTE: 1. Deafness may result from the rupture of the drum or it may be a sequal to certain diseases believed to have a poison in the system. It may be a consequence of great mental excitement or nervous debility or may result from a foregin body blocking up the entrance of the ear thus preventing sound waves from reaching the drum.

NOTE: 2.(c.d) Ecessive use of quinine brings on quinine deafness. It is preceded by violent noises in the ears and is caused by an excessive supply of blood, exudation and hemorrhage in the middle and internal ear.

செவிடுபடுதல், காது கேளாது போதல், being deafened with noise.

செவிடெறிதல், உரத்த சத்தத்தினால் அலைவுறுதல், disturbance caused by excessive sound.

செவிட்டான் பாம்பு, பூரான், centipede.

செவிட்டுதல், அழித்தல், destroying; 2. கொல்லுதல், killing.

செவிட்டுத்தனம், செவிடாயிருத்தல், the state of being deaf, deafness.

செவிட்டுத்தன்மை, செவிடாயிருக்கும் நிலைமை, the condition of deafness.

செவிட்டுவிரியன், ஓர் வகை விரியன் பாம்பு, deaf viper, Russell's viper — Vipera russellii.

செவிதாபனரோகம், காதின் அழற்சியினாலேற்படும் ஓர் காது நோய், a kind of ear disease arising from inflammation.

செவிதாழ்தல், காதுத்தண்டு இறங்கித்துவளுதல், relaxation of the lobes of the ear.

செவித்தாரை, காதின் வழி, auditory passage of the ear.

செவித்துவாரம், காதின் தொளை, cavity of the ear; 2.காதின் வெளி அல்லது உள் துவாரம், the external and internal opening of the ear — Auditory meatus; 3.நடுக்காது, middle ear —Tympanum.

செவித்துளிவிட்டிடல், காதில் மருந்து ஊற்றுதல், letting drops of medicine into the ear.

செவித்துளைவிட்டிடல், காது குடைதல், boring the lobe of the ear.

செவித்துறண்டி, காதுகுறும்பி வாங்கி, ear pick.

செவிநஞ்சு, காதுக்குறும்பி, காதழுக்கு, ear wax.

செவிநமைச்சல், காதினுள் தினவு, itching with in the ear.

செவிநரம்பு, காதின் நரம்புகள், auditory nerves, one of the cranial nerves.

செவிநாதம், காதிரைச்சல், noise in the ear noise may resemble that of fly bee, drum, conch or roaring of sea. See செவியிறைச்சல்.

செவிநிறக்கல், மாந்தளிர்கல், a kind of stone of the colour of the tender mango leaf.

செவிநீர், காதினுள் வடியும் நீர், the clear fluid existing in the labyrinth of the ear — Aqua labyrinthi; 2. காதிற்குள் சவ்வின் நடுவில் அமைந்துள்ள நீர், the layer of fluids called perilymph and endo lymph.

செவிநோய், காது சம்பந்தமான நோய்கள், ear diseases.

செவிநோவு, காதின் வலி, pain in the ear, earache — Otodynia.

செவிபடுவாதம், காதைச் செவிடாக்கும் ஓர் வகை வாதநோய், இது 80 வகை வாத ரோகங்களில் ஒன்று. இதனால் காது கேளாது, இரைச்சல், குத்தல், வலி முதலிய குணங்களை யுண்டாக்கும். இது மச்சம், மாமிசம், அசீரண பண்டம் அதிகமாக உண்ணுதலினால் சிலேட்டுமத்தோடு கூடிக் காதைச் செவிடாக்கும். a kind of rheumatism marked by deafness, noise in th ear boring pain etc. It is one of the eighty kinds of rheuimatism (Vadha diseases) see பாதிரிய வாதம்.

செவிபாகம், காதில் சீழ் கொள்ளல், suppuration of the ear — Othelcosis.

செவிப்படை, காதில் ஏற்படும் ஓர் சரும நோய், a kind of eczema in the ear.

செவிப்பறை, காதின் ஒலி சவ்வு, அதாவது நடுச்செவியின் உள்ளறையை புறச் செவியினின்று பிரிக்கும் சவ்வு, the drum of the ear — Tympanic membrane; 2. the drum membrane which separates the middle ear cavity on the inner side from the post nasal region, called also.

செவிப்பறை பறைதல், மந்திரம் முதலியவைகளைப் பிறர் அறியாதபடி இரகசியமாகக் காதிற்குள் ஓதுதல், to mutter inaudibly as Mantras.

செவிப்பாடு, காதிற் புகுதல், entering the ear.

செவிப்பாம்பு, இதுவே செய்யான், செவிப்பூரான், சிறு பாம்பு, an ear worm, a small snake crawling into the ear — Typhlope.

செவிப்பிதுக்கம், சகனத்தடி யிலிருந்து முன்னுக்குச் சென்று கன்னத்தெலும்போடு கூடும் மெல்லிய பிதுக்கம், the prominence formed by the zygomatic process of the temporal bone and the malor bone — Zygoma.

செவிப்பித்தம், உடம்பு வெளுத்து, பித்தமயக்கம், சோகை, தலைவலி, சுரம், காதிரைச்சல், கண்பூக்கட்டு காட்டுதல் முதலிய குணங்களைக் காட்டுமோர் பித்தநோய், a kind of bilious disease charcterised by anemia, giddiness, headache, fever noise in the ear, appearances of motes in the atmosphere etc.

செவிப்பிரதிநாகம், மூக்கு, வாய்வழி, கரைந்து வடியும் காது குறும்பி, if the wax like filth becomes dissolved by administeration of oily substances and begins to be discharged through the nose and the mouth, it is known by this name.

செவிபிரதேசம், காதின் வெளி பாகமும் வெளி துவாரமும், the external ear made up of the outer portion and passage way which leads up to the drum.

செவிப்பீ, காதுமலம், waste matter in the ear.

செவிப்புண், காதில் உண்டாகும் விரணம், if at the time of ear boaring mistakes are maile in selecting a proper place, healing doesnot occur but sores occur with pain.

செவிப்புலன், ஐம்புலனில் ஒன்று, அதாவது கேள்வி, one of the five senses, ie., sense of hearing. 2. கபாலத்தின் மூளையிலுள்ள கேள்வி காரணமான பகுதி, the cerebral centre for hearing - Auditory area.

விபுலன்ஒடுங்கல், காதடைத்தல், becoming deaf; காதால் அறியும் ஓசையுணர்ச்சி கோருதல், அற்றுப்போதல், loss of sense of hearing; 3. யோகத்தில் ஐம்புலன் ஒடுங்குங் காலத்து காதுக்கு வெளி சத்தம் கேளாதிருத்தல் (in Yoga philosophy) that stage in the yoga practice when the external sound reaching the ears is not perceived owing to the conquering of the five senses, forming the physical nature of man, c.f. ஐம்புலனருத்தல்.

செவிப்புழு, காதிலேற்படும் புழு, maggots in the ear.

செவிப்புற்று, காதிலெழும் புற்று விரணம், இதனால் காது நரம்புகளில் சிலேட்டும நீர் நிறையப் பெற்று அதனால் துன்மாமிசத்தைச் சேர்ப்பித்துப் பருகச் செய்யும். இது வெகு அபூர்வமாய்க் காணும், இது உடம்பின் மற்ற பாகங்களில் எப்படிக் காணுமோ அவ்விதமாகத் தான் காதில் சதை வளர்ந்து எழும்பும், cancer of the ear. It is a malignant tumour due to the accumulation of phlegmatic morbid fluid giving rise to epithelial growth in the ear. It is only very occationally the ear forms the site of cancer. It begins with the warty growth of the skin and has the same characteristics as an epithelial cancer in other parts of the body.

செவிப்பூரான், see செவிப்பாம்பு.

செவிமடல், காதின் வெளி யுறுப்பு, the external ear as opposed to செவிமூலம், inner ear.

செமத்திமம், see செவிமந்தம்.

செவிமந்தம், சத்தம் தெளிவாகக் கேளாமை, காதுமந்தம், dullness of hearing.

செவிமந்தம், கேள்வி குறைவினால் காது சரிவரக் கேளாமை, இதில் சப்தக் கோளாறுகள் ஏற்படும். a

debilitated state of the ear muscles interfering with the normal selection and amplification of sounds — Otomyasthenia.

செவிமருந்து, காதுக்கிடுமருந்து, a medical preparation for use in the ear; 2. காதிற்குள்ளிடும் துளி மருந்து, ear drops

செவிமார்க்கம், காதின் வழி, auditory passage.

செவிமூலம், கேள்விக்கு ஆதாரமான காதினுட் பாகம், the internal ear membraneous labsyringh containing the true organ of hearing; 2. காதினுள் சதை வளர்ச்சி வாயு காதிற்குள் அனுசரிப்பதினால் இச்சதை வளர்த்தியுண்டாகி, காதுவலி, செவிடு, நாற்றமான சிழொழுக்கு முதலிய குணங்களைக் காட்டும், a disease of the ear arising from the deranged vayu (humour) finding lodgement inside the cavities of the ear and thereby developing warts which bring on earache, deafness, foul discharge from the ear etc — Polypus of the ear. 3. காதினுட் பாகத்தினின்றுண்டாதல், originating with in the ear — Otogenous.

செவிமேளம், காதினுட் சவ்வு, drum of the ear — Tympanic membrane.

செவியடி, கன்னம், cheek; 2. பொட்டு, temple; 3. காதின் அடிப்பகுதி, the lower part of external ear.

செவியடைத்தல், செவிப்புலன் கெடுதல், inaudibleness of the ear; 2.காதடைப்பு, deafness or dullness of hearing due to a foreign body blocking up the passage of the ear; 3. சிகிச்சையில் காதிற்குப் பஞ்சிட்டைத்தல், plugging or stuffing the ear with cotton as done after putting in medicine.

செவியடைப்பு, காது கேளாதபடி ஏற்படும் சப்த அடைப்பு. lack or loss of the sense of hearing.

வியம், செவ்வியம், 2. செங்கத்தாரி, which see 3. கண்டு பாரங்கி, small teak — Cleodendron serratum; 4. சுக்கு, dried ginger; 5. மிளகுக்கொடி, pepper creeper; 6. விலாமிச்சு, a fragrant cuscus root.

செவியழுக்கு, செவிப்பீ, wax in the ear.

செவியறிவுறுத்தல், நல்லறிவுபுகட்டுதல், to give council to advice.

செவியறை, காதின் உள்ளறை, cavity of the inner ear; 2. காதில்லான், one deprived of the organ of ear; 3. செவிடன், a deaf man.

செவியன், முயல், hare.

செவியாட்டல், மிருகங்களைப்போல் காதை ஆட்டுவது, அடயோகிகள் செய்யும்வித்தை the power or art of waving the ears thus mitating animals. Hathe yogis are capable to do this.

செவியிடம், see செவியம், 2. விலாமிச்சம், fragrant cuscus root.

செவியிறைச்சல், காதிரைச்சல், see செவிநாதம்.

செவியிலி, காது இல்லாத ஆள், person deprived of the structural ear organ 2. செவிடு, deafness.

செவியுறை, காதுக்கிடுமருந்து, medicine used for the ear — ear drops.

செவியொழுக்கு, காதில் ஏற்படும் இரத்தம், சளிநீர், சீழ் முதலிய ஒழுக்கு.

செவிரடி, see செவிரம்.

செவிரம், ஒரு வகை பாசி, a kind of moss.

செவிரியம், தட்டைப்பயிறு, (lit) flat pulse cowgram — Vigna catiang.

செவிரோகம், see செவிநோய்.

செவிரோக வைத்தியன், காதுரோகத்தைச் சிகிச்சை செய்வோன், a physician versed in otology — Otologist.

செவிலி, see செவிலித்தாய்.

செவிலித்தாய், ஆயாள், தாதி, nurse; 2.பால் கொடுத்து வளர்ப்பவள், a nurse engaged to suckle an infant — Wet nurse; 3. வளர்த்த தாய், a female who nurses and acts as a mother — Foster mother.

செவிள், காதின் மேல் பாகத்திய வெளியுறுப்பு, the cartilaginous projection before the external meatus of the ear — Tragus.

செவுங்களூர்ப்பூடு, ஒரு வகை மருந்து, a kind of plant.

செவுடு, see செவிடு.

செவுரொட்டி, மண்ணீரல், see சுவரொட்டி, spleen.

செவுள், தண்ணீரிலுள்ள வாயுவை யிழுப்பதற்காக மீனுக்குள் இயற்கையாகவே அமைந்த ஓர் சுவாசவுறுப்பு, இது அதன் கழுத்திற்கு இரண்டு பக்கத்திலும் அமைந்துள்ளது. the organ of respiration which fishes are naturally endowed with as well as other animals which live in water and breathe the air that is mixed in water. It hangs on both sides of the neck — Gills.

செவேரெனல், சிவந்திருத்தலின் குறிப்பு, indication of reddness.

செவ்வகத்தி, சிவப்பு அகத்திமரம். இது சாதாரணமாய் முருங்கை மரம் பருமனும் உயரமும் இருக்கும். பூ சிவப்பாய்க்குரு விரத்தம் போலிருக்கும். இது அபூர்வமாய்க் கிடைக்கும். காய், கீரை முதலியன தின்பதற்குதவாது. பூ பாஷாணத்தைக் கட்டுவதற்குபயோகப்படும். ஆகவே சங்கு பாஷாணத்தைக் கட்டும். இவ்விலை, நவநீதபற்பம், தாளககத்தி, பற்பல சிந்தூரம் செய்ய உபயோகமாகும். இதன் பூ மூக்கிலுண்டாகும் இரத்த வொழுக்கை நிறுத்தும். உள்வெப்பத்தை நீக்கும். scarlet flowered pea tree. red sesbane — Sesbania grandiflora. It resembles moringa tree in size and structure, flowers crimson red; tree found rarely, leaves and legumes are not fit to be eaten as vegetables. Flowers are used medicinally for consolidating arsenic poison, especially white arsenic, leaves also have medical virtues and are used for calcination of metals, butter and purification of orpiment(yellow).

செவ்வகில், சிவப்பு அகிற் கட்டை, red variety of agilwood. Zylaloo — Cadreia toona, see அகல் — The tree is tall and graceful to look at and cultivated as an ornamental tree. The wood yields an oleo resin and a dark tar obtained by destructive distillation and used externally for ulcers and skin diseases. It is a carminative. The bark is a powerful astringent used in remittent fevers, diarrhoea, dysentery. The powder of the bark is used for ulcers in bilious fevers and diarrhoea arising from atony of muscular fibre; 2. தாணாமரம் Himalyan cedar Moul mein cedar — Cedrus deodara see சிகப்பு அகில்.

செவ்வகு, குடசபாலை.

செவ்வசா, நிணநீர், a colourless watery fluid in the lymphatics —Lymph.

செவ்வடுக்கலரி, சிவப்பு அடுக்கலரி, double flowered oleander rosebay — Nerium odorum (florepleno — rubro).

செவ்வட்டை, மரவட்டை, wood louse, 2. ஓர் உபரசச் சரக்கு, the official leech used in medicine Sangnisuga medicinalis; 3. ஆயிரங்காலி

myriapod; *4. ஓர் பூச்சி*, blight affecting sweet potato.

செவ்வட்டைக்கடி, *சிவப்பு அட்டைக்கடி, இதனால் சதை தடித்துச் சிவந்து மருத்துக்காணும்*, bite of red variety of leich. It causes swelling and inflammation together with loss of sensation in the part affected.

செவ்வணில், *சீமை சிவப்பு அணில்*, red squirrel of Europe.

செவ்வணுக்கள், *செங்குருகடங்கள்*, red corpuscles of blood.

செவ்வண்டு, *தேங்காயை அல்லது தென்னங்குருத்தை அழிக்கும் ஓர் வண்டு, இதன் மார்பின் மேல் சிவப்பாய் இருத்தல் பற்றி இதற்குப் பெயர்*, red beetle. It destructs tender cocoanuts and tender shoots of the cocoanut trees. It is so called from its red mark on the upper part of its breast.

செவ்வத்தி, *சீமையத்தி*, European fig.

செவ்வத்தை, *துருக்கவேம்பு*, globular flowered neem — Cipadessa fruticosa; *2. ஓர் கொடி* a kind of silver weed — Argyreia bracteata.

செவ்வந்தி, *சாமந்தி, சீமை சாமந்திப்பூ தான் மருந்துக்கு உபயோகப்படுகிறது. நீல சாமந்தி சாறு செந்தூரம் செய்ய பயன்படும்*. chamomile of chrysantham — Chrysanthemum coronarium.

செவ்வந்திவகை, varieties of chamomile. See *செவ்வந்திப்பூ*.

1.மஞ்சட்செவ்வந்தி, yellow chrysanthem.

2.செண்டுச்செவ்வந்தி, double chrysanthem.

3.அரும்புச் செவ்வந்தி, small chrysanthem.

4.துலுக்கச் செவ்வந்தி, Marigold. Tagetes ereita.

5.முட்செவ்வந்தி

6.சீமைச் செவ்வந்தி, European chrysanthem Anthemis nobilis.

7.வெள்ளைச்செவ்வந்தி, white chrysanthem — chrysanthemum carinatum.

8.நீலச்செவ்வந்தி, blue or violet chrysanthem.

9.நாட்டுச்செவ்வந்தி, Chrysanthemum Coronarium.

செவ்வந்திக்கல், *குருவாந்தக்கல், இது ஓர் வகை இரத்தினக்கல்*, orental amethyst. It is a gem of a pink colour due to the presence of managanese; 2. *பதுமராசம் அல்லது தாமரைக் கொம்பு*, a kind of ruby — Jacinth.

செவ்வந்திப்பூ, *சாமந்திப்பூ*, see செவ்வந்தி, *2.வயறு உப்புசம், மந்தம்போம் கண்ணொளியும் மயிர் வளர்த்தியுமுண்டாம்*, It is a laxative. Hence given for bloating of abdomen and loss of appetite. It increases growth of hair and eye sight.

செவ்வந்தி வகை, see செவ்வந்தி வகை.

செவ்வம்மான் பச்சிசி, see *சிவப்பம்மான் பச்சரிசி*.

செவ்வரக்கு, *சிவப்பரக்கு*, red sealing wax — red lac; 2. *சாதிலிங்கம்*, vermilion.

செவ்வரத்தம், see செவ்வரத்தை.

செவ்வரத்தினம், *மந்தாரை*, see *செம்மந்தாரை*.

செவ்வரத்தை, see செம்மரத்தை.

செவ்வரலி, *சிவப்பு அலரிச்செடி*, oleander rose bay.

செவ்வரளிச்சூரணம், *செவ்வரளி சமூலம் சிவனார்வேம்பு சமன் சேர்த்து, கருங்காலிப் பட்டைச் சூரணம், வாலுளுவை, கார்போக அரிசி சேர்த்து*

பொடியாய் செய்த சூரணம், மண்டலம் பத்தியமாய்க் கொள்ள குட்டம், அரையாப்பு, வெட்டை மேகம், சூலை, தொடைவாழை போம், 1. red oleander (all parts - *சமூலம்)* powder; 2. Siva's neem (all parts -*சமூலம்)* powder; 3. black sundra bark powder; 4. batchisced; 5. staff tree seeds (celatrus paniculata seeds). All these five are taken in equal weight, powdered, and well mixed. The powder is useful in leprosy, bubo, gleet, deep abscess of the thigh, rheumatic pain. N.B. diet must be observed.

செவ்வரி, கண்ணில் ஏற்படும் சிவந்தவரி, red streaks in the eye; *2.* ஓர் நரை, a kind of ibis.

செவ்வரிக் கற்றாழை, சிவப்பு வரிக் கற்றாழை, இதன் சமூலத்தை உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து, தேனில் கொள்ளக் காரியசித்தியாகும். மண்டலம் கொள்ளத் தாது வெல்லாம் இறுகிக் கட்டும். உடம்பு சிவந்து காட்டும். கண் மிக்க துலக்கமாகும். இதன் சாற்றை இரசத்திற்கு சுறுக்கிட கட்டிப்போகும். இதைச் சாரணை செய்து வாயில் போட கவுனம் ஓடும். *(இராம-500)* red streaked alose. This is dried and powdered. If taken with honey for forty days, the body will be rejunuvated and glow with red. Instre, vision will be made clear and bright. and the body attains longevity. By the process of *கிராசம்*, its juice consolidates mercury. If this mercurial ball is animated as contemplated in Siddhars' science and kept in the mouth one can fly and travel in air.

செவ்வரிசவ்வு, சிவப்பு வரி படர்ந்த சவ்வு, a membrane with red streks; *2.* கண்மணி சவ்வு. membrane of pupil memorana puplarum.

செவ்வரிதாரம், சிவப்பு அரிதாரம், red orpiment.

செவ்வரிபடர்தல், ஓர் வகை கண்ணோய், an eye disease.

செவ்வரி படர்ந்தகண், கபாதிக்கத்தினால் செந்நிறமடைந்த கண், red eyes caused by lascivious passion.

செவ்வரிபடலம், கருவிழியின் மேற்றோலில் சிவப்பு வரிகள் காணப்படும் ஓர் கண்ணோய், a disease of the eye consisting of red streaks or lines on the cornea and sclera of the eye.

செவ்வார்ப்புடை, சிவப்புக் குருக்களாக எழும்பும் ஓர் வகைச் சிரங்கு. a kind of its marked by red pustules.

செவ்வலங்காரம், வெண்காரம், borax.

செவ்வலரி, சிவப்பு அலரிப்பூ, Oleander (rosebay) — Nerium odorum (roseum) 2. ஓர் வகை கண்ணோய், "செவ்வலரி சிறந்தோடிப்போய்விடுமே" *(தன்வந்தரி தைலம் 500)* a disease of the eye.

செவ்வல்நார், see செவ்வல்லி.

செவ்வல்மண், சிவப்பு நிலமண், red soil mud, reddish loam soil containing ferruginous red sand as its chief constituent. It is plastic when wet but friable when dry.

செவ்வல்லி, மஞ்சிட்டி, Indian madar; 2. செவ்வாம்பல், அல்லித் தாமரை, அரக்காம்பல், இது தண்ணீரில் விளையும் ஓர் பூஞ்செடி, பூ, சிவப்பு, வருஷந்தோறும் பூக்கும், சாதாரணமாய்க் குளத்தில் காணலாம். இதன் பூ மருந்தில் உபயோகப்படும். இருதயத்திற்கு வலிவைத் தரும். உஷ்ணத்தை தணிக்கக் கூடியது. நீரைப்பிரிக்கும். இதனால் மூத்திர ரோகம், சங்கவாதம் உஷ்ணத்தாற் பிறந்த கண்ணோய்கள் சிரநோய், இரத்த பித்தம் தாதுநட்டம் போம். இதன் விதைகள் அழற்சியைப் போக்கி உடம்பைப் போஷிக்கும். வேர் இரைக்

குடலுக்கு வலிவை யுண்டாக்கி வேக்காட்டைப் போக்கும். துவர்ப்பாகையால் பேதியை நிறுத்தும். ஈரலுக்கும் பீலிகத்திற்கும் பலத்தைக் கொடுக்கும், சோணிதம் சுத்தமாகும்.

இப்பூவினின்று சர்பத் காய்ச்சுவதுண்டு. இதன் கிழங்கு, தண்டு, இலை, பூ இவைகளை சமைத்துச் சாப்பிடலாம். இச்செடியின் அடித்தண்டு, கிழங்கு இவைகளினின்று மாவு தயாரிக்கலாம். மேலும் இக்கிழங்கு பித்த பிரமேகத்தை விலக்கும். செம்பின் களிம்பைப் போக்கி அதை சிந்தூரமாக்கும். red Indian water lily — Nymphaea lotus — Nymphaea esculenta. It is an aquatic flower plant flowering all the year, flowers deep red found commonly grown in tanks flowers are medicinally cardiac tonic, refrigerant, and diurelic, the seeds. demuilcent and nutrient, the roots stomachic, demulcent and astringent. The best preparation of the flowers is the syrup. Root, stalk, leaf and flower are eaten as vegetables. A kind of flour is made from the under ground steam and roots.

NOTE: The flowers are substituted for degitalis, the seeds for iceland moss tragacanth and pepsin, the roots for subnitrate of bismuth pepsin and galic acid.

செவ்வல்லிக்கொடி, see செவ்வல்லி, as opposed to வெள்ளல்லிக் கொடி, இதனால் குட்டம் தீரும். தங்கம் நீறும். Red Indian water lily creeper Nymhoea, esulanta. It is useful in cases of leprosy and is capable of reducing gold into a cacined powder.

செவ்வணார், see செவ்வல்லி

செவ்வாகரி, சிவப்பு மண், red earth or mud.

செவ்வாகை, சிவப்புவாகை, red cedar — Cederla toona

செவ்வார்ச்சிகம், சிவப்புகாசரளி, a kind of red oleandar.

செவ்வாடு, செம்பிலியாடு, which see, ram

செவ்வாத்தி, சிவப்பு ஆத்தி மரம், red variety of mountain ebony — Bauhinia genus.

செவ்வாப்பட்டை, ஓர் பட்டை, bark of creeper shrup — Capparis sepiaria see காட்டுக்கத்திரி.

செவ்வாப்பு, குழந்தைகளுக்கு பிறந்தவுடனே உடம்பு முழுவதும் சிவந்து குருவாய்க் கண்டு, தொண்டையைக் கட்டும் ஓர் நோய், a disease that effects the new born babies within three months of birth It renders the body red all over or in patches or finger and toetips and is marked by affection of throat. This is not as dangerous as கருவாப்பு, which turns the body black. This is only temporary, a form of erythema — Erythema neonatorum. see செங்கிரந்தி.

செவ்வாப்புக்கட்டி, குழந்தைகட்குத் தலையிற் காணும் ஓர் சிவப்புக்கட்டி, a red boil on the head of children.

2. வித்திரதி கட்டியைப் போலவே ஆரம்பித்து மாமிச தாதுவைப் பற்றி, கட்டிகள் பிறந்து பழுக்குங் காலத்தில் அவைகளின் நடுவே சிறு கல சத்தைப்போல் பள்ளம் விழும் அக்கியைப் போன்ற வியாதி, இதில் மூன்று வகையுண்டு. அவையாவன

1. வாத செவ்வாப்பு
2. பித்த செவ்வாப்பு
3. சிலேட்டுமசெவ்வாப்பு

A disease characteresed by the formation of peculiar blisters or belbs which when supurrating leave a cavity in the centre as in the case of herpes; a

kind of erysipelas — Pemphigus infantalis. There are three varieties corresponding to the three humours — Vatha, Pitha and Kapha.

செவ்வாப்புக் கட்டிக்களிம்பு, ஒரு பாத்திரத்தில் தேன் மெழுகை உருக்கி நெய் விட்டுப் பருத்திப் பஞ்சை சுட்ட சாம்பல் போட்டுக் கிளறி இதற்கு வசம்புசுட்ட சாம்பல் வறுத்த துருசும் சேர்த்துக் கிளறி ஆறவைத்துச் சீலையி லுட்டிக் கட்டிக்குப் போட ஆறும். 'Melt bees' wax one part and add three parts of pure cow's ghee and to the mixture add ashes of burnt cotton, sweet flag and fried copper sulphate and mix well. This is smeared over the affected part. It is a sure cure for such boils.

செவ்வாப்பெண்ணெய், செவ்வாப்புக்குக் கொடுக்கு மெண்ணெய், a medicated oil prescribed for செவ்வாப்பு, see சேவெண்ணெய்.

செவ்வாமகம், சிவப்புக் காசிதும்பை, a red variety of Benares toombay — Leucas genus.

செவ்வாமணக்கு, சிவப்பா மணக்கு, இதன் இலையால் வயிற்றுவலி, செரியா மாந்தம், வாதகோபம், உடம்பு வலி போம், red castor seed — Ricinus Communis (red). The leaves are used in cases of colic, indigestion, rheumatic inflammation and body pain.

செவ்வாமிகம், சிவப்புக் கொன்றை, red cassia tree.

செவ்வாம்பல், சிவப்பு ஆம்பல், see செவ்வல்லி.

செவ்வாய், சிவப்புவாய், red mouth. 2. வேக்காடடைந்த வாய், inflamed mouth; 3. சிவப்பு, ruby; 4. ஓர் கிரகம், one of the nine planets — Mars.

செவ்வாய்தோஷம், வாய் வேக்காட்டினால் ஏற்படும் தோஷம், morbid diathesits due to the affection of the mouth.

செவ்வாய்ப்புண், வாய் வேக்காளம், sore through inflammation of the mouth — Stomatitis.

செவ்வாய்மண், செம்புமணல், red sand containing fine copper.

செவ்வாரை, சிவப்பு ஆரைக் கீரை, rep pseudofern — Marsilea genus. It is said to be commonly found in hills and mountains — Humbolatia brcunonia.

செவ்வாலங்கொட்டை, சேங்கொட்டை, marking or dhoby's nut — Semicarpus ananacardium; 2. நேர்வாளம், Indian croton seed — Croton tigilium.

செவ்வாளம்பருப்பு, நேர்வாளங் கொட்டையின் பருப்பு, pulse of Indian croton seed.

செவ்வாலம்பழம், சிவப்பு ஆலமரத்தின் பழம், இதில் சிங்கிகட்டும், red fruit of banyan tree. it is said to consolidate sringi, a kind of arsenic.

செவ்வாலி, see செவ்வாமணக்கு.

செவ்வாலிக்கெண்டை, வெள்ளைக் கடற்கெண்டை மீன், a white carp fish — Barbus filamentosus.

செவ்வால், அரணை,horse lizard; 2. சிவப்பு ஆலமரம், a red banyan tree - Ficus infectoria.

செவ்வாவிகம், see செம்மரம்.

செவ்வாவரை, ஆவிரையில் சிவப்பினம், a red variety of ஆவாரை, which see — redcassia.

செவ்வாழை, சிவப்பு வாழை, a variety of red plantain tree — Musa sapientum (rubra). It yields once in three years and is useful

in medicines. It is considered cooling to the system.

செவ்வாளம், நேர்வாளம், Indian croton seed.

செவ்வ, அழகு beauty, 2. காலம், time; 3. பருவம், season; 4. நிலைமை, state; 5. மொக்கு, bud; 6. வாசனை, smell; 7. செவ்வரளி, see செம்பு குடத்தி.

செவ்வகம், see செவ்வியம்.

செவ்வஞ்சி, எலுமிச்சை ரசத்திலூற்றிய இஞ்சி, fresh ginger pieces soaked in the juice of lime fruit.

செவ்வண்டு, சிகப்பு இண்டஞ்செடி, a red variety of sensitive tree — Mimosa rubcantis a prickly shrub with red flowers.

செவ்வநிறம், மாந்துளிர்கல், a red stone of the colour of tender mango leaf.

செவ்வய நீர், தயிரின் தெளிவு நீர், clear fluid that separates from curd.

செவ்வியமண், செம்புமணல், copper mixed with sand, copper ore.

செவ்வயமலம், தயிர், curd.

செவ்வயவலம், திப்பிலிவேர், திப்பிலி மூலம், root of Piper longum.

செவ்வியம், பஞ்ச மூலத்தொன்று, one of the five medicinal roots; 2. மிளகுக்கொடி அல்லது வேர், இதனால் பாம்பு கடித்தேறிய விஷம் போம், black pepper creeper or its root — Pipernigrum. It cures snake bite poisoning; 3. மலை வெற்றிலைக் கொடி, mountain betel creeper — Piperbeetle (wild); 4. கடைச்சரக்குகள் 64ல் ஒன்று, one of the 64 bazaar drugs as contemplated in Tamil Medicine i.e. black pepper root — See கந்தநாகுலி.

சொல்லின்வாய் முந்துமுன், வாயெடுத்துச் சொல்வதற்கு முன், before one begins to talk (உ.ம்) "சொல்லின்வாய் முந்து முன்னே சுழட்டி வெட்டும்" (தேரையர்) வாயெடுத்துச் சொல்லுமுன் முழுமையுங் கண்டிக்கும். indidating rapidity of time.

சொல்விளம்பி, கள், toddy; so called of its causing babbling, see சொல்.

சொளிக்காய், ஓர் சிறிய தேக்கு, fish bone tree — Daphiniphyllum

சொள்ளுவன், glancescens.

சொள்ளு, வாயொழுக்கு நீர், வாய் நீர், saliva dribbling from the corners of the mouth as of a child.

சொள்ளுவடிதல், மிகுதியாக எச்சல் ஒழுகல், excessive secretion of salive — Ptyalism. இது கொள்ளுக்காய் வேளையினால் தீரும். This can be cured by the use of purple tephrosiaea — Galega purpurea.

சொள்ளுவாய், எச்சல் வடியும் வாய், saliva dribbling always or constantly from the corners of the mouth.

சொள்ளை, அம்மை வார்த்த தழும்பு, pox marks; 2.சொத்தை, carious; 3. see சொட்டை, 4. புழுவரித்தது, worm eaten; 5. தழும்பு, scar; 6. ஒல்லி, lean; 7.see நறுவிலி.

சொள்ளைப்பாக்கு, சொத்தைப் பாக்கு, worm eaten arecanut.

சொறங்கம், கச்சோலம், husk of cardamom.

சொறசத்தோழகி, இலவங்கம், clove.

சொறண்டல், புறண்டுதல், scraping.

சொறி, சுறண்டு, புறண்டு, Scratch; 2.தினவு, itch; 3. உடம்பின் சொறி, scaly eruptions of the skin — Psoriasis; 4. சொறிகுட்டம், which see; 5. காஞ்சொறி, climbing nettle, common nettle, Tragia involucrata; 6. சொறிசிரங்கு, severe itch; 7. சுரசுரப்பு, roughness of the surface; 8. புண்பக்கு, scab; 9. தோலுதிர்தல், epithelial cells sheding from the skin; 10.ஓர்மீன், a kind of jelly fish — Medusa.

சொறிகட்டை, சொறிசிரங்கு, scabies and pspriasis.

சொறிகண், இமையில் தினவும் எரிச்சலுங் கூடிய கண், itching and burning sensation of the eye lids.

சொறிகரப்பான், குழந்தைகளுக்கு உடம்பு முழுவதும் அல்லது ஓர் பாகத்தில் குருக்க ளெழும்பி, தோலுரிந்து, உதிர்ந்து போய் நமைச்சலை உண்டாக்கித் தோலின் உணர்ச்சியை மாற்றும் ஓர் வகைக் கரப்பான். இது ஓர் சரும வியாதி. a kind of strophulus in children characterised by diffuse small scaly eruptions on a portion or all over the body exfoliation of the cuticle in minute scales with intese itching, occasioned by morbid change of sensibility of the skin — Strophulous pruriginosus. 2. குழந்தை முதல் ஆயுள் பரியந்தம் உடம்பில் எப்பொழுதும் தினவோடு கூடிய குருக்கள் எழும்பிய ஓர் சரும நோய், a chronic skin disease beginning in childhood and lasting through life being usually incurable. It is marked by the development of small papules with intense itching — Prurigo.

சொறிகல், சுரசுரப்பான கல், தவளைக்கல், இது உடம்பு தேய்த்து குளிக்க உபயோகப் படும். see சொறியன் கல், a kind of rough stone (with rough surface) used for rubbing the body while bathing.

சொறிகிரந்தி, மேக சம்பந்தத் தினால் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் உடம் பினில் குருக்கள் எழும்பி மிக்க நமைச்சலை உண்டாக்கும் ஓர் வகைக் கிராந்தி. a kind of skin disease due to venereal or syphitic causes. It may affect children by inheritence or adults by venereal contact and is marked by cutaneous eruptions attended with intense itching.

சொறிகுட்டம், இரணங்கள் உண்டாகாமலே உடம்பு முழுதும் சொறிகள் கண்டு சதாநமச்சலுடன் எரிச்சலும் கண்டு சிவந்து துன்புறுத்தும் ஓர் வகைக் குட்டம், a kind of leprosy with diffuse papillary eruptions without ulceration on the entire surface of the body marked by intense itching and burning sensation followed by escfoliation of the epidermis or brawny scales — Eczematus psoriasis — Lepra itchyosis.

சொறிகுரு, தவிடு போல் உதிரும் பொடுகு, brawny scales scruf.

சொறிகொடுத்தல், இணக்கமாய் இருத்தல், accomodating.

சொறிகொள்ளுதல், சொறி உண்டாகுதல் to be attacked with itching.

சொறிகொள்ளி, சொறிகண்ட ஆண் அல்லது பெண், a person either male or female affected by intense itching.

சொறிகொள்ளிநாய், சொறி கொண்ட நாய், dog always scratching due to intense itching — Mangy dog; 2. பைத்தியங் கொண்ட நாய், rabid dog; dog affected with rabies; 2. செம்பூரான் கல், laterite; 3. சுக்கான் கல், lime stone; 4. see சொறியன்கல், 5. தவளைக் கல், a red mineral stone mixed with iron.

சொறிகொன்னை, சொறிகொன்றை, Orascylum indicum.

சொறிக்கட்டை, ஆவாரஞ்செடி, tanners' cassia tree; 2. (சொறி+கட்டை) சொறி வாய்ந்த உடம்பு, body affected with intense itching.

சொறிக்கல், செம்பூரான்கல், இதற்கு செம்பாறாங்கல் என்றும் பெயர். இது இந்தியாவில் மட்டும் கிடைக்கக் கூடிய அய மணற்கல், இது சென்னை, நெல்லூர், இராஜமுந்திரி முதல் கட்டக் வரையிலும், கிழ்மலை மேல் மலைத்

தொடரின் உச்சிகளிலும் சாதாரணமாய்க் கிடைக்கக் கூடியது. மைசூர், சேலம், கோயமுத்தூர், ஆர்க்காடு, தஞ்சாவூர் முதலிய பகுதி களிலும் கிடைக்கும். இது சாஸ்த்திரப்படி துவாரங்கள் அமைந்து இருப்பது மல்லாமல் சுமார் கால்பங்கு உலோக இரும்பும் கலந்திருக்கும். இதில் சில பாகம் வெள்ளைக் களிமண்ணாக விருக்கவும் காணலாம். அன்றியும் சில பாகங்களில் இதில் காந்த சத்து, சுண்ணாம்பு சத்து முதலியவைகளும் சேர்ந் துள்ளன. இதை நினைத்தப் படி நமக்கு வேண்டிய அளவுக்குத் தக்கப்படி வெட்டி எடுத்துக்கொள்ளலாம். laterite. It is an irony red or clay iron ore peculiar to India. It is found in Madras, Nellore Rajamandry. and narthwards as far as cuttack; it caps the loftiest summits of Eastern and Western ghats. in the interior it occurs in Mysore, Salem, Comibatore, Arcot, Tanjore etc. Laterite is chemically a porous rock much impregnated with iron peroxide and in some places the rock contains as much as from 5 to 30 percent of metallic iron. A considerable portion some times consists of white clay, some portions contain manganese, lime with traces of magnesia soda or potash. The rock is so soft that in can be easily cut into block of any size and shape.

NOTE: The iron in the stone exists in a state of hydrated peroxide, or limonite or partly as hydrated and partly as an hydrous peroxide. The origin of this rock is regarded as modified volcanic matter.

சொறிக்கல், மஞ்சள் உறைக்கும் கல், saffron stone; 2. சுக்கான் கல், lime stone; 3. வெட்டுக் கல், rough stone.

சொறிக்கிட்டம், இரும்புக் கிட்டம், scum of iron, iron

dross; 2. இரும்புத்துரு, iron rust.

சொறிக்கிரந்தி, சொறியோடு கூடி, நமைச்சலையுண்டாக்கும் ஓர் வகைக் கிரந்தி, a skin disease raising patches attended with itching sensation — Psoriasis.

சொறிக்கொட்டு கொட்டுதல், இலேசாக அல்லது மெதுவாக அடித்தல், beating lightly or slowly.

சொறிக்கொன்றை, சொரசொரப்புக் கொன்றை, rough cassia.

சொறிசிரங்கு, உடம்பின் மேல் மிக்க தினவையும் எரிச்சலையும் உண்டாக்கும் ஓர் வகைச் சிரங்கு, இது ஓர்வித சிறிய புழுக்களாலுண்டாகும். இது ஓர் ஒட்டு வியாதி, a kind of itch or scabies marked by intense itching and burning sensation. It is a contagious disease caused by small (insects) mites.

சொறிசிரங்கு நாசினி, சொறி சிரங்கைப் போக்கும் புறங்கை நாறி என்னும் பச்சிலை, அல்லது கிருஷ்ணபாலை, This is used for scabies and enlargement of spleen and liver.

சொறிசிரங்கு மருந்து, அரைப்படி நல்லெண்ணெயில் செந்தாழம்பூ இதழ்களைப் போட்டு ஊற வைத்துப் பூமிப்புடமாக 20 நாள் புதைத்து வைத்து உபயோகிக்கும் மருந்து, மேகரணமும் போம், in half a measure or one litre of gingelly oil soak two flower petals of red variety of fragrant screw pine — Pandanus odoratissimus — seal and burry it in earth. After twenty days take it out use if for scabies.

சொறிசிரங்கு மருந்து, சுத்தி செய்த கந்தகம், ரசம், நீரடிமுத்து வகைக்கு வீசம் பலம் கொண்டு ஊமத்தங் காய்க்குள் கிறி வைத்து 6 விரட்டியில் புடம் போட்டு எடுத்து எருமை வெண்ணெயில் அரைத்து பழையது சாப்பிட்டு உடம்பில் பூசிக் கொண்டு 6 மணி நேரம் சென்று இலுப்பைப் புண்ணுக்கு சுட்டு அரைத்துக் குளிக்கப் போம். this is a medicine for Scabies prepared with datura, mercury, sulphur and chalmogara seed as stated in the text, and applied externally mixed with butter.

சொறிசுணங்கு, ஓர் பச்சிலை, இதை அரைத்து மண்டூரம் அல்லது கிட்டத்துக்குப் பூசிபுடமிட பற்பமாம், an unknown plant which is said to calcify iron dross.

சொறிதல், புரண்டுதல், scratching; 2. நமைச்சல் உண்டாதல், itching.

சொறிதுத்தம், a compound of zinc.

சொறித்தவளை, (சொறி + தவளை) மேலே சுரசுரப் பாயுள்ள தவளை, இது அடிக்கடி நிறம் மாறும், a frog with rough skin surface chunam frog, flying frog — Rhacophorus maculatus; 2. ஓர் வகைத் தவளை, Indian toad — Bufomelanosticus.

சொறித்தேமல், உடம்பில் நமைச்சலை யுண்டாக்கும் ஓர் படர் தேமல், a spreading discolouration of the skin —Epidermosis 2. படர்தாமரை, Tinea — Ringworm.

சொறிநாய், சொறிகொண்ட நாய், a mangy dog.

சொறிந்து கொள்ளல், நமைச்சலைப் போக்கத் தேய்த்துக் கொள்ளல், rubbing or scratching to get rid of itching.

சொறிபிடித்தல், சொறி உண்டாதல், contracting or being attacked with itch or scabies said of a child dog etc.

சொறிபுண், see சொறிசிரங்கு, 2. குழந்தைகளுக்குண்டாகும்

கட்டுக் கரப்பான், a scably itch attacking children.

சொறிப்புள்ளிக்கல், மஞ்சட்கல், a mineral stone.

சொறிமண்டலி, ஓர் வகைப் பாம்பு, a kind of snake.

சொறிமாது, பாற்குறட்டை, milk corattai, snake gouard — Trichosanthes genus.

சொறிமீன், சுறாவைப் போல் மேலே சுரசுரப்புள்ள மீன், fish with rough skin like the shark or skata. Placoids.

சொறியன், தவளை, frog; 2. சொறி கொண்டவன், one attacked with itch or scab; 3. see சொறியன்மூலி.

சொறியன்கல், குளிக்கும் போது உடம்பு தேய்க்க உதவும் ஓர் சுரசுரப்புள்ள கல், a kind of rough stone used for rubbing the body to get rid of filth, while bathing.

சொறியன்மூலி, செந்தொட்டி, climbing nettle Tragia involucrata.

சொறியிலை, ஓர் வகைப் பீநாறிப்பூடு, fetid holly — Muppia foetida (oblonga).

சொறியுண்டாதல், உடம்பில் சொறிபடர்தல், being attacked of itch or scab.

சொறியெழும்பல், உடம்பில் சொறி யுண்டாதல், see சொறி யுண்டாதல், 2. சுரசுரப் புண்டாதல், becoming rough on the surface of anything.

சொறிவகைகள்

1. யானைச்சொறி, a form of psoriasis with confluent lesions with thickening and hardening scales.

2. முதலைச்சொறி.

3. வறட்டுச்சொறி, a form of psoriasis with dry, brawny scales.

4. தவளைச்சொறி, a form of skin disease with rough and ugly looking surface — feeling like sand paper;

5. படைச்சொறி, psoriasis in ring shaped satches.

6. படர்ச்சொறி, a form of spreading contiguouslesions — Psoriasis diffusa.

7. தடிப்புச்சொறி, a form of skin disease with thickening and hardening of the skin — Psoriasis in veterat.

8. சர்வாங்கச்சொறி, a form with lesions over the whole body — Psoriasis diffusa.

9. பாம்புச்சட்டைச்சொறி, a form of psoriasis where crusts resembling the snakes skin peel and withs off.

சொறி வல்லி, பூனைக்காலி, cat bean — Mucana pruriens.

சொறிவழுக்கை, ஓர் வழுக்கை மரம், a kind of Indian linden — Grevia genus.

சொறிவு, தினவு,itching.

சொறுண்டுதல், சொறிதல், scratching.

சொற்கப்பனை, see சொக்கப் பனை.

சொற்கம், மாணிக்கம், a kind of superior ruby supposed to be on the head of a certain kind of cobra; 2. மாதர் முலை, woman's breast see சொர்க்கம்.

சொற்கருவி, பேசுவதற்கு ஆதாரமாயுள்ள உறுப்புகள், உதடு, நாக்கு, பல் முதலியன organs facilitating speech as lips tongue teeth etc. 2. பாற்கொழுஞ்சி, wild indigo — Tephrosia purpurea.

சொற்காரம், பெருங்காயம், assafoetida.

சொற்குறி, சூதபாஷாணம், a prepared arsenic.

சொற்சிலைவங்கம், அஞ்சன பாஷாணம் a kind of native arsenic.

சொற்பகாயம், அற்பகாயம், simple injury.

சொற்பசுரம், அற்பசுரம், slight fever, feverishness, slight febrile affection.

சொற்பத்திராவகம், படிகாரம், வெண்காரம், நவாச்சாரம், சாம்பலுப்பு, சோடாவுப்பு, பாறையுப்பு, வெடியுப்பு, தாளகம் இவைகளைப் பொடி செய்து இறக்கும் திராவகம். இது மண்ணீரல் நோய், குன்மம் முதலியவை களைப் போக்கும். இதை 6 மணி எடை திப்பிலியில் சாப்பிட வேண்டியது, an acid obtained by distilling the following substances viz., alum borax, chloride of ammonium, sulphide of antimony, impure carbonate of potash, soda, rock salt, nitre orpiment etc. It should be taken 6 to 12 grains of long pepper powder for spleen enlargement dyspepsia etc.

சொற்பநோய், அற்பநோய், feeble disease disease of minimum importance.

சொற்பபஞ்சமூலம், கத்தரி, கண்டங்கத்திரி, சிறு நெருஞ்சில், சிறு மல்லிகை, பெரு மல்லிகை ஆகிய இவைகளின் வேர்கள், a small group of five roots; 1. Solanum indicum; 2. Solanum Xantha corpium; 3. Tribulus lanugirosus; 4. Doodia lagopodioides; 5. Hedysarum gangeticum.

சொற்பமுறிவு, அற்பாக எலும்பு முறிதல், Simple fracture of the bone.

சொற்பம், அற்பம், slightness, smallness; 2. மணிப்பூரகம்,

one of the six mystic centres situated at the naval region.

சொற்பவயது, அற்பாயுள், short lived.

சொற்பவலி, அற்பவலி, slight pain.

சொற்பவன், 1. தூக்கத்திற் காணும் சொப்பனம், deram in a sleeping state; 2. சாதிலிங்கம், vermilion; 3. கனவு, dream.

சொற்பவிருமல், சிணுக்கிருமல், slight cough — Tussicula.

சொற்பனகற்பிதன், கனவின் துன்பத்திலகப்பட்ட ஆன்மா, soul in the state of dream.

சொற்பனக்கலிதம், தூங்கும் போது கனவினாலேற்படும் விந்து நஷ்டம், wet dream — reflex emission of the semen.

சொற்பனக்காய்ச்சல், கெட்ட கனவினாலேற்பட்ட காய்ச்சல், fever due to bad dreams.

சொற்பனத்தானம், கனவின் அவஸ்தையில் அகப்பட்ட ஆன்மாவிற்கு இருப்பிடமாய் உள்ள கழுத்து அல்லது பிடரிவழி, neck or nape as the seat of the soul in dream state.

"அறிந்துகொள்ளு மயேஸ்வரத்தில்
மைந்தா மைந்தா
அப்பனே சொற்பனந்தானடங்கி
நிற்கும்"

(கடைப்பிள்ளை ஞானசமாதி தீட்சை).

சொற்பனம், தூக்கம் அல்லது மயக்கம் வந்த காலத்து 24 கருவிகளைக் கொண்டு ஆன்மா கண்டத்தானத்தில் நின்று உடம்பை பாதுகாக்கும் நிலை. One of the five states or stations of the soul in the human body. It begins to operate during sleep, giddiness or other state of unconsciousness by taking it lodgment in the cervical region with aid of 24 faculties in the system, and protects the body.

NOTE: Dreams are occasioned in the soul of man for his instructions and warning. Many devoted scholars and adepts receive instructions in their dreams in regard to things which they desired to know. They furnish revelations of our destiny. The Chaldeans, Assyrian, Greeks and Romans too beleived in the importance of dreams.

We, Hindus hold that when body is asleep, the spirit maintains its vigil, proceeds at will, where so ever the body can go, and sees all that tht the physical eyes can disern in the waking state. According to Ocult science, the power of clairvoyance and predictions are especially active in dreams when the activity of the physical body is subdued and the disturbing influences are shut out.

சொற்பனேந்திரியம், see *சொற்பனகலிதம்.*

சொற்பனாவத்தை, *ஆன்மா கழுத்து அல்லது பிடரி வழியில் தங்கி நிற்கும் காலத்தில் மனம் தவிர இந்திரியங்கள் செயலற்றுள்ள நிலை,* dream state in which the soul having for its sea neck or nape experiences the functions of the mind, while all the sense organs are completely suspended or at rest.

சொற்பிரவஞ்சம், *வேத சாஸ்திர ஸ்மிருதி புராண கலைக் கியானங்களும், உச்சரிக்கத் தக்க வசிய மந்திரங்களும் ஆகியன.* Vedas, Smiruthis, Puranas, Kalaignam and Mantram and magic.

சொற்புள், *காக்கை,* crow as predicting events.

சொற்பேதி, *அஞ்சனபாஷாணம்,* a kind of poison.

சொற்றற்றடக்கு, *பேசும் பொழுது திக்குதல்,* falter in speaking, stammering.

சொற்றடு *மாற்றம், பேசும் பொழுது அர்த்தம் இல்லாமல் கண்டபடி உளறுதல்,* defect of the. power of expression marked by utterance of meaningless phrases — Gibberish aphasia.

சொற்றி, *பாற்சொற்றி,* a plant with milky juice — Ruellia sicunda.

சொற்றைப்பாக்கு, see *சொத்தைப்பாக்கு.*

சொற்னாகம், *கீரிப்பூடு,* mungoose plant — Ophiorrhiza mungos.

சொனகு, *பெரும்புல்,* a large species of grass; 2. *சோகைப்புல்,* a kind of straw plant — Medicago esculanta.

சொனாகம், see *உத்தமதாளி,* 2. *உத்தாமணி,* hedge cotton — Daemia extensa.

சொனாமுகம், see *சொனாகம்.*

சொனைப்புல், see *சோனைப்புல்.*

சொன்முதல், *மாயை,* Maya.

சொன்முந்திரி, *கண்ணாடியிலை,* suncleri tree, looking glass plant — Heritiera papilio; 2. *கண்டலங்காய்,* crab oil plant or white cedar — Carapa obovatta.

சொன்றி, *சொண்டி அல்லது சுக்கு,* dried ginger; 2. *சோறு,* cooked rice.

சொன்றிசோறு, *புளிக்க வைத்த சோறு,* fermented liguid rice sugarcane.

சொன்னசீரம், *கரும்பு,* sugarcane, 2.see *சொர்ணசீரம்.*

சொன்னபுட்பம், see *சொர்ணபேதி.*

சொன்னமயம், *பொன்னிறம்,* gold colour.

சொன்னமாக்கி, *பவளப்புற்று பாஷாணம்,* a kind of prepared arsenic.

சொன்னம், see சொர்ணம், 2.கால்வாய், channel.

சொன்னல், இரும்பு, iron; 2.சோளம், Indian corn — great millet — Sorgham vulgare; 3. ஓர் வகைப்புல், ceral grass.

சொன்னவரை, பொன்மலை, mountain containing goldore; 2.காய் தானியம், pulses.

சொன்னவை, சோளம், see சொன்னல்.

சொன்னா, பேரிலாமும், bile of cobra.

சொன்னி, வாசனை, smell, fragrance.

சோ

சோகசா அதிசாரம், விசாரத்தினால் உண்டான பேதி, diarrhoea born of grief.

சோகநிவர்த்தி, துன்பத்தினின்றும் விலகல், relief from affliction; 2.சப்தாவஸ்தையிலொன்று, அது சனன மரண துக்கம் தனக்கில்லை என்று தள்ளி நிற்றல், the sixth state of seven states of the soul, to stand aloof that he is free from births and deaths, See அவத்தை.

சோகநீக்கி, குறிஞ்சா, spring creeper, common delight of the woods — Hiptage mada blota.

சோகபித்தரோகம், இது தலை திருப்பல், உள்ளங் கைகால் எரிச்சல், உடம்பில் தடிப்பு, சைத்தியம் அசீரணம், வயிறுப்பிசம் தொடைகளில் வலி முதலிய குணங்களைக் காட்டும் ஓர் வகைப் பித்தநோய், this is a bilious disease characterised by burning sensation of hands and feet, indigestion, bloating of abdomen, pain in the thighs, etc.

சோகமாதிதம், கோங்கு, false tragacanth, golden silk cotton — Cochlospermum gossypium.

சோகம், ஒட்டகம், camel; 2. சோம்பல், drowsiness, langour; 3. சோர்வு, a state of extreme prostration and depression with failure of circulation — Collapse; 4. மூர்ச்சை swoon; 10 சித்தபிரமை, loss of consciousness; 5. கடுகு ரோகிணி, christmas rose —Helliborus niger; 6. அசோகம், asoka tree —Polythia longifolia; 7. தொடை, thigh; 8. மயக்கம், fainting; 9. உருண்டை, ball; 10. யோகாபியாசம் செய்கையில் பிரணவத்தை உச்சரித்தால் கிரமமாய் சுவாசம் அடங்கி தத்து வாதிகள் தன்வசப்பட்டு சலனமற்றிருக்கும் நிலை, (in yoga Philosphy) a course of meditation on the mystic syllable 'OM' in which the breath is controlled, several faculties are brought to subjection and calmness or tranguility of mind is established; 11. மரப் பட்டை, bark of a tree.

NOTE: This kind of meditation is not peculiar to yogis alone, for Sofees use a similar in vocation repeating some words monotonously some thousands of times and this practice is accompanied by the most brilliant visions. It is uttered by yogis without effort in inhalation for identifying with the soul. This is described in the Tantric science of the Dravidians. It is roused by Siddhars by special forms of meditation and other practices for purposes of Spiritual as wakening the highest spiritual illumination.

சோகம்தெளிதல், மூர்ச்சை நீங்கித் தெளிவடைதல், recovering from swoon or fainting.

சோகம்பாவனை, தனக்கு இன்னல்கள் பல இருப்பதாக எண்ணி சதா வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் தன்மை, melancholia which is popularly known as vapours because the person fancies himself the subject of various bodily ills

and does not believe if told there is nothing wrong in him. இதைத் தான் சோகம் என்றும், மந்திரம் என்றும் அல்லது அசபை என்றும் சொல்வது. இதற்கு 'அவன் தான் நான்' என்பது பொருள். This is called otherwise as 'Ajabai' mantram (described in Upanishads) which means 'He is self'.

சோகம்பாவனை, சிவான்மா பரமான்மாவோடு கலத்தல், the union of the individual soul.

சோகம்பாவித்தல், தன்னை பரமாத்துமா அல்லது சிவனே யெனக் கருதித் தியானித்தல் meditating on the assumption of his being one with the Supreme being.

சோகம்போடுதல், மயங்கிச் சோர்வடைதல், fainting as in collapse.

சோகல், பாலை, iron wood tree — Mimusops hexandrus.

சோகநிவிருத்தி, see சோக நிவர்த்தி.

சோகனாதிப்பூடு, காட்டாமணக்கு, common physic nut.

சோகாக்கனகம், பிள்ளைத்தாய்ச்சிச் செடி, any plant in which the legumes contain large and projecting seeds.

சோகாக்கினி, மிகுந்த வருத்தத் தாலேற்படும் சூடு, heats due to extreme, worry and anxiety.

சோகாத்தல், களைத்தல், fainting; 2.துக்கப்படல், mourning; 3. துன்புறல், being troubled in mind.

சோகாப்பு, துன்புறல், suffering; 2. துன்பம், sorrow.

சோரகாரம், குங்குமச் செவ்வந்தி, cirmson coloured chamomile flower.

சோகாரி, கடம்பு, common Indian oak — Barringtonia racemosa.

சோகி, பலகறை, coury — Cypraea moneta; விஷவைத்தியன், physician curing poisonous bites and poisons; 3. மூர்ச்சை யடைந்தவன், one who had swooned; 4. பாம்புப்பிடாரன், snake catcher, பாம்பாட்டி, snake charmer; 5. பாம்பு, நாய், முதலிய பிராணிகளின் விஷக்கடிகளைத் தீர்ப்போன், a class of persons known as Jogees practising medicine (anec-dotes) for snake or other doisons bites. 6. சித்தி பெற்றோன், siddhars who attained super natural powers; 7.சன்னியாசி, a religious mendicant in general; 8. யோகி, one who practices yoga.

NOTE: Jogis are a class of wandering mendicants of Telugu community practising jugglery, leger demain etc. and some of whom are even snake charmers and pretenders to charms and medicine. They are actually beggars running about to eke out their livelihood in false pretences. Some of these are also ranked as criminals.

சோகிகா, மகிழம் பூ, west Indian medlar — Mimusops elengi.

சோகிக்கீரை, பெருஞ்சீரகச் செடி, sowa vegetable, sweet fennel — Foeniculum vulgare, 2. சதகுப்பிச் செடி, common dill seed plant, hogs fennel —Anethum graveolens. The leaves are eaten like vegetable greens. இதனால் சூதக சிக்கல்போம், It removes amenorrhoea c.f. தொயிலிக்கீரை.

சோகித்தலம், காற்சிகைப்பூடு, an unknown plant.

சோகித்தல், துக்கப்படுதல், being grieved at; 2. மயங்குதல், fainting swooning.

சோகிரசமாத்திரை, கோடாசலக் குளிகை, இது கஞ்சாவைக் கொண்டு செய்யும் ஓர் மாத்திரை, a medical pill in which ganjah forms the chief

ingredient; 2. நேர்வாளக் குளிகை, croton seed pill.

சோகிவித்து, see சதகுப்பை.

சோகினை, see சோகு.

சோகு, பிசாசம், devil, goblin; 2. சுடுகாட்டுப் பேய், vampire.

சோகுவாகு, வாலுழுவையரிசி, seeds of spindle tree —Celastrus paniculata.

சோகை, அப்பிராணி, impotent person; 2.காமாலை, jaundice.

சோகை, உடம்பில் இரத்தம் இல்லாமை, அல்லது இரத்தக் குறைவினால் பலங் குறைந்து உடம்பு வெளுத்து வீங்கும் ஓர் நிலைமை. இந்நோய் சாதாரணமாய் உடம்பின் இரத்தோட்டம் தடைபடுதலினாலும், உணவுப் போஷணைக் குறைவினாலும் களைப்படைந்து சோர்வடையும்படி மிகுதியாக உண்டாகும் இரத்தப் போக்கினாலும் அல்லது இரத்தத்தின் குணம் பேதித்து சத்து குறைந்து கேடுறுதலினாலும் உண்டாகும். இதனால் இரத்தம் வறண்டு உடம்பு வெளுத்து முகம் வீங்கி மார்பெலும்பும் விலாவெலும்பும் புடைத்து சீரண சக்தி குறைந்து கைகால் ஓய்ச்சலுண்டாகித் துன்புறுத்தும். இதற்கு வெள்ளரி விதையும், பொட்டிலுப்பும் சேர்த்து அரைத்து உப்புப்புளி நீக்கிக் கொள்ளக் குணமாகும். அயமருந்துகளும் வில்வாதி லேகியமும் சிறந்தது. an incipient jaundice, a morbid condition of body involving either bloodlessness or diminution in the total volume of blood — Anaemia. It is marked by paleness of the skin, bloating of face, loss of energy, swelling of the body, projection of chest, and rib bones, decrease in digestive function weakness of the limbs etc. The defiency of blood may be due to eithermechanical intetference with the blood circulation in the affected part or to an insufficient food supply or imperfect nutition and exessive drain or blood waste or from repeated hemorrhages and exhausting discharges. It is also associated with the alternation in the quality of blood. Which is indicated by a diminished concentration of red cells or haemoglobins in the blood. The disease is cured by taking well ground cucumber seed mixed with nitre and keeping diet free from salt. Iron preparations and bael electivary have also salutary effects.

NOTE: It is an incipient jaundice with paleness and puffy face, Deficiency in the quantity of blood is known as oligemia, while the deficiency in quality consisting in diminution of the amount of hemoglobin is called oligochromemia and that consisting in diminution of the number of red blood carpuscles oligocythemia. Anemia it marked by the paleness of the skin and mucous membranes, loss of energy, palpitation of the heart, systolic murmurs and other general symptoms. Chlorosis is also a variety of anemia due to want of to red carpuscles in the blood.

(a) தமிழ் வைத்தியப்படி இது பலவகைப்படும். அவையாவன, according to Tamil medicine there are several varieties, they are:—

1. வாதசோகை, anaemia and swelling due to vitiation of wind humour.
2. பித்தசோகை, anaemia and swelling due to vititation of bile humour.
3. சிலேட்டுமசோகை, anaemia and swelling due to vitiation of phlegm humour.
4. இரத்தசோகை, one due to degenerative changes in the circulation of blood — Aplastic anemia.

5. கபாலச் சோகை, anemia due to deficient blood supply to the brain — Cerebral anemia.

6.விஷச்சோகை, anemia due to toxic poisons in the blood —Toxic anemia

7.பாண்டுச்சோகை, anemia attended with fever, dropsical swelling — Acute anemia dropsy.

8.காமாலைச்சோகை, anemia attended with or as a result of jaundice.

9.எலும்புருக்கிச் சோகை, anemia due to atrophy of the bone marrow.

10.கணச்சோகை, anemia of children due to diminution of blood without any discoverable cause — Anaemia infontum.

11.விரணச்சோகை அல்லது அவிகாத சோகை, anemia due to loss blood from injury or wound — Traumatic anemia.

12.ஈரற்சோகை, anemia due to disease of the liver — Hepatic lukemia.

13.சர்வாங்க சோகை அல்லது நிசசோகை, anemia affecting the whole of the blood and entire organism General anemia.

14.தீராச்சோகை, chronic anemia generally fatal — pernicious anemia.

15.சூதகச் சோகை, anemia due to menstrual disorders such as menorrhagia hysteria and other nervous disturbances —Chlorosis.

NOTE: If in chlorosis bile is excited and the blood and flesh are vitiated, it leads to Anemia. In this, a portion of the bilious secretions from the liver instead of finding its way to the intestine

become mixed with blood in circulation. Anemia is produced. In anemia the eyes become pale and eye lids bloodless. The skin, face, nails and in fact the whole body gets a peculiarly pale and lifeless appearance. The bowels are irregular, and the urine high coloured and scanty, nausea, burning sensation, indigestion, weakness, anorexia and langour are also present. When the Anemia becomes chronic. It is called malignat anemia —கும்பகாமாலை in which case the chances of recovery is too remote.

சோகைப்பாண்டு, இரத்தமில்லாமையால் ஏற்படும் பாண்டு ரோகம், dropsy due to anemic condition of the body — Anemic dropsy.

சோகைப்பாண்டுநாசினி, நறுந்தாளி, இவ்வியாதியைப் போக்குவதாலிப் பெயர். binweed —convolvulus genus. It is so called from its virtue of curing anemic dropsy.

சோகை, மூஞ்சி, ஊதின முகம், swoolen face. 2.நீர்க் கோர்வையினால் வீங்கிக் காணும் முகம், face grown turgid or swollen up as with water — Bloated face.

சோகையன், சோகை பிடித்தவன், one attacked with anemia; 2 மெலிந்தவன், a weak person; 3. ஆண்மையற்றவன், impotent man; 4. காமாலை கொண்டவன், one affected with jaundice.

சோகைவீக்கம், சோகையினாற் காணும் வீக்கம், swelling through anemia; 2. விஷப்பாண்டு வீக்கம், dropsical swelling.

சோங்கண், ஓரக்கண் அல்லது மாறுகண், squaint eye, strabismus.

சோங்கம், அகில் மரம், the fine sandal tree agilwood tree; 2. கிச்சிலிக் கிழங்கு, orange root, camphor zedoary. Hedychium

spicutum; 3. சிங்குருபல்லி, a kind of plant; 4. தில்லை மரம், blinding tree.

சோங்கல், மறந்துவிடல், forget fullness.

சோங்கு, கோங்கிலவு, false tragacanth, golden silk cotton — Cochlospermum gossypium, 2. நாரை, heron.

சோங்குதல், தன்னைமறத்தல், forgetting oneself.

சோங்குவெட்டு, சரிவான வெட்டு, an oblique cut, slanting cut.

சோங்குவை, பின்தொடரி, a magic plant (unidentified) so called from its virtue of making any woman follow one and subject to one's wishes by allwring her; 2. தொடரிப்பூடு, prickly buck thorn — Scutia indica.

சோசகம், மரப்பட்டை, bark of a tree.

சோசக்காய், தேங்காய், cocoanut.

சோசம், தென்னை, cocoanut tree.

சோசனம், வெள்ளை வெங்காயம், white onion 2. உள்ளி, garlic.

சோசாங்கினி, துளசி, sacred basil — Ocimum sanctum.

சோசிச்சாரம், இது ஓர் வகை சாம்பலுப்பு, இதற்கு இந்துஸ்தானி பாஷையில் சஜ்ஜிகார் என்று பெயர் இது யவா கோதுமையின் வைக்கோலை எரித்துச் சாம்பலாக்கி அதினின்று எடுத்தவுப்பு. இதைத் தாம்பூர பற்பம் செய்வதில் உபயோகிப் பார்கள். சச்சிக் காரம், the chaff (straw) of yava wheat is burnt to ashes, and this salt is extracted. It is called sajjikaram.

சோசித்தல், வற்றுதல், காய்தல், drying up, 2. சோர்வடைதல், fatiuing, exhausting; 3. துக்கப்படுதல், to grieve, sorrow.

சோச்சி, சோறு, cooked rice.

சோச்சிபாச்சி, சோறும் பாலும், அதாவது பாற்சோறு, cooked rice soaked in milk.

சோடசகலை, மனிதவுடம்பில் பராசக்தி பரிணமித்திருக்கும் 16 யோக நிலைகள், (in Agama philosophy) the sixteen mystic centres in the human body in which the Goddess Sakthi (universal energy) manifests herself.

சோடசத்தொன்று, மாகாணி, வீசம், பதினாறிலொன்று, (1/16 part)one sixteenth part.

சோடசம், பதினாறு, sixteen; 2. மரப்பட்டை, bark of a tree; 3. நார், fibre.

சோடசவாண்டுமூலி, பசியெடுக்காதிருக்க வேண்டி, சித்தர்கள் பதினாறு வருஷத்திற்கொருமுறை கொள்ளும் மூலிகை, a rare drug used by Siddhars to keep them off from hunger and thirst they ate this drug once in sixteen years.

NOTE: This will enable the Siddhars to continue their yoga uniterruptedly without being disturbed by hunger and thirst

சோடணம், சோஷணம், அதாவது உலருதல், drying; 2.உமிந்து குடித்தல், நாவினால் சாரம் வாங்கிக் குடித்தல், to sip.

சோடணி, வற்றச் செய்யக் கூடியது, anything which absorps — Absorbent.

சோடத்திராவம், ஓர் வகை உப்புத் திராவம், soda flux.

சோடம், காமவிகாரச்சூடு, abnormal heat arising from love sickness.

சோடா, சோடாவுப்பு, மண் காரம், soda, bicarbonate of soda; 2.சோடாபானம், soda water.

சோடாபொட்டிலுப்பு, சோடா வெடியுப்பு, chilian salt petrenitrate of soda.

சோடாப்புல், ஓர் வகை நீர்ப்புல், a grass growing in water —Panicum paludosum.

சோடாவுப்பு, மண்காரம், பூநீர் விளையும் நிலத்திலிருந்து உவர்மண் காரமெடுத்து அதைச் சுத்தி செய்தவுப்பு, அன்றியும் கடற்கரையிலுள்ள பூண்டுகளைக் கொளுத்தி அச்சாம்பலினின்றும் இரசாயன வழியாகப் பிரித்தும் எடுப்பதுண்டு. இது பெரும் பான்மை ஐரோப்பிய தேசத்தினின்று இறக்குமதியாகிறது. இது ஓர் வைப்புச் சரக்கு, வைத்தியத்திற்கும் இன்னும் பல காரியங்களுக்கும் உபயோகப்படுத்துவதால் நன்றாக வியாபாரமாகிறது. இது வெள்ளைக் கட்டியாயும் தூளாயும் கிடைக்கும். உவர்ப்பாயிருக்கும். இதை சாதாரணமாய்த் தண்ணீரிற் கரைத்து அசிரணத்திற்குக் கொடுக்கலாம். நெருப்புப் பற்றிய காயங்களுக்கும் தீச்சுட்ட புண்களுக்கும் இது உதவும். சோடாக் கட்டியைத் தண்ணீரில் நனைத்து நெருப்புப் பட்டவிடத்தில் தேய்க்க வலி குணமாகும். சீழ் கொள்ளாது. இது மூத்திரத்தை வடிக்கும். கட்டிகளைக் கரைக்கும், இதை வயிற்றுப் புளிப்பு, மூத்திர நோய், கீல் வாயு இவைகளுக்குக் கொடுக்கலாம். சொறி சிரங்கு புண் முதலிய தோலைப் பற்றிய நோய்களுக்கு இதை உபயோகிப்பதால் குணமுண்டு எனக் கருதப்படும். இதைத் தண்ணீரில் கலந்து குளிப்பதற்கும் புண்களைக் கழுவுவதற்கும் எண்ணெயோடு கூட்டி பூசி மருந்தாகவும் உபயோகப் படுத்தலாம். bicarbonate of soda. It is a carbonate of soda mixed with various impurities and is obtained from pooneer i.e. Dhoby's earth. It is also derived from the ashes of marine plants or produced by chemical decomposition of sulphate of soda and is largely imported to India from Europe.

It is a prepared salt and commands a large sale in commerse being useful in medicine and for various other purposes. It is procured in lumps and powder form and is alkaline in taste. Mixed with water, it is given for indigestion. It is a useful remedy in burns for a lump dipped in water and rubbed on the affected part affords a great relief, prevents suppuration. It is a diuretic and reduces swelling. It is used in medicine for neutralising the acidity of the stomach. It is a remedy of great value in rumbling noise of the stomach, cardialgia, indigestion or loss of appetite, flatulence, urinary diseases rheumatism etc. In some chronic skin diseases, especially those of a papular and scaly it has been employed successfully both internally and externally in the form of baths, lotions and ointments. c.f *சாச்சிகாசாரம்.*

NOTE: 1. Poongauram *(பூங்காரம்)* is found in the bazaar in regular whitish cakes about 1/3 inch thick and has smell like new burnt quick lime. When purified, it is employed by vaidyans as an acid alternative. It is substituted for British bicarbonate of soda. In India it was formerly and even now is used in preparing the lac dye, in the process of glass making, soap making and also in the process of dyeing.

NOTE-2 Bicarbonate of soda (Na Hco3) is prepared by passing a stream of carbonic acid gas through a mixture of one part of sodium carbonate and 1 1/2 parts of dried carbonate of soda to saturation. It is an anti acid and alternative. In lithiasis, albuminurea and in purpura hemorrhagica it has been found highly useful. Effervescing solution of soda prepared from this is a well known anti alkaline and refrigerant. It is not to be confounded with ordinary soda

water, which is nothing but a solution of carbonic acid in water.

NOTE-3 Carbonate of soda is a different salt from which bicarbonate is prepared. Considered quantities of impure carbonate of soda are prepared in India by the incineration of plants — Salicornia indica, S.brachiata, Suaeda nudiflora and probably of other allied species. Sea weeds especially of the species Gracilaria and Laminaria yield soda and iodine on incineration. It is not to be confounded with soda mineral product *(பூநீறு)* obtained from the soil which also contains 40 to 50% of carbonate of soda, from Dhoby's earth *(உவர்மண்)* also soda is prepared.

சோடி, *உசிலம் பொடி, அல்லது சீக்கிராந்தூள்*, powder of the dried leaves of black sirissa; 2. *புங்கங்கொட்டை பொடி*, soap nut powder; 3. *இரட்டை*, double.

சோடித்தல், *வற்றுதல்*, drying up.

சோடிசேர்த்தல், *புணரவிடுதல்*, match making for intercourse.

சோடு, *இரண்டு*, two; 2. *கவசம்*, cover; 3. *துணை*, mate, birds.

சோடுகட்டுதல், see *சோடிசேர்த்தல்*.

சோடுசெய்தல், *மருந்து தெரியாதபடி மூடி மறைத்தல்*, covering the medicine before calcining; 2. *சீலை மண் செய்தல்*, luting the lid and the container of medicine before calcination to render it air tight.

சோடுபறிபூண்டு, *பேய்ப்புடலை*, devil's gourd, wild snake gourd — Trichosanthus laciniosa.

சோடுபிரிவு, *ஆணும் பெண்ணும் பிரிதல்*, separation of the couple as that of birds, 2. *புருடனும் பெண் சாதியும் ஒன்று சேர்ந்து வாழாமற் செய்யுமோர் மந்திரம்*, in occult science, a charm used in Magic for separation of wife and husband.

சோடை, *காய்த்து ஓய்ந்த மரம்*, tree which has stopped yielding fruit; 2. *வாழை மரத்து நோய்*, a blight attacking plaintain tree; 3. *சோர்வு*, faligue; 4. *வறட்சி* drought, dryness, 5. *ஓர் நோய்*, a disease.

சோடைபற்றல், *பயிர் பூண்டு, செடி, மரம் முதலியவைகள் நோய் கண்டு அல்லது செழிப்பு ஒடுங்கி பலனற்றுப் போகுதல்*, crops, plants, shrubs, trees etc. resulting in stunted growth and fruitlessness as by scorch or blast due to climatic changes.

சோடைபற்றுதல், *பலன் கொடாது போதல்*, becoming unfruitful, becoming stunted in growth.

சோடையன், *பலவீனன்*, weak person; 2. *நோயாளி*, sickly person.

சோஷணம், *உலருதல்*, drying; 2. *முருங்கை*, drumstick tree.

சோஷணி, *வற்றும்படி செய்யக் கூடியது*, absorbent; 2. *விரக தாபம்*, intense heat of the body from love sickness.

சோஷம், *விரகதாபத்தால் உடம்பி லுண்டாகும் கொதிப்பு*, abnormal heat experienced in the system due to love sickness.

சோஷயம், see *அட்டிமதுகம்*.

சோஷரம், *பெருவேம்பு*, a large variety of margosa tree — Melia composita.

சோஷணாசினி, *மகாமேதை*, an unidentified plant.

சோஷித்தல், *உலர்தல்*, causing to dry; 2. *உறிஞ்சிக் கொள்ளுதல்*, to absorb.

சோஷித்துப்போதல், *உலர்ந்து வாடிப் போதல்*, tofade and dry.

சோஷியம், உறிஞ்சி விழுங்கும் படியான மருந்து, medicine to be sucked in.

சோஷை, வறட்சி, dryness.

சோஷைசுரம், உடம்பில் கொதிப்புக் கண்டு வறட்சி யினால் ஏற்படும் சுரம். இதனால் மூர்ச்சை, பிரலாபம், கண் புகைச்சல், நீர் வடிதல், தேகம் சில்லிடல், வயிற்றுப் புசம், வலி, அடிக்கடி மூத்திரம், மயிர் சிலிர்ப்பு, அக்கினி மந்தம், படுக்கை பொருந்தாமை, வாந்தி, நாவுலரல், இக்குணங்களை உடையது, fever arising from dryness due to abnormal heat of the body. Loss of apetite, bloating of abdomen, vomitting, dryness of the tongue, pain. frequent micturition.fainting, chillness of the body are the few symptoms of the disease.

சோனகசுரம், உடம்பில் சிவந்த குருக்கள் எழும்பிய சுரம். இது மகமதிய தேசமாகிய பாபிலோன், அரபி, கிரீஸ் முதலான விடங்களில் பரவி வந்த ஓர் வகைத் தொத்து சுரம். a kind of fever prevalent in Jonaca (Mahamadan) countries of Babylon, Arabia, Graece etc. It is contagious disease with rash — Scarlatina.

சோணகத்திருக்கை, முதுகில் முள் வாய்ந்த ஓர் வகைத் கடல் திருக்கை மீன், a species of thom back sea fish, known as English ray — Trygon warnak.

சோணகம், see சோனகம்.

சோணகவம், see சோணகசுரம்.

சோணகவாளை, see சோனக வாளை.

சோணகாரி, மருந்துப்பட்ட இடத்தை சிவப்பாக்கி எரிச்சலையுண்டாகு மருந்து. rubefacient.

சோணங்கி, ஓர் வகைப் பெரிய ஜாதி வேட்டை நாய், a breed of hunting dog large and tall hound of superior breed. 2. இளைத்த மனிதர், a lean person.

சோணதி, உடம்பில் பட்ட விடத்தில் கொப்பளிக்காமல் சிவக்க மாத்திரம் செய்யும் கடுகைப் போன்ற குண முடைய ஓர் வஸ்து, a substance as mustard producing redness of the skin not followed by a blister —Rubifscient.

சோணப்பூடு, செம்பருத்தி, red cotton — Gossypium arboreum.

சோணம், இரத்தம், blood; 2. சிவப்பு, redness, 3. கடல், sea; 4. பொன், gold; 5. செங்கரும்பு, a red variety of Sugarcane; 6. செந்தூரம், red powder, red oxides; 7. நெருப்பு, fire.

சோணாகம், பெருவாகை, forest sirisa — Mimosa flexuosa.

சோணாசலக்கம்பு, ஓர் வகைக் கம்பு, a kind of bull rush millet or spiked millet.

சோணி, இரத்தம், blood; 2. பலகறை, cowry.

சோணிதக்கட்டு, சூதக்கட்டு, absence of or abnormal stoppage of menses — Amenorrhoea.

சோணிதக்கணிகை, இரத்தாணுக்கள் red corpuscles of the blood, see செங்குறுகடம்.

சோணிததோஷம், see சோணிதபேதம்.

சோணிதத்தாபனவருக்கம், இரத்தப் பெருக்கைடக்கும் பொருள்கள், 2. தேன், honey; 3. அதிமதுரம், liquorice; 4. சர்க்கரை, sugar; 5. இலவம்பிசினி, gum of capok tree.

சோணிதநெரிசல், கண்நடுவில் கருவிழியில் செம்படலம்

படர்ந்து கண்ணை உறுத்தும் ஓர் நோய், a disease of the eye marked by red films, due to pressure resulting from the swelling of the eye ball —Conjunctivitis.

சோணிதபித்தம், இரத்த பித்தம், bleeding from the vessels —Hemarrhage.

சோணிதபேதம், மாதவிடாய் ஒழுக்கின் பலவிதம், menstrual disorders.

சோணிதப்பெருக்கு, அளவுக்குமிஞ்சி சூதகம் வெளிப்படல், abnormally profuse menstruation —Menorrhagia.

சோணிதம், பெண்களின் தாது, இதுவே நாரிசுக்கிலம், unfertilised ovum — Semen muliebre, it is opposed to சுக்கிலம் the malesemen 2. மாதவிடாய் இரத்தம், a misnomies of menstrual blood; 3. சிவப்பு, red; 4. மஞ்சள் நிறம், yellow colour; 5. மஞ்சள், turmeric; 6. இந்திர கோபப்பூச்சி, scarlet moth, Murella occidentalis; 7. சோணித ரோகம், menstrual disease.

சோணிதவாதம், உதிரவாதரோகம், நரம்பின் துவாரங்களில் ஓடப்பட்ட இரத்தம் தடைபடுவதால் இந்நோய் ஏற்பட்டு, கை கால் கீல்கள் அல்லது மற்றக் கீல்களில் தங்கி கண்டு கண்டாகக் கட்டிக் கொண்டு வெகு துன்பத்தை விளைவிக்குமோர் வாத நோய், articular rheumatism due to obstruction in the circulation of blood. It is marked by swelling of the joints especially of the limbs with the formation of nodules — Nodular rheumatism. 2. சூலைப்பிடிப்பு acute artheritis associated with gout 3. பெண் போகத்தினால் ஆண் பிள்ளைகளுக்கு காணும் கை கால் பிடிப்பு, acute artheritis from veneral causes.

சோணிதவாயு, see சூதகவாயு.

சோணிதாட்சசி, குந்துருக்கம், white dammer — Valeria indica.

சோணிதாரசம், இரத்த சம்பந்தத்தினால் இரத்தப் பைக்குள் மிருதுவான சிவந்த முளைகளை எழுப்புமோர் கண்ணோய், a disease of the eye lids marke by some soft growths on the inner side.

சோணிதார்மம், வெள்விழியில் சிவப்பு சவ்வு வளர்ந்து உண்டாகும் சதை வளர்த்தி, some red growth on the white of the eye.

சோணிதார்வுதம், (சோணித + அர்வுதம்) இரத்தக்கழலை, blood tumour see இரத்தார்வுதம், 2. ஆண் குறியில் கருநிலமான கொப்புளங்களை எழுப்பி இரணமாயிருக்கும் பாகங்களில் மிக்கவலியையும் குத்தலையும் உண்டாக்கும் ஓர் நோய், இது பெண் போகத்தினாலுண்டாகும். a venereal disease in which the penis is marked by the eruption of black and red vesicles with an excruciating pain in the ulcerated parts.

சோணிதாற்புதகிரந்தி, இரத்த வோட்டம் தடை படுவதால் பலவிடங்களில் தேக்கப்பட்டு அவ்விடங்களிற் காணும் கட்டி, இதின் மேல் சிறு சிறு கொப்புளங்கள் பல்லி முட்டைகள் போற் காணப் படும். உடைந்தால் இதினின்று கெட்ட இரத்தமே ஒழுகும். on account of obstruction in the circulation of blood small bloody vesicles are formed in these places When they open, blood oozes out.

சோணிதாற்புதம், புற்று நோய், sarcoma.

சோணை, காதினருகு அதாவது காதின் அடித்தண்டு. the lower soft part of the ear; 2. காது மடல், lobe of the ear.

சோணைக்காது, அடிபெருத்த காது,large lobed ear.

சோதகம், சுத்தி பண்ணல், cleansing, deterging.
2. களைதல், purging away foul or offending matter from.
3. சோதித்தல் investigation.
4. வருஷமுதன் மழை, the first rain in the season of the year.
5. காடிநீர், vinegar, any fermented liquid.
6. black deodar.

சோதகரவருக்கம், விக்கங்களை கரைக்கும் பொருள்கள், Resolvents, கண்டங்கத்திரி solanum xanthocarpum. பப்பர முள்ளி — Solanum Indicum, சாலபரணி - Hedysarum gengeticum, நெருஞ்சில் -Tribulus terrestris வில்லம் - Aegle marmelous, முன்னை -Premna integrifolia.

சோதக்கினி, வீக்கத்தை வடிக்கு மூலிகை, a plant Trianthema obcordata, Its root is used for dispressing morbid swellings. 2. கட்டிகளைக் கரைக்கும் மருந்து, a medicined appli-cation which disperses a tumour or morbid swellings Discutient.

சோதநீசம், பேய்க்குமட்டி, bitter apple — citrullus colocynthis.

சோதம், சுத்தமான நீர், clean or pure water; 2. வாலையி லிறக்கிய நீர், distilled water; 3. வீக்கம், swelling.

சோதரிமாதறம்,கன்னல் சர்க்கரை, sugar prepared from the juice of sugarcane.

சோதளங்காய்சமுத்திராப்பழம், Indian oak- Barringtonia speciosa.

சோதன கஷாயம், சுத்தஞ் செய்ய உபயோ கிக்கும் குடிநீர், disinfecting decocton.

சோதனகிருதம், சுத்தப்படுத்த பயன்படும் மருந்து நெய், disinfecting ghee.

சோதன தைலம், சுத்தி செய்ய உபயோகிக்கும் மருந்து, எண்ணெய், disinfecting oil.

சோதனத்திரவியம், சுத்தி செய் வதற்காக உபயோகிக்கும் ஆமணக்கெண்ணெய், அத்திப் பால், ஆலம்பால் முதலியன, drugs used to remove the impurities from the body e.g. castor oil, milky juice of fig. milky juice of banian.

சோதனப்பிரலேபனம், சுத்தி செய்யும் களிம்பு, disinfecting ointment.

சோதனம், சுத்தி செய்தல், refining metals.
2. சோதித்தல், examining, investigating,
3. மலங்கழியச் செய்தல், giving enema.
4. பேதிக்குக் கொடுத்தல், giving purgative to cause evacation of bowels.
5. துரிசி, blue vitroil, copper sulphate or copper acetate.
6. புடமிடல், subjecting materials to fire for purposes of purification.
7. வாந்தி அல்லது பேதியாகும் படி மருந்துக் கொடுத்து உடம்பினுள் அடங்கி நிற்கும் மலங்களைக் களைந்து சுத்தப்படுத்துதல், cleaning the body with purgatives and emetics so as to eliminate foul or offensive mater from the system.
8. உலோகங்களின் தரத்தைச் சோதித்தல், examining the purity of metals- assaying.
9. நாணயம் முதலியவைகளில் பொன், வெள்ளி எவ்வளவு இருக்கிறதென்று பரீட்சித்தல், determining the quanity of gold or silver in a coin or buillion.
10. பொன் மாற்றறிதல், assaying gold as regards its purity or fineness.

சோதனவர்த்தி, துணியை திரித்து மருந்தில் நனைத்து இரணத்தின் உட்புறத்தைச் சுத்திப்படுத்த வேண்டிய இடத்திற்குள் நுழைக்கும் ஓர் வர்த்தி, a lint soaked or saturated with medicine and inserted into an ulcer or sinus for the purification of interior-Aseptic plug.

சோதனை, புடமிடுகை, calcination of metals or other medicines. 2. சோதித்தல், examination, testing. 3. ஆராய்ச்சி, investigation. 4. உலோகத்தின் உயர்வைச் சோதித்தல், see சோதனம். 5. நூல் வழியாய் சோதித்தல், scientific examination. 6. நோய்களைச் சோதித்தல், diagnosing the disease of any kind.

NOTE:— One who does not enter the very inner most part of a patient in order to arrive at a correct diagonsis can never treat the diseases properly.

சோதனை கனம், நோய்களைச் சோதிக்கும் வகையில் உபயோகப் படுவதாக ஆயுள் வேதத்திற் கூறியுள்ள பொருள்கள், drugs used for investigation of diseases.

சோதனை கொடுத்தல், நோயாளிகள் தம்மை சோதிக்க வேண்டி வைத்தியனிடத்தில் காண்பித்தல், submitting oneself as a patient for diagnosis.

சோதனைக்கம்பி, பொன் மாற்றுகளை அறிவதற்காக கம்பிகள் அல்லது ஆணிகள், a bunch of touch nails for finding out the different standards in the fineness of gold, as carats, see ஆணிக்கோர்வை, 2. see சோதனையூசி.

சோதனைக்கருவி, சோதிப்பதற்கு உபயோகப்படும் ஆயுதங்கள், articles or instruments used while examining such as probe, specula, catheter, stethescope etc.

சோதனைக்கல், உரைகல், touch stone.

சோதனைக்காரன், சோதிப்போன், one who examines or investigates into anything-Testor or examiner.

சோதனைக்குரு, see சோதனையுப்பு.

சோதனைக்குழல், மருந்தை சோதிக்க வேண்டி உபயோகிக்கும் ஓர் கண்ணாடிக் குழாய். இது ஒரு பக்கம் அடைத்து உள்ளது. a test tube for testing medicine or other chemicals.

சோதனைக்கோல், இரண வைத்தியன் புண் புரை முதலியவைகளின் ஆழத்தைச் சோதிக்க வேண்டி உபயோகிக்கும் வெள்ளி அல்லது செம்பினாற் செய்தக் குத்தூசி. surgeons instrument or needls or thin rod made of silver or copper usually for examining the depth of sinus-probe; 2. மாத்திரைக்கோல், measuring rod; 3. மாற்றுச் சோதிக்கும் ஆணி, gold wire or rod used for testing gold.

சோதனை செய்தல், பரீட்சித்தல், examination. 2.நாடி, மலம், மூத்திரம் முதலியவைகளைச் சோதித்தல், examination of pulse, feaces, urine, sputum etc., for prposes of diagnosing the disease.

சோதனைச்சாலை, தொழில் வகைகளிலும் வைத்திய முறையிலும் உபயோகிக்கப் படும் மருந்துகளை சோதிக்குமிடம், a building set a part for examining or testing medicine and other chemicals used in arts and industries.

சோதனைத்திரி, கருவையழிக்க உபயோகிக்கும் காரத்திரி, corrosive lint used or inserted into the vegina of females for aborting the child or foetus in the womb.

சோதனை நூல், மருந்துகளின் சோதனையைப் பற்றிக் கூறும் நூல், experimental science.

சோதனை பண்ணுதல், பெண்ணின் கற்பைச் சோதித்தல், testing the virginity of a woman. 2. கருப்பத்தைச் சோதித்தல், determining the pregnancy of woman, 3. கடவுள் ஒருவன் மனத்தைச் சோதித்தல், testing of men by God as regards his integrity or mental state in adversity.

சோதனை பார்த்தல், see, சோதனை பண்ணுதல்.

சோதனைமை, பூமிக்குள் இருக்கும், நிதிகளைச் சோதிக்க வேண்டி உபயோகிக்கும் சாலமை, a magic paint used as a collyrium for the eyes for ascertaining the hidden treasures 2. வசியமை, a magic paint used for fascinating or captivating woman for illegal inter course.

சோதனையுப்பு, வாதமுறையில் இழிந்த உலோகங்களைப் பொன்னாக மாற்றும் வகையைச் சோதிக்க உபயோகிக்கும் குரு மருந்து, quintessence salt used in Alchemy for testing the transmution of metals into gold.

சோதி, கருப்பூரம், camphor; 2. சாதிலிங்கம், virmilion; 3. சூரியன், sun; 4. ஒளி, effulgence or divine light; 5. பூநாகம், earth worm; 6. கற்றாழை, aloes; 7. பரிசோதித்தல், examining 8. பரீட்சை பார்த்தல், testin, experimenting; 9. சுத்தம் செய்தல், cleaning; 10. கர்ப்பூரவொளி, the light of lit camphor; 11. சத்தியுப்பு, an alkaline salt; 12. பிரகாசம், splendour; 13. வெளிச்சம், light, one of the five gross elements; 14. விளக்கம், mentai illumination; 15. தேவர், யோகி முதலியோரிடமிருந்து வீசும் ஒளி, divine halo or effluvium emanating from the ethereal person of a god, a holy saint (yogi) and such other highly bright; 16. இரவெரிமரம், see சோதி விருட்சம்; 17. முத்துச்சிப்பி, pearle oyster.

சோதிக, பிரகாசம், brilliancy.

சோதிகம், வாலுளுவை, spindle tree- Celastrus paniculata.

சோதிகலை, சந்திரகலை, the vital air passing through the left nostril.

சோதிகவாரி, புளி நறளை, fox grape- Vitis cornosa.

சோதிகாந்தம், சித்திரமூலம், Ceylon, leadwort -Plumbagorosea.

சோதிகாவிரணம், see சோதியில் விரணம்.

சோதிக்குண்மணி, முத்து, pearl.

சோதிக்குருடு, யோகநிலை அல்லது தியானத்திற் காணும் சோதியினால் அந்தச்சமயம் ஏற்படும் குருட்டுத்தனம், temporary blindness due to the seeing of Astrual light.

சோதிசாஸ்திரம், வானநூல், astronomy. 2.சோதிட நூல், astrology.

சோதிட சாஸ்திரம், சோதிட நூல், astrology.

சோதிட பீடிதம், சோதிட நூல் பிரகாரம் ஒருவனை நோய் வந்தணுகுதல், சாதாரணமாக ஒருவனுக்குப் பிறக்கும் போது சனிமத்தியில் கேது இருந்தால் அவனுக்கு வாதபித்த ரோகம் சம்பவிக்கும்.

2. சந்திரன் செவ்வாயுடன் கலந்தால் அவனுக்கு இரத்த

பித்தம், சுரம், அக்கினி மாந்தம் சம்பவிக்கும். 3, 6-வது வீட்டில் சந்திரன் சுக்கிரன் இருந்தாலும் அல்லதுஅவர்கள் பார்வை இருந்தாலும் குன்மம் தாக நோயுண்டாம்.

3. கர்க்கடகத்தில் சூரியனி லிருந்து புதனால் பார்க்கப்பட்டால் கபநோய் வாதநோய் பிறக்கும்.

4. குருவுடன் புதனிலிருந்து சூரியனால் பார்க்கப் பட்டால் குன்மம் சூலப்பிரமேகம் அசுமரிரோகம் உண்டாகும்.

5. பிறக்கும் போது சந்திரனுடன் பாபக் கிரகங்கள் சேர்ந்து இருந்து 7-வது வீட்டில் சனி இருந்தால் அவனுக்கு சுவாசம், சயம், குன்மம், பீலிகம் இவைகள் உண்டாகும்.

6. சூரியன் வீட்டில் புதன் இருந்தாலும் அல்லது சூரியன் கூடச் சேர்ந்து இருந்தாலும் சந்திரன் வீட்டில் புதன் இருந்தாலும் குட்டம், சயம், பவுத்திரம், பாண்டு இவைகள் உண்டாகும்.

7. கர்க்கடக ராசியில் சூரியனிலிருந்து சனியால் பார்க்கப்பட்டால் வாத ரோகம் பீடிக்கும்.

8. சந்திரனிடத்தில் அங்கார கனிருந்தால் இரத்த பித்த ரோகம், பலவித கெட்ட நோய்களுண்டாம்.

9. பிறக்கும் போது சொந்தவிடத்தில் (சுக்ஷேத்திரம்) கொடிய கிரகங்கள் இருந்தாலும், குருசுக்ஷேத்திரத்தில் கொடிய கிரகங்கள் கூடியிருந்தாலும் மந்தாக்கனி நோய் உண்டாகும்.

10. இலக்கினத்தின் 4-வது வீட்டில் சனி இருந்தால் மார்பு நோய், பாலிய வியாதி பந்து பீடை உண்டாம்.

11. இலக்கினத்திற்கு 8-வது வீட்டில் வியாழன் இருந்தால் ஆமவாதரோகம் உண்டாகும்.

12. அங்காரகன் 8வது வீட்டில் சூரியனுடன் இருந்தால் தாகநோய், சுரம் இவைகள் உண்டாகும்.

13. இலக்கினத்திற்கு 8-வது வீட்டில் சனி, செவ்வாய், சூரியன் இருந்தால் பலவித நோய்களும், அபஸ்மாரம் உண்டாகும்.

14. இலக்கினத்திற்கு 7-வது வீட்டில் சனி இராகுவுடன் கலந்திருந்தால் மூத்திரக் கிருச்சிராதி நோய்கள் உண்டாகும்.

15. கர்க்கடகத்தில் சூரியனில் இருந்து புதனால் பார்க்கப் பட்டால் குருடு கபம், வாதரோகம் உண்டாகும்.

16. சனன காலத்தில் செவ்வாய், சந்திரனுடன் கலந்தால் சுரம், அக்கினி மாந்தம் (உண்டாம்).

17. நீசக்ஷேத்திரத்தில் இருக்கும் சூரியன் திசை மத்தியில் க்ஷீணச் சந்திரன் திசை யிலும், கண்கள் நாச மடையும். according to astrolgy the diseases are caused by the influence of planets and stars. The above is the list of diseases caused by the planets when they stand in certain positions.

சோதிடம், வானநூல், astronomy. 2. நாடி நூல், astrology.

சோதிஸ்மதி, முடகற்றான், balloon vine, palsy curer- Cardio spermum halicacabum.

சோதிஷோதி விதை, வாலுளுவை அரிசி, seeds of spindle tree-Celastrus paniculata.

சோதிதனம், வைடூரியம், நவமணி களில் ஒன்று, cat's eye, one of the nine gems.

சோதித்தல், நோயாளியைப் பரீட்சை செய்தல், examining a patient, 2. see சோதனை செய்தல்.

சோதிநிகரம், அரசமரம், peepal tree- Ficus religiosa.

சோதிநிமிளை, அஞ்சனக்கல், sulphuret of antimony so called from its being used in works.

சோதிநீச்சடம், முத்துச்சிப்பி, pearl oyster.

சோதிநூல், see சோதி சாஸ்திரம்.

சோதிநெறி, கண்ணில் பல முளைகள் கிளம்பி மூன்றாம் நாளில் மறைந்து பிறகு நாளுக்கு நாள் கிளைத்து கண் வெளுத்து, இமையைச் சுற்றிலும் சதை வளர்ந்து, அதனால் கீழ் நோக்கிய பார்வையாகி மிக்க தலைவலி, நீர் வடிதல், பீளை கட்டல், பிடரிவலி, நடுவிழிக் குத்தல் முதலிய குணங்களைக் காட்டும் ஓர் கண்ணோய், a form of conjunctivitis attended with a number of granulations which disappear on the third day and reappear gradually giving rise to the following symptoms viz. whitish appearance of the eyes membraneous growth in the eye, lids, down ward look, excessive head ache, mucopurulent discharge, pain in the nape and acute pain in the pupil.

சோதிபூநாகம், சூடன், camphor.

சோதிப்புல், இரவெரியும் புல், காந்திப்புல், தீப்புல் என்றும் பெயர். இது சதுரகிரி மலையில் சட்டை நாதர் குகையண்டை இருப்ப தாகவும், இது 4 விரற்கடை உயரம் சிலைப்புல்லைப் போலவும் இருப்பதாகவும் சித்தர் நூல் கூறும். இதன் சமூலம் வாங்கிச் சம்புச் சூரணம் பண்ணி சித்த நூலின் முறைப்படி களஞ்சிப் பொடி வீதம் ஏழு தினம் கொள்ள உடம்பு கல் தூணாகி அநேக

சித்திகள் உண்டாகும். பாலிலிட இரத்தம் போலாகும். (இராம தேவர்-500) அப்போது ஒரு கழஞ்சு சூதம் சேர்த்து 100 எரு முட்டையிற் புடமிட சூதம் கட்டிவிடும். பிறகு அதை செந்தூரமாக்கி வெள்ளியிற் கொடுக்க ஏமமாகும். இந்தப் பொன்னைப் பற்பமாக்கி நெய்யிற் குழப்பி புசித்து வர தேக சித்தியாகும். இது பார்வைக்கு மலைப்புல்லுப் போலும் சிறிது மஞ்சள் நிறமாயும் இருக்கும். இம்மூலிகையின் சாபத்தை நீக்கி சமூலத்துடன் பிடுங்கி வந்து இரவு தண்ணீரில் இட்டுப் பார்த்தால், தீபம் போல் பிரகாசிக்கும். இது பலவித கண்நோய்களை நிவர்த்திக்கும். அவையாவன விழிகாசப்படலம், கருவிழி நோய், நீர்ப்பில்லம், பூசாந்திரம், ஊன் படலம், பூ வெண் புள்ளி முதலியன. luminous grass, it is known by different names as brilliant grass, fire grass, etc. According to Siddhars' science. It is said to be found in the top of Sathuragiri hills in Madurai district near the cave of Sattamuni. It is four inches in height much resumbling சிலைப்புல் another species of grass. The entire plant is dried and reduced to powder which if taken as per method contemplated in Siddhar's science for seven days at the rate of 'kalanji' a day it invigorates the system, and promotes many miracalous powers. It is capable of curing many kinds of eye diseases viz; cataract, disease of the black of the eye, blepharitis, tubercle in the anges of the eye, fleshy cataract, and opacity of the lens.

NOTE: Luminous plants which are not unlike this have been a source of strange legends in India and Afghanistan. There is mountain called Sufed Koli in

Afghanistan on which the Hindus believe that gold and silver exist. In spring time, the slopes are covered with bushes which at night from a distance seem to be on fire, yet when you are close to them there is no sign of flame.

The natives of Simla say that at night the mountains are illuminated by some magical herbs and this is believed to be a species of Dictamus which grows plentifully here. The burning bush at kew is a handsome plant about 3 feet high with pink flowers, leaves are much like those of ash tree.

சோதிப்பூநாகம், கற்பூரம், camphor.

சோதிமணி, முத்து, pearl.

சோதிமண்டலம், ஒளி வட்டம் astral region halo of light.

சோதிமயம், வாலுளுவை, see சோதிகம், 2. ஒளிவடிவு, body of light.

சோதியமயவேதி, பூநாகம், earth worm.

சோதிமரம், சோதிமா, see சோதி விருட்சம்.

சோதிமார்ச்சுண்ணம், ஈரற்கண்ணம்.

சோதிமாவொலிச்சம், தேக்கு, teak wood.

சோதிமுனி, இவர் பிரமரிஷி மைந்தன், சூரிய குலத்தில் மறவர் சாதிப் பெண்ணுக்கு பிறந்தவோர் சித்தர், இவர் மலைகுன்றின் குகைகளில் சென்று அவ்விடத்து கற்களை ஆராய்ந்து வைரக்கல் கண்டெடுத்தார். He is the son of Brhmarishi. He is a Siddhar.

சோதிம்பம், சோதியம், வாலுளுவை, spindle tree-Celastrus paniculata.

சோதியட்சரம், குழந்தைகளுக்கு வாய்வெந்து நாக்கும், பல்லும் நிறமாறி முதுகும் வயிறும் எரிச்சல் கண்டு சுரத்துடன் வாந்தியும், கழிச்சலு முண்டாகும் ஓர் நோய். a kind of stomatitis in children marked by inflammation of the mouth discolouration of tongue and teeth, burning sensation in the stomach and on the back, fever and diarrhoea- Stomatitis scorbutica.

சோதியில் விரணம், வெள்விழி, கருவிழியெங்கும் பூவுண் டாகி, நீர் வடிந்து, கண் விழிக்க முடியாமல் கூச்ச மடைந்து நடுவிழியில் நண்டின் கண்ணைப் போல சிறியதாய் துருத்திக் கொண்டிருக்கும் ஓர் கண்ணோய். protrusion of cornea caused by the cornea losing its transparency by the formation of cataract and projecting beyond the eye lid like carbs eye. It is marked by watery discharge, sensitiveness to light, in capability of opening the eyes etc.

சோதியுட்சோதி, பிரமை, இதுவே பூரணம் என்பது இது எங்கும் நிறைந்தது, ஆகாயத்தைவிடச் சிறந்தது. மேன்மையான குணம் வாய்ந்தது. எல்லா வஸ்துவிலும் நிறைந்தது. எல்லா வஸ்துகளுக்கும் மூலப் பிரகிருதியாயுள்ளது, இவ் வொளியானது வேண்டும் போது அவ்வஸ்துக்களை மறுபடியும் தோன்றச் செய்யும் சக்தி வாய்ந்தது. ஆகவே ஓர் உக்கிரான அறையைப் போன்றது. அண்டம் மாதிரியே இப்பிண்டமான மனித உடம்பிலும் இப்பூரணமே இருந்து பூர்வக் கியானத்தையும் கொடுக்கும். இவ்வஸ்து ஒவ்வொரு அண்டங்களுக்கு இடையே யும் எப்படி நிறைந்து இருக்கிறதோ அது போலவே பிண்டத்திலும் மூளையிலும் முள்ளந்தண்டிலும் நரம்பின் கண்ணறைகளிலும் மிகுதி யாகப் பொருந்தியுள்ளது. இதனால்தான் இவ்வுலகத்தில் நிறைந்துள்ள பூரணத்தில்

என்னென்ன மாறுதல்கள் உண்டாகின்றனவோ அவை களை மனிதன் இருந்தபடியே தன்னுடம்பில் உள்ள பூரணத்தினால் தெரிந்து கொள்ள ஏதுவாகும். இதுதான் ஞான திருஷ்டி எனக் கருதப்படும். இவ்விதமான ஏதுவால்தான் உலகத்தில் நடக்கும் தூரச் செய்திகளை இருந்தபடியே தெரிந்து கொள்ளக் காரணமாகும். உலகத்திலிருக்கும் ஒவ்வொரு பிராணிகளின் நரம்பிலும் தாதுக்களிலும் புல் பூண்டுகளிலும் இச்சோதி விளங்குகிற தென்பதை நன்கு ஊகிக்கலாம். Astral light. It is same as Archaes. It is a universal and living ethereal element, still more ethereal and highly organised than the Akasa (ஆகாசம்). The former is universal and the latter only cosmic i.e pertaining to the Solar system. It is at the same time an element of power containing the character of all things. It is the store house of memory for the great world (Macrocosm) whose contents may become rembo died and re-incarnated in objective forms, so also it is stone house of the little world ie. Microcosm of men from which he. mayrecollect past events. It exists uniformly through-out interplanetary spaces, yet it is more dense and more active around certain objects on account of their molecular activities, especially around the brain and the spinal cord of the human beings. It is this aura around nervecells and nerve tubes by which a man is enabled to catch impressions made upon the astral Aura of the Cosmos and there by read in the astral light (Claivoyancy). It forms the medium of transmission thought and without such a medium no thought can be transferred to a distance. Every living nerve has its astrol aura every mineral every plant or animal is made to shine by its light.

NOTE: According to the Mysteries of Magic written by Arthur Edward waite in the doctrines of Occult Force, the Astral light is the key of all dominian, the secret of all powers, the Universal glass of vissions the source of prophecy, glory, and the instrument of thaumaturgic art and of divination. It is the common medium of dreams and visions. The absolute secret of this direction has been possessed by certain men- it is the Great Magic Arcanum. All magic science consists in the knowledge of this secret.

It is this Astral light that preserves the images of all that has taken place in the past, the reflections of worlds gone by and analogical foreshadowings of world to come. It is by means of this light that statical visionaries place themselves in communication with all the worlds. So, Clairvoyants merely evoke the images of places in the Astral light and they do not actually travel to those places.

It is this light that Christians call as Holy Ghost.

சோதியொளி, விஷ்ணு காந்தி, a medicinal plant — Evolvulus alsinoides.

சோதியொளி தீபம், தூதுவளை, three lobed night shade-Solanum trilobatum.

சோதிரவிமாலி, அத்தினி சாதிப்பெண், one of the four classes of women divided according to lust.

சோதிராத்திரி, நடு இராத்திரி, mid-night

சோதிரிஷித் தைலம், சகல வலிப்புகளுக்கும் (உபயோகப் படும்) ஓர் வகைத் தைலம். இதில் கடைச்சரக்குகளுடன் மூலிகைச் சாறு, பசு, வெள்ளாடு, சிறுபிள்ளை மூத்திரங்களும், வௌவால், கள்ளிக்காக்கை, ஓணான், உடும்பு இவைகளின் இரத்தம், இறைச்சி ரசம் (soup) நல்ல பாம்பு கண்டம் முதலிய வையும் சேரும். This is an oil useful for all kinds of convulsions. Some of its ingredients are blood of bat, coucal, chemeleon water lizard, the soup of thier flesh, flesh of snake, urine of cow, goat, infants and many bazzar drugs.

சோதிவிரணம், கண்ணின் கரு விழிக்கு மையத்தில் அமைந்த சோதிக்குக் காணும் ஓர் விரண நோய், ulceration in the central part of area of the retina attended with the affection of the vision. 2. கண்பூ விழுந்து, நீர் வடிதல், இதில் நண்டு விழிபோல் நடு விழி புடைக்கும். ulcer in the eye marked by watery discharge and protrusion of that part of the eye. It then looks like crab's eye.

சோதிவிருட்சம், இரவெரி மரம், இதற்கு சாளஞ்சோதி, நீலஞ்சோதி எனப்பல பெயர்களுண்டு. இது மலைகளின் உச்சியில் விளையும். இதில் சித்தர்கள் குடியிருப்பு என நூல்களிற் கூறப்படும். இரவில் நெருப்பு பற்றி எரிவது போலிருக்கும். நிலவில்லாத இராத்திரிகளில் இது சோதிமயமாகப் பிரகாசிக்கும். ஆகவேதான் இதற்கிப் பெயர் வாய்ந்தது போலும். இதன் இலை ஊமத்தையிலை போலிருக்கும். பூ நீல நிறம், இதை வெட்டினால் பால் சொரியும். இம்மூலிகை சாபம் நீக்க வேண்டி, சித்தர் நூல்களிற் கண்டபடி இம்மரத்திற்கு காப்பு கட்டி

மந்திரம் செபித்து, கணேசருக்குப் பூசை செய்து பிறகு சமூலம் கொண்டு வந்து ஒரு பாண்டத்திற்குள் போட்டு தைலம் வாங்கி இருப்புப் பாத்திரத்தில் பதனப்படுத்தி 6 நாள் கொள்ள மூர்ச்சையாகி 7-ம் நாள் கண் விழிப்பான். பிறகு முறைப்படி பத்தியங் கொள்ள காய சித்தியாகும். இதன் வேர்த்தோலை உலர்த்திப் பொடி பண்ணி பசு நெய்யில் குழப்பி பானையிலிட்டு 21 நாள் நெற்புடம் வைத்து பிறகு எடுத்து ஒரு மாவிடை கொண்டு 4 நாழிகை சென்ற பின் ஆவின் பால் குடிக்க வேண்டும். இப்படி 30 நாள் கொள்ள காய சித்தியாகும். கவுனம் பாயலாம், a luminess tree in the dark like burning bush. It is known by several names as mentioned above. It is rarely found on top of mountains and is said to be frequented by Siddhars. It is conspicuous by its brilliance in dark moones nights and hence this name. The leaves resemble those of datura flowers bright blue, when wounded yields milky juice.

Before the parts of the tree are removed for use some religious Cermonies such as chanting of appropriate mantreams, method of worshipping God Ganesha etc., are to be strictly observed as per instructions laid down in Siddhar's works. Every part of it is then removed according to the required quantity and then the whole is put into a pot and oil is extracted there from and preserved in an iron vessel. If this oil is taken internally as per directions given in the said Siddhar's works for six days the man gets swooned and recovers consciousness on the next day. The diet prescribed in this case is also to be followed strictly with the

result that the body is rejuvenated. The bark of its root powdered and mixed with an equal quanity of cow's ghee has to be preserved under the heap of paddy for twentyone days and then taken out for use. Taken internally for thirty days at the rate of 'Ma' weight every day it rejuvenates the system and enables one to fly even in the aerial regions.

சோதி விருட்சம், இது சதுரகிரி மலையிலுள்ளது. இதன் தூர் வெண்மையாயும், பூ கொன்றை புட்பம் போலவும், காய் கொன்றைக் காய் போலவும் இருக்கும். இருட்டுக் காலங்களில் மரத்தைப் பார்த்தால் மின் மினிப் பூச்சிகள் சூழ்ந் திருப்பது போல் தோன்றும். இம்மரத்தின் பச்சைப் பட்டையைச் சீவிக் கொண்டு வந்து கனை எருமை விருட்சத்தின் பாலில் ஊற வைத்து எடுத்து சுத்தி செய்த கெந்தகத்தை நாலுக்கொன்று போட்டு 21 நாள் கனை எருமை விருட்சத்தின் பாலை விட்டு அரைத்து மிளகுப் பிரமாணம் குளிகை செய்து நிழலில் உலர்த்தி தினமும் ஒரு குளிகை வீதம் ஒரு வாரம் சாப்பிட்டு வர காய சித்தியாகும். This grows in Sathuragiri hills. Its root is white, flowers and fruits look like those of cassia. During dark nights the tree seems to be surrounded by number of glow worms. The bark of this tree is soaked in the milk of Euphorbia and triturated adding 1/4 its weight of purified sulpher and milk of Euphorbia for 21 days. Then it is made into pills of papper size and dried in the shade. If eaten at the rate of a pill a day the body will be rejuvenated.

சோதி விழுதல், பிளவு ஏற்படல், being cracked or fissured.

சோதை, சங்கினி, சாதிப்பெண் one of the four classes of women divided according to lust.

சோத்தமா, பனிப்பயிறு, dewgram Phaseolus radiatus.

சோத்தாள், சாப்பாட்டு ராமன், glutton.

சோத்தி, தூக்கம், sleep 2. சோற்று மயக்கம், drowsiness after meals. 3. சுமுத்தி, deep sleep; 4. நடுச்சாமம், midnight.

சோத்தியம், கற்றாழை, aloes; 2. வாலுளுவை, spindle tree.

சோத்திரக்கன்னி, see நீலஞ்சோதி.

சோத்திரம், காது, ear, 2. பஞ்சேந்திரியங்களில் ஒன்று. one of the five sensory organs 3. கேள்வி, hearing.

சோத்திராதிசதவாதம், செவி முதலிய இந்திரியத்தானத்தில் பிரகோபித்த வாதம், excess of vitiated vadha humour affecting the sensory organs as ear etc.

சோத்துக்கற்றாழை, see சோற்றுக் கற்றாழை.

சோத்துப்பு, சோற்றுப்பு, common salt.

சோநிசி, மலைக் குகை, mountain cave.

சோபகாரி, பேயத்தி, devil's fig-Ficus hispida.

சோபகுஞ்சி, கருஞ்சீரகம், black cumin Nigella sativa.

சோபக் கழிச்சல், பலவீனம், களைப்போடு கூடிய கழிச்சல், diarrhoea followed by weakness and exhaustion.

சோபக்கிராணி, பலவீனம், சோர்வு, இவைகளை உண்டாக்கும் கழிச்சல், a chronic diarrhoea allended with weakness and exhaustion.

சோபக்கினம், தாபிதத்தைத் தணிக்கும் பரிகாரம், a treatment having for its object the alleviation of swelling.

சோபக்கினி,நிலவேம்பு, ground neem Justicia paniculata.

சோபங்கொள்ளல், மூர்ச்சை அடைதல், getting swooned or fainted.

சோபசுரம், பலவீனம், தளர்ச்சி முதலியவைகளை உண்டாக்கும் சுரம். fever marked by weakness, fatigue and fainting. 2. சோபத்தை உண்டாக்கும் அகோரக் காய்ச்சல், high fever causing faintness or swooning- Hyperpyrexia.

சோபநசினி, இடது கை, left hand.

சோபநாசனி, கழற்கொடி, bonduc creeper- caesalpinea bonducella.

சோபநாசினி, see சோபாநாசினி.

சோபநித்திரை, அயர்ந்த தூக்கம், sound sleep; 2. மூர்ச்சையோடு கூடிய தூக்கம், sleep as a result of fainting; 3. மயக்குத் தூக்கம், hypnotic sleep; 4. சோம்பலினால் உறங்குதல், sleep through drowsiness; 5. நோயின் களைப்பினால் அடிக்கடி உண்டாகும் தூக்கம், sleep recurring after paroxysm in diseases- Paroxysmal sleep; 6. கலவி முடித்த பின் உண்டாகும் அயர்ந்த தூக்கம், deep sleep after sexual intercourse.

சோபம், கள், toddy; 2. மூர்ச்சை, fainting; 3. களைப்பு, fatigue; 4. சோம்பல், drowiness, 5. சோபை, anemia, 6. ஒளி, lustre, 7. தளர்ச்சி, langour, 8. இரத்தத்தைக் குறைக்கும் நோய், disease causing blood lessness- Anemia.

சோப ரோகம், see சோகை.

சோபலம், சோம்பு, anise seed- illecium ancisatum.

சோபவரி, சேரான் கொட்டை, வீக்கத்தைக் குறைப்பதால் இதற்கு இப்பெயர். dhoby's nut- Semecarpus anacardium. It cures swelling hence the name.

சோபந்தெளிதல், மூர்ச்சையினின்று தெளிதல், recovering from swoon.

சோபனசினி, இடது கை, left hand.

சோபனம், தாமரை, lotus; 2. அழகு, beauty; 3. ருதுசாந்தி, nuptial.

சோபன், கள், toddy, சோபத்தை உண்டாக்குதலாலிப் பெயர்.

சோபாஞ்சனம், முருங்கை, drumstrick tree- Phyregosperma moringa.

சோபாட்சிபாகம், (சோபம் + அட்சிபாகம்) திரி தோஷத்தினால் கண் வீக்கம், சிவப்பு, வலி, எரிச்சல், வெள்விழி அத்திப் பழம் போலிருத்தல், பிசுபிசுப்பான நீரொழுக்கும் உண்டாக்கும் ஓர் கண்ணோய், an eye disease marked by swelling, reddness; pain, burning sensation etc.

சோபா திகம், வலியிருத்தல் போல் தோற்றுதல், to feel as if there is pain.

சோபாநாசினி, வீக்கம், கட்டி இவைகளைக் கரைக்கும் மருந்து. medicine or drug supposed to have the power to resolve swelling tumour etc- Discutient.

சோபாரீரசம், கிராணி, வாத ரோகம், சூலை, பாண்டு முதலிய நோய்களுக்கு கொடுக்கும் ஆ.வே. மருந்து. an Ayurvedic medicine given for chronic diarrohea, anemia and rheumatic affections.

சோபாரோகம், விஷப்பாண்டு, dropsy.

சோபாலிகை, குடைமேற் குடைச்செடி, an unknown plant; 2. அடம்பு, hareleaf plant- Ipomea bilova; 3. வெண்ணொச்சி, vitex negundo; 4. சுவாலை, fire flame.

சோபி, மூர்ச்சையாதல், getting swooned; 2. நேர்வாளம், croton seed- Croton tigilium

சோபிதம், see சோபை; 2. துலக்கம்; காந்தி. lustre.

சோபிதவாளம், நேர்வாளம், see சோபி.

சோபித்தல், மூர்ச்சையாதல், see சோபி; சுவர்ணையில்லாது கிடத்தல், being bereft of conciousness.

சோபித்துக்கிடத்தல், மூர்ச்சையால் சுவர்ணையற்றுக் கிடத்தல், lying unconscious through fainting.

சோபீசம், எலுமிச்சை, lime fruit.

சோபை, சோகை, dropsy with anemia; 2. வீக்கம், swelling; 3. பிரகாசம், brilliance; 4. அழகு, beauty.

சோபைசுரம், கீல்களில் வீக்கம், மார்படைப்பு, வயிறுப்பிசம், வலி, மலபந்தம், சுரகுணம், இவைகளாலுண்டாகும் வீக்க சுரம். fever through anemia which is marked by constipation, bloating of the abdomen, swelling of the joints choking of the chest etc.- Dengue fever.

சோபைரோகக் கூட்டம், சோகை சம்பந்தமான நோய்கள், group of diseases relating to anemia.

சோபோதரம், (சோபை+உதரம்) சோவையினாலேற்படும் வயிறு வீக்கம், swelling of abdomen due to anemia.

சோபோதாபா, பேய்க்குமட்டி, bitter apple- Citrullus colocynthis.

சோப், see சோப்பு.

சோப் சீனி, கொழும்பு வேர், china root, columbo root- Cocculus palmatus; 2. பரங்கிச்சக்கை, (china root) Smilax Chinensis.

சோப்பு, அடி, blow; 2. சவர்க்காரம், soap.

சோப்புதல்; அடித்தல், beating; 2. சோற்வுறச் செய்தல், causing to faint.

சோமகண்ணி, பொன்னாங்கன்னி, golden verbesenia illecebrum sessile.

சோமகீடம், புழுக்களின் ஓர் வகை பேதம், one of the several groups of worms.

சோமகுணம், குளிர்ச்சியான தன்மை, colling nature.

சோமக்கொடி, சோமலதை, soma plant. see சோமப் பூடு.

சோமசக்கரம், பதினாறு இதழ்களையுடைய சக்கரம், It is the sixteen lobed gangtion, the seat of altruistic sentements and volitional control viz; compassion, patience, renunciation meditative ness, gravity, determination, magnanimity, gentliness etc.

சோமசபன்னி, குங்கிலியம், Indian damer resin- Shorea robusta.

சோமசம், பால், milk.

சோமசாரம், வெண் கருங்காலி, a white spieces of ebony; egg fruited ebony- Diospyros occurpa; 2. ஓர் வகை சாரம். காடிகாரம் Silver nitrate- Lunar caustic.

சோமசியா, சிறு கல்லூரி, இது கல்லுப்பைக் கட்டும், an unidentified plant said to consolidate sea salt, see கல்லூரி.

சோமசொரூபம், குளிர்ந்த சுபாவம், cooling nature.

சோமணம், மலங்கழித்துக் குதத்தைக் கழுவிச் சுத்தம் செய்தல், cleaning or washing the posteriors after evacuation of bowels.

சோமதனம், செம்மரம், coromendel redwood- Soymida febrifuga.

சோமதாரி, இந்துப்பு, rock salt.

சோமநாதச்சுண்ணம், இரும்பைக் கொண்டு தயாரிக்கும் இரத்த சுத்திக்காகக் கொடுக்கும் ஓர் வகை மருந்து, an Ayurvedic preparation of iron prescribed for impurities of blood.

சோமநாதப் பெருங்காயம், ஆதி காலத்தில் கூர்ச்சர தேசத்தி லிருக்கும் சோமநாத புரத்திலிருந்து இறக்குமதி யாகும் ஓர் வகைப் பெருங்காயம், a kind of pure assfoetida imported from Somanath in Guzerat.

சோமநாத ரசம், மனோசிலையை சுத்தி செய்து பிறகு இரும்பு, அப்பிரகம், வெள்ளி இவைகளைச் சேர்த்துப் புடமிட்டு எடுத்த ஆயுள் வேத மருந்து, இதைத் தேனிற் கலந்து நீரிழிவு, பெண் சம்பந்தமான மேக நோய்கள் இவைகளுக்குக் கொடுப்பது உண்டு, an Ayurvedic preparation given for diabetes and venerial diseases. Its ingredients are iron, mica, silver red orpiment etc.

சோமநாதி, see சோம நாதப் பெருங்காயம்.

சோம நாயகம், வேலிப்பருத்தி, hedge cotton- Daemia extensa.

சோமநோய், கர்ப்ப வெட்டை, இது பெண்களின் கருப்பையிலிருந்து பால் போலாவது, சீழ் போலாவது வெளி வரும் ஓர் வெண்ணிறமான ஒழுக்கு. இது நாளுக்கு நாள் உடம்பை வெளுக்கச் செய்யும். இது பலவீனத்தாலும், இரத்தக் குறைவினாலு முண்டாகும். இது அதிசையோக முதலிய காரணங்களினால் கருப்பை கலங்கி, பெண்கள் உடம்பு முழுவதிலும் கெட்ட நீர் பரவி, கடைசியாக யோனித் துவாரத்தில் சேர்ந்து ஒழுகிக் கொண்டிருக்கும். இதற்கு ஏலக்காய், இலவங்கப்பத்திரி சூரணித்து கள்ளுடன் கலந்து கொடுக்க குணமாகும். whites. It is a discharge of a whitish colour, some time yellow or green, coming from the vegina or from the neck of the womb- cervix- or from with in the womb itself. It is whitish in colour like milk or yellow like pus, or viscid like mucous or more like white of egg. It gradually renders the patient anemic and so it is said to be caused by loss of blood in the system and weakness due to abnormal sexual intercourse causing congestion of the womb or the organs in the pelvis or displacement of the womb- Leucorrhoea. Powder mixture of cardamom and cinnamon leaf is said to cure this disease.

NOTE:- It may also occur in children and unmarried women but most frequently in women who have borne children. Many• women avoid consulting a doctor untill their health is seriously impaired. In some cases, it is very abundant, in others it is quite scanty. It may be without odour or with offensive smell.

சோமபந்து, ஆம்பல், water lily- Nymphaea lotus; 2. பெருங்காயம், assafoetida.

சோமபானம், சோமரசம் குடித்தல், drink of Soma juice beverage.

சோமப்பால், சோமச்செடியின் பால் போன்ற வெண்ணிறமான சாறு, இப்பாலின் குணம் மிகச் சிறந்ததாக கூறப்படும். ஏனெனின் இது மூப்புப் பிணி சாக்காடு இவைகளை அகற்றி நெடுநாள் அதாவது நூற்றுக்கணக்கான வருஷங்கள் வரை யௌவனத்தோடு இருக்கச் செய்யும். நெருப்பு, நீர், விஷம், ஆயுதம் முதலியவைகள் இவனை ஒன்றும் தாக்காது. the milky juice of soma plant. It is said

to have great virtues. The extra ordinary properties of the exhilarating juice of the plant are that it prevents death and decay of the body, enables one to live for hundreds of year in full enjoyment of new youthful body and it is a proof against fire, water, poisons, weapon etc.

சோமப்பிணி, நீரிழிவு, diabetes- Diabetes mellitus.

சோமப்பூடு, சோமலதை அல்லது கொடிக்கள்ளி, ஓர் கற்ப மூலிகை, இதற்கு ஓஷதி ராஜன் என்றும் பெயர். இது 24 விதமெனக் கொள்ளப் படும். எல்லா வித பூடுகளிலும் பால் வரும். இப்பூடு இமயமலை, மகேந்திர மலை, மலையா தேசம், ஸ்ரீபர்வதம், விதிய மலை ஆகிய இவ்விடங்களில் கிடைக்கும். ஆனால் மகான்கள் கண்ணுக்கு மாத்திரம் தோன்றும். இது தெய்வத் தன்மை பொருந்தியது. எல்லா மருந்துகளுக்கும் நாயகம் எனக் கருதப்படும். எவ்வகையைச் சேர்ந்த தாயினும் இம் மூலிகையில் 15 இலைகள் இருக்கும். சந்திரன் வளர்பிறை தேய்பிறைக்குத் தக்கவாறு தினம் ஒவ்வொரு இலையாக வளர்ந்தும், உதிர்ந்தும் வரும், பூரணச் சந்திரனாகிய பௌர்ணமி அன்று எல்லா இலைகளும் பொருந்தி யிருக்கும். பிறகு நாளுக்கு நாள் உதிரும், இதினின்றுதான் சோமப்பால் எடுக்கப்படும். பூர்வத்தில் வட தேசத்து ஆரிய மக்கள் இப்பாலினின்று மது பானம் தயாரிப்பார்கள். இப்பாலைப் புளிக்க வைத்து அத்துடன் வாற்கோதுமை நெய் முதலியவைகளைச் சேர்த்து யாகம் செய்யும் காலத்தில் ரிஷிகள் சோமரச சாராயம் என இதைக் குடிப்பார்கள். அன்றியும் உணவுடன் மாட்டிறைச்சியும் சேர்த்து உண்பார்கள். சாம வேதத்தில் இது விஷயம் விரிவாக காணப்படும். இச்சோ மரசத்தைத் தேவர்களும், மனிதர்களும் அமிர்தமாகக் கருதி உட்கொண்டதால் அவர்கள் காயத்தை நீடுழி காலம் இருத்துவது மல்லாமல் பலப்படுத்தும்; இதன் சாறு குடிக்க ஆனந்தமாக இருக்கும். ஆகவே பிரயாணிகள் தங்கள் தாகத்தைத் தீர்த்துக் கொள்ள இதன் தளிர்களை உறிஞ்சுவார்கள். moon creeper, creeping milk hedge- Asclepias acida. It is a plant classified into twenty four species. The milky juice is the general characteristic of all the some plants. It is a divine plant and is the lord of all the medicinal herbs and whatever may be the species, the plant is furnished with fifteen leaves which grow and fall with the waxing and waning of the moon. The maximum leaves will be found only on the night of the full moon then the leaves begin to decrease in number by one every day.

Among the ancient Aryans a fermented liquour was prepared by mixing its juice with barley and ghee, this wine was drunk at all the religious ceremonies especially during the performances of 'Yakam' (sacrificial fire) and so was used as an intoxicent by the Rishis (Vashista and others), who in the very early age of Hindusim, combined it at their meals with leaf. A more detailed account of this wine will be found in Soma Vedam.

Devas and men considered this as a kind of amirtham (ambrosia) confering eternal life and vigour both on Gods and Men. The raw juice is so mild that travellers suck the tender shoots to allay their thirst, c.f. கொடிக்கள்ளி.

NOTE:- In some books this Soma plant or at least one of the

varieties is said to be கொடிக்கள்ளி, creeper kalli-Sarcostemma brevistigma, which is doubted very much for the reason that this kalli is a hedge plant very commonly found in south India and the structure and the properties assigned to the Soma plant are found in this species. It appears to belong to a quite different botanical group.

சோம மணல், வெள்ளி மணல், sand containing silver ore.

சோமம், ஆட்டாங் கொடி, see சோமலதை, a kind of creeper, (unidentified); 2. ஓர் கொடி, the moon plant- Asclepia, acida alias Sarcostemma viminalis, கொடி கள்ளி, milk hedge or Soman — Sarcostemma brevistigma; 3. கஞ்சி, liquid, rice (conjee) *4. அருவதா*, rue, any fermented liquor, *5. கள்*, toddy.

NOTE:- It is doubted if this is a correct synoym, Further it is not known if this ஆட்டாங்கொடி, is the same as ஆட்டாங்கள்ளி, which is ordinary திருகுகள்ளி, tursting milk hedge-Euphorbia tortilis.

சோமயோனி, *ஓர் வகை சந்தனம்,* a kind of sandal wood.

சோம ரச குணம், The properties of the Soma Juice. The Juice of the plant is said to cause *immortality* and is a *medicine* for sick. The God who is in possession of it is said to clothe whatever is naked and to heal whatever is sick and through Him the blind sees, the lame walks abroad. The exhilarating and in vigourating action of Soma led to its being regarded as a divine drink that restores ever lasting life. Hence it is called Amirta — the immortal draught (allied to the Greek ambrosia). Soma is the stimulent which conferred immortality upon the Gods. Thus soma naturally has medicinal power

also. M.Blavatsky says it to be the fruit of the tree of knowledge forbidden to Adam and Eve. It is the king of medicinal plant and as such is the real of cause of health and acts on diseases by its action on the phlegm of the body. The tree waxes and wanes like the moon and it is called as சோமலதை. The leaves grow with the moon and fall off with her and on the full moon it is adorned with 15 leaves and on the new moon it is shorn off all its leaves.

சோமரசம், see சோம்பல்.

It is the juice of a milky climbing plant Asclepias acida-extracted and fermented to form a beverage liked by the Gods and priests. There are many hymns devoted in its name Gradually Soma was deified as a God, powerful and capable of healing disease and bestower of wordly fortunes. It became the gwardian of healing herbs or the moon plant, said to be produced on the Mujavat mountains.

The juice is described as sweet honied, pungent flavourous and exhilarating and calls forth ideas. It is said to confer immortality and to nourish the body. Some consider this plant to be of Semitra genia, while others think it to be Sarcostem a viminalis although the plant is identified as Asclepias acida.

It is said to have been brought by a falcon or by a bird from the sky or from a mountain where Varuna *(வருணன்)* husbanded it. A Gandharva is said to be its protector.

The soma plants are pressed by the stones and the juice flows through the woollen strainer into the wooden vats in which it is finally offered

as a beverage to the Gods in a litter of grass.

சோமராசி, கார்போகவரிசி, seeds of hazel leaved psoralea- Psoralea corylifolia. 2. காட்டு சீரகம், purple fleabane — Vernonia anthelmentica.

சோமரிதம், தூதுவளை, three lobed night shade- Solanum trilobatum.

சோமரிசம், பெண்களின் சோமரோகத்திற்கு சாப்பிடும் ரசம் சேர்ந்த மருந்து, a mercurial preparation given for சோம ரோகம், a disease of women.

சோமரோகம், see சோம்நோய், 2. நீரிழிவு diabetes — Diabetes mellitus, see சோமப் பிணி 3. பெண்களுக்கு வரும் ஓர் நோய், அதிக புணர்ச்சியால் பெண்கள் உடம்பு க்ஷீணித்து யோனித்துவாரத்தின் வழியாய் வெண்ணிறமான விஷநீரும், மூத்திராதிசாரமும் சேர்ந்து ஒழுகப் பெற்று மிக்க பலவீனத்தை உண்டாக்கும். இதற்கு ஏலக்காயும் இலவங்கப் பத்திரியும் சூரணித்துக் கொடுக்க நிவர்த்தியாகும். a disease of women marked by a white discharge through vegina. This is cured by taking the mixed powder of cardamon and cinnamon leaf.

சோமலதை, கொடிக்கள்ளி, creeping milk hedge. 2 see சோமப்பூடு.

சோமவட்டம், அமிர்தம் சிந்தும் புருவ மத்தி, the mystic centre between the eye brows from which nector is said to drip through the hole in the palate into the bucal cavity.

சோம வலகம், பார்ப்பை, which see. 2. சீந்தில், see சோமவல்லி.

சோமவலக்கம், பெருங்குமிழ், Cashmere tree, white teak- Gmelina arborea -G.tomentosa.

சோமவலக்கலம், வெண் கருங்காலி, see சோமசாரம்.

சோமவல்கா, பார்ப்பை, which see.

சோமவல்லரி, பொன்னாங்காணி, see சோமகண்ணி.

சோமவல்லி, சீந்தில் moon creeper- Menispermum cordifolium, 2. கார்போகவரிசி, see சோமராசி 3. புகல், bitter gourd 4. ஓமை, which see.

சோமவாலி, பெருங்குமிழ், see சோமவலக்கம்.

சோம விருட்சம், சிவகிரியின் மேலுள்ள ஓர் கற்ப விருட்சம், an unknown tree said to be found on the top of Sivagiri hills (Madurai or Tinnavelli Districts) It is useful in rejuvenation.

NOTE:- It is not definitely known 1. If this tree is the same as சோமப்பூடு soma plant which is also useful for rejuvenation; 2. If it is the same as சோதி விருட்சம் Some writers and commentators go to the extent of stating that சோதி (tree of light) போதி (tree of knowledge) and Soma (tree of moon) are all one and the same and cannot be different although called by different names.

சோமவுலுக்கம், தேக்கு, teak wood- Tectona grandis.

சோமனாசி, see சோமநாதப் பெருங்காயம்.

சோமனுப்பு, இந்துப்பு, rock salt; 2. பச்சைக் கற்பூரம், crude camphor; 3. நீல பாஷாணம்; a kind of prepared arsenic.

சோமனோய், (சோமன் + நோய்) see சோம நோய்.

சோமன், அமுதம், nector, 2. கற்பூரம், camphor, 3. சிலேட்டுமம், phlegm (charaka) 4. காற்று, wind 5. தண்ணீர் water 6. சவர்க்காரம், soap; 7. நீலபாஷாணம், a prepared arsenic; 8. வெள்ளி

மணல், sand mixed with silver ore; 9. சந்திரன், moon, 10. செம்பு, copper, 11. பச்சைக் கற்பூரம், crude camphor; 12. மலை, mountain, 13. a sympol of mildness, contantment and satisfaction.

சோமன் ரவிவன்னியானோன், சவர்க்காரம், soap.

சோமாக்கியம், செந்தாமரை, red lotus, 2. செவ்வல்லி, red Indian waterlily.

சோமாறுதல், ஒருத்தியைப் பல பேர் புணர்தல், several copulating a woman.

சோமேஸ்வர ரசம், சோமநாத ரசத்தைப் போலவே தயாரித்து எடுத்த ஓர் ஆயுர்வேத மருந்து, இது பெண்கள் வெள்ளை ஒழுக்கு மற்றும் உண்டான பெண்களின் மேக ரோகத்திற்கு கொடுக்கப்படும் மருந்து. an Ayurvedi medicine useful for white discharge of women. It is prepared in the same manner as Somanatharasam can be used for venereal diseases.

சோமேதா, see சோமதனம்.

சோம்பாக்கு, சோம்பை வாலையிலிட்டு இறக்கிய தீநீர். distilled liquid of anise seeds, see சோம்பு தீ நீர்.

சோம்பரை, சோம்பல், laziness, drowsiness.

சோம்பலம், சேரான் கொட்டை, marking nut- Semicarpus anacordium.

சோம்பல், see, சோம்பு, 2. அலுப்பு, drowsiness, 3. மயக்கத்தைத் தரும் வைசூரி, smallpox causing stupor; 4. சேங்கொட்டை, marking nut, see சோம்பலம், 5. வாதகப தோஷம், தமோ குணம் இவற்றின் சம்பந்தத்தினால் உண்டாகும் மயக்கம், a lethargic state experienced as a result of the affection of morbid changes due to the combrination of deranged humours Vatha (wind) and Phlegm (Repam) along with Tamas (தமோ குணம்).

சோம்பற்றழும்பு, அம்மைத் தழும்பு, scar or pitted marks of small pox.

சோம்பாகம், பிள்ளை மருது, flowering murdah — terminala paniculate.

சோம்பிப் போதல், வாடுதல், drooping whithering.

சோம்பு, பெருஞ்சீரகம். இது சோம்புச் செடியின் விதை. இது வட இந்தியாவிலும் பாரசீகத்திலும் விசேஷம் ஆகையால் அவ்விடங்க ளினின்றும் இறக்குமதியாகும். எல்லா கடைகளிலும் கிடைக்கக் கூடிய சரக்கு. இது பசுமை கலந்த மஞ்சள் நிறம், சிறுதித்திப்பு, கார வாசனையுள்ளது. இது மருந்திலும் கறி மசாலையிலும் சேரும். இது சீரகத்தைப் போல் வாசனை பொருந்தியது. மலத்தை இளக்கக் கூடியது. நீரை வடிக்கும் சீரண சக்தியையும் வியர்வையையுமுண்டாக்கும். வயிற்றுக்கு நல்லது. யூனானி வைத்தியர்கள் இதைக் குழந்தைகளுக்கு அதிகமாக பிரயோகிப்பார்கள். இதினின்று புகை நீர் தயாரிக்கப்படும். மூத்திரத்தையும் வியர்வை யையும் அதிகமாகச் சுரப்பிக்கும். வயிற்று வலி, வயிற்றுக் குமட்டலை நீக்கும். முலைப்பாலை அதிகமாகச் சுரப்பிக்கும். மூத்திரத்தைத் தெளியச் செய்யும். உதிரவாதத்தைப் போக்கும். இதன் கஷாயம் பெண்கள் கர்ப்பவலியை நீக்கும். இதைத் துவையலாகச் செய்து சுரசாந்திக்குக் கொடுக்கலாம். சரும நோய்களுக்கு இத்துடன் சர்க்கரை, கிராம்பு, உலர்ந்த புளி இவைகளைச் சூரணமாகச் செய்து உபயோகப் படுத்தலாம். இதன் சூரணம் வயிற்று வலி, வயிற்றுப் பொருமல், வயிற்றுப் பிசம், சுரம், இருமல், பீநிசம், தும்மல்,

இவைகள் போகும். வாலையிலிட்டு வடித்த இதன் தைலம் மஞ்சளாயும், வாசனை யாயும் தித்திப்பாயு மிருக்கும். இது வயிற்றில் உஷ்ணத்தை உண்டாக்கி பசியை அதிகப்படுத்தி குன்மம் இவைகளைப் போக்கும். இத்தைலம் தலையில் பேன் பிடித்திருந்தால் போக்கும்.

இதன் பூ வாசனையாய் இருக்கும். குழந்தைகளுக்குக் காணும் வயிற்று வலி, வயிற்றுப் பொருமல், கக்கிருமல் இவற்றைப் போக்கும். இதை வாலையிலிட்டுத் தீநீர் இறக்கலாம். இது உடம்பிற்கு சூடு உண்டாக்கி உதாவாதத்தைப் போக்கும். anise seed Pimpinella anisum- This is the seed of the plant Pimpinella. It is a well known herb cultivated abundantly in Northern India, and Persie and is imported from those places to Southern India. It is a bazaar drug and so procurable in all the bazaars. It is green mixed with yellow auromatic, sweeatsh and warm tested. It is useful in Medicine and an ingredient in the curry spices, it is a laxative diuretic, carminative and stomachic. It is frequently used by the hakeems for children. A liquid is distilled from this and is much used in colic and nausea. It is increases secretion of milk from the woman's breast and purifies the urine and cures rheumatisum arising from impurities of blood. A decoction of this seed is a good remedy in uterus complaints. Seeds are used in confectionery and chutney made of them are useful in fever, mixed with sugar, clove and dried tamarind and pulverised, it forms a useful application for skin disease. The powder of this seed is employed with great advantage in colic, rumbling noise in the stomach, (Flatulence, fever, cough, catarrh of the nose, sneezing etc. Essential oil obtained by distilling seeds with water, is aromatic, yellow and slightly sweet, it is a stimulant, stomachic and digestive. When anointed in the head, it kills the louse. Its fragrant flowers are a good remedy for children's diseases such as colic, flatulence, whooping cough etc. Flowers can also be distilled and used as a stimulent. It cures all rheumatic complains arising from impurities of blood.

NOTE:- Seeds are often confounded with sweet fennel seeds. It is also known as sweet cumin. It is chiefly imported from Persia it is the oldest of medicines and spices. Seeds allay griping of purgative medicine hence such purgatives are useally given with their decoction.

சோம்புச்சூரணம், இதை இடித்துச் சூரணம் செய்து சமன் சர்க்கரை கூட்டிச் சித்திரை முதல் ஆவணி வரை சாப்பிட அவ்வருட முழுமையும் நோய் வராது. if the powder of anise seeds mixed sugar is taken for four months from the middle of April one can remain healthy from disease, for the next eight months.

சோம்புதல், வாட்டங்கொள்ளல், withering as of a paralysed limb; 2. வாடுதல், droping as of plants; 3. அறிவு குன்றல் being lethargic; 4. சோம்பலடைதல், becoming idle; 5. கெடுதல், being marred.

சோம்புத் தீநீர், பெருஞ்சீரகத்தை வாலையிலிட்டு இறக்கிய திரவகம், distiled liquid from anise seed. see சோம்பரக்கு.

சோம்புத்தைலம், பெருஞ்சீரகத்தினின்று வடித்த எண்ணெய், essential oil obtained by distilling anise seeds with water- Oleum anise.

சோம்பூசிகம், கருப்பு மந்தாரை, black mountain ebony, -Bauhimia genus.

சோம்பேறி, சுவர்ணபேதி, a mineral liquid capable of dissolving gold- Aquaregia, 2. சோம்பி, a lazyman.

சோம்பேறித்தனம், சோம்பல் குணம், sluggishness.

சோயவபலம், மூங்கிற் குருத்து, shoots of bamboo tree- Bambuso arundinacea.

சோயா அவரை, ஓர் வகை அவரை, Soyabean.

சோயிக்கீரை, சதகுப்பி, சோகிக்கீரை, which see.

சோய்வு, சோர்வு, fatigue.

சோரகம், ஓர் புல், a kind of grass- Andropogon acicularis, benificial in insanity.

சோரத்தண்டு, கருவண்டு, a kind of black battle.

சோரக்கறி, சின்ன துவரை, small leaved ebony- Diospyeos macrophylla.

சோரக்குரு, நாரிகக்கிலம், semen of females, 2. பெண்ணின் முதல் ருதுவோடு ஆண் பெண் கூடுவதால் உண்டான விந்து நாதத்தையும் சேர்த்து சித்த நூலிற் சொன்ன பல கடைச் சரக்குகளையும் அத்துடன் சேர்த்து வெய்யிலில் வைத்து சூரிய புடத்தில் இறக்கியவோர் குருமருந்து. இது வேதைக் குதவும். to the first menustrual blood mixed with the combined semens obtained from the sexual intercourse of man and woman is added different ingredients- medicinal drugs- as contemplated in Siddha's science and the whole product is exposed to the sun when the highest essence useful for alchemy is said to be obtained.

சோரங்க பாஷாணம், ஓர் வைப்புப் பாஷாணம், a kind of prepared arsenical poison.

சோரங்கொடுத்தல், பெண்ணைக் கூட்டிக் கொடுத்தல், offering

woman for the lust or the gratification of others- Pimping

சோரசத்துரு, சவ்வீரம், அதாவது சோர பாஷாணத்தின் சத்துரு, sublimate of mercury which is an antidote to (சோர பாஷாணம்) a kind of prepared arsenic.

சோரசெந்தூரி, நாகதாளி, இது சோரபாஷாணத்தைச் செந் தூரிப்பதாலிப் பெயர் a plant of the convolvulus genus (undiéntified) capable of calcing சோரபாஷாணம் (a kind of of arsenic) into a red oxide.

NOTE: நாகதாளி is not the prickly-pear plant as is given out by many authors.

சோரத்தனம், வியபிசாரம், adultery.

சோரத்திரீ, விபசாரி, prostitute.

சோரத்துவம், see சோரத்தனம்.

சோரத்தேய்தல், எண்ணெய் அல்லது தைலம் மயிர்க் கால்களின் வழியாக சேரும்படி தேய்த்தல், rubbing an oil or medicinal oil or ointment so as soak through the hair follcles.

சோரத்தோய்த்தல், வாத முறைப்படி மருந்துக்கட்டி அல்லது மருந்து முடிச்சி, உலோகக் கட்டி இவைகளைச் செயநீர், திராவகம் முதலியவற்றில் சேரும்படி பலமுறை அமிழ்த்தி எடுத்தல், (in Alchemy) dipping or immersing a mass or lump of medicine or a medicine tied up in a cloth or a piece of metal, into a synthetic pungent fluid known as philosophers fluid or acid etc. several time so as to absorb the fluid and get soaked or saturate in it.

சோர நாயகன், கள்ளப்புருஷன், paramour.

சோரபத்திரி, ஓர் சரக்கு, a drug-Myristica attenuata.

சோரபாஷாணம், வைப்புப் பாஷாணம், 32-ல் ஒன்று one of the 32 kinds of prepared arsenic according to Tamil Siddha Medicine. இது நாகபாஷாணம் தயாரிக்கும் போது பாண்டத்தின் பக்கத்தில் நின்றது. It is a byproduct obtained while preparing Naga Pazhanam.

சோரபுட்பம், சங்கங்குப்பி, smooth volkameria- Clerodendron inceme.

சோரபுட்பி, see சோரபுட்பம்

சோரபேதி, அஞ்சன பாஷாணம், a kind of native arsenic.

சோரப்பார்வை, புணர விருப்பங் கொள்ளும் பார்வை, amorous look — Ogling.

சோரப் புணர்ச்சி, கள்ளப் புணர்ச்சி, illicit intercourse.

சோரமார்க்கம், வியபிசாரம், adultery.

சோரம், see சோரபாஷாணம், 2. கோடாசுரி, which see; 3. நாகம், zinc; 4. மாதவிடாய், menstrual blood; 5. கற்பழித்தல் அல்லது வியபிசாரம், adultery.

சோரம் போதல், கள்ளப்புணர்ச்சி செய்தல், commetting adultery.

சோரல், சோர்தல், fainting.

சோரன், ஆட்டுக்குட்டி, lamb, kid, 2. வெடியுப்பு, nitre, 3. சவ்வீரம், corrosive sublimate; 4. நாகம், zinc, 5. வியபிசரிப்பவன், adulterer.

சோரன் கிழங்கு, பூமிசருக்கரை கிழங்கு, ground sugar root.

சோராக்கண துடிப்பு, கண்ணின் பாவைக்கடுத்துக் குத்தல் உண்டாகி, இமை கனத்து, நீர் வடிந்து, கிடைக் கொள்ளாமலும், தூக்கம் பிடிக்காமலும் அடிக்கடி கண் சிவந்து துன்புறுத்தும் ஓர் கண்ணோய், an eye disease marked by irritation of the lens, boring pain swelling thickening of the eye lids, watery discharge, restlessness, sleeplessness, frequent inflammation of the eyes etc.

சோராஞ்சனம், களவு போன சொத்தைக் கண்டு பிடிக்கவும் பெண்களை வசியப் படுத்தவும் உபயோகிக்கும் ஓர் மாந்திரீகமை, a magic paint used for tracing stolen property and for captivating women.

சோரபுட்டம், see சோராபுட்டம்.

சோராவரி, பலாத்காரம், out raging as on a woman's modesty.

சோரி, இரத்தம், blood 2. மழை, rain, 3. சிறுசெருப்படை, a low spreading medicinal plant-Coldenia procumbens; 4. கொடிக்கள்ளி, creeper milkhedge- Sarcostemma brevistigma.

சோரிக்கடுப்பு, இரத்தக்கடுப்பு, irritation and pain while passing stools mixed with blood.

சோரிக்கட்டி, உடம்பின் கொதிப்பினால் கோடைக் காலத்தில் எழும்பும் கட்டி, summer boils arising in several parts of the body; 2. இறுகின இரத்தம், clots of blood-Crassamentum.

சோரிக்கட்டு, சூதகக் கட்டு, suppression of menses-Amenorrhoea.

சோரிநார், இரத்தம் உறைவதினால் இரத்த நீரிலுண்டாகும் நார் போன்ற ஓர் வஸ்து, a peculiar organic fibre like substance found in serous fluids of the body owing to congelation of blood- Fibrin; 2. இரத்தம் உறையும் காலத்தில் இரத்த நீரிலுண்டாகும் வஸ்து அதாவது வர்ண மற்ற திரவ நீர், liquor sanguines.

சோரிப்படர்த்தி, வெள் விழியில் இரத்தம் குழம்பும்படி செந்நிற சதையை வளர்க்கச் செய்யும் ஓர் கண்ணோய், a disease of the eye marked by reddish growth of flesh in the sclerotic coat.

சோரியிளநீர், இரத்த வர்ண செவ்விளநீர், இதனால் குடலிலுள்ள பூச்சி- பாம்புக் கிருமி, சன்னக் கிருமி (திமிர் பூச்சி) இவை போம் water of reddish tender cocoanut. When drunk snake worms (round worms) minute worms (thread worms) in the intestine will be destroyed.

சோரியோமம், சிவப்பு ஓமம், இது ஓர் கடைச் சரக்கு, a red variety of sison or bishops weed.

சோரிவரி, இரத்தப் படலம், அதாவது கரு விழியில் கடைக் கண் வரைக்கும் சிவப்பு வரி படர்ந்த ஓர் கண்ணோய், an eye disease characterised by red lines or streaks or cornea as wellas sclerolic coating of the eye.

சோரி வீழல், இரத்த பீனசம், அதாவது மூக்கில் வரும் இரத்த வொழுக்கு, bleeding of the nose, epitaxis-Rhinorrhagia.

சோருதல், see சோர்தல்.

சோர், see சோர்தல்.

சோர்கண் துடிப்பு, விழி கடுப்பு, இமைக்குத்து வலி, தூக்க மின்மை, நீர் வடிதல் ஆகிய குணங்களுடன் கூடிய கண்ணோய், an eye disease characterised by irritating pain sleeplessness, and oozing of tears.

சோர்ச்சி, சோகம், to be depressed; 2. தளர்ச்சி, to feel weak.

சோர்தல், தளர்தல், being exhausted, 2. மனந்தளர்தல், being depressed in mind; 3. மூர்ச்சித்தல், swooning; fainting; 4. கசிதல், oozingout, exuding, 5. வாடுதல், whithering; 6. மெலிதல், getting emaciated 7. இறத்தல், dying; 8. தள்ளாடுதல், tottering through old age; 9. எண்ணெய், தைலம், இவைகள் உடம்பில் ஊருதல், absorbing of oil, medicated oil etc. in the body, when rubbed; 10. தடுமாறல் faltering in speech; 11. கண்ணீர் சோர்தல், shading tears; 12. அழிதல், to get destroyed 13. விழுதல், to fall; 14. துயர் உறுதல்; to be struck with grief.

சோர்ந்த கால் கை,உணர்ச்சியற்று சோம்பிய கால், கை. whithered; atrophied or paralysed limbs.

சோர்பதன், தளர்ந்த காலம், one's weak moments.

சோர்பு, see சோர்வு,

சோர்பொழுது, மாலைப்பொழுது, evening time.

சோர்பௌவம், நறும்பிசின், fragrant resin.

சோர்வடைதல், பலவீனத்தால் களைப்படைதல், getting exhasted through weakness.

சோர்வாதம், கால், கை உணர்ச்சியற்று அயர்ச்சியை உண்டாக்கி விழச் செய்யும் ஓர் வாத நோய், paralysis causing loss of power, in the limbs; 2. திமிர் வாதம், palsy.

சோர்வு, பலக்கேடு, palsy; 2. நரம்புத் தளர்ச்சி debility, nervous break down; 3. மறதி, forgetfulness; 4. அயர்ச்சி, faintness; 5. உணர்ச்சியின்மை, loss of sensation as from paralysis; 6. மெலிவு weakness; 7. விபச்சாரம், debauchery.

சோர்வு காலம், மனவுறுதியற்ற காலம், weak moments, 2.

பலவீனமாயிருக்கும் வேளை, time of weakness attending the body.

சோலிக்காய், கற்றேக்கு, racemed fishbone tree- Dillenia bracteata.

சோலை, உலாவுவதற்காக, குளிர்ச்சியைத் தரும் பல மரம், செடிகள் வைத்துப் பயிராக்கிய தோட்டம், a park or a place of amusement or recreation consisting of several flower and fruit bearing plants and trees for rendering the place cool; 2. நந்தவனம் flower garden; 3. மலை, mountain, 4. ஓர் பூடு, tetrameles nudiflora.

சோலை கொடுக்காய்புள்ளி, சோலைப்புளி, hill tamarind-Garcinia zanthochymus or G.morella; 2. மஞ்சள் நாங்கு, obtuse rounded leaved zanthochymus, a kind gamboge-Garcinia spicata (ovalifolia)

சோலைப்பாக்கு, வங்காள தேசத்தில் பயிராகும் செடி. இதன் பூ சமைத்து உண்ணப்படுகிறது. விதை பேதியாகும். It is grown in Bengal. Its acid and astrigent spadic is eaten in curry seeds are purgative-Artocarpos lakoocha.

சோலைப்புளி, இரேவற்சின்னி அல்லது கொழும்புப்பிசின், ceylon gam boge or siam gamboge, see சோலைக் கொடுக்காய்புளி.

சோலைமரம், see சவுக்குமரம்.

சோலை வெண்தேக்கு, சௌந்திரிகை, looking glass plant of S.ghauts- Heriteria papilio.

சோலை வேங்கை, காட்டுச் சாதிக்காய், wild mace-Myristica malabarica.

சோவன்னமில்பொறி, பாதாள கருடன், common snake dogbane- Rauwolfia serpentina,

சோவி, பலகறை, cowry.

சோவை, சோகை, anaemia; 2. உடம்பின் நீர்க்கோவை அல்லது பாண்டு dropsy.

சோழகம், தென்றல், the gentle south wind.

சோழங்க பாஷாணம், ஓர் வகை வைப்புப் பாஷாணம், a kind of prepared arsenic.

சோழி, பலகறை, cowrie, see சோகி.

சோழிப்பல், பலகறையைப் போன்ற பல், tooth like cowry.

சோழியப்பல், see சோழிப்பல்.

சோளகாண்டம், நீர்க்கடம்பு, water cadamba female cadamba —stephygyne parvifolia, Nauclea Orientalis.

சோளச்சாதம் சோழச்சோறு, food prepared from maize; 2. சோளக்கூழ், liquid food or puddings prepared from maize.

சோளச்சொறி, சோளக்கூழ் அதிகமாகக் குடிப்பதால் உடம்பில் ஏற்படும் சொறி சிரங்கு, a kind of skin disease due to the free use of maize as principal food -Pellagra-Zeisin or -Zeismus.

சோளச்சோறு, சோளச்சாதம், boiled maize.

சோளம், நாட்டுச் சோளம், இது கரும்பைப் போல் வருஷத்திற்கு ஒருமுறை களிமண் நிலங்களில் பயிராகும். இது தென்னிந் தியாவில் சாதாரணமாய் எங்கும் விளையக் கூடியது. இது 8-10 அடி உயரம் வளரும். தண்டு நேராகவும், ஒவ்வொரு தாளிலும் கதிர்கள் விடும். ஒவ்வொரு கதிரும் மக்கா சோளத்தைப் போல நீண்டிருக்கும். ஆனால் அவ்வளவு செழிப்பாக இராது. சிலக் கதிர்கள் தலைப்பக்கம் மிகவும் கனதியுள்ளதால் கீழே விழாதபடி பக்கத்துச் செடியை

உதவியாகச் சேர்த்துக் கட்டுவதுண்டு. இத்தானியம் மிகவும் கடினமானது. இதற்கும் மக்காச் சோளத்திற்கும் மிக்க வித்தியாச முண்டு. இதன் விளைவு மழையை அனுசரித்தே நிற்கும். இது நட்டு 4-5 மாதத்திற்கெல்லாம் வெட்டிவிடலாம். நன்செய் நிலங்கள் பயிரிட உதவாமற் போன காலத்து இதைப் பயிரிடலாம். இதன் கூடவே துவரையும், பச்சைப் பயிறும் தெளிப்பதுண்டு. இது மேட்டுப் பூமியில் பயிரிடுவோர்களுக்கு தகுந்த உணவாகும். இதன் மாவை அடை தட்டலாம். இதைச் சுட்டும் தின்னலாம். இதைச் சில பாகங்களில் களியாகக் கிண்டி உப்பும் மிளகாய்த் தூளும் சேர்த்துச் சாப்பிடுவதுண்டு. இதன் இலையும், தட்டையும் மாடுகளுக்கு உணவாகக் கொடுப்பதுண்டு. இத்தானியத்தினின்று கஞ்சாம் தேசத்தில் மதுபானம் இறக்குவார்கள். இது நமைச்சல், சொறி, சிரங்கு இவைகளை உண்டாக்கும். இதில் அநேக வகைகள் உண்டு. அவையாவன:

Great Indian millet- Sorghum vulgaris alias Holcus saccharatus. It is an annual plant like sugarcane, commonly cultivated in South India in black loamy soil, 8-10 ft. culms erect. In each stalk will be found a dense head of spike lets bearing numerous corn grains, similiar to Indian corn *(மக்கா சோளம்)* but it is not so strong in grwoth as the latter, the heads of some kinds are so heavy that three or four stems have to be tied together near the top for mutual support, the grains are very hard, little different from maize *(மக்கா சோளம்)* in chemical composition. The crop is mostly dependant on rain and it is cut after four or five months, the grain is separated from chaff by beating with a sticks and by winnowing fans. In places where the arid soil and the

scorching influence of the sun are incongenial to the production of other grains, this millet can be most successfuly cultivated. Red gram and green gram are often shown with it. It froms the principal article of food among agricultural classes in the table land, the meal is often made into cakes and the grains are parched and eaten. In some places it is made into a paste *(களி)* and eaten mixed with salt and chillies. It is useful to have the chatney *(சட்டினி)* made of gingelly seeds-seasame seeds or greengram sauce as a side dish. This will prevent to a certain extent the skin disease that useally occurs when this millet forms the principal or staple diet. An intoxicating drink called pachwye is made from this grain in Ganjam. Dry stalks and leaves are chopped into small bits and given to cattle as fooder.

1. சிவப்புச் சோளம் அல்லது செஞ்சோளம், red great millet-Holcus rubens.

2. வெள்ளைச் சோளம், white great millet- Andropogon sorgum.

3. கருப்புச் சோளம், black great millet- Sorgum nigrum.

4. மஞ்சட் சோளம், yellow great millet.

5. மக்காச்சோளம், mecca great millet or Indian corn-Zeamays.

6. சீமைச் சோளம், maize- Mays americana.

7. மப்புச் சோளம், hard maize causing indigestion- Holcus dona.

8. இறுக்குச் சோளம், sweet or sugar millet, American broom corn-Sorghum saccharatum.

9. முத்துச் சோளம், சோளம், Great millet- Sorghum vulgare.

10. காக்காய்சோளம், crow cholam.

11. பேய்ச் சோளம், wild sage, wild cholam- Santana indica.

12. துலுக்கச் சோளம், turk great millet - Zea altissima.

சோளம், மக்காச்சோளம், இது போன்ற வகைகளிற் சிறந்தது. இது தென்னிந்தியா, மத்திய இந்தியா, அமெரிக்கா முதலிய இடங்களில் விளையும். ஆனால் பஞ்சாப், அயோத்தி, ஜப்பான், சைனா, ஐரோப்பா, பெருவியா, மெக்ஸிகோ இவ்விடங்களில் விசேஷம். இது 4-5 அடி உயரம். அடிபாகத்தில் ஒன்று அல்லது பல கிளைகளுண்டு. இலைகள் அகலம், தட்டை, ஒவ்வொரு தாளிலும் 4-5 அங்குல நீளமிருக்கும். இக்கதிர் மட்டைக்குள் இருக்கும் இத்தானியம் உருண்டையாயும், வாசனை அற்றதாயும் உருசிக்கச் சப்பென்றும் இருக்கும். பச்சைச் சோளம் காய்கறியோடு சேர்த்துப் பட்டாணியைப் போல் சமையல் செய்யலாம். இச்செடியை சர்க்கரை எடுப்ப தற்கும் உபயோகப் படுத்தலாம். முற்றிய விதையை நெருப்பில் சுட்டுத் தின்னலாம். இதன் நொய்யை மாவாகச் செய்து குழந்தைகளுக்கும் நோயாளி களுக்கும் கொடுக்கலாம். இத்தானியத்தைப் பொரியாக பொரித்து சர்க்கரையுடன் கலந்தும் உண்ணலாம். பஞ்சாப், அயோத்தி, வடமேற்கு மாகாணங்களில் இச்சோளத்தை அரிசி போல சமைத்தும், கூழாகக் காய்ச்சியும் உண்பதுண்டு. தென்னிந்தியாவில் இதைச் சமைத்துச் சாதமாகக் கொள்வார்கள்.

ஐரோப்பிய, அமெரிக்க தேசங்களில் நாகரீக மேம் பாட்டினால் ஆடு, மாடு, கோழி, வாத்து முதலியவை களுக்குத் தீனியாகப் போடுவார்கள். இதன் புற விதழ்களில் இருந்து ஜெர்மனி, ஆஸ்திரியா, அங்கேரி இவ்விடங்களில் காகிதம் செய்வார்கள்.

இச்சோளத்தின் மாவைக் களிப் போல் கிண்டி இரணங்களுக்கு வைத்துக் கட்டவும், கஞ்சியாகக் காய்ச்சி நோயாளிகளுக்குகொடுக்கவும் உபயோகப்படும். இதை யுனானி வைத்தியர்கள் அதிக சத்துள்ள தென்றும் க்ஷய ரோகத்திற்குச் சாப்பிட்டால் குணப்படும் என்றும் அவர்கள் அபிப்பிராயம். இக்கதிரில் தொங்கும் பட்டுக் குஞ்சம் போன்ற வஸ்துவைக் கஷாயமிட்டுக் கொடுக்க நீரடைப்பு, நீர்ச் சுருக்கு முதலான நோய்கள் குணப் படுமென ஆங்கிலேயரின் அபிப்பிராயம். இதன் தட்டையை எரித்த சாம்பலுடன் சோற்றுப்பை கலந்து கொடுக்க நெஞ்சு சளி, கக்குவான், இருமல் முதலிய நோய்களுக்குச் சிறந்ததென கொள்ளப்படும். Macca cholam, Indian corn, maizc Zea mays. It is the most superior among Indian corns. Although a native of South America. It is also cultivated in South India Central India and other places but in Punjab, Oudh, Jappan, China, Europe, Peruvia and Mexico it is abundantly obtained. The plant is 4.5 ft. high, the stem below is generally furnished with signle or many sperding branches in every stalk. Sheat 4 to 5 spathe form bears a dense head of closely packed grains 4-9 inches long esclosed in a sheath Grains are rounded, smooth inrdorous and insipitia. The greens cobs are gathered and cooked with vegetables like pea, plant is

also emplyed in the manufacture of sugar, ripened grains are usually roasted infire and eaten dried before a fire and ground into a meal for making porridge which being very nutritious is given to children and convalescents. The grain is also fried and removing the husk, mixed with sugar and eaten. In Panjab, Oudh and N.W. Provinces it is used as staple food by cooking it like rice or by boiling as a pop but in S.India it is boiled and taken like rice.

In Europe and America owing to advanced civilization it is condemmed for human consumption as food but used for feeding poultry and cattle. In Germany, Austria and Hungary the outer sheaths are selected for the manufacture of paper. In medicine the meal is boiled into a paste and used as a poultice for wounds and the pap prepared with it may be taken abdibitum by patients. It is much esteemed by Hakeems- Unani doctors and is prescribed by them for consumption, being very nutritious. Decoction of the bunch of filaments enclosed in the cob is said to be a useful remedy in cases of stranguary and dysurea as opined by English doctors. The stalk burn to ashes and mixed with the common salt is a useful remedy in cases of phlegm in the chest, whooping cough, simple cough etc. occurring in children.

NOTE: This millet contains about 9 percent of nitrogenous matter and 70 percent of starch. The plant is very nutritious and it contain 6 to 7 percent of a yellowish fat. It also yields a fibrous material capable of being spun and woven like flax.

சோளம், *சங்கஞ்செடி*, four spined monetia - Monetia barberioides.

சோளன், see *சோளம்; 2. மக்காச்சோளம்*, Indian corn- Zea mays.

சோறாக்கழிகிராணி, *உண்ட சாதம் செரியாமல் சோறு சோறாய்க் கழியும் ஓர் வகைக் கிராணி*, a kind of chronic diarrhoea in which food taken simply finds its way in purging without being digested.

சோறாக்குதல், *உணவு சமைத்தல்*, cooking food.

சோறாய்க்கழிதல், *உண்டவுணவு செரியாமற் கழிதல்*, purging the food taken without thes same being digested.

சோறி, see *செந்தொட்டி*.

சோறு, *அன்னம்*, cooked, rice; 2. *கற்றாழைச்சோறு*, aloe pulp; 3. *பனை முதலியவற்றின் சதைப்பற்று* pith in palms etc. 4. *தலைமடலின் உள்ளீடு*, filaments as of the flower of screwpine; 5. *பூஞ்சுண்ணம்*, soft portion of lime.

சோறு கொல்லி, *அன்னபேதி*, green vitriol; 2. *அதிகமாகச் சாப்பிடுபவன்*, one who indulges in excess eating of rice etc.

சோறுண்பருவம், *குழந்தைகள் அன்னம் உண்ணத்தகுந்த காலம்* period fit for taking rice.

சோறுவகை, *பலவகையான சோறும் அதன் குணமும், அடியிற்கண்டவாறு*, the different kinds of cooked rice with their charactaristics as under:-

1. *அசுசி சோறு சுத்தமில்லாத அருவருப்பைத் தரும் சோறு. அதாவது கல், மண், உமி, மயிர், கிருமி முதலிய வைகளைச் சரியாக களையாது அவற்றுடன் சமைத்த சோறு, இதை*

உண்பதால் குமட்டல், அரோசகம், குன்மம், பேதி யுண்டாகும். cooked rice prepared without properly removing the foreign bodies like small stones, husk, worms, hair etc., not cleanly cooked rice, this causes nausea, pain in the stomach and diarrhoea.

2. அதிசுடுகை சோறு, அதிக சூடாயுள்ள சோறு, இதனை நித்தியமும் புசித்து வந்தால், இரத்த பித்தம், தாகம், பிரமை, மதரோகம் இவை உண்டாகும். If very hot cooked rice is eaten daily, it vitiates blood and bilious humour and causes blood to ooze out through skin, anus or nose, thirst and mental affections.

3. அற்ப சுடுகை சோறு. கொஞ்சம் சூடாயுள்ள சோறு. இது உத்தமத்திலும் உத்தமம். சரீரத்துக்குவன்மை தரும். வாத பித்த கபங்களினாலும் பீநசத்தி னாலும் விளைகின்ற நோய் களையும் அரோசகத்தையும் போக்கும். cooked rice which is slightly hot or warm is the best for health, it cures nausea, anorexia and other diseases caused by each of the three humours.

4. உலர்ந்த சோறு, நீண்ட நேரம் திறந்து வைப்பதால் காற்றினால் ஆறி வறட்சியான சோறு. இதனால் விதுமா சீரண ரோகம் உண்டாகும். due to long exposure, the cooked rice gets dried up or parched and causes indigestion called vidumum.

5. ஊசிய சோறு, நீண்ட நேரம் மூடி வைத்திருப்பதால் நொந்து, நூலிழைந்த சோறு. இதைப் புசித்தால் உடனே தூக்கம் வரும். ஒவ்வொரு தோடமும் விருத்தி யடையும். cooked rice by keeping in a closed vessel for a long time becomes moistened and sticky, this when consumed will at once cause drowsiness and sleep each of the three humours will increase and get vitiated.

6. கட்டுச்சோறு, தயிர் அல்லது பக்குவப்படுத்திய எலு மிச்சைப் பழச்சாறு அல்லது பக்குவப் படுத்திய புளிச்சாறு அல்லது இவை போன்ற ஒன்றுடன் கலந்து இலையிலாவது, தக்கப் பாத்திரத்திலாவது கட்டி முடிந்த சோறு. see கட்டமுது, இதை நித்தியமும் புசித்து வந்தால் தேகமுற்றிலும் குத்தல், சுக்கிலாஸ்மரி, இரைப்பு, இருமல், கண்டமாலை முதலிய ரோகங்கள் உண்டாகும். cooked rice mixed with curd or prepard lime fruit juice or prepared tamarind juice or one of such things and packed in leaves or proper vessel, this when consumed daily for a long period causes pricking pain all over the body, cancretion (Stone formation) of semen asthma, cough, glandular swelling etc.

7. காந்தல் சோறு, சமைக்கும் போது பானையில் போதுமான நீரில்லாததாலும் அதிக தீயாலும் பானையின் அடி பாகத்தில் தீய்ந்து போன சோறு. இது அசீரண ரோகத்தை உண்டாக்கும். on account of excess of fire and want of sufficient water the cooked rice gets charred at the bottom of the vessel. The cooked rice causes indigestion.

8. குழைந்த சோறு. அதிகமாய் வெந்து, அழிந்த சோறு, வாத பிரமேகம், இருமல், அக்கினிமந்தம், துர்பலம், பீநசம் இவைகளை உண்டாக்கும். over boiled rice, courses cough, loss of

appetite, extreme loss of strength, diseases of the nose etc.

9. சுத்த சோறு. குற்றமில்லாது சமைத்த சோறு. இதைக் கீழ்கண்டவாறு சமைக்க வேண்டும். பழைய அரிசியைத் தவிடு, நொய், நெல், கல், மண், உமி, பூச்சி முதலியவைகளைப் போகும் படி தீட்டிமுழு அரிசியாக ஆய்ந்து எடுத்து இள வெந்நீராற் கழுவி, சுத்த துணியிற் கொட்டி, சற்றே ஆரவைத்து, ஒரு பாண்டத்தில் அரிசிக்கு மூன்று பங்கு நீர் விட்டு அடுப்பேற்றி அது நுரைக்கட்டிக் கொதிக்கும் போது அந்த அரிசியை அதிற் போட்டு, முக்கால் பாகமாக வெந்தவுடன் கரண்டியால் துழாவி வடித்துக் கொண்டு மறுபடியும் தணலில் வைத்துப் பக்குவமாய் இருக்குஞ் சமயத்தில் இறக்கிக் கொள்வதாம். இந்த அன்னம் மூவிததேகி களுக்கும் உதவும். இது பத்தியத்திற்கும் வாதகி மூவித நோய்களுக்கும் ஆகும். அன்றியும் குடலைப் பற்றிய சகல நோய்களும் விலகும்.

clean cooked rice, it is prepared as follows; old rice is freed from broken rice paddy and foreign bodies and is washed in clean lukewarm water and spread over a clean cloth. Water, three times the volume of rice is boiled in a suitable vessel. When boiling the rice is added. When the rice is three fourth cooked. stir it well with a paddle or long spoon take it out from the oven and decant the liquid and again put the vessel over the oven on low fire, close the vessel with a plate, the rice gets fully cooked. Then remove the vessel and allow it to cool down. Rice must

be served while it is warm. It is useful for the diseases of the stomach and intestines, and forms a good diet the sick and for all sorts of people.

10. நட்டரிசி சோறு. வெளிபுறம் வெந்து நடுவில் வேகாது. அரிசியாக விருக்கும். நன்றாக சமையாத சோறு. இதனால் மலசலம் சிக்குவதுந் தவிர, அது மறுநாளும் செரிக்க மாட்டாது. அன்னரசம் உடலில் பரவாத cooked rice which is not properly and fully boiled. It can not geet digested even the next day and will bind the bowels and urine. The chyle *(அன்னரசம்)* formed from that food will not spread properly in the body.

11. பச்சையரிசி சோறு, பச்சையரிசியைக் கொண்டு சமைத்த சோறு. பலத் தையும் குழந்தைகளுக்கு மாந்தத்தையும் உண்டாக்கும். பித்தகோபத்தையும் சிரீசரத்தையும் நீக்கும். இதில் வாயு வுண்டென்பர். cooked raw rice gives strength but causes indigestion in children. It alleviates bilious humour and burning sensation during micturition but creates wind.

12. பழஞ்சோறு. இரவில் நீரூட்டிய சோறு. அந்நிராகாரத்துடன் சூரி யோதய காலத்தில் அருந்தில் சுக்கில விருத்தியும், உதாரக்னியும் சரீர முழுதும் தேஜசும் உண்டாம். பித்தவாத தொந்தம் நீங்கும். if fresh cooked rice is kept in water for one night and taken at sun rise the next day along with the soaked water, it increases the semen, hunger and lustre of the skin. It alleviates the combined vitiation of wind and bilious humours.

NOTE: This water and rice get fermented if kept properly for a few days as stated in Tamil Medicine. If kept for six months, it becomes a perfect kadi.

13. பழைய அரிசி சோறு பழைய அரிசியைக் கொண்டு சமைத்த சோறு. இது வேக நேரமாகும். ஆனால் சோறு அதிகமாக காணும். விருத்தர், பாலர் ரோகியர்களுக்குமாகும். பசியும் குளிர்ச்சியுமாம். சிற்சில நோய்களும் கபமும் நீங்கும். cooked old rice, it takes a long time to get cooked, but the quantity of cooked rice will be more. It does good for all old, young and sick, cools the body and increases the arpetite, a few diseases and phlegm are alleviated.

14. புதிய அரிசிச் சோறு. அறுவடை செய்து ஆறு மாதங்கள் கூட ஆகாத அரிசியைக் கொண்டு சமைத்த சோறு. சீக்கிரத்தில் வெந்து குழைந்து கட்டி முட்டியாய் விடும். சோறு காணாது. குழைந்த சோறின் தன்மையைப் பெறும். new rice will get cooked very soon and invariably forms a sticky mass. Its qualities are similar to those of over boiled rice.

NOTE: The new rice is the one got from the paddy that is not even six months old from the time of its harvest. The vitamin B contents of the paddy slowly spreads into the interior of the rice as the time passes. One year old paddy rice is good. In the par-boild rice the vitamin is spread all through the rice, even if it were to be new.

15. புழுங்கலரிசி சோறு. புழுங் கலரிசியைக் கொண்டு சமைத்த சோறு. இது வேக நேரமாகும். வாயுவும், உடல் வலியும் உண்டாகாது. நோயாளிகளுக்கு உதவும். ஆனால் பலம் தராது.

cooked par-boiled rice, does not create wind or pain in the body. It is good for the sick but gives no strength. It takes a long time to get cooked.

16. புளித்த சோறு. புளித்துப் பழங்காடி சோறு. உஷ்ணமாம். நாளும் விருத்தியடைந்த பித்த கோபத்தைச் சாடும். வெளுத்தமலம், மந்தம், வாந்தி இவைகளை ஒழிக்கும். the fermental cooked rice increases the heat in the body,alleviates the increased bilious humour, cures vomiting loss of appetite and white stools.

சோறு வடித்தல், சமைத்த சோற்றிலிருந்து கஞ்சியை வடித்தல், straining conjee water from cooked rice.

சோற்றப்பளம், திரிதோஷத்தை நீக்கும். கூழ் வடகம், cake or wafir prepared from cooked rice, capable of curing the derangement of all the three humours.

சோற்றலகு, வயிரமில்லாத பனை, pith of a palmyra tree.

சோற்றவிழ், see சோற்றுப்பருக்கை.

சோற்றி, மரத்தினுட் சோறு, pith of a plant as opposed to *மர வைரம்,* the solid or indurated portion- Medulla; *2.* பாற்சோற்றி a plant with milky juice- Ruellia secunda; *3.* வயிரமற்றது, that which does not passes the indurated centre core.

சோற்றியற்ற, குடலற்ற சதைபற்றில்லாத, pithless.

சோற்றிலை, சோறு அடங்கிய இலை அதாவது சோற்றுக் கற்றாழை, leaf containing pulp inside i.e. aloe or pulp aloe- Aloe vera.

சோற்றிறக்கம் பசியுணர்ச்சி, appetite for food *2.* உணவு

இறங்கல், அதாவது வயிற்றுனுட் புகுதல், descent of vectuals into the stomach.

சோற்றுக்கட்டி, உண்டைக்கட்டி, lump of cooked rice

சோற்றுக்கத்தலை, ஓர் வகைக் கடல் கத்தலை மீன், a sea fish- Sciaena.

சோற்றுக்களைப்பு, பசியினால் ஏற்பட்ட களைப்பு, fainting through hunger.

சோற்றுக்கற்றலை see சோற்றுக்கத்தலை.

சோற்றுக்கற்றாழை, நறுங்கற்றாழை, குமரி கற்றாழை வகைகளில் செங்கற்றாழைக்கு அடுத்தபடி இதுதான் சிறந்தது. இதன் இலைகள் ஓரங்களில் முள்ளும், மிக்க சதைப் பற்றுமுள்ளவை. இது வைத்தியத்தில் உபயோகப் படும். இதனால் வாதமேகம், கபகோபம், கிருமிக் குத்தல், பெரு வியாதி, மூலம், உன் மாதம், பகந்தரம், வயிற்று நோய், தினவுள்ள பித்தக்கிரிச்சுரம் போகும். இதன் உட்சோறு உடம்புக்கு மிக்க குளிர்ச்சி. ஆகவே இதை எங்கும் வைத்துப் பயிராக்கு வார்கள். ஆனால் தென்னிந் தியாவில் விசேஷமாய்க் காணலாம். இதன்உட்சோற்றை எடுத்து நன்றாய்க் கழுவிச் சர்க்கரையிட்டு சாப்பிட உடம்பின் வெப்பம் தீரும். உடம்பு எரிச்சல் நீங்கும். மூத்திர எரிச்சலையும் குணப்படுத்தும். இதினின்று தைலம் இறக்கி தினப்படி கொஞ்சம் அருந்த வெட்டைச்சூடு தணியும். உடம்பு பருக்கும். மலச்சிக்கல் நீங்கும். சிறுவளவில் வயிற்றுக்கு வலியைக் கொடுக்கும். பெருமளவில் பேதியாகும். சூதகத்தை வெளிப் படுத்தும். குழந்தைகளின் வயிற்றுப் பூச்சிக்கு நல்லது. கண்ணுக்கு வைத்துக் கட்ட கண் சிவப்பை வாங்கும். கூந்தலுக்கிட மயிர் வளரும்.

சோற்றை சமையல் செய்து கொடுக்க மூலம் குணமாகும். இதன் சாற்றை அழற்சிக்குப் பூசலாம். இதைக் குளிர்ந்த தண்ணீரில் சுத்தம் செய்து பொறித்த படிகாரத்தைக் கலந்து கொடுக்க சன்னியைக் கேட்கும். புத்தியை அதிகரிக்கும். அயகாந்தம், மண்டூரம் இவைகளைச் செந்தூரமாக்கும். இக்கற்றா ழையில் கடுக்காய் தூள் தூவநீராய் விடும். பஞ்ச காலத்தில் இதன்சோற்றை ஆகாரமாக உட்கொள்வார்கள். common thick leaved Indian aloes -Aloe indica alias Aloe Vera. It is a common indigenous plant and is next to red aloes in importance, leaves are thorn edged and thick. It is highly useful in Tamil Madicine and is an excellent remedy in venereal affections aggravated form of phlegmatic diseases affections through germs leprosy, piles, giddiness and billious affections. The ghee like pulphas a coling effect, leaves soft pale, green crossed with lines of spot. So, this plant is cultivated through out India but extensively in S. India. The pulp of the leaves taken outwashed properly and taken mixed with sugar is said to remove bodily heat, burning sensation and difficulty in passing urine. Oil prepared from this and taken in small quantities daily forms an excellant remedy against venereal heat, it tones the system and removes constipation. In small doses, it is a stomachic, tonic and in large doses, a purgative and a emmenagogue. It is a favourite remedy for intestinal worms in children, it is externally applied in various affections of the eye such as catarrhal and purulent ophthalmia, used as a hair dye to stimulate hair growth. A sweet confection of the pulp is a cure for piles. The juice of the leaves is applied to inflammations. The pulp washed in cold water and mixed with

a little burnt alum is used with great advantage for persons predisposed to appoplexy, it improves intellect. Iron magnet, iron dross are easily reduced into red oxide by this pulp. .The pulp becomes a liquid when powdered gall nut is sactered over it and as such it is used in Tamil Medicine. Pulp of the leaves and the seeds are eaten in famine.

சோற்றுக்கு வீங்கி, வயிற்றுக்கு இல்லாமல் ஏங்கி இருப்பவன், one who is craving for food.

சோற்றுக்குழி, உண்ட உணவு போய் விழும் குழிப்பை, இரைப்பை, stomach which is a membraneos sac or receptacle for receiveing the food taken in.

சோற்றுக்கை, வலது கை, right hand.

சோற்றுத்துருத்தி, சோறு நிறைந்த காற்றுப்பை அதாவது உடம்பு, human body, as a blowing machine filled with cooked rice or food.

சோற்றுத் தூக்கம், வயிறு நிரம்ப புசித்தலினால் ஏற்படும் தூக்கம். sleep induced or prevailed upon as a result of eating stomachful or from over eating.

சோற்று நித்திரை, see சோற்றுத் தூக்கம்.

சோற்றுப்பக்கரை, சாப்பாட்டு ராமன், glutton.

சோற்றுப்பக்கா, சோற்றுப்பை, stomach.

சோற்றுப்பக்காளி, மிதமிஞ்சிப் புசிப்போன், one who indulges to exess in eating and drinking.

சோற்றுப்பசை சோற்றை அரைத்த பசை, rice paste.

சோற்றுப்பதம், காய்கள் பழுக்கத்தக்க பருவம், ripening state of fruits 2. சோறு வெந்த நிலைமை, the stage at which the rice is sufficiently boiled.

சோற்றுப்பருக்கை, வெந்த சாதம், cooked rice.

சோற்றுப்பற்று, பானையின் அடியில் பற்றி நிற்கும் சோறு, the scorched cooked rice adhering; to the bottom of the pot from over heating; 2. பாத்திரத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் சாதம், cooked rice sticking to the sides of the vessel.

சோற்றுப்பனை, வைரமில்லாத பனை மரம், pithy palmyra, palmyra which has not yet formed the hard solid part.

சோற்றுப்பானை சோறாக்கும் பானை, cooking pot; 2. பெரு வயிறு, pot belly.

சோற்றுப்பு, உணவிலிடும் உப்பு. கறியுப்பு, கடலுப்பு, see உப்பு, common salt used in food. இதனால் உடம்பில் கசிவு தோன்றி வியர்வையில்

கக்கும். அமுரியிலே இறங்கி வெளிப்படும். நரையுண்டாம். this is excreated through perspiration and urine. This causes grey hair.

சோற்றுப்பை, வயிறு, stomach, 2. இரைப்பை, receptacle for food.

சோற்றுப்பொதி, கட்டு சோறு, food bundled up for use in journey.

சோற்று மயக்கம், உண்ட பிறகு ஏற்படும் உறக்கம், drowsiness caused immediately after midday meals.

சோற்று மரம், இளமரம், a young tree, 2. வைரம் பாயாத மரம், pithy tree, a tree the stem and branches of which are not hardened.

சோற்றுருவி, உடல், body.

சோற்றுறக்கம், சோற்று மயக்கம், which see.

சோனகங்கெளுத்தி, ஓர் வகை ஆற்றுக் கெளுத்தி மீன், a kind of river macrone fish -Macrones punctatus.

சோனகத்திருக்கை, கடலில் வாழும் ஓர் வகைத் திருக்கை மீன், இதன் முதுகு மஞ்சட் பழுப்பு நிறமும், அடி வயிறு வெண்ணிறமும் வாய்ந்தது. இது வயதுக்குத் தக்கபடி நிறம் மாறும். 13 அடி நீளமும், 5 அடி அகலமும் உள்ளது. உடம்பை விட வால் பக்கம் 4-5 மடங்கு நீளமுள்ளது. வயது முதிர்ந்தது கரும்புள்ளிகள் வாய்ந்திருக்கும். இது கடலில் துள்ளிப் பாய்வது நன்றாகத் தெரியும். சுழியில் அகப்படுவது முதிராத மீன், tiger tenkey, English ray- Trygon warnak. It is yellowish brown on the back and the abdomen white colours very according to age. 13 ft in length and 5 ft in breadth across the disc tail three to four time as long as the body as age increases black sopts appear on the body. These fish are generally found springing out of water immature are captured in back water.

சோனகப்புல், திராய்ப்புல், a kind of straw plant- Medicago esculenta.

சோனகப் பூ, நாகப்பூ, scarlet flowered plant.

சோனகம், உள்ளி, onion, 2. யவ்வனம், youth; 3. சென்னர் அல்லது அரபிதேசம், sennar or Arabia; 4. யவனம் அல்லது கிரீஸ், the country of Yavanas or Greeks; 5. சோனக பாஷை, இது பூர்வத்தில் பிரித்த பதினெண் பாஷைகளில் ஒன்று. Hindustani as one of the 18 languages of olden days; 6. வாகை, Allizzia lebbek; 7. உத்தாமணி, hedge cotton- Demia extensa.

சோனகர், அரபியர், the Arabs; 2. யோனகர், Yonacus or Ionians; 3. மலையாளத்து யூதர்கள், black Jews of Malabar including white Jews of Cochin; 4. யவனர், Greeks 5. இராமநாத புரத்திலும் தூத்துக் குடியிலும் உள்ள முத்துக் குளிக்கும் ஒரு சாதியார், இவர்கள் சமுத்திரத்தில் அமிழ்ந்து முத்து எடுப்பதே தொழில். ஆகவே இவர்களுக்கு கடலினுள் விளையும் கல்லுப்பு இருக்கு மிடமும் எடுக்கும் வகையும் சுத்திமுறை முதலியனவும் அனுபவத்தால் நன்கு உணர்ந்தவர்கள். a class of people living in Ramanathapuram and Tutucorin whose profession is to dive and take pearl oysters. As such they know the salt beds formed under the sea, and together it. They know by experience to use it also.

சோகைவாளை, கடல் சரவாளை மீன், இது வெண்ணிறமானது. சுமார் 1.5 அடி நீளம் வாய்ந்தது. a sea fish of the Wallago genus moorman's vaulay- Trichiurus mulicus. It is silvery white about 1.5 ft. long.

சோனகன், see சோனகா; 2. துலுக்கன், Mahomadan.

சோனபதன், பித்தன், Madman, Lunatic.

சோனம், சிறு கரும்பு, a kind of sugarcane of stunted growth; 2. இரும்பு, iron; 3. 56 தேசங்களுள் ஒன்று, one of the 56 countries according to the territorial division of ancient days; 4. ஓர் மூலி, colosanthes indica.

சோனாகம், பெருவாகை, common sirissa- Albizzia lebbek.

சோனி, வளராமலும், பருக்காமலும் உள்ளவன், a man of stunted growth and slender body; 2. மெலிந்தவன், lean or slender body.

சோனிடாட்சகி, குந்திரிக்கம், frankincense.

சோனை, மூடுபனி, mist, 2. ஓர் அத்தி, a kind of fig; 3. விடாமழை, constant rain.

சோனைப்புல், அக்கதேவி, guinea grass- Panicum jumentorum P. maximum. It is a tall hardy sacculent grass found on poor clay soil and on sea sand.

சோனைமழை, பெருமழை, heavy rain, 2. விடா மழை, continuous rain.

சோனையத்தி, see சோனை, see சொனையத்தி.

சோன்முகத்தாமரை, முண்டினி விருட்சம், an unidentified tree.

சௌ

சௌகண்டிகம், ஓர் வகைப்பூச்சி, கபத்தினால் ஆமாசய ஸ்தானத்தில் பிறப்பது, a kind of worm born at the lower end of the stomach out of phlegm.

சௌகதன், சூனியவாதி, a magician, a sorcerer.

சௌகந்தகம், கற்கடகபாஷாணம், one of the 32 kinds of native arsenic.

சௌகந்தி கந்தக பாஷாணம், a kind of (sulphur) poison, a kind of native arsenic; 2. ஓர் வகை மாணிக்கம், a kind of ruby.

சௌகந்திகம், கருங்குவளை, blue Indian water lily- Nymphaea cyanea; 2. செங்குவளை, red Indian water lily- Nymphaea rubra; 3. வெள்ளாம்பல், white Indian water lily - Nymphaea alba; 4. நீலோற்பலம், blue lily; 5. காமாட்சிப்புல், geranium grass- Andropogon schoenanthus.

சௌசந்திகம், பிறருடைய ஆண் அல்லது பெண் குறியை முகர்ந்தாலல்லது காம விச்சையும் எழுச்சியையும் உண்டாகாதவர். இக்குற்றம் தாயாரின் அசுத்தமான யோனியினின்று பிறந்த காரணத்தினால் ஏற்பட்டது எனக் கருதப்படும். a man in capable of getting errection or respond to sexual inter course without smelling the genitals of other. It is due to his being born of a mother who had a sordid vagina.

சௌகந்திகை, ஓர் வகை தாமரை, நல்ல மணமுடையது. a kind of fragrant lotus.

சௌகந்தியம், சுகம், healthiness, see சௌக்கியம், 2. சுகந்தம், fragrant.

சௌகம், கிளி, parrot; 2. துக்கம், grief.

சௌகு, மண்காரம், crude carbonate of soda; 2. வளையலுப்பு, glassgall; 3. சவுட்டுப்பு, nitre, potasium nitrate.

சௌகுமாரியம், இளமை, youth.

சௌக்கம், நாற்கோணம், square; see சவுக்கம்.

சௌக்காரக்கல், சவர்க்காரக்கல், Soap stone, Stealite.

சௌக்காரம், சவர்க்காரம், soap.

சௌக்கியம், சொஸ்தம், health.

சௌக்கியவீனம், சுகமில்லாமை, ill health.

சௌக்கு, see சவுக்கு.

சௌசண்டி, திப்பிலி, long pepper.

சௌசம், சுத்தி செய்தல், cleansing; 2. சுத்தம், cleanliness; 3.

கால்கழுவுகை, washing the posterior after stools.

சௌசவிதி, மலமும் நீரும் கழித்த பிறகு சுத்தஞ் செய்யும் விதி. இதற்கெனப் பாத்திரத்தில் எடுத்துச் சென்று நீரைக் கொண்டாவது அல்லது ஊருணியல்லாத மற்ற நீர் நிலைகளின் கரையை அடைந்து ஒரு சாணுக்கு இப்பாலிருந்து அந்த நீரைக் கொண்டாவது இடக் கையால் குறியை ஒரு முறையும் குதத்தை ஐந்து முறைக்குக் குறையாமலும் இடக்கையை இடை யிடையே ஒவ்வொரு தரமும் கடைசியாக பத்து தரமும் சுத்தி செய்து, பிறகு வேற நீரைக் கொண்டாவது அல்லது வேறு ஒரு துறைக்குச் சென்றாவது கை, கால்களையும், வாய், முகம் இவைகளையும் நன்றாய் அலம்ப வேண்டும். rules regarding the washing of the posterior after passing stools, wash the penis once and the anus five times with the left hand, each time the hand must be washed. At last the hahd must be washed ten times. Then the face, mouth, feet and hands must again be washed with clean water.

சௌசிங்கம், மலையாடு, four horned antelope- Tetraceros quadricornis.

சௌச்சிதம், சங்கிலை, four spined monetia -Monetia barlerioides.

சௌண்டலை, சோலைவெண் தேக்கு, garden white teak- Heritiera papilio.

சௌண்டி, திப்பிலி, long pepper- Piper longum.

சௌடீரியம், வீரம், valour.

சௌதம், வெள்ளி, silver.

சௌதயம், பெருங்காளான், large variety of mushroom.

சௌதாயிகம், சீதளம், coldness.

சௌத்திரமேகம், மூத்திரம் தேனைப் போலவும், சுவைக்கத் தித்திப்பாயும் உள்ள ஓர் வகை மேக நோய், a disease in which urine resembles honey and acqnires a sweet taste.

சௌத்து, நாலிலொரு பங்கு, கால் one fourth, quarter.

சௌத்துருவெலும்பு, மாரெலும்பு, breast bone- Sternum.

சௌகந்தகம், see சௌதந்தகம்.

சௌந்தகி, வெண்டாமரை, white lotus.

சௌந்தம், ஓர் பிறவி பாஷாணம், அதாவது கற்கடக பாஷாணம், a mineral poison.

சௌந்தரம், see சௌந்தரியம், beauty.

சௌந்தரசூரிதம், குளிக்கும் மஞ்சள், Termeric used for bath.

சௌந்தரிகம், சௌந்தர்யம், அழகு, beauty.

சௌந்தரிகை, கண்ணாடியிலைப்பூடு, looking glass plant of S.ghat- Heriteira papilio. See சௌன்முந்திரி, see சோலை வெண் தேக்கு.

சௌந்தரியப்பூடு see இரத்தினத்திரு.

சௌந்தரியம், அழகு, beauty.

சௌந்தி, கந்தக பாஷாணம், see சௌகந்தி.

சௌந்திகா, ஓர் வகைக் கீரை, a kind of greens.

சௌந்திபம், கொச்சி சாரம், sal ammoniac prepared i Cochin.

சௌந்திராப்பூ ரோஜாப்பூ, Rose flower, சௌந்திரியம்,

வெள்ளம்பல், white Indian water lily.

சௌபஞ்சம், see சொபஞ்சனம்.

சௌபஞ்சனம், புனல், முருங்கை, three leaved or oval leaved Indigo- Indigofera arcuata.

சௌபன்னம், சுக்கு, dried ginger, 2. மரகதம், emerald.

சௌபாக்கிய சிந்தாமணி, ஓர் ஆயுள் வேத மருந்து, an Ayurvedic medicine.

சௌபாக்கியசுண்டி மோதகம், ஆமலபித்தம், செரியாமை, குன்மம் இவைகளுக்குக் கொடுக்கும் ஆயுள் வேத மருந்து. an Ayurvedic medicine prescribed for indigestion, biliousness pain in the stomach etc.

சௌபாக்கிய பரம், இரசம், mercury.

சௌபாக்கிய சொண்டி, சுக்குடன் பல கடைச் சரக்குகளும் மூலிகைச் சாறுகளும் சேர்த்து நெய் சர்க்கரையும் கலந்து லேகியமாக்கி சூதக வாயுவுக்குக் கொடுக்கும் மருந்து. மேலும் உடம்பு தேஜசு, தாது விருத்தி, ஆயுள் விருத்தியுண்டாம். இது பரத்து வாசரிஷியால் சொல்லப்பட்ட ஆயுள் வேத மருந்து. இதைக் குன்மத் திற்கும் கொடுக்கலாம். an Ayurvedic preparation contemplated in the work of Barathwaja Rishi. It is an electuary prepared with dried ginger as the chief ingredient amongst other bazaar drugs, juices of plants combined with ghee and sugar and prescribed for menstrual disorders for complaints after confinement, dyspepsia and diseases due to wind humour.

சௌபாக்கியம், செங்கழுநீர், red Indian waterlily; 2. சுக்கு, dried ginger.

சௌபாஞ்சனம், முருங்கை மரம், drumstick tree see சௌபஞ்சனம்; 2. முண்முருங்கை மரம்.

சௌபாமிகம், கொட்டையில்லா முந்திரி, grapes without seeds.

சௌபாலிகம், கருவாகை, black vagai, fragrant acacia - Mimosa marginata.

சௌபிகன், மாந்திரிகன், magician; 2. இந்திர சாலங் கற்றவன், hypnotiser, sorcerer.

சௌமலி, முள் இலவ மரம், the red silk cotton tree- Bombax malabarcium.

சௌமனசாயினி, மலடிபுட்பம், Echites caryophyllata.

சௌமனசை, சாதிபத்திரி, mace, pulp over nutmeg- Myristica fragrans.

சௌராஷ்டிரிகம், ஓர் வகை வசனாவி, a species of aconite root grown near Surat.

சௌராட்டிரம், வெண்கலம், bronze, bell metal, 2. பித்தளை, brass.

சௌரி, கருடன், Brahmini kite; 2. சவுரிப் பழம் அல்லது குறட்டைப்பழம், fruit of round snake gourd- Trichosanthis palmeta.

சௌரிக்கொத்து முதியோர் கூந்தல், creeper of சௌரி, which see.

சௌரிப்பழம், குறட்டைப்பழம், see சௌரி.

சௌரி ரத்தினம், நீலமணி, sapphire, a blue gem.

சௌரு, கொச்சை நாற்றம், a peculiar smell as of goat's milk.

சௌலம், அரை ரூபாய், half a rupee; 2. 6 3/4 குண்டு மணி எடை, 6 3/4 grains weight.

சௌவரிசி, see சவ்வரிசி.

சௌவர்ச்சலம், ஓர் உப்பு, a kind of salt; 2. உவர்நீர், brackish water.

சௌவர்ணம், சுக்கு, dried ginger, 2. மரகதம், emerald, a green gem, 3. சுக்கு நாறி மரம், a tree smelling like dried ginger.

சௌவாது, சவ்வாது, which see.

சௌவீரகம், இலந்தை கனி, Indian plumziziphus jujuba.

சௌவீரகம், இலந்தைக் கனி, see சௌவிரகம்; 2. வீரம், corrosive sublimate; 3. ஓர் வைப்புப் பாஷாணம், see சவ்வீரம்.

ஞ

ஞஞ்ஞை, மயக்கம், delirium.

ஞண்டு, நண்டு, crab, lobster

ஞமலி, மயில், peacock; 2. நாய், dog, 3. கள், toddy.

ஞரிவாளை, சிறு தேக்கு, glory tree- Cleodendron sphoenanthes; 2. நரிவேளை (fox velai) Gynandropsis penta phylla.

ஞலவல், மின்மினிப்பூச்சி, firefly, glow worm, 2. கொசு, mosquito.

ஞறா, மயில் குரல், voice of peacock.

ஞா, கட்டு, bind, 2. பொருந்து, joint.

ஞாங்கர், பக்கம், side, 2. மேல், upwards; 3. முன், anterior.

ஞாட்பு, வல்லமை, strength, power.

ஞாண்டு, நண்டு, crab.

ஞாதுரு, அறிவுள்ள ஆன்மா, mind or soul with volition.

ஞாத்தல், கட்டுதல், tying; 2. பொருந்தல், sticking.

ஞாபகக்கருவி, அறிவிற்கு ஆதாரமாகிய கரணங்களும், பொறிகளும், sensory organs and intellectual faculties which are essential to knowledge.

ஞாபகக்குறைவு, நினைவு சக்தி குறைந்து போதல், loss of defective memory.

ஞாபக சக்தி, நினைவு படுத்தும் வல்லமை, memory.

ஞாபகப்படுத்தல், நினைவூட்டல், to remind.

ஞாபகம், அறிவு, intellect.

ஞாபகவேது, ஞாபகக் கருவி, which see.

ஞாயிறு, the sun.

ஞாயிறு திரும்பி, சூரியகாந்திப்பூ, the sun flower.

ஞாயிறு போது, உச்சிப்போது, midday.

ஞாயிறு வணங்கி, கொழுஞ்சி அல்லது கொள்ளுக்காய் வேளை, purple wild indigo- Tephrosia purpurea.

ஞாலமாது, ஊமத்தை, datura- Datura alba; 2. பொன்னாவரை, cassia sophora.

ஞாலம், பூமி, world; 2. காடை, quail; 3. ஊமத்தை, datura; 4. சாலவித்தை, magic.

ஞாலல், மின்மினிப்பூச்சி, firefly or glow worm.

ஞாலம், நாதம், ovum; 2. விந்து, sperm.

ஞாலற்பூ, see ஞாழல்பூ.

ஞாழம், see ஞாளம்.

ஞாழல், குங்கும மரம், fragrant tree- Crocus saffron; 2. கோங்குமரம், silk cotton tree- Bombax gossypium; 3. பொன்னாவிரை, atree with flowers of golden colour- Cassia sophera; 4. see மயிர் கொன்றை; 5. மர வைரம், the middle hardest portion or the heart of a tree 6. ஓர் மல்லிகை, a kind of jasmine; 7. see ஆண் மரம், a male plant; 8. see சங்கு புட்பம்.

ஞாழல் பூ, குங்குமப் பூ, saffron, European saffron used in medicine.

ஞாழல் மா, ஒட்டுமாமரம், grafted mango tree.

ஞாழல் மாது, ஊமத்தை, a deletrious plant, datura, 2. தாமரை, lotus.

ஞாழல் வாசுகி, பெரியாணங்கை- Polygala elongata.

ஞாழல் விரை, பொன்னாவிரை, Cassia siamea.

ஞாழற் பூ see ஞாழல் பூ.

ஞாழி, வள்ளிச்கொடி, a creeper- Convolulus repens.

ஞாளம், படர்கொடி, a spreading plant; 2. குகை, crucible as in ஞாளத்தில் வைத்துதல் (in Alchemy).

ஞாளி, கள், toddy; 2. நாய், dog; 3. கோழி fowl.

ஞாளிகம், ஞாளிதம் வள்ளைக்கொடி, see ஞாழி.

ஞாளிமலம், நாய் மலம், excreta of dog.

ஞாறுதல், நாறுதல், மணம் வீசுதல், smelling.

ஞானசுந்தம், விஞ்ஞானம், the vital air passing through the righ nostril.

ஞான காவியம், அகஸ்தியர் செய்த பஞ்சா காவியங்களுள்

பிராணாப தத்துவத்தைப் பற்றியும் கருவி காணாதிகளைப் பற்றியும் சொல்லும் ஏழாவது காண்டமென்ற ஓர் பிரிவு, one of the five great works of Agastiar dealing about Yoga practice etc.

ஞானகுர, உபதேசம் செய்யும் குர, spiritual perceptor.

ஞானகுளம், கஞ்சாக்குடுகை, a pipe to smoke bhang (ganja Indian hemp).

ஞானக்கண், பார்க்க முடியாத பொருளை அறியும் அறிவு, eye of wisdom, sixth sense, or second sight or inner sight.

ஞானக்கலை, ஞான சாதனத்தினாலேற்படும் ஓர் வகைக் குறி, a peculiar lustre thrown by one who practised wisdom.

ஞானக்காட்சி, பார்க்க முடியாத பொருளைப் பார்த்தல், seeing in visible thing through the eyes of wisdom.

ஞானசரீரம், அறிவுமயமான உடம்பு, spiritual body

ஞானசாதகம், see ஞானசாதனம்.

ஞானசாதகன், ஞானப் பயிற்சி செய்கிறவன், one in constant practise of devotion.

ஞான சாதகன், ஞான சாதனை, ஞானப் பயிற்சி, practice in the attainment of wisdom.

ஞான சாஸ்திரம், ஞானத்தைப் பற்றி கூறும் நூல், the Philosophy and science of spiritual wisdom of bliss which enables the soul through yoga practice to Hold Communion with infinite spirit and thereby to become the very infinite spirit itself. These sastras are of at most importance to those who are anxious to enter the very depth of these Philosophy and Science to attain the final Truth and Perfection.

ஞானசித்தர், சித்தர்களில் தேர்ச்சியடைந்தவர், the

learned and intelligent among siddhars.

ஞானசித்தன், மோட்ச சாதனத்திற்காக பயிலுபவன், a Siddhar working out for salvation leaving aside all kinds of miraculous powers.

ஞானசுகம், ஞானியின் பேரின்பம், bliss from wisdom.

ஞானசெயநீர், பூநீரு செயநீர், a liquid medicinally prepared out of fuller's earth.

ஞானச்சுடர், அறிவின் ஒளி, light of wisdom.

ஞானதசை, ஆன்மா மோட்சம் அடைவதற்குரிய பக்குவ நிலை, the state of the individual soul attaining the stage of emancipation.

ஞானதிருட்டி, ஞான திருஷ்டி, திரிகால உணர்ச்சி, knowledge of the past, present and future, 2. ஞானக்கண், second sight, 3. ஞானத் தோற்றம், occult vision.

ஞானதீட்சை, ஞானோபதேசம், the imparting of spiritual illumination by the look of a Guruinitiation 2. ஆன்ம தெரிசனம். இதனால் சஞ்சிதம் ஒழியும், மோட்சம் கைவல்யமாகும். fancied vision of the Diety by which the former evils - Karma are consumed and the gates of heaven opened.

ஞானதேகம், கண்ணுக்குத் தோன்றாது அறிவிற்கு புலப்படும் தேகம். இது ஐந்து வகைத் தேகத்திலொன்று. body that cannot seen by the eyes but perceived by wisdom or intelligence. one of the five kinds of body, see தேகம்.

ஞானநிட்டை, ஆன்மா, பரமாத்துமாவோடு வயப்படுதல், union of the individual soul with the Diety.

ஞானப்பத்திரி, கஞ்சா, Indian hemp, bhang- Cannabis sativa.

ஞானப்பல், உலக விவகாரத்தை அறியக் கூடிய ஞானம் உதித்த முதுமைப் பருவத்தில் அதாவது 25 வயதுக்கு பிறகு முளைக்கும் பல். கடவாய்ப் பல் - wisdom tooth that springs up after the age of 25.

ஞானப்பால், திரு. சம்பந்தருக்கு மூன்றாண்டு நிரம்பிய போது உமாதேவியாராலூட்டப்பட்ட பால். இதனால் அவருக்கு ஞானம் வந்தது. the milk given by Goddess Parvathi to Thiru Sambandhar when he was three years old, this brought him the wisdom, the essence of Philosophical wisdom.

ஞானப்பிரதம், தூதுவளை, three lobed night shade- Solanum tritobatum.

ஞானப்பிராந்தி, ஞானமயல், ஞானத்தாலேற்படும் அறிவு மயக்கம், mania for wisdom, absorption of mind in devotion.

ஞானப்பெண், வாலை, ஞானவதி, ஞானமுள்ளவள், lady with wisdom.

ஞானப்பயித்தியம், see ஞானப் பிராந்தி.

ஞானமயன், சீவான்மா, soul.

ஞானமாது, பொன்னாவரை, see ஞால மாது.

ஞானமார்க்கம், ஞான வழி, path of wisdom.

ஞானமுத்திரை, சின் முத்திரை, a hand pose.

ஞானம், பேரறிவு, wisdom, 2. நாதம், menstrual blood, 3. மனோ சிலை, red arsenic, 4. தத்துவ நூல், philosophy.

ஞானம், அறிவானது நான் என்று அகங்கரித்து எழாதபடி அடங்கி தற்பரத்தில் பொருந்தி நிற்பது. இஞ்ஞானத்தை அடைய வேண்டும் என்றால் முதலாக உடம்பை பல கற்ப மூலிகைகளால் சித்தி செய்து

கொள்ளுவது அவசியம். தூலசூக்கும காரண சரீரங்கள் தானல்லவென்றும், 'அறிவே' தனது சொரூப மென்றும் தெளிந்து சமநிலை பெற்று, இன்ப துன்பங்களற்று செய்கையற்று, நினைவற்று இருக்கும் நிருவி கற்ப நிலையடைந்து சிற் சொரூபத்தில் வயப்பட் டிருத்தல், one must not feel proud of his knowledge, must be selfless, must leave his ego. First the body must be animated by taking rejuvenating drugs and must realise that wisdom is the truth must be senseless to the environments, and stand one with the Diety.

ஞான யோகம், ஞானத்தை யூட்டும் யோகம், a kind of yoga leading to spiritual wisdom.

ஞானரேகை, ஞானத்தைக் குறிப்பிடும் கைரேகை, a line in the palm indicating wisdom.

ஞானவழி, மூளை, brain- seat of wisdom.

ஞான விரல், ஆழி விரல், ring finger.

ஞானள், நாதம், menstrual blood.

ஞானாகாசம், பூரணத்தை அறியும் வல்லபம், the spritual wisdom of a sage by which he perceives at once everything in the world.

ஞானாகாயம், see ஞானாகாசம், 2. பரவெளி a supposed vacum.

ஞானா சத்தி, மூன்று சத்தியிலொன்று, one of the three perfections of the Diety- knowledge of the actions performed by the soul and which causes it to enjoy or suffer the fruit of those actions; 2. ஐந்து வித சத்திகளில் ஒன்று, one of the five perfections of the Diety, that power of God, which exists as the five senses.

ஞானத்துமா, சுத்த ஆத்துமா, pure soul or spiritual soul, sage.

ஞானார்த்தம், உட்பொருள் mystical sense, inner meaning; 2. தத்துவப் பொருள், philosophical interpretation.

ஞானாவரணீயம், ஞானம் மங்குதல், the obscuration of wisdom.

ஞானி, சகலமும் அறிந்தவன். wise acre, an all wise sage, a man of sublime philosophical knowledge 2. சேவல், cock, 3. நாய், dog.

NOTE:- ஞானியர் என்றால் நான் என்ற தன்மையும் ஊனி நீர்பாய்ந்து ஓடியதாரையும் வாலுவில் கெற்சிதம் வடிவான போதமும் பேணி அறிபவர் பேர்கொண்ட நாதரே,

-(மச்சமுனி 800)

2. ஞானி யென்றால் ஜடத்தைப் பேணான் சிவசிவ சீவநிலையறிய மாட்டான்

-(கடைப்பிள்ளை கலைக்கியானம் 120)

ஞானிசினை, கோழி முட்டை, fowl's egg.

ஞானியண்டம், கோழி முட்டை, egg of a fowl; 2.வெங்காரம், borax.

ஞானியுப்பு, கருவுப்பு, பிண்டவுப்பு, Philosopher's salt.

ஞானிமலம், கோழி எச்சம், excreta of fowl.

ஞானிவெண்மலம், கோழி எச்சத்தின் வெண்மையான பாகம், the white part of the excreta of the fowl.

ஞானநேதிரியம், அறியும்படியான கருவிகள். அவை, மெய், வாய், கண், மூக்கு, செவியாகும். the five sense organs- body (skin) mouth (tongue), eye, nose and ear.

ஞானோதயப்பால், உலக ஞானத்தையடையும் வயது 25ஐ அடைந்த பிறகு தோன்றும் பல் wisdom tooth, see ஞானப்பல்

ஞானோதயம், ஞானம் பிறத்தல், the dawn of spiritual wisdom in the soul when by the influence of divine grace, the desires of secular objects are subjected and the soul tends towards union towards union with the Diety.

ஞானோபதேசம், அறிவு போதனையின் சாரம், essence of spiritual instruction.

ஞானோபதேசம், கல்வி போதனை, to instruct or to give lessons to improve wisdom, spiritual instructions; 2. ஞான போதனை, imparting of spiritual illumination by the look of the Guru. see ஞானதிட்சை.

ஞமிர்தல், நிமிர்தல், raising the head.

ஞமிறு, வண்டு, battle; 2. தேனீ, honey bee.

ஞெகிழி, கொடிவேலி, ceylon lead wort Plumbago Zeylanica, 2. வெள்ளை சோளம், white maize corn; 3. நெருப்பு, fire, 4. நெருப்புக்கொள்ளி, fire brand.

ஞெகிழ்தல், மனந்தளர்தல், languishing, 2. மனமுருகல், become sympathetic; 3. மெலிதல், becoming emaciated; 4. சோம்புதல், becoming lazy.

ஞெகிழ்த்தல், மனமலையல், being agitated in mind. 2. சோர்தல், being weak and dull.

ஞெண்டு, நண்டு, crab.

ஞெண்டுகம், பெருவகை, a large species of Vagai, a tree- Acacia odoratissima.

ஞெண்டுதல், கிண்டுதல், stimulating.

ஞெபதி, ஞாபகம், memory.

நெமிடுதல், நிமிட்டுதல், pressing out with the finger, 2. கசக்குதல், crushing.

ஞெமிர்தம், சதுர பிரண்டை, a variety of Vitis quadrangularis with square stem.

ஞெமிர்த்தல், நெரித்தல், pressing; 2. ஒடித்தல், breaking.

ஞெமுக்கம், அமுந்துகை, to give way or yield to pressure.

ஞெமுங்கல், அமுந்தல், to pit on pressure.

ஞெயம், நெய், ghee.

ஞெரிதல், நெரித்தல், crushing.

ஞெலிதல், குடைதல், to scoop or making hallow.

ஞெள்ளல், சோர்வு, exhaustion.

ஞெள்ளை, நாய், dog.

ஞேயம் அன்பு, love, 2. நெய், ghee.

ஞேயா பெருமருந்து கொடி, ஈச்சுரமூலி, Indian birth wort- Aritolochia indica.

ஞேயாசிதம், தேட்கொடுக்கு, scorpion sting plant- heliotrope- Heliotropium indicum.

ஞோள்கல், ஞோள்குதல், இளைத்தல், becoming weak; 2. குறைவுபடுதல், being deminished; 3. மெலிதல், emaciating.

ட

டங்கணம், see இடங்கணம், 2. வெண்காரம், borax.

டங்கண், see இடங்கண், 2. வெண்காரம், borax.

டங்கம், வெங்காரம், borax.

டங்கரளி, தங்கரளி, மஞ்சள் பூ உடைய அரளி.

டங்காரம், வெடியுப்பு, nitre- Potasium nitrate.

டங்காரிகம், மயிர் மாணிக்கம்.

டப்பா, சிமிழ், a small box.

டப்பாக்கி அரிசி, ஓர் வகை ஆள்வள்ளி, (மரவள்ளி) கிழங்கினின்று சவ்வரிசியைப் போல தயாரித்த பொருள். a kind rice like sago, prepared from the fecula or starch dervied from the root of Jatropha manihot plant Tapioca.

டப்பாக்கி அரிசி கஞ்சி, டப்பாக்கி அரிசியால் செய்யும் கஞ்சி, a liquid pudding prepared from tapioca.

டப்பாசு செடி, பட்பட் என்று வெடிக்கும் காய்களை உற்பத்தி செய்யும் ஒரு சிறு செடி, Ruellia tuberosa or R.repens.

டமரகர், வைத்திய நூல் செய்த ஒரு சித்தன்; a Siddhar who is the author of a medical book.

டமரகன், சுந்திரனாந்தரின் மைந்தர், இவர் இல்வாழ்க்கை யிலிருந்து சைவ மார்க்கத்தை அனுசரித்து பிறகு துறந்து ஞானியாக மந்திரீக சக்தியாலும் புத்தியாலும் அறிந்தவர். இவருடைய மைந்தன் அறிவானந்தர். he is the son of Sundarandhar, after marriage he adopted the Saiva Markam, then he became a saint, due to his knowledge and magic power he raised high. His son is named Arivuandhar.

டரத்தை, see தமரத்தை.

டமரு, தமர், திராவகம் அல்லது குழி தைலம் இறக்க உபயோகப்படும். பாத்திரத்திலுள்ள துளை, the hole in the pot which is used to extract oil or acid.

டமாரம், பெருஞ்செவிடன், one who cannot hear even the sound of a dig drum- One who is stone deaf.

டரா, see தரா.

டனிப், குளிர் தேசங்களில் பயிராகும் கோஸ் (cabbage) இனத்தைச் சேர்ந்த ஒருவகை கிழங்காகும். உணவுக்கு உதவும் Thick fles by underground stem of Brassica campestris used as vegetable.

டாங்கர், உளுந்துமா கலந்த பச்செடி, a relish combined with the black gram flour etc. used in food.

டாங்கர்மா, உளுந்துமா, flour of black gram dholl.

டாங்கிலி மூலம், ஆடா தோடை, malabar nut — Adhatoda vasika.

டாங்கு, (யுனானி) ஐந்து குன்றிமணி எடை, a weight of five jeweller's grains.

டாணிக்காய், தான்றிக்காய், beleric myrobalans- Terminalia balerica.

டாமர், ஓர் மரம், dammer tree (white and black)- Veteria indica (white) canarium strictum (black).

டாமர் சோபிதம், ஓர் சீனத்துச் செடி, a plant native of China.

டாயில் கறி, (யூனானி), ஓர் பட்சியின் இறைச்சி, flesh of a bird.

டார் தார், tar.

டால் ஒளி, brilliancy.

டால்வாங்கி, ஓர் வகைப் பருப்புக் குழம்பு, a kind of dholl sauce.

டிக்காமல்லி, மயிலாலக்கடி, cambi, resindikamali, resin of — Gardenia gummifera.

டிங்கிசுரம், முடக்குசுரம், dengue fever.

டிங்டிங், உப்புக்கண்டம், salt meat.

டிரலாங்கொடி, திரளங்கொடி, a climbing plant.

டிரேகா, காந்தச் செடி, an unknown plant.

டீக்காமல்லி, see டிக்காமல்லி.

டுலி, (Hindi) நோயாளிகளை எடுத்துப் போக பயன்படும் ஒரு நீண்ட மூங்கிலின் நடுவில் தொங்கும் கட்டிலையுடைய ஓர் கருவி. a swinging litter for carrying sick persons. It consists of a cot, or frame suspended by the four comers from a bamboo pole and is carried by two or four persons.

டொக்கு விழல், பள்ளம் விழல், sunken as cheeks.

டொழா, இலுப்பை, narrow leaved mohua — Bassia longifolia.

டோங்கா, அண்டவாதம், which see.

டோலாக்கியம், ஓர் சீமைச் செடி, a foreign plant.

டோலாயந்திரம், சுத்தி செய்ய வேண்டிய மருந்தைக் கருப்பு துணியால் கட்டி சுத்தி செய்ய பயன்படும் திரவத்துடன் கூடிய பாண்டத்தின் முகத்தில் குறுக்காக ஒரு கம்பை வைத்து அதில் அம்முடிச்சை நீர் மட்டத்திற்கு மேல் தொங்கும்படியாக கட்டித் தொங்கவிட்டு எரித்து, அதிலிருந்து உண்டாகும் ஆவியால் மேற்படி மருந்தைச் செய்யும் ஓர் கருவி, an apparatus or contrivance in which a bundle containing medicine or drug (to be purified) is suspended in a vessel so that it may remain just over the level of the liquid the vessel contains when the liquid is boiled, its vapour raises heats the bundle and purifies the drug an apparatus for vapour bath.

டோலி, நோயாளியைத் தூக்கிச் செல்லும் மஞ்சம், dhooly, see டுலி.

டோலைக்கட்டியெரித்தல், டோலையில் எரித்தல், டோலாயந்திரத்தில் வைத்து ஆவி எழும்படி தீ மூட்டுதல், to heat the drug or medicine in the apparatus for vapour bath.

டோழா, இலுப்பை, see டொழா.

டோளாயந்திரம், see டோலாயந்திரம்.

டோமம் (சாறு) ஓர் மூலி, a plant.

டோலு கிழங்கு, பவுத்திரத்தைப் போக்கும் மூலி, a drug that cures fistula.

தகசு, ஓர் மெல்லிய தகடு, a thin plate, lamina தவக்கரடி, creeping bear, badger, Indian rattel -Mellivora indica. It is a plantigrade carni vorous animal living in a burrow living on vegetables and small quadrupeds.

தகச்சரசா, அவல், flaked rice.

தகடாக்கல், இலையைப் போல் இலேசாக உலோகங்களைத் தட்டுதல், beating into a thin plate or lamina foliating.

தகடி, நீர், water.

தகடு, இலை, leaf, 2. கம்மாறு வெற்றிலை, a thick black betel leaf; 3. உலோகத்தட்டு, a metal plate, a lamina of metal; 4. மெல்லிய பளபளப்பான தகடு, a thin glittering metallic sheet or foil- Tinsel; 5. இலைத்தகடு, leaf plade; 6. பூவின் புறவிதழ், the outer petal of a flower sepal; 7. அடர்த்தி thickness or density as of hair; 8. தகட்டரி தாரம், which see; 9. தாயித்து, talisman; 10. ஐமை வடிவு, flat and thin shape.

தகடு கட்டுதல், மந்திர மெழுதித் தாயத்துக் கட்டுதல், trying a metal plate engraved with letters in a mystic diagram, amulet.

தகடுமதி, வெள்ளித்தகடு, silver plate.

தகட்டப்பை, பரந்த குழியில்லாத அகப்பை, a round shallow ladle.

தகட்டரி தாரம், see தகட்டுத் தாளகம்.

தகட்டு சட்டை, இரும்புத்துகள், iron dross.

தகட்டுத்தாளகம், பெருமருந்துப் பாஷாணம், arsenic in flakes, leaf orpiment.

தகட்டு வைரம், தேய்க்காத வைரம், unpolished diamond.

தகட்டெலும்பு, தடிப்பற்று, விசாலித்துத் தகடு போலிருக்கும் ஓர் வகை எலும்பு, a thin broad flat bone.

தகணேறுதல், தழும்பேறல், becoming scarred; 2. பழக்கமாதல், being habituated; 3. பழுத்தல், becoming ripe.

தகணை உலோகக் கட்டி, metallic ore.

தகண், வரையறை limit; 2. தழும்பு, scar; 3. பழக்கம், habitual practice- addiction.

தகண்டசகம், நரிப்பயிறு, fox gram, jackal green gram- Dolichos trilobatus (alias) -Phaseolus trilobatus.

தகதகெனல், சொலித்தல், dazzling.

தகதாருகம், தழுதாழை, creeping screwpine- Cleodendron phlomodies.

தகம், சூடு, heat; 2. எரிதல், burning; 3. கந்தகம், sulphur; 4. நீர், water; 5. நித்திரை, sleep.

தகம்பு வியார்த்தம், கோமேதகம், cinnamon stone.

தகரங்கவித்து, சிறு தும்மட்டிக்காய், a small specics of bryonia.

தகரச்சி, see தகரை.

தகரஞாழல், ஓர் வகை மயிர்ச் சாந்து, a fragrant unguent for the hair.

தகரப்பாணை, தகரத்தினால் செய்த பாண்டம், tin pan.

தகரப்பூண்டு, பவளப்பூண்டு, glasswort- Arthroenemum indicum.

தகரப்பொடி, வாசனைப்பொடி, scented powder.

தகரம், நந்தியா வட்டத்தினின்று தயாரித்த ஓர் வாசனைப் பொடி.

தகரம், ஈயம், tin; 2. வெள்ளீயம், white lead; 3. தகரம் பூசிய உலோகத்தகடு, metal plate coated with tin; 4. இருதயப் பள்ளம், cavity of the heart; 5. ஓர் வாசனைப் பண்டம், a fragrant drug or substance; 6. நந்தியா வட்டம், Indian rosebay-Tabernoe Montana coronaria; 7. தகமைவிதை, ringworn seed, seeds of Cassia tora; 8. see கிரந்தித்தகரம்.

தகரம், வெள்ளீயம், இது மிருதுவான பளபளப்பான உலோகம். இது காற்றுப்பட களிம்பேறும். செம்பு, துத்தநாகம், இவைகளுடன் சேரும். இதில் இரும்பு சேர்ந்ததுதான் காரீயம் ஈயத்துக்கள் புழுக்களைக் கொல்லுமென்பது யூனானி வைத்தியர்களுக்குத் தெரியும். இதை உருக்கி எருக்கம் பாலிட்டு சுத்தி செய்து மருந்திலுபயோகிப்பார்கள். நாட்டு வைத்தியர்கள் இதிலிருந்து பற்பம் தயாரிப்பார்கள். இதன் உபயோகம் பலவாயினும் முக்கியமாக உலோக செம்பு, பித்தளை, பாத்திரங்களுக்கு ஈயம் பூச உதவும். tin — stanium, It is a soft white brillient metal. Its surface is tarnished or impaired on exposure to the atomosphere and it is alloyed with copper, zinc etc. Black tin is tin and iron combined. Tin powder (Pulvis stanni) is known to Hakeems as an anthelmintic. It is purified for medicine by melting it over fire and pouring the melted fluid into the milky juice madar. Vaidyans calcine it and prepare oixides from it. Various are the common uses but it is chiefly used for tinning different metals chiefly brass and copper vessels and iron plates.

NOTE:-It occurs in nature mostly as tin stone which is the oxide sno2. The metal is obtained from the ore by reducing with characoal. It is soft and maliable and so can be lammered out into very thin sheets known as tinfoils. Black tin (காரீயம்) is tin and iron combined and valuable pewter is antimony 17 parts and tin 83 parts.

தகர ரேக்கு, தகரத்தை இலையைப் போல் தட்டிய தகடு, tin foil.

தகர வித்தை, கடவுளை இதயத் தானத்தில் இருத்திப் பூசை செய்யும் வித்தை, the mystic contemplation of the Diety by concentrating on the cavity of the heart.

தகராஞ்சிரம், பெருந்தகரை, West Indian bead tree- Lencaena Glanca.

தகரி, முந்திரை, pinnate leaved honey sweet tree- Meliosma arnottiana.

தகரிடம், see, தகரை.

தகரீ, பெண் குறிப்பகுதி, a particular part of woman's pudenda.

தகரு, புனமுருக்கு, palaus tree- Butea frondosa.

தகருகிலம், சாயப்பாக்கு, dyed areca nut.

தகரை, தகரைச் செடி, பல கிளைகள் வாய்ந்தது. பூ சிறியது. மஞ்சள் நிறம், காம்புகள் நீளம், காய்கள் நீளம் கூர்முனை, நான்கு மூலைகளாயிருக்கும். விதைகள் பலவுண்டு, மங்கல் சிவப்பு நிறம், சிறிது தட்டையாயிருக்கும். இலைக் கொழுந்து இரவில் குவிந்து கொண்டிருக்கும். இச்செடி நாற்றமுள்ளது. இலைகள் வழ வழப்பாய் இருக்கும். உருசிக்கக் குமட்டலை உண்டாக்கும். கொழுந்தோ நன்றாயிருக்கும். இதை எலுமிச்சை ரசத்தோடு அல்லது காடியோடு சேர்த்து அரைத்துப் பூச படையை நீக்கும். இதைக் கஷாயமாகக் கொடுக்க இலேசாகப் பேதி யாகும். அன்றியும் குழந்தைகளுக்குப் பல் முளைப் பதனால் வரும் சுரத்திற்கும் கொடுக்கலாம். வண்டுகள் கொட்டின இடத்திற்கு இலையைக் கசக்கித் தேய்க்கலாம். இதன் வேர் அல்லது இலையை விளக்கெண்ணெயில் வதக்கி, நாற்றமுள்ள புண்களுக்கு வைத்துக் கட்டலாம். கட்டிப் பழுக்கவும் உபயோகிக்கலாம். விதையை அரைத்து மோரில் கலந்து சிரங்குகளுக்குப் பூச

நமைச்சல் அடங்கும். அன்றியும் வண்டுகடி, அரைக்கடுவன், சூலைப் பிடிப்பு, தொடை வாதம், கீல் நோய், இவைகளைக் குணப்படுத்தும் இவ்விதைகளைக் காப்பிக் கொட்டைக்குப் பதிலாக உபயோகிக்கலாம். நீலச்சாய மேற்றவும் உதவும். இலைகள் நில ஆவரைக்குப் பதிலாக உபயோகப்படும். இது அடியிற்கண்டபடி பலவகை உண்டு. ringworm plant- Cassia tora alias C.foetida. It is a shrub with spreading branches, small yellow flowers on long pedicles, legumes very long, sharp pointed four sided many seeded. Seeds are liver- coloured and slightly compressed. Leaflets all fold up closely at night, the whole plant has fetid smell, the leaves when full grown are mucilageneous and have a nauseous taste, but when young they are mild. Formed into a paste with juice of lime fruit or vinegar fresh leaves cure ring worm, administered in the form of infusion, they act as a mild cathartic and cure fever of children during dentition. Leaves or root fried in castor oil are applied to foul ulcers; it makes a warm poultice to hasten supuration of boils. Seeds ground and mixed with butter milk allay irritation in itch. It is a warm remedy in gout sciatica and pain in the joints. Seed is a substitute for coffee when roasted and ground Seeds are also used in preparing blue dye. The leaves are used to adulterate senna or as a substitute. The following are the different kinds.

1. பெருந்தகரை, large tagaray- Cassia sophera.

2. கருந்தகரை, black cassia- Cassia pumila.

3. காட்டுத் தகரை, wild cassia- Cassia occidentalis.

4. வெண்டகரை அல்லது வெள்ளைத்தகரை, cassia glauca.

5. பூந்தகரை.

6. சிறுதகரை, same as தகரை which see.

7. கற்றகரை.

8. பன்றித்தகரை.

9. ஊசித்தகரை, needle chakondah — Phareolus semierectus.

10. செந்தகரை.

11. புளித்தகரை.

12. நாற்றத்தகரை, fetid cassia.

13. சீனத்தகரை, chinna cassia — Cassia chinensis.

14. பொன் or பொன்தகரை, cassia glauca.

தகரை, பெருந்தகரை, see தகராஞ்சிரம்; 2. கையாந்தகரை, eclipseplant- Eclypta prostata; 3. பூந்தகரை, see தகரை, 4. நந்தியா வட்டம், which see.

தகர், ஆண்சுறா, male shark; 2. செம்மறியாட்டுக்கடா, ram; 3. ஆண் யானை, male elephant; 4. பலாசு, palaus- Butea frondosa; 5. see தகர்தல்; 6. பொடி, powder; 7. ஆடு, sheep; 8. செம்மறியாட்டுக்கடா, ram, 9. வெள்ளாடு, goat, 10. பூமி, earth; 11. துருவாட்டேறு, ram of fleecy sheep; 12. பராகம், dust powder.

தகர்தல், நொறுங்குதல், being broken into pieces; 2. நெரிதல், being crushed; 3. சிதறுதல், being scattered; 4. அடியோடு விழுதல், being uprooted.

தகர்த்தல், நொறுக்குதல் breaking into pieces; 2. குட்டுதல், striking a blow with the fist, cuffing the head; 3. நெரித்தல், causing a fracture as of a bone; 4. கட்டியைக் கீறித் திறத்தல், incising and opening an abcess or boil.

தகலாவணிகம், தண்ணீரும், உப்பும் கலத்தல் preparing a solution with salt and water.

தகல், திராய், bitter plant; 2. பவளப்பூண்டு, a species of glass wort- Solicornia brachiata; 3. தடை obstruction; 4. உமரி, glass wort- Arthroenemum indicum.

தகவின்மை தகுதியில்லாமை, unsuitability; 2. வருத்தம், anxiety.

தகவு, தகுதி, suitability fitness; 2. குணம், quality; 3. வலிமை, strength, 4. தெளிந்த அறிவு, wisdom; 5. தன்மை / condition; 6. உவமை, /resemblance; 7. நல்லொழுக்கம், good behaviour.

தகழி, அகல், earthen basin for lamp.

தகழிகை, உண்கலம், eating dish; 2. அகல், bowl of a lamp.

தகழிச்சி, கற்பூரம், camphor.

தகன சேதனம், புகை, smoke.

தகனபைத்தியம், நெருப்பைக் கண்டவுடன் புத்தி பேதலித்தல், derangement of mind at the sight of fire.

தகனம், எரிப்பு, combustion; 2. சீரணம், digestion; 3. ஆகாரம், food, 4. பிணம் சுடல், cremation; burning of a corpse; 5. see வன்னி.

தகனன், நெருப்பு, fire that which burns.

தகனாஞ்சு, பல்லை மூடும் மினுக்கான வயிர வஸ்து, glossy hard coating of the teeth- Enamel.

தகனாராதி, நீர், water.

தகனித்தல், எரித்தல், burning, consuming by fire.

தகனானுவாயு, பிராண வாயு, oxygen gas.

தகனை, உலோகக் கட்டி, lump of any metal.

தகனோபகரணம், சூட்டுக்கோல், an instrument for caterising.

தகனோபலம், சூரியகாந்திப்பூ, sun flower.

தகன், திராய், a prostate herb, see தகல்; 2. பூரான், centipede; 3. நெருப்பு, fire, 4. பணங்கொட்டையின் உள்ளீடு, white pulpy substance in palmyra nut- kernel of palmyra nut.

தகா, பசி, தாகம் hunger and thirst; 2. மிக்க ஆசை, intense desire; 3. மோகம், lust; 4. மோசம், fraud.

தகாபேசி, எழுச்சியை உண்டாக்கும் நரம்பு, nerve causing lust or erection of penis.

தகா வாயு, சுவாசிக்கத் தகாத வாயு, a gas unfit for respiration. It is a name formerly given for nitrogen.

தகாவி, மரமஞ்சள், tree turmeric.

தகி, see தகித்தல், 2. வேப்பம்பட்டை, bark of margosa tree, 3. சாராயம், arrack.

தகித்தல், எரித்தல், burning as fire, 2. சீரணிக்கப்படல், being digested; 3. சூடுண்டாதல், getting hot; 4. சாம்பலாக்கல், reducing to ashes.

தகிப்பு, எரிப்பு, combustion.

தகிலித்தல், உள்புகுத்தல், to thrust in to insert.

தகிலிமா, சேரான் கொட்டை மரம், marking nut tree- Semicarpus anacardium.

தகு, நன்னாரிவேர், Darasaparilla- Hemidesmus indicus, ஓர் பலா Artocarpus lakucha.

தகுதல், ஏற்றதாதல், fitting.

தகுதி, நடுநிலைமை, middle state medicrity; 2. பாத்திரம், vessel.

தகுலிமா, see தகிலிமா.

தகுமூலி, கும்பளங்கொடி, Gmelina asiatica.

தகை, தாகம், thirst, 2. தளர்ச்சி, faintness; 3. மூச்சுக் கஷ்டம், difficulty of breathing.

தகைதல், இளைத்தல், emaciating; 2. அடக்குதல், suppressing; 3. பிணைத்தல், binding; 4. தளர்தல், becoming loose.

தகைதல், தடுத்தல், check.

தகைத்தல், களைதல், getting fatigued.

தகைத்துவம், மருகு, a fragrant plant- Origanum majoranum.

தகைப்பு, இளைப்பு, weariness, fainting.

தகைமை, தகுதி, fitness; 2. பெருமை, greatness; 3. குணம், nature; 4. அழகு, beauty; 5. ஒழுக்கம், behaviour; 6. நிகழ்ச்சி, event, occurrence.

தகையணங்கு, சோரப்புணர்ச்சி செய்த பெண், woman who had illicit intercourse.

தகையிழைப்பு, சுவாசகாசம், bronchial asthma.

தகைவிலான், (தகைவு+இலான்) (Fatigue+ without) அடைக்கலாங் குருவி, தலையில்லாக் குருவி, தரையில்லாக் குருவி- Swift swallow- Hirundininae, it is so called because it is the fastest flying bird in the world. The other common Indian species are 1. Swallow-Hirundo rustica; 2. Swift- Cypselus affinis; 3. Fissiorostres; 4. Insessores.

தகைவு, இளைப்பு, emaciation.

தகோதரம், நீர் சேர்ந்த வயிறு, நீர்க்கவிசை, இதனால் வயிறு உப்பிசம், உலவ முடியாமை, பலவீனம், செரியாமை, கைகால் வீக்கம், அசதி, கீழ் தளர்ச்சி, வாயு பிரியாமை, மலச் சிக்கல், உடம்பெரிச்சல், தாகம் முதலிய குணங்கள் ஏற்படும். Accumulation of fluid in the abdomen abdominal dropsy- Ascites proper. It is marked by the following characteristic symptoms- distension of the abdomen incapacity of locomotion, weakness impaired digestion, vedematous swelling of the limbs, a general sense of lassitude, looseness in the limbs, supression of flatus and stool burning sensation and thirst etc. dropsical belly see நீர் கவிசை.

தகோன்மத்தம், தகனபைத்தியம், which see.

தக்கடி, வஞ்சனை, deceit; 2. பொய், false hood.

தக்கடி வித்தை, செப்படி வித்தை, jugglery, steight of hand tricks.

தக்கணம், வலது பக்கம், right side; 2. தட்சணம், at once immediately.

தக்கத் தடித்தல், மிகுதியாகப் பருத்தல், getting stout to an extrodinary degree or an enormous size and extent.

தக்க பருவம், யௌவன வயது, adult age தக்கப்பண்ணுதல், தகுதியாகச் செய்தல், doing in a fit manner; 2. நிலை பெறச் செய்தல், fixing up to remain permanently; 3. சரியானபடி சிகிச்சை செய்தல், (in medicine treating in a proper method) 4. கரையாதபடி செய்தல், retaining the foetus in the womb by preventing adortion; 5. பிறந்த குழந்தை இறவாதபடி செய்தல், to treat the new born and make it live.

தக்கல், அடைப்பு, plug; 2. தக்குதல், retaining.

தக்க வயதோர், வாலிபர், youth.

தக்கனைக் கொன்றான், சிவனார் வேம்பு, Shiva's neem.

தக்கா முக்கி, அபாய நிலை, the state of being at a loss, dangerous state; 2. சங்கடம், perplexity.

தக்காமை, நிலைக்காமை, as பிள்ளைதக்காமை, missing.

தக்காரி, தழுதாழை, அல்லது வாதமடக்கி, a medicinal herb wind killer- Cleodendron phlomoides; 2. முன்னை, Indian head ache tree- Premna integrifolia

தக்காரிகை, see தக்காரி.

தக்காலனா, தழுதாழை, see தக்காரி.

தக்காவி, செஞ்சோளம் red maize.

தக்காளி, தக்காளிக்காய். இதற்கு நாட்டுத் தக்காளி என்றும் பெயர். இது வங்காளம், காசுமீரம், நேபாளம் இவ்விடங் களிலும், தென்னிந்தி யாவில் நீலகிரி, பெங்களூர், குடகு முதலிய இடங்களிலும் விளையும். பூக்கள் சிறியன. மஞ்சள் நிறம். சீமைத் தக்காளியைப் போல உலர்ந்த போலி இலைகள் மத்தியில் மறைந்து உள்ளது. இக்காய் குழம்பிலிட்டுச் சமைக்கவும் பச்சடியாகவும் உபயோகிக்கப் படும். இது உடம்பிற்கு இரத்த விருத்தியையும், சீதளத்தையும் தரும். காயை வற்றலிட்டுப் புசிக்கலாம். இதன் சமூலத்தைக் காடியில் அரைத்துக் கட்ட முலைப்பால் சுரக்கும். இதில் அடியிற் கண்டபடி அநேக விதங்களுண்டு. Indian winter cherry- Physalis angulata alias P.esculenta. It is an indigenous article grown in Bengal, Cashmere, Nepal and other places. In South India it is cultivated in many places; bears small yellowish flowers, fruits exactly resemble water cherry of English gardens. It is concealed in a dry leafy appendage and is of a bright amber colour, the young shoots bear the finest fruits. The fruits are used in sauce and they make good preserve, promote blood and cool the system. The dried fruits is fried and used in food. The whole plant ground in vinegar and applied to the breast increases the secretion of milk. It consists of different kinds as mentioned below:-

1. பெருந்தக்காளி, edible Indian winter cherry- Physallis edulis.
2. சிறு தக்காளி, small takkauly small winter cherry- Physalis minima.
3. எருமைத் தக்காளி, buffulo winter cherry- Lycopersicum esculentum.
4. பேய்த்தக்காளி அல்லது நாற்றத் தக்காளி, demon takkauly.
5. மிளகு தக்காளி.
6. மணித்தக்காளி, Indian hounds berry- Solanum nigrum.
7. சீமைத்தக்காளி, Europe brinjal tomato- Lycopersicum solanum.
8. பிள்ளைத் தக்காளி, see குட்டித் தக்காளி.

9. குட்டித்தக்காளி, black beriied solanum vide No. 6.

10. பசுந்தக்காளி, green tomato.

11. சிவப்பு தக்காளி, red physalis- Amatula rubra.

12. நல்லத்தக்காளி, see தக்காளி.

13. சீமை மணத்தக்காளி see சீமைத் தக்காளி vide No. 7.

தக்காளி, Rhodomyrtus tomentosa.

தக்காளிப்பழம், சீமைத் தக்காளி, lycospersicum solanum.

தக்காளிப்பிள்ளை, பிள்ளைப்பூச்சி, a kind of insect — Grillus.

தக்கானியம், கொத்தமல்லி, coriander- Coriandrum sativam.

தக்கிஷராயன், பொன்னம்பர், yellow coloured amber.

தக்கிரமா, சேங்கொட்டை, marking nut dhoby's nut.

தக்கிரம், மோர், butter milk, whey, 2. தயிர், curd.

தக்கினி, மண் பானை, earthern pot; 2. பாண்டம், vessel.

தக்குதல், நிலைத்தல், as பிள்ளைதக்குதல், escaping failure, lasting as children; 2. நிலை பெறுதல், to stand firm.

தக்குமான், உடம்பில் குருக்களை யெழுப்பும் நோய், a disease or class of diseases characterised by skin eruptions.

தக்குவித்தல், நிலைக்கும்படி செய்தல், causing to escape failure.

தக்கை, அடைப்பான், cork, நெட்டி, pith plant- Aeschynomen indica; 3. உலர்ந்த தட்டை, dried stalk as of great millet etc; 4. உறைந்த கட்டி, congealed mass; 5. ஆற்றுநெட்டி, river cork- Aeschynomen aspera

தக்கைப்பூடு, நெட்டி, குதம்பை, Diancha.

தக்கையுடம்பு, மிகவும் இலேசான வுடம்பு, a very light body- body light like a pith.

தக்கோலப்பொட்டு, see தக்கோலம்,

தக்கோலம், வால் மிளகு, cubeb- Piper cubeba; 2. சிறுநாவற்பூ, calyptranthes jambulana; 3. கொட்டை நாவல், jamoon; 4. காட்டு வெற்றிலை, wild betel; 5. சாதிக்காய், nutmeg; 6. வாசனைப்பண்டம், அதாவது பஞ்சு சுகந்தத்திலொன்று, a fragrant drug chewed with betel; 7. திப்பிலி, long pepper; 8. பெருநாவற்பூ, the fragrant and plesant tasted flowers of a plant- Calyptranthes jambolana; 9. வெற்றிலை பாக்கு ஏலம், வால் மிளகு ஆக இவைச் சேர்ந்தது a fragrant mixture of cardamum and cubeb chewed with betel and nut; 10. சங்கங்குப்பி, smooth volkameria- Cleodendron inerme; 11. சீன மிளகு, china pepper, Pimento acris; 12. see சிறுநாவல்.

தக்கோலி, ஓர் வகை அகில், a kind of agil wood used as an incense.

தக்தி, கந்தகம், sulphur.

தக்ர கூர்ச்சிகம், மோர்க்குழம்பு, inspissated butter milk.

தக்ரமானிசம், மோருடன் புசிக்கும் வறுத்த இறைச்சி, meat fried with ghee and eaten with butter milk.

தக்ரா, நீர் கலந்த மோர், buttermilk mixed with 1/3 water.

தங்ககேசரம், பின்னை, common poon-Calophyllum inophyllum.

தங்கக் கட்டி, ஊதிய பொன்கட்டி, a mass of pure or refined gold, ingot of gold.

தங்கக் கம்பி, பொன் இழுத்தக் கம்பி, pure gold drawn into a wire- gold wire.

தங்கக் காசு, 8 மாற்றுப் பொன் நாணயம், இதில் செம்பு கலப்பு.

8 ct. gold coin. It is mixed with copper.

தங்கக்காறு, தங்கக் கொழு, gold wroght into bars.

தங்கக் கிருஷ்ணம், யானைத் திப்பிலி, elephant pepper- Pathos officinalis.

தங்கக் குகை, பொன்னிருக்கும் மூசை, crucible intended for melting gold.

தங்கக் குணம், நாகமலை, mountain containing zinc ores; 2. சிறந்த குணம், gold character.

தங்கச்சத்துமூலி, சிவனார் வேம்பு, குப்பை மேனி, கற்றாமரை, பொன்னுமத்தை, பொன்னாங் காணி siva'sneem, Acalpha indica Nelumbium speciosum, Dhatura Fastuosa and Alternanthera sessile alias illecebrum sessile.

தங்கச் சத்துரு, பொன்னுக்குச் சத்துருச் சரக்குகள், அவையாவன; enemical crugs of gold viz.

1. நாகம், zinc.

2. துருசு, copper sulphate.

3. இலிங்கம், cinnabar.

4. வெடியுப்பு, potassium nitrate.

5. வெள்ளை பாஷாணம், white arsenic.

6. சூதம், mercury.

7. கெந்தி, sulphur, see சத்துரு.

தங்கச் சலாகை, தங்க ஊசி, probe made of gold.

தங்கச்சாயல், மினுமினுப்பு, good lustre; 2. பொன்மேனி, body shining like gold.

தங்கச்சி, குவளை, water lily-Pontederia.

தங்கச்சிந்தூரம், தங்கம் புடமிட்ட சிந்தூரம், calcined red oxide of gold.

தங்கச்சுண்ணம், தமிழ்ச் சித்த வைத்தியத்தில் கூறியுள்ள

தங்கத்தைக் கொண்டு புடமிட்டு தயாரிக்கும் ஓர் சுண்ண மருந்து. இதனால் உடம்பில் வாதநீர் அற்றுப்போம், பருத்த தேகம் சுருங்கும், a calcium compound of gold prepared with gold as chief ingredient accordig to the process contemplated in Tamil Siddha Medicine. It is an excellent remedy for morbid glandular secretions and to reduce corpulency. One of the methods of preparing it is given below. தங்க ரேக்கு -1 துலாம், கடல் நுரை -1 துலாம் இதை 3 நாள் அரைத்து சீமை மூசையில் 7 சிலை மண் செய்து உலையில் வைத்து ஊதியெடுக்கச் சுண்ணமாம். Take gold leaf and cutle fish equal parts grind for 3 days. put it in a crucible, lute it seven times and blow in a furnance, remove it cool it. Open the crucible and take the calcined gold.

தங்கச் செந்தூரி, பொன்னைச் செந்தூரமாக்கு மருந்து அல்லது மூலிகை any durg or medicine capable of turning or reducing gold into a red oxide see page 909. see மஞ்சபத்திரி.

தங்க செம்பி, see தங்கம் செம்பாக்கி see page 914.

தங்கச் செம்பு, சிவராஜ யோகிகளும், வாதிகளும், கெந்தகச் செம்பிலிருந்து எடுத்து வாத வேலைக்கு உபயோகிக்கும் ஓர் மாற்றுயர்ந்த செம்பு நிறமான பொன். refined gold of a very highly concentrated nature extrated from the compound of sulphur and copper and used in Alchemy by yogies and by those destined to do such acts.

தங்கஞ் சலமாக்கி, சொர்ணபேதி, a mineral disolvent of gold-Aquaregia.

தங்கத் தகடு, பொன் தகடு, gold plate; 2. தங்க ரேக், gold foil.

தங்கத்தி, குங்கும பாஷாணம், which see.

தங்கத் திருமேனி, see தங்க மேனி.

தங்கத்தை சலமாக்கி, see தங்கஞ்சலமாக்கி.

தங்கத்தை வெண்ணெயாக்கி, கங்குளா, drug kangula capable of reducing mercury into a colloid.

தங்க நிமிளை, பொன்னி மிளை, yellow bismuth.

தங்க நீர், தங்க நிறம் போன்ற மூத்திரம், high coloured urine; 2. தங்கம் கரைந்த நீர், a mineral water containing gold in solution.

தங்க நீற்றி, தங்கத்தை பற்பமாகச் செய்யும் பொன்னிமிளை, gold bismuth capable of reducing gold into an oxide.

தங்க பற்பம், தங்கத்தை சித்த முறையில் புடமிட்டு எடுத்த பற்பம், இது மற்றப் பற்பங்களை விட மிகச் சிறந்தது. இது உடம்பிற்கு பலத்தையும், தாது புஷ்டியையும் கொடுக்கும். எல்லா நோய்களையும் போக்கும். கிழத்தனத்தைப் போக்கி, யௌவனமாக்கும். அன்றியும் ஞாபகசக்தி, குரலோசை தேக நிறம் முதலியவைகளை உண்டாக்கும். calcined gold oxide prepared as per process of siddha medicine and as such it is far superior to other kinds of similar oxides. It is a good nervine tonic and is said to cure all ailments. It restores the vigor of manhood, removes the effect of old age, sharpens the memory and intellect. improves the voic and colour of the body. see சுவர்ண பற்பம்.

NOTE:- The modes of preparing this calcined powder are different according to the books written by several Siddhars. The western people regard. This as simple as an ash prepared from gold as they donot count much upon its value.

தங்க பற்பம்: 8 மாற்றுள்ள பொன் தகட்டிற்கு சிவப்பு முள்ளிக்கீரைவேரின் பட்டை அரைத்து கவசம் செய்து10 விரட்டியில் புடமிட்டெடுத்து கல்வத்திலிட்டு அரைக்க பற்பமாகும். ஒரு விராகனிடை

தகட்டுக்கு ஒரு எலுமிச்சை பழவளவு கவிசம். இதனால் வீக்கம் வாயு போம். Take one pw weight of thin gold plate of 8 matru and cover it on all sides with the paste of the root bark of red Amaranthus spinosus about lime size. Put it in an earthern plate and cover it with another and lute it three times. Subject it to the fire of 10 cowdung cakes. Take out the substance and powder it. It cures swelling and vayu.

தங்க பற்பம், தங்க ரேக்கு 1/2 விராகனிடை சுத்தி செய்த சிற்றண்டவோடு விராகனிடை1. இவ்விரண்டையும் உத்தாமணிச் சாற்றினால் அரைத்து மூசையிலிட்டு ஓடு மூடி சீலை செய்து குமட்டி சட்டி உமிநடுவில் வைத்துத் தீயிடபற்பமாகும். காசம் போம் தாது புஷ்டியாகும். Take gold leaf pw 1/2 egg shell pw 1 grind both with the juice of Daemia extensa. Put the paste in a crucible close it with a lid and lute it three time and subject it to the fire of husk of paddy it becomes calcified. It is useful for bronchities, and it is a tonic.

தங்க பற்பி, தங்கத்தைப் பற்பமாகச் செய்யும் மூலிகை அல்லது மருந்துகள் drugs or medicines capable of converting gold into oxide vide page 907.

தங்கப்பாரை, கன்னப்பாரை என்னும் நீல நிறமான ஓர் கடல் மீன். உடம்பு கோழி முட்டை வடிவம். கீழ் வாய் நீளம். சிதல்கள் தலைப்பக்கத்திலும் உடம்பின் பக்கமும் 104 சிதல்களும் வால் உடம்பின் பாகத்திய அளவுக்குச் சரியாகவும் அமைந்திருக்கும். நீளம் சுமார் 20 அங்குலம். Cobbler fish- Caranx armatus alias C. ciliaris, Body oval, long lower jaw, scales few on the back of head, round the eyes and in cheeks lateral line consists of 104 scales. Its tail is as long as its body, length isabout 20 inches, 2. சிறு கன்னப்பாரை. இது சுமார் 8 அங்குல நீளம் small horse mackerel about 8 inches long —

Carank Kulla; 3. *சாம்பல் நிறமான ஓர் வகைப்பாறை மீன். இதற்கு இரு பக்கங்களிலும் சுமார் 140 சிதல்கள் உண்டு. அனேக கரும் புள்ளிகள் வாய்ந்தது.* gray puuray Caranx nigrescens. Its lateral line consists of 140 scales colour dusky grayish with innumerable black spots.

தங்கப் பாளம், *தங்கக் கட்டி*, ingot of gold.

தங்கப் பிரமி, *வாத வித்தை*, alchemy.

தங்கப்புரை, *பொன்முலாம்*, gold gilt, electro plated gold.

தங்கப்பூச்சு, *பொன் முலாம்*, see *தங்கப் புரை.*

தங்க மலாம், see *தங்க முலாம், தங்கப்பூச்சு.*

தங்க மாவாரை, *பொன்னாவாரை*, tanner's bark, plant yielding yellow flowers- Cassia auriculata.

தங்க மானிசியம், *கரும்பு*, sugar cane.

தங்கமித்துரு, *தங்க சத்துரு சரக்குகள் நீங்கலாக மற்ற உபரச, கார, சாரசரக்குகள் தங்கத்தின் மித்துரு சரக்குகளாம்.* all other drugs except those that are enemical to gold are its friendly drugs.

தங்க மிருதியாதி, *தங்கச் செந்தூரம்*, red oxide of gold; 2. *தங்க பற்பம்*, per oxide of gold.

தங்க மேனி, *பொன் மயமான உடம்பு*, gold coloured body.

தங்க மூலிகை, see *தங்கச்சத்து மூலி.*

தங்கம், *உயர்ந்த பொன், 10½ மாற்றுப்பசும் பொன்*, pure gold of 24 carats. *இது இரு வகைப்படும். 1. பிறவி அல்லது இயற்கைத் தங்கம் 2. செயற்கை தங்கம்.* It is of two varieties. 1. Natural 2. artificial; 3. *சூரியகாந்தம்*, sun flower.

தங்கம் செம்பாக்கி, *பொன்னை செம்பு நிறம் போல் சிவப்பாக்கும் செங்கத்தாரிப் பூச்சாறு* the juice of *செங்கத்தாரி* flowers capable of turning the yellow colour of gold into red see *தங்க செம்பி* page 914.

தங்கரசக் கலவை, *தங்கமும், பாதரசமும் சேர்ந்த ஒரு வகை இரசாயனக் கலப்பு*, a chemical compound of gold and mercury.

தங்கரசிதக்களங்கு, *பொன், வெள்ளி இவைகளினின்று கொங்கணவர் வாதமுறைப்படி தயாரிக்கும் ஓர் அபூர்வ மருந்து*, a rare preparation made according to the process laid down in Konganava's work on Alchemy with gold and silver as its chief ingredients.

தங்கரவிப்பொடி, *பொன் இராவிய பொடி* gold filings, gold dust.

தங்கரளி, see *தங்கலரி.*

தங்கராசிகம், *மஞ்சள் அந்தி மல்லிகை*, 4'o clock plant with yellow flowers- Mirabilis jalappa.

தங்கரேக்கு, *உயர்ந்த பொன்னி னாலடித்த மெல்லிய தகடு*, thin foils or sheets of refined gold.

தங்கரேக்கு, *தங்கத்தாலடித்த பொன் தகடு*, gold leaf.

தங்கலரி, *காசியலரிப்பூ. இதன் பால் துன் மாமிசத்தைக் கரைக்கும்.* excle oleander- Tecoma stans; its milk juice erodes over growth.

தங்கல், see *தங்குதல்.*

தங்காரி, *ஓர் பூடு*, a plant- Physalis peruviana.

தங்கான், *அறை*, half.

தங்கு தண்ணீர், *தேக்கமுற்ற நீர், நிலை நீர்*, stagnant water as in ditches, pits, tanks, wells etc.

தங்குதல், *வெளிவராது நிற்றல், தடை படல்*, being obstructed as the menses.

2. *படிதல்*, adhering as filth between the teeth.

3. *இருப்பாயிருத்தல்*, being in deposit as retained urine.

4. *அடியிற் படிதல்*, settling at the bottom as sediment.

5. நிலை பெறுதல் as கருத்தங்கல், being firmly fixed as retaining pregnancy without abortion.

தங்குபிண்டம், பெண்கள் கருப்பிணகயாயிருக்குங் காலத்திற்கூடத் தவறாது மாத விடாய் ஆவதினால் அதிர்ச்சி கண்டு சுருங்கிக் காணும் பிண்டம், foetus reduced in size and rendered feeble owing to discharge of usual menses during the time of pregnance- See சுப்தி பிண்டம்.

தங்கு மூச்சு, மரண காலத்தில் தடைப்பட்டு நின்று நின்று வரும் மூச்சு, last gasps of a dying person with inter mittance.

தங்கை, குவளை, indian water lily- Pontederia; 2. கருங்குவளை, blue nelumbo- Pontederia Vaginalis.

தங்கைச்சி, see தங்கை, 2. கருங்குவளை, blue nelumbo- Pontederia Vaginalis.

தங்கையைக் கொல்லி, சிறியாணங்கை, small species of milk wort- Polygala genus.

தசகம், தசம், பத்து ten.

தசகரம், பகல் நித்திரை, day sleep; 2. காமம், lust.

தச, see தசம்.

தசகாரியம், கைவல்யமாகுங் காலத்தில் ஆன்மா அடையும் பத்துவித அனுபவ நிலைகள். அவையாவன: The ten spiritual experiences of the soul on its way towards realisation or final deliverance viz:- (in Saiva Philosophy).

A. 1. தத்துவரூபம்- உண்மை வடிவம், true figure.

2. தத்துவ தரிசனம்- ஞானக் காட்சி, real vision.

3. தத்துவ சுத்தி — தத்துவங்களின் பரிசுத்தம், purity of the constituent parts of the body.

4. ஆன்ம தரிசனம்- ஆத்தும நிலையறிதல், spiritual experience of the soul.

5. ஆன்ம ரூபம் — the true nature of the soul.

6. ஆன்ம சுத்தி- பரிசுத்த நிலைமை, purification of the self.

7. சிவ தரிசனம்- appearance of God Siva.

8. சிவபோகம்-

9. சிவயோகம்- a kind of yoga practice.

10. சிவராஜ யோகம் — a kind of yoga practice.

B. (In Advita Philosophy)

1. மாயாரூபம், deceptive figure.

2. மாய தரிசனம், deceptive appearance, illusion of Maya.

3. மாயா சுத்தி, purification from the effects of Maya.

4. சீவரூபம், form of life or the soul.

5. சீவ தரிசனம், vision of the soul (individual).

6. சீவசுத்தி.

7. பிரம ரூபம், form of the universal soul.

8. பிரம தரிசனம், vision or appearance of the universal soul.

9. தேககைவல்யம்.

10. விதேக கைவல்யம்.

தச குணம், பதின் மடங்கு, ten times.

தச தீட்சை, மாந்திரிக நூலிற் சொல்லியுள்ள சத்தி தீட்சை சிவ தீட்சை. இது சாதாரணமாக, பிராணாயாமம் செய்வதற்கு முன்னதாகவே உடம்பைப் பலப்படுத்த வேண்டி ஓதப்பட்ட மந்திர எழுத்துகள், (in Mantric Philosophy) the mystic letters chanted for purposes of invigorating the ten parts of the human system before siting up

for practising pranayama (yogic breathing exercise).

2. பூ நீருப்பை பத்துத் தடவை கரைத்தும், காய வைத்தும் அல்லது காய்ச்சியும் தெளி விறுத்தும் உப்பைச் சுத்தி செய்தல், (in Alchemy) purifying or cleaning the fuller's earth. It is disolved in pure rain water, filtered and kept in the hot sun for evaporation. The resulting salt is again dissolved in rain water, filtered and avaporated as before. Thus it is repeated ten times. This salt is used in Alchemy.

தசதீட்சை, ஞானிகள் தேக சித்தியாவதற்குச் செய்ய வேண்டிய பத்து வித சுத்தி முறைகள்.

1. உரோமத் துவாரங்கள் வழியாகக் கெட்ட நீர்கள் வியர்வையாகக் கழியும்படி செய்தல், sages to rejuvenate the body and to prolong the life they adopted ten methods to purify their bodies. They are 1. through perspiration bad water in the body is got rid off.

2. முத்தோஷமாகிய வாத, பித்த, சிலேட்டு மதோஷங்களை நீக்குதல், keeping the three humours in balance.

3. பழைய கெட்ட இரத்தங்களைக் கசியச் செய்தல், letting out the blood.

4. சர்ப்பம் தோலுரிப்பது போல் உடம்பில் சட்டை கழற்றல். getting skin pealed off just as the snake peals off its skin.

5. சட்டை கழன்ற பின் உடம்பு செந்நிறமாதல், உரோமம் கருக்கும். பஞ்ச மூர்த்திகள் வசமாவர். Aafter the pealing of the skin the body glows red, the hair becomes black and the five dieties will appear.

6. சுழிமுனை வாசல் திறந்து தூர திருஷ்டி வசமாதல், suzhimunai opens and person can see objects which are very far off.

7. உடம்பு சோதிரூபமாகி தீபம் போல் பிரகாசித்தல், body becomes lustrous and glour.

8. உடம்பை உயரத் தூக்கி இலகிரியாதல், கூடுவிட்டுக் கூடு பாய்தல். the soul passes from one body to other.

9. யோகம் ஞானம் விளங்கி, உடம்பு சூரிய பிரகாசமாகி அஷ்டமா சித்தியடைந்து தேவர்கள் ஏவல் புரிதல். the body shines like sun and obtains the eight psychic Divine miraculous powers and the devas will serve him.

10. உடம்பை வெட்ட கத்தி ஓடி ஊடாடும் சொரூப சித்தியடைதல்; நரை, திரை, மூப்புப் பிணி இவைகளைத் தவிர்த்தல், காற்று ரூபமாக விளங்கும் திருமேனி உடையவராவர். மரணமில்லை. there is no old age or its symptoms and no death and the body becomes ethereal.

தச நரம்பு, see தச நாடி.

தசநாடி, உடம்பிலுள்ள அடியிற்கண்ட பத்து வகை நாடிகள். இதுவே உயிருக்கு ஆதாரமாக உள்ளவைகள். உடம்பில் பத்துவிடங்களில் வியாபித்து பஞ்சேந்திரியங்களின் போக்குகளை அறியக் கூடிய தூல நாடிகள். (In Eastern physiology) the ten nerves or arteries of the human system forming the principal channals of vital spirit. They are:

1. இடைகலை, the vital air passing through the left nostril.

2. பிங்கலை, the vital air passing through the right nostril.

3. சுழிமுனை, the nerve that passes through the 6 regions of the body.

4. காந்தாரி அல்லது இடக்கணி, the nerve that extends from the nevel to the throat.

5. அத்தி அல்லது வலக்கணி.

6. சங்கினி அல்லது தலைச்சி, the artery that rises from the heart and terminates in the anus.

7. அலம்புடை அல்லது நாக்கி, tubular vessel extending from anal region to the temples.

8. புருஷன், the nerve situated in the region of the ears forming the auditory nerves.

9. குறவன், குறிச்சி, a tabular vessel seated in the umbelicus and extending to the pudendum.

10. சிங்குவை, nerve in the region of tongue.

தசநாதம், சங்கு, conch.

தசநாதம், மானிட சரீரத்தில் அந்தர்முக நோக்கு உடையவர் களுக்கு விளங்கும் பத்து வித நாதம் அல்லது ஓசைகள். அவை the ten sounds heard by those who have the sight. The sound are those of,

1. மணி, bell.

2. கடல், sea.

3. யானை, elephant.

4. குழல், flut.

5. மேகம், clouds, thunder.

6. வண்டு, bees.

7. தும்பி

8. வளை, conch.

9. பேரிகை, big drum.

10. யாழ், veena like instrument.

தசநோற்பவம், பல் முளைத்தல், dentition; 2. குழந்தைகளுக்கு பல் முளைக்கும் போது சுரம், பேதி, இசிவு முதலிய குணங்களைக் காட்டும் ஓர் நோய், a disease of common in children during their dentition period (the cutting of teeth in infancy) and marked by fever, purging or diarrhoea convulsions etc.

தச பாஷாணம், பத்து வகைப் பாஷாணம், the ten kinds of arsenics or mineral poisons.

தசப் பொருத்தம், பத்து வித மணப் பொருத்தம், (in Astrology) the ten points of agreements in the horoscopes of the bride and bride groom.

தசமச்சபாஷாணம், கச்சால பாஷாணம், a kind of arsenic.

தசம பாகம், பத்திலொரு பங்கு, 1/10 of a share- Tithe or Tythe; 2. நாடி சோதிடத்தினோர் பகுதி, a portion of Nadi Astrology.

தசமன், ஆன்மா, soul.

தசமா, நிர்ணயிக்கப்பட்ட மனித ஆயுள் 100 வருடத்தின் இறுதி பாகம், the 10th and the last stage of the prescribed human life (from 91 to 100 years).

தசமாசியம், பத்து மாதக் குழந்தை, full term foetus, 10 months foetus.

தசமித்திரம், பத்து வகைத் துணைச் சரக்குகள். அவையாவன; The ten friendly drugs viz; 1. வெண்ணெய், butter; 2. வெங்காரம், borax; 3. குன்றி, jeweller's bead; 4. வெல்லம், jaggery; 5. ஆமணக்கு, castor seed; 6. பழம், lime fruit; 7. தேன், honey; 8. அளி, sweet liquor; 9. காடி, fermented liquor, vineger; 10. புறாவின் எச்சம், doves excreta.

தசமுகவு தயாக்கினி, சுரத்திற்காகக் கொடுக்கும் ஓர் ஆயுள் வேத மருந்து, an Ayurvedic medicine prescribed for fevers.

தசமூத்திரகம், மிருகங்களின் மூத்திரம், the urine of the animals; 1. யானை, elephant; 2. எருமை, buffalo; 3. ஒட்டகம், camel; 4. வெள்ளாடு, goat; 5. குதிரை, horse, 6. கழுதை, ass, 7. பசு, cow; 8. மனிதன், human.

தசமூலக்கஷாயம், பத்து வகை மருந்துவேரை கொண்டு தயாரிக்கும் கஷாயம், decoction prepared from the roots of ten plants. see தசமூலம்.

தசமூலக்கிருதம், தச மூலத்தால் செய்யப்படும் நெய், ghee prepared with the roots of 10 plants as chief ingredients.

தசமூலம், பத்து வகை மருந்து வேர்கள்; அவையாவன: வில்வம், பெருங்குமிழ், ஆனை நெருஞ்சில், முன்னை, சிறு மல்லிகை, சிறு வழுதுணம், கத்திரி, பாதிரி, பெருவாகை, தழுதாழை.

1. கண்டங்கத்திரி, prickly nightshade — Solanum xanthocarpum.
2. சிறுவழுதுணை, little brinjal.
3. சிறுமல்லி, small species of jasmin
4. பெருமல்லி, large species of jasmin.
5. நெரிஞ்சி, small caltrope- Tribulus terristri.
6. வில்வம், bael tree- Aegle marmelos.
7. பெருங்குமிழ், large species of குமிழ் which see.
8. தழுதாழை, cleodendron phlomides.
9. பாதிரி, trumpet flower tree- Ster eospermum suavelolens.
10. வாகை, serissa — Mimosa flexuosa (alias) M.Sirisha.

NOTE: These drugs check all the three humours the mucous secretion digest food and cures fever, with asthama, cough and other supervening symptoms:

10 மூலிகை

1. வாகை
2. முல்லை
3. பாதிரி
4. நெருஞ்சி
5. பேராமுட்டி
6. கூவிளம்
7. சிற்றாமுட்டி
8. சிறுவழுதுணை
9. கண்டங்கத்திரி
10. குமிழ்

1. கதிர்நெல்லி
2. சோதி விருட்சம்
3. கருங்கொடிவேலி
4. கல்தாமரை
5. கருத்ததாழை
6. பொற்சீந்தில்
7. கரு நீலி
8. சொர்ணத்திராய்
9. முண்டகம்
10. சாயா விருட்சம்

''வில்வம் பெருங்குமிழ்
மென்னெரிஞ்சில் முன்னையிரு
மல்லி சிறிய வழுதுணை
வேர் — நல்ல கண்டங்;
கத்திரிபன் காலிபெரு
வாகையிவை வன்னோயைக்
குத்துந் தசமூலங் கூறு'' —

(மச்சமுனி 800)

தசமைககண்ணி, பொன்னாங்கண்ணி, sessile plant- illecibrum sessile.

தசரம். இரத்தம். அன்னரசம் முதலியவைகள் ஓடும் குழாய். vessels carrying blood, lymph etc. in the system of animals

தசராத்திரம். பத்து நாள். ten days.

தசவாயு, உடம்பில் தங்கி நிற்கும் உயிருக்கு ஆதாரமாகவுள்ள பத்து வாயுக்கள். அவையாவன: the ten vital airs farming the main

stay of life, operating in the human system viz:

1. அபானன் அல்லது மலக்கால், wind from the anus prevailing the the pelvis.

2. உதானன் or ஒலிக்கால், one of vital airs which rises from the naval by way of the throat passes into the head and causes speech and promoted digestion and prevails in the thorar.

3. வியானன் or செயற்கால், vital air which prevails over the entire body.

4. சமானன் or செரிகால், one of vital airs which is essential for digestion prevailing in the abdomen.

5. நாகன், or வாந்திக்கால் the vital air supposed to assish in extending and contracting the body and in speaking.

6. கூர்மன் or விழிக்கால், the vital air which causes horripilation and winking.

7. கிருகரன் or தும்மிக்கால், that which assists the digestive process and causes anger sneezing and heat.

8. தேவதத்தன் அல்லது கொட்டாவிக்கால், the one which is exhaled during yawning.

9. பிராணன் or உயிர்க்கால், the one responsible for the action of the heart and lungs in breathing and prevails in the chest.

10. தனஞ்சயன் or வீங்குகால், the one supposed to remain after death causing the body to swell and escape through the sutureo of the skull.

தச வாயுக்கள், தச வாயுக்கள் கையின் 5 விரல்களில் தங்கி நிற்கும் 10 வித வாயுக்கள், the 10 vital airs found to prevail in the five fingers viz:

1. பெருவிரல், பிராணன்-அபானன், thumb, Pranan & Apanan.

2. சுட்டு விரல், உதானன்-வியானன், fore finger, uthanan and viyanan.

3. மத்திம விரல், கூர்மன்-நாகன், middle finger, kurman and nagan.

4. மோதிர விரல், சமானன் — கிருதரன், ring finger samanan and kirutharan.

5. சுண்டு விரல், தேவி தத்தன்-தனஞ்சயன் little finger devathathan and Danancheyan.

தசனபதம், பற்குறி, teeth mark, bite.

தசன பீசம், மாதளை, pomegranate.

தசனப்பொடி, பற்களை கருப்பாக்கி வலுவடையச் செய்யுமோர் பற்பொடி, அதாவது தாசினாப்பொடி, a tooth powder rendering the teeth black and strong. It is a black mineral powder.

தசனம், பல், tooth.

தசனரம், பற்கொதி, inflammation of tooth — Odontitis.

தசனவாசம், உதடு, lip.

தசனவுரு, பல்வலி, tooth ache.

தசனாஞ்சு, பல்லை மூடிக்கொண்டிருக்கும் மினுமினுப்பான ஓர் வைர வஸ்து, enamel of tooth.

தசனாத்தியம், புளியாரை, sore sorrel — Oxalis corniculata.

தசனோச்சிட்டம், சும்பனம், licking each others genetals; 2. குறியை முத்தமிடல் kissing the organ from excessive love.

தசனோற்பவம், பல் முளைத்தல், teething dentition.

தசா, கிரகத்தைப் பொறுத்த விதிப்பயன், the fate of man as depending on the position of planets.

தசாங்கம், பத்து வித வாசனைப் பொடிகளால் கலக்கப்பட்ட ஓர் தூபப் பொடி. an incense

prepared by mixing togather 10 kinds of fragrant substances; 2. உடம்பின் 10 உறுப்புகளினின்று பிறக்கும் மேக நோய், a kind of veneral disease emanating from the affection of 10 organs in the human system.

தசாண்டக்கூறு, ஐந்து வித பறப்பினமாகிய கருடன், கோழி, மயில், குருவி, காக்கை, இவைகளின் முட்டைகளும், ஊர்வனமாகிய உடும்பு, அளுங்கு, ஆமை, முதலை, பாம்பு இவைகளின் முட்டைகளும் ஆக இரு பத்து முட்டைகளைக் கொண்டு தயாரிக்கும் தைலம் அல்லது மெழுகு. இது வேதையில் மிக்க கவர்ணத்தைக் கொடுக்குமெனக் கருதப்படுகிறது. a medicated oil or was like preparation made from the eggs of birds such as bramini kite, fowl, peacock, sparrow and crow and those of reptiles such as guana, biwalve fish, tortoise, alligator and snake. It is considered that the product so obtained is greatly useful in lending or promting the colour gold.

தசாண்டம், மயில், கருடன், அடைக்கலங் குருவி, செம்போத்து, ஆளுங்கு, உடும்பு, முதலை முதலிய வைகளின் 10 வித முட்டை the eggs of 10 different kind of birds and reptiles- Peacock, bramani kite, Indian house sparrow, shall fish, guana, alligator etc.

தசாமிசம், பத்திலொரு பங்கு, a tenth part.

தசார்த்தம், இறந்தபின் உடம்பு, ஐந்து பூதங்களாகப் பிரிந்து போதல், the dissolution of the body into five elements. The rosolution of the body into its constituent elements after death.

தசிர, இரத்தவோட்ட நாளங்களுக் குரிய, pertaining to the vessels or tubes of animals and plants- Vascularity.

தசிரகம், இரத்த நாளங்கள், tubes or vessels of circulatary system.

தசிரத்துவம், நாளங்கள் மூலிய மாய் ஏற்படும் இரத்த வோட்டம், circulation of blood through the tuber and vessels of animals or plants — Vascularity.

தசிரம், உடம்பிலே இரத்தமும் அன்னரசமும் முதலியவைகள் செல்லுங்குழல், the tubes or vessels carrying blood or lymph for circulation; 2. உட்டுளை, hollowness.

தசிவேர், தவசு முருங்கை, a medicinal plant with roundish small leaves- justicia tranqubariensis alias J.parviflora; 2. புண்ணா க்குப்பூண்டு, a prostate plant.

தசுமம், நெருப்பு, fire.

தசும்பு, பொன், gold, 2. குடம், pot, 3. மிடா, a big water pot, 4. கொப்பரி, brass boiler.

தசேந்திரியம் கன்மேந்திரியம், 5-ம் ஞானேந்திரியம், 5-ம் ஆக பத்து இந்திரியங்கள். உடலுறுப்பு பத்து, அவையாவன; the organs of the human body consisting of the five organs of sense and five organs of operation or action. They are;

1. ஆக்கிராணம், nose
2. சட்சு, eyes
3. சிங்குவை, tongue
4. சுரோத்திரம், ears
5. உபத்தம்,skin
6. தொக்கு, genitals
7. பாணி, hands
8. பாதம், feet
9. பாயுரு, anus
10. வாக்கு, mouth

தசை, மாமிசம், flesh, muscle; 2.புலால், கறி, fish or meat or other animal food; 3. கெட்ட நாற்றம், bad smell; 4. பழத்தின் சதைப்பற்று, pulp of a fruit; 5. உஷ்ணத்தினால் இரத்தம் மாறுதலடைந்து வாயுவினால் இறுகி உண்டாகும் சதை, flesh formed from blood by the action of heat and wind.

தசை ஒட்டல், சதையை ஒட்ட வைத்தல், auto transplantation.

தசை கொள்ளுதல், தசை பூரித்தல், which, see.

தசைக்கட்டு, சதையுறுதி, muscular strength.

தசைக்கர்ப்பம், பலவிதரூபங்களும் கனமும் உடையனவாகி எல்லாம் கருத்த இரத்தமயமாய்க் காணப்படும் ஓர் வித சதைக்குறி, protruberance of fleshy masses of various shapes and density gorged with dark blood - Moles.

தசைக்கனி, பீசகோச மெலிந்து சதையைப் பெற்றிருக்கும் பழம், fruit with a soft pulp as berry.

தசைச்சுரப்பு, புடைப்பு, a useless out growth of flesh as a tumour excresence.

தசைதல், உடம்பில் சதைப் பற்றுண்டாதல், becoming flesh; 2. தடிப்பேறல், growing stout.

தசைத்தல், சதைப்பிடித்தல், growing flesh; 2. கொழுத்தல், becoming fatty.

தசை நரம்பு, பேசியின் அசைவுக்கு காரணமான நரம்பு, nerve responsible for the movement of the muscle.

தசைநார், தசையிழை, muscular fibres; 2. மாமிச நார், sinew.

தசை நார்க் கயிறு, நசை, எலும்புகளையும் சதையையும் பொருத்த வைக்கும் நரம்பு போன்ற கயிறு, a flexible cord by which a muscle is attached to a bone — Tendon.

தசை நீர், நிணநீர், serum; 2. ஊண் தண்ணீர், fluid coozing from the flesh, the liquid matter that drips from flesh in cooking- Gravy.

தசை நீள முனை, சடரக் குழியில் நீட்டிக் கொண்டிருக்கும் மாமிச முனை, name for some of the columnae carneae of the heart ventricles- Musculi papillaris.

தசை பூரித்தல், சதை பற்றாதல் அதாவது உடம்பு பிடித்தல், to grow in flesh.

தசைப்பகந்தரம், மாமிச பகந்தரம், fistula in the muscle.

தசைப்பற்றிடம், சதை புஷ்டியானவிடம், the fleshy muscular part of the body — Brawn.

தசைப்பற்று, சதையுள்ள பாகம், the fleshy portion.

தசைப்பிடி, தசைப்பற்று, Pulpiness, தசைப்பிடித்த கொளுத்த, Corpulent.

தசைப்புற்றுள்ள, கொழுத்த, corpulent.

தசைப்பிடித்திருத்தல், கொழுத்திருத்தல், பழுத்திருத்தல், being corpulent.

தசைப்பிடிப்பு, சதைப் பற்றுகை, growing fleshy.

தசை பிடிப்பில்லாத, சதையற்ற, raw boned.

தசைப்பிடிப்புள்ள, பலத்த புஷ்டியான, brawny.

தசைப்பு, கொழுப்பு, fat.

தசைப்புடைப்பு, சதை வீக்கம், fleshy excrescence- Sarcoma.

தசைமுற்றுதல், கொழுப்பேறல், being are becoming fatent.

தசையடைப்பு, சதை வளர்த்தி, out growth of fat; 2. கொழுப்படைதல், obstruction of fat; 3. மூத்திர துவாரத்தில் சதை வளர்ந்து அதனால் ஏற்படும் தடை, a disease of the urinary passage due to obstruction caused by the growth of flesh- Stricture of urethra.

தசையண்டம், ஆண் பிள்ளைக்கு வாயு அதிகரிப்பதினால் பிடுக்கில் சதை வளர்ந்து பருத்துக் காணும் ஓர் வகை அண்ட நோய், (in males) elephantiasis of the scrotum in which the muscles of the scrotum is enlarged due to excessive growth of flesh arising from aggravated condition of Vayu (wind).

2. அகாலசை யோகத்தினாலும் மிதமிஞ்சிப் புணருவதாலும் பெண்களுக்கு வாயு அதிகரித்து குடலினின்று கீழறங்கி அல்குலுக்குள் பூரித்துக் கொள்வதினால் அல்குலின் இரண்டு பக்கத்துச் சதையும் இதழும் விரிந்து தளர்ந்து காணுவது மன்றி, புணர்ச்சியில் விந்து போய் பாய்வதற்கும், காமச் சலம் சுரோணிதம், கருப்பம் இவைகள் வெளிப் பட்டு வருவதற்கு தடைபட்டு அதனால் இரத்தம் கெட்டு கருப்பாசயத்திலிருந்து நிதம் பத்துக்குள்ளடங்கி நீண்டு வந்து இருக்கின்ற வங்குவாசல் என்னும் பூவும் தளர்ந்து ஆண் குறியை போல வெளியில் வந்து தொங்குவது மன்றி வாயுவினால் திரண்ட இரத்தம் அத்துவா ரத்தில் தசை விழுது விட்டது போலும் தேங்காய்க்குள் இருக்கும் முளையைப் போலும், தாமரை மொக்கைப் போலும் குமிளங்காயைப் போலும் துன் மாமிசம் வளர்ந்து அண்டங்களைப் போலவே தொங்கும் ஓர் நோய். இதைத் தமிழில் கூதை எனவும் வடமொழியில் கானிகாயோனி எனவும் சொல்லப்படும்.

Morbid enlargement of the muscles of the female genital forming a mass of extra-ordinary size and hanging down the vagina. It is said to be caused by the derangement of vayu due to untimely and excessive indulgence in sexual intercourse consequently the walls of the vagina get relaxed thereby obstructing the free passage for secretions and the circulating blood gets vitiated and the mass of flesh hangs like a scrotum. The clitoris is also elongated hanging like the penis.

தசையத்தி, சீமையத்தி, இது இரத்த விருத்தி தேக போஷணை தரும். foreign fig- Ficus glomerata. c.f. விதையத்திப்பழம்.

தசையிதம், தசைகளினின்று வேக வைத்தெடுக்கும் மஞ்சள் நிறமான ஓர் பசை, elastine.

தசையில் விலா, சதையில்லாத விலா, spare rib.

தசையிழை, see தசை நார், muscular fibre.

தசையூறுதல், உடம்பில் தினவெடுத்தல், itching.

தசையொட்டியிலை, சதையொட்டி, which see.

தசை வலி, தசையில் உண்டாகும் நோவு, muscular pain- Muscular rheumatism.

தசை வளர்ச்சி, சதைப் பற்றுண்டாதல், flaby growth; 2. சதை வளர்ந்து மூத்திர துவாரத்தை அடைத்தல், obstruction in the urethra from the growth of flesh.

தசை வளர்ச்சி, புண்ணிலேற்படும் துன் மாமிச வளர்ச்சி, formation of proud flesh.

2. காய்ப்புண்டாதல், formation of a hard horny excrescence on a toe or foot.

3. சதைப் பற்றுண்டாதல், turning into flesh carnification.

4. மேகத்தினால் மூத்திர துவாரத்தை அடைக்கும் சதை வளர்ச்சி, growth of flesh obstructing the passage of urethra.

தசை வீக்கம், மாமிச வீக்கம், swelling of the flesh or muscle.

தசை வேர், சதைப் பற்றுள்ள வேர், minute elementary part of the muscle; 2. கிழங்கு வேர், bulbousroot; 3. ஈராண்டு பயிர்களின் வேர், (in Botany) the fleshy root of plants of two years growth.

தசை வைத்தல், தசை கொள்ளுதல், to pick up flesh.

தச்சத்தரு, ஆமணக்கு, castor plant- Ricinus communis.

தச்ச நாசன், பொன்னம்பர், yellow coloured amber.

தச்சம், அதிங்கன், licorice plant.

தச்சனை மூலி, see தச்சன் மூலி.

தச்சன் குருவி, மரங்குத்திப்புள், a bird called wood pecker.